வெளியீடு 14-4-99 Issued 14-4-99

835
99
15 செப் 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன் மே 13, 1998 - தொகுதி 52 - எண் 2

Wednesday, the 13th May, 1998—Volume 52 - No. 2

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

விலை [Price Rs. 3.00

V211,31'N98
N98-52.2
219098

13-5-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 235-270 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) முதலமைச்சர் பவள விழா ஆண்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவித்தல் | 271-272 |
| (ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல் | 272-273 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) திருவாரூரில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த குமரன் கொலையுண்டது | 273-276 |
| (ஆ) போலி மருத்துவர்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருதல் | 276-296 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம் | 296 |
| (ஆ) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உணவு அளித்தல் | 306 |
| 5. அறிக்கைகள் அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு | 296 |

பக்கங்கள்


6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 51— தமிழ் வளர்ச்சி-பண்பாடு — 297-387

| | |
|---|---|
| மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 297, 302, 305-306, 310-311, 314, 321, 325, 326, 355-382 |
| திரு. டி சுதர்சனம் | 306-315 |
| திரு. சீ.வெ. கிருஷ்ணன் | 315-318 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 301, 318-325, 382, 384 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 326-332 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 332-340, 381-382 |
| திரு. பி. என். சுப்பிரமணி | 341-343 |
| திரு. அ. வெங்கடாசலம் | 343-345 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 345-348 |
| திரு. பி. இராசமாணிக்கம் | 348-350 |
| திரு. க. மணிவர்மா | 350-355 |
| பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 387-388 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 30, வெகுதான்ய திருவள்ளுவர் ஆண்டு—2029

## 1998 மே 13, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை; ஆதிபகவன் உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 481, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**481—**

### காவல் நிலையம் அமைத்தல்

***6470—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட காவளபாளையத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



D
V211,31'N98
N98.52.2

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலே காவளபாளையம் என்பது மிக முக்கியமான ஓர் இடமாகும். பவானிசாகர் தொகுதியிலே நம்பியூர், கடத்தூர், புளியம்பட்டி ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் உள்ளன. ஆனால், மிகப்பெரிய பரந்த தொகுதியாக இருப்பதாலும், அங்குள்ள காவல் நிலையங்களில் காவலர்கள் குறைவாக இருப்பதாலும், அங்கே வரதட்சணைக் கொடுமை, கொலைகள், திருட்டு போன்றவை ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளாக எந்த வழக்குகளும் சரியான முறையில் ஊர்ஜிதம் செய்யப்படாமல், வழக்குகள் இன்னும் நிலுவையிலே உள்ளன. ஆகவே, அங்கு ஒரு புறநகர் காவல் நிலையமாவது (out post) அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட புளியம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்டது, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற காவளபாளையம் என்பது. ஏற்கெனவே இந்த புளியம்பட்டியைச் சுற்றிலும், அதற்கு அருகில் சத்தி காவல் நிலையம் 16 கிலோ மீட்டர் தொலைவிலும், சிறுமுகை காவல் நிலையம் 20 கிலோ மீட்டர் தொலைவிலும், அம்மூர் காவல் நிலையம் 15 கிலோ மீட்டர் தொலைவிலும், நம்பியூர் காவல் நிலையம் 17 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. எனவே, தற்போது காவளபாளையத்தில் காவல் நிலையம் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை; தேவைப்படவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 482, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**482—**

**சர்க்கரை ஆலை அமைத்தல்**

***7563—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்பட்டு வருவதால் செங்கத்தில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கத்தில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டால் எங்களுக்கு வாழ்வதற்கு அங்கே வழியில்லை. எங்கள் செங்கம் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான குப்பநத்தம் அணையைக் கட்ட உதவிய கலைஞர் அரசுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அங்கே கரும்பு அதிகமாக விளைகின்ற காரணத்தினால் ஒரு சர்க்கரை ஆலையை மிக அக்கறையோடு அளித்து உதவினால், விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகள் தீரும் என்ற ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த குறையைத் தீர்க்கத் தக்க நடவடிக்கை எடுத்து, அங்கே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, அது மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஏக்கம் இருக்கலாம். ஆனால், அங்கே ஆலை உருவாகக்கூடிய அளவிற்கு ஆக்கம் இல்லை. பொதுவாக, 2500 டன் அளவுள்ள அரைவைத் திறன் கொண்ட சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்க வேண்டுமானால், அதற்கு 4.50 இலட்சம் டன் கரும்பு தேவைப்படும். இதற்கு 60 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். 4½ லட்சம் டன் கரும்பு உற்பத்தி ஆகவேண்டுமானால், அதற்கு சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற செங்கம் பகுதியில் சுமார் 3,116 ஏக்கர் பரப்பில்தான் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. மொத்தக் கரும்பின் அளவு 93,400 டன்களாகும். இது ஒரு சர்க்கரை ஆலையின் தேவைக்குப் போதுமானது அல்ல. தற்போது இங்கு உற்பத்தி ஆகின்ற கரும்பு திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது. இன்னொரு பகுதி கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது. செங்கத்திலே

[1998 மே 13

ஒருவேளை இந்த ஆலையை உருவாக்கிவிட்டால், அங்கே உற்பத்தியாகி, திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அந்தக் கரும்பை அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை மூட வேண்டிய நிலைமை ஏற்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், சர்க்கரை ஆலை தொடங்க, பல ஆண்டுகளுக்கு முன்னால் அனுமதி கொடுக்கப்பட்டும், கடந்த கால ஆட்சியில், அந்த அரசால் செயல்படுத்தப்படவில்லை. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் தொகுதி அருகில், குறும்பூரில் ஒரு சர்க்கரை ஆலை அனுமதிக்கப்பட்டு, அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும், அந்தப் பணிகள் எப்போது தொடங்கும் என்பதையும் தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலைக்கான அனுமதியெல்லாம் தரப்பட்டு, அதற்கான பணிகள் எல்லாம் தொடங்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் எந்த மாவட்டத்திலிருந்து வருகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தண்டராம்பட்டுத் தொகுதியிலே, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, தண்டராம்பட்டுத் தொகுதியிலே, கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு புதிய சர்க்கரை ஆலை தொடங்க கருணை காட்டுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலையைத் தொடங்க வேண்டுமென்றால், அதற்கு எவ்வளவு முதலீடு வேண்டும்; எந்த அளவுக்கு அந்த வட்டாரத்திலே கரும்பு விளைய வேண்டும்; எவ்வளவு நிலம் வேண்டும்; அந்த ஆலை எவ்வளவு அரைவைத் திறன் கொண்டதாக இருக்க வேண்டும் என, இவற்றை பற்றியெல்லாம் நான் முதல் கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறேன். அத்தகைய தகுதிகள்,



1998 மே 13]

மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற தண்டாரம்பட்டுப் பகுதிக்கு இருக்குமேயானால், இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. வேணு.

**திரு. கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படுவது குறித்து சொல்லப்படவில்லை என்றாலும், கும்மிடிப்பூண்டியிலே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொடங்கப்படும் என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்களுக்கு, அங்குள்ள இரண்டு தொகுதி மக்களின் சார்பிலும் அன்றையதினமே நன்றி தெரிவித்துக் கொண்டோம். ஆனால், இதுவரை அந்த ஆலை ஆரம்பிக்கப்படுவதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. இந்த ஆண்டிலாவது அவற்றைத் தொடங்குவதற்கு அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே ஏற்பட்டுள்ள சிக்கல்கள் களையப்பட்டு, அவை களைந்து முடிந்தவுடன், அதற்கான ஏற்பாடுகள் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்க எத்தனைப் பகுதிகளிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன? அவற்றில் நமது அரசு இதுவரை எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளித்துள்ளது? இந்த ஆண்டு எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நமது அரசு எல்லாத் துறைகளிலும் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு அளித்து கௌரவப்படுத்தி இருக்கிறது. ஆனால், சர்க்கரை ஆலைகளிலே வேலை செய்கிறவர்களுக்கு, எந்தவிதமான சம்பள உயர்வும்

[1998 மே 13

அறிவிக்கப்படவில்லை. ஆகவே, அந்த ஊழியர்களுக்கும் ஏதாவது சம்பள உயர்வு அளிப்பதற்கு, அரசிடத்திலே திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த ஆலைகளில் அவ்வப்போது உருவாகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அவை கவனிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, அரூர் ஆகிய இரண்டு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் குறிப்பாக, பாலக்கோடு சர்க்கரை ஆலையின் இயந்திரங்கள் அடிக்கடி பழுதுபட்டு, 16 மாதங்கள் அல்லது 17 மாதங்கள் ஆகியும்கூட, வெட்டு உத்தரவு இல்லாமல், வறட்சிக் காலத்தில், கரும்புகள் காய்ந்து, விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதை நல்லமுறையில் இயங்கச் செய்து, விவசாயிகள் கரும்புகளை வெட்ட உத்தரவு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு பிரச்சினை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்கூட்டியே அரசுக்குத் தெரிவித்திருந்தால், அதுபற்றி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், புதிய சர்க்கரை ஆலை அமைப்புதற்கான உரிமை, பாரி கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டு அதற்கான ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், பாரி கம்பெனியிடம் இருக்கிறதா? எத்தனை மெகாவாட் மின்சாரம் தயாரிக்க இருக்கிறார்கள்? அந்த மின்சாரம், விவசாயிகள் இருக்கும் அந்தப் பகுதிக்கு வழங்கப்படுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1998 மே 13]

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நிச்சயதார்த்தம் முடிந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 483, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**483—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***3623—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, மத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997-98 ஆம் ஆண்டில் மத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் துணைக் கேள்வி என்ன இருக்கிறது? நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் என்னுடைய தொகுதியில் அத்திமாஞ்சேரிப்பேட்டை என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு மகளிர் உயர்நிலைப் பள்ளி கேட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அந்தக் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், அதற்கு முன்னுரிமை கொடுத்து இந்த ஆண்டு மகளிர் உயர்நிலைப் பள்ளியை அந்தக் கிராமத்திற்குத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மே 13

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதற்கான குழு எப்படி பரிசீலனை செய்து முறைப்படி தேர்ந்தெடுத்ததோ அந்த முறைப்படித்தான் இந்த ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 484, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**484—**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

***7824—திரு. கே. ரவி அருணன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், அக்கருத்துரு இயக்குநர் அலுவலகத்திற்கு முறைப்படி வரப்பெற்றால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரபாண்டியபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கான அனைத்துத் தகுதிகளும் அங்கே இருக்கின்றன. அந்தப் பள்ளியிலே போதுமான மாணவர் எண்ணிக்கை இருக்கின்றது. அருகிலே 10 கிலோமீட்டர் தொலைவிற்கு வேறு எந்த மேல்நிலைப் பள்ளியும் கிடையாது. அதற்கான பங்குத்தொகையைக் கூட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே வருகிற நிதியாண்டில் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.



1998 மே 13]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 10 ஆம் வகுப்பில் மட்டும் 54 பேர். அந்த 54 மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அங்கே 54 பேர். அந்த 54 பேரும் தேர்வு எழுதுவார்களேயானால் 30, 35 பேர் வெற்றி பெறுவார்கள். ஆனால் வேறு சில உயர்நிலைப் பள்ளிகளில் 100 பேர், 120 பேர் மாணவ, மாணவியர்கள் பயலுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அந்த முன்னுரிமையைக் கருதி அந்த வரிசையில் வாய்ப்பு இருக்குமானால் இந்த ஆண்டே வழங்குவது பற்றி அந்த உயர்மட்டக் குழு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 485, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**485—**

**கோவில்பட்டி மருத்துவமனைக்கு அவசர ஊர்தி**

***14245—திரு. லி. அய்யலுசாமி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவில்பட்டி அரசு வட்ட மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வசதி இல்லாததால் புதிய அவசர ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டி அரசு வட்ட மருத்துவமனைக்கு அவசர ஊர்தி (Ambulance) வழங்கப் பட்டுள்ளது.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி வட்ட அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி அளித்ததற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இரண்டு ஊர்திகள் வழங்குவதாக இருந்தது. இப்போது ஒன்றுதான் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது அவசர ஊர்தியையும் இந்த ஆண்டே அளித்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி அரசு வட்ட மருத்துவமனையில் 116 படுக்கைகள் இருக்கின்றன. 29.12.1997 அன்றுதான் ஒரு புதிய அவசர ஊர்தி அந்த மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆண்டு மேலும் ஓர் அவசர ஊர்தி வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 486, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**486—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்**

***15839—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பல்லடம் தொகுதி, சூலூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 1998-99 ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் மருத்துவமனைக்கு சூலூரைச் சுற்றியுள்ள 300 கிராமங்களிலிருந்து மக்கள் வந்து போகிறார்கள். 300-க்கும் மேற்பட்ட நபர்கள் புறநோயாளிகளாக வந்து செல்கின்றார்கள். மேலும் அவசரத் தேவைக்கு மக்கள் கோவை மாநகரம்தான் செல்ல வேண்டியிருக்கிறது. சூலூர் எல்லைப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையும், மாநில நெடுஞ்சாலையும் இருக்கின்ற காரணத்தால், சாலை விபத்துகள் அதிகமாக நடந்தால், முதல் உதவிக்காக சூலூருக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. கழக அரசு அமைந்தவுடன் முதல் முறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தார்கள். கழக



அரசு 3-வது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் இந்த நாளில் முதல் சாதனையாக சூலூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் பல்லடம் தொகுதியில் இருக்கிறது. பல்லடத்தில் ஓர் அரசு மருத்துவமனை இருக்கிறது. கோவை அரசு மருத்துவமனையும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சூலூரிலிருந்து கோவை மிகக் குறுகிய தூரத்தில்தான் இருக்கிறது. அதுமட்டுமல்ல, சூலூரில் இருக்கக்கூடிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை மத்திய எரிசக்தித் துறை அமைச்சரோடு சென்று நான் பார்த்தபோது, மத்திய அமைச்சர் அதைப் பார்த்துவிட்டு 'இந்தியாவிலே இப்படி எங்காவது ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை' என்று தெரிவித்தார்கள். மேலும், எல்லா மருந்துகளும் இருக்கின்றன, டாக்டர்கள் இருக்கிறார்கள், மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது, இது எப்படி சாத்தியமானது என்ற விவரங்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினரிடத்திலேயே அமைச்சர் கேட்டுத் தெரிந்து கொண்டார்., எனவே, அந்த அளவுக்கு சூலூர் ஆரம்பச் சுகாதார நிலையம் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இப்போதைய நிதிநிலை காரணமாக அதை அரசு மருத்துவமனையாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 487, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**487—**

**குளிர்பதனக் கிடங்கு அமைத்தல்**

***6375—திரு. என்.ஆர். அழகராஜா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேனி மாவட்டம், சின்னமனூரில் வேளாண்மை விளை பொருள்களுக்கென குளிர்பதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[1998 மே 13

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், சின்னமனூரில் வேளாண்மை விளைபொருளான திராட்சையைப் பாதுகாக்க குளிர்பதன கிட்டங்கி அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே திராட்சை அதிகமாகப் பயிரிடப்படும் பகுதி சின்னமனூர் கொம்மம் பகுதிதான். திராட்சை பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்றால் அவர்கள் அந்தத் திராட்சையை சிறிதுகாலம் பாதுகாத்து நல்ல விலை கிடைக்கின்றபோது விற்றால்தான் அவர்களுக்கு விவசாயம் கட்டுப்படி ஆகும். இதைக் கருத்தில்கொண்டு இனியாவது ஒரு குளிர்பதனக் கிடங்கை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்:** அதை இந்த ஆண்டே அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூரில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது சம்பந்தமாக தொடர்புடைய தகவல்களை ஆராய்ந்து திட்ட அறிக்கைத் தயாரிக்கும் பணியை வேளாண்மை நிதிக் கழகத்திடம் ஒப்படைக்க வேளாண்மை விற்பனை இயக்குநர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டு, அது நடவடிக்கையில் இருப்பதாக வேளாண்மை விற்பனை இயக்குநர் அவர்கள் அரசுக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அதை விரைவுப்படுத்தி இந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னமனூர் குளிர்பதனக் கிடங்கு பற்றிய கேள்வியா?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பழத்தைப் பற்றிய கேள்விதான்.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு முழுவதும்தான் பழம் விளைகிறது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். சின்னமனூரில் இருப்பதைவிட பல மடங்கு திராட்சை நிலக்கோட்டை பகுதியிலே, குறிப்பாக கொடைரோடு பகுதியிலே உற்பத்தியாகிறது. நானும்கூட ஒரு திராட்சை விவசாயிதான். அங்கே ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்று பலமுறை நான் சொல்லியும் அது கைவிடப்பட்டது. சின்னமனூருக்கு எப்படி நீங்கள் பரிசீலனை செய்கிறீர்களோ, அதைப்போல கொடைரோடு பகுதியிலே ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான நிலையை உருவாக்குவதற்கு அமைச்சர் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மதுரை, திண்டுக்கல், தர்மபுரி மற்றும் கோவை மாவட்டங்களில் பெருமளவில் திராட்சை பயிரிடப்படுகிறது. மொத்த சாகுபடி பரப்பளவு *2326* எக்டேர் ஆகும். மொத்த திராட்சை உற்பத்தி *44,750* மெட்ரிக் டன்களாகும். மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மட்டும் திராட்சை *1203* எக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. அங்கு *23,140* மெட்ரிக் டன்கள் திராட்சை உற்பத்தியாகிறது. அதைப்போல சின்னமனூர் பகுதியில் மட்டும் சுமார் *250* எக்டேர் பரப்பில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு *5* ஆயிரம் மெட்ரிக் டன்கள் அளவுக்கு திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கு தெரிவித்த இந்தக் கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *488*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**488—**

*முற்பகல் 9-50*

**பன்னாட்டு மலர் ஏல மையம் அமைத்தல்**

***10460—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 13

(அ) சென்னையில் பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மலர்கள் ஏல மையத்தினை நிறுவ காஞ்சிபுரம் மாவட்டம் சைதாப்பேட்டைத் தாலுகாவில், பள்ளிக்கரணையில் புல எண் 657/1 ஏ-ல் உள்ள நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பன்னாட்டு ஏல மையம் எப்போது தொடங்கப்படும்? இந்த ஏல மையத்தில் எந்தெந்த நாடுகள் கலந்துகொள்கிற வாய்ப்பு உள்ளது? இதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை விமான நிலையத்தின் அருகில் ஒரு பன்னாட்டு மலர்கள் ஏல மையம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது என்று அறிவித்தார்கள். ரூ.5 கோடி இதற்கு தமிழ்நாடு வேளாண்மை விற்பனை இணையத்தால் அளிக்கப்படும். இந்தத் திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக மொத்தம் ரூ.10 கோடியும், 50% மத்திய அரசின் நிறுவனமான 'அபிடா' நிறுவனத்தின் மூலமாக மானிய உதவியும் பெற்று இந்த ஏல மையம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது அந்த நிலமானது அரசு புறம்போக்கு நிலமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அந்த நிலத்தை ஒப்படைக்க வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிறோம். இதுபோல அரசு நிலங்களை ஒரு தொழில் தொடங்குவதற்குத் தேவை என்று கேட்கின்றபோது அதைக் கொடுப்பதற்கு ஆட்சேபணை உண்டு அல்லது இல்லை என்று சொல்வதற்காக நில வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு பரிசீலித்துதான் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும். இப்போது இது குறித்து அந்தக் குழுவினுடைய பரிசீலனையிலே இருக்கின்றது. அவர்கள் பரிசீலித்து இந்த நிலத்தை ஒப்படைத்தால், உடனடியாக அந்தப் பணியைத் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மையத்தை ஆரம்பிப்பதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறியிருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த பகுதிகள் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி கொண்டே இருக்கின்றன. எனவே, அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி, அந்த மையத்தினை அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வது என்பது வேறு; அப்படிச் செய்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். ஆனால், இந்த பள்ளிக்கரணையில் மலர் ஏல மையம் தொடங்குவதற்கு தேவையான நிலத்தைதான் இப்போது வருவாய்த் துறையினரிடம் நாம் கேட்டு இருக்கிறோம். அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டவுடன் இந்தப் பணி தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 489, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**489—**

**காட்பாடி இருப்புப் பாதையில் மேம்பாலம்**

*2618—திரு. ச. அழகுவேலு:

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் நகராட்சியில் நுழைவுவாயிலில் போக்குவரத்துக்கு தடையாக்வுள்ள காட்பாடி இருப்புப்பாதை அருகில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1998 மே 13

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் நகராட்சியில் நுழைவுவாயிலில் போக்குவரத்துக்கு தடையாகவுள்ள இருப்புப்பாதை அருகில் மேம்பாலம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், விழுப்புரத்திற்கு ஒரு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்போது இரயில்வே மேம்பாலம் அமைக்கின்ற திட்டம் குறித்து கருதப்படும். ஆனால் இந்த இடத்தில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகரத்தில் மிகவும் நெருக்கடியான போக்குவரத்துக்கு தடையாக இருக்கக்கூடிய காட்பாடி இருப்புப்பாதை அருகிலே அவசியம் ஒரு-மேம்பாலம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்டகாலமாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப போல மாற்று வழிப்பாதைப் பணி எப்போது தொடங்கும்? அது விரைவாக தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சியில் நுழைவுவாயிலில் அமைந்துள்ள காட்பாடி இருப்புப்பாதை சென்னை, திருச்சி, திண்டுக்கல் சாலை 158/6 கி.மீ-ல் தேசிய நெடுஞ்சாலை 45-ல் குறுக்கிடுகிறது. இந்த இருப்புப் பாதை சந்திக்கும் இடத்தில் இரயில் போக்குவரத்து யூனிட் எண்ணிக்கையானது 29,978 ஆகும். அதாவது, மேம்பாலம் அமைப்பதற்குத் தேவையான அளவு இரயில் போக்குவரத்து இல்லை என்ற முடிவு செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்த இடத்திலே இரயில்வே மேம்பாலம் அமைக்கின்ற திட்டம் பரிசீலனை செய்யப்பட வில்லை. இருந்தாலும், விழுப்புரத்திற்கு, போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, புறவழிச்சாலை அமைக்கின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு ஏறத்தாழ ரூ. 4.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலம் கையகப்படுத்துகிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுவாக அந்தச் சாலை அமைப்பதற்கான Rough Cost Estimate ரூ.30 கோடி என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் அனுமதி கிடைத்த பிறகு இந்தச் சாலை அமைக்கின்ற பணி தொடரும்.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 490, டாக்டர் தே. குமாரதாஸ் மற்றும் திரு. டி. மணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**490—**

**பழுதடைந்துள்ள பாலத்தைச் சீர்செய்தல்**

***2871—டாக்டர் தே. குமாரதாஸ்:**

**திரு. டி. மணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், எஸ்.டி. மங்காடு பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள பாலத்தை சீர்செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், மங்காடு சாலை கி.மீ. 6/8-ல் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ள பழைய தாம்போதியினை இடித்து புதிய உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதலளிக்கப்பட்டு, 22-10-1997 அன்று ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டு இருக்கிறது. பணி செயலாக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்த உடன்படிக்கையின்படி 15 மாதங்களுக்குள்ளாக இந்தப் பணி முடிக்கப்பட்டுவிடும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மங்காடு பாலம் என்பது முழுமையான பாலம். அது முழுவதுமாகச் சேதமடைந்திருக்கிறது. ஆற்றின் இரு பக்கங்களிலும் திருட்டுத்தனமாக மணல் எடுத்ததன் விளைவாக பாலம் முழுவதும் சேதமடைந்துள்ளது. இப்போது போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பேருந்துகள் செல்வதில்லை. 1997 ஆம் ஆண்டிலே இந்தப் பணிக்கான மதிப்பீடுகள் தயாரித்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன என்பதை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இந்தப் பணி ஆரம்பிக்க வேண்டிய காலம் கடந்து போய்விட்டது. எனவே, இந்தப் பாலத்தை விரைவில் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 1997-லே மதிப்பீடுகள் தயாரித்து, இப்போது காலம்

கடந்து, 1998-லே வேலைகளைச் செய்யத் தொடங்குகின்றபோது, இன்னும் அதிகப்படியான பணம் செலவழிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை நமக்கு ஏற்படுகிறது. ஆகவே, விரைவில் பணியினை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்பதோடு, அந்தப் பாலத்தின் உயரம் என்ன அளவு என்று இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நெடுஞ்சாலை துறை, இந்த தாம்போதி பாலத்தை இடித்துவிட்டு, பழுதடைந்த பாலத்தை அகற்றிவிட்டு, உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அந்தப் பணி இப்போது தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களைப் பழுது பார்த்தல், திரும்பக் கட்டுதல் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுகிறது. இந்தப் பணிக்காக, தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் ரூபாய் 1,34,14,055 மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகளுக்கு அரசாணை நிலை எண் 249, நெடுஞ்சாலைத் துறை, நாள் 14-7-1997-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. 22-10-1997 அன்று ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டு உள்ளது என்றும், ஒப்பந்த உடன்படிக்கையின்படி 15 மாதங்களுக்குள் இந்தப் பணி முடிக்கப்படும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பாலத்தினுடைய உயரம் என்ன அளவு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், அது உயர்மட்டப் பாலம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 491, திரு. த. நடராஜன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**491—**

## பால் குளிரூட்டும் நிலையம் துவக்குதல்

***7750—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





செஞ்சி வட்டம், வல்லம் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் புதியதாகத் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வல்லம் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் பால் அங்கிருந்து 45 கிலோமீட்டர் தொலைவில் உள்ள விழுப்புரம் பால் பண்ணையில் கையாளப்படுவதாலும், விழுப்புரம் பால் பண்ணையில் தற்போதுள்ள பால் பண்ணையின் குளிரூட்டும் மற்றும் பதப்படுத்தும் திறனுக்குக் குறைந்த அளவே பால் கையாளப்படுவதாலும் செஞ்சி வட்டம், வல்லம் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989-91 ஆம் ஆண்டுகளில், நம்முடைய முதல்வர் ஆட்சிக் காலத்தில், இங்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குள் ஆட்சி மாறியதால் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஆனால் இந்தப் பகுதியிலிருந்து, விழுப்புரத்திற்கும், தனியார் நடத்துகிற பெண்ணாத்தூருக்கும், பால் அதிகமான அளவில் செல்கிறது. இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். ஏற்கெனவே இதற்காக 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதனால், இதனை மறுஆய்வு செய்து, அந்தப் பகுதி மக்கள் குளிர்கின்ற வகையில், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 1500 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, வல்லம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் சுமார் 10,000 லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்தால், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 492, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[1998 மே 13

492—

## தொழிலாளர்களுக்குச் சம்பளம் நிர்ணயம்

*8087—திரு. ரா. சேதுநாதன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கற்களை இழைக்கும் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குச் சம்பள விகிதம் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்களை இழைக்கும் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குச் சுமார் 10 ஆண்டுகள் ஆகியும் அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கப்படாமல், அவர்கள் குறைந்த கூலிக்கே வேலை செய்து வருகிறார்கள். கூட்டுறவுத் துறையிலும், போக்குவரத்துத் துறையிலும் 240 நாட்கள் முடிந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊதிய விகிதத்தை நிர்ணயித்து அவர்களுக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழில் சம்பந்தமாக, குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் 28-12-1976ஆம் ஆண்டு அரசு ஆணை சேர்க்கப்பட்டு, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆணையின்படி, 18-3-1996 அன்று முதல் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. குழுவின் மூலமாகவும், Notification மூலமாகவும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்யப்படுகிற நிலை இருந்தது. இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, குறைந்தபட்ச ஊதியம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படி மறுநிர்ணயம் செய்யப்படுகிறபோது, Dearness Allowance அந்தத் தொழிலினுடைய தன்மை, பணியாளர்களுடைய நிலைமை போன்ற எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 493, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

493—

## தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்

*13206—திரு. ஆர்.ஆர். சேகரன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட காடயாம்பட்டியில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூரில் ஏற்கெனவே தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருவதால், காடயாம்பட்டியில் புதியதாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் இருக்கையில் இல்லை. வினா எண் 494, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

494—

## விசைத்தறித் தொழிலைப் பாதுகாத்தல்

*10870—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்துவரும் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க மாவட்ட அளவிலான தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினை கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1998 மே 13

விசைத்தறித் தொழில் தற்பொழுது தமிழ்நாட்டில் மாபெரும் அளவில் வளர்ந்து வருவதாலும், நல்ல நிலையில் செயல்பட்டு வருவதாலும் இத்தொழிலை கண்காணிக்கக் குழு ஏதும் அமைக்க அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்கு இரண்டு கண்கள் எப்படித் தேவையோ, அதுபோல, நாட்டின் இரண்டு கண்களாக இருக்கக்கூடியவை கைத்தறியும், விசைத்தறியுமாகும். இன்று இருக்கக்கூடிய நிலையில், கைத்தறியைப் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு, விசைத்தறியையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் தொழிலாளர்கள் மத்தியிலே நிலவி வருகிறது. தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கைத்தறித் துறை பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களோடு கலந்துரையாடி ஒரு நல்ல முடிவுக்கு வந்ததைப்போல, விசைத்தறித் துறையில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை மாற்றி அமைத்து, ஏற்றுமதிக்கு உதவக் கூடிய வகையில், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில், சிறந்த முறையில் இந்த விசைத்தறித் துறையைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இப்போது ஏறத்தாழ 50-க்கும் மேற்பட்ட விசைத்தறிகள், துறையினரால் இயக்கப்பட்டு வருகின்றன. அதற்குரிய நூல் துறையிலிருந்து கொடுக்கப்படுகிறது. கைத்தறித் துறையின் தேவை போக, தேவைக்குமேல் உள்ள உற்பத்தியை அந்த விசைத்தறிகள்தான் செய்து வருகின்றன. ஆனால், தனியார் அமைத்து இருக்கும் விசைத்தறிகள் வெளிநாட்டு ஏற்றுமதியை நம்பி உருவாக்கிய காரணத்தால், தனியார் விசைத்தறிகள் இன்று சிரமத்திற்கு ஆளாகியிருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில் உருவாக்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட கூட்டுறவு விசைத்தறி சங்கங்களுக்கு அரசே நூலை கொடுத்து வருகிறது. தொடர்ந்து மேலும் பல சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.



1998 மே 13]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியைவிட, விசைத்தறி இப்பொழுது நல்லமுறையிலே நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கைரிக்ஷாக்களை ஒழித்து, சைக்கிள் ரிக்ஷாக்களை கொண்டு வந்ததைப்போல, படிப்படியாக கைத்தறி தொழிலாளர்களை எல்லாம் விசைத்தறி தொழிலாளர்களாக மாற்றுவதற்கு அரசிடம் ஏதாவது கருத்துரு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு ஒரு குழு அமைத்து அதுபற்றிய பேச்சுவார்த்தை நடந்தபோது, விசைத்தறியையும் முறைப்படுத்தவும், மேம்படுத்தவும் அவர்களுக்கு உரிமம் வழங்குவதைக்கூட மாற்றி அமைக்கவும், ஏற்கெனவே சில திட்டங்கள் வகுக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது ஆயிரம் ரூபாய் கட்டினால் ஒரு விசைத்தறியை நடத்திக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அது liberalise செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க, ஏற்றுமதித் துறையிலே இருக்கின்ற சில பிரச்சினைகளை ஒழுங்குப்படுத்தினால், நிச்சயம் விசைத்தறி முழுமைக்கும் நாம் நல்லமுறையில் வேலை கொடுக்க முடியும் என்பதன் அடிப்படையில், அதேநேரத்திலே நம்முடைய கோ-ஆப்டெக்ஸின் மூலம் எப்படி நம்முடைய மாநிலத்திலே உற்பத்தி செய்கிறோமோ அப்படிப்பட்ட துணிகளை உற்பத்தி செய்ய வேறு மாநிலங்களிலிருந்து order பெற்று அதை விசைத்தறிக்கு அளிக்கலாமா என்ற ஆலோசனை தற்காலிகமாக இப்பொழுது நடைபெற்று வருகிறது. நீண்டகால நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துகொண்டு மீண்டும் அந்த விவரங்களை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விசைத்தறித் தொழில் நன்றாக இருப்பதாக முதலில் தெரிவித்தார்கள். ஆனால், உண்மையிலேயே விசைத்தறியால் நெய்யப்படுகிற நிறைய துணிகள் தேக்கம் அடைந்து, இப்போது விசைத்தறியில் ஈடுபட்டிருக்கக்கூடிய அத்தனை entrepreneurs-ம் மிகவும் கஷ்ட நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசைத்தறியால் தயாரிக்கப்பட்ட அந்தத் துணிகளின் தேக்கத்தைக் குறைக்கின்ற முகத்தான், அந்தத் துணிகள் எல்லாவற்றையும் அரசு விலைக்கு

[1998 மே 13

வாங்கி விற்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசைத்தறியில் உருவாக்குகின்ற துணிகள் கிரே காடா என்ற அடிப்படையிலே வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காகவே பம்பாயிலுள்ள வியாபாரிகளினுடைய ஒப்புதலோடு, அந்த கிரே காடா மட்டும்தான் நெய்யப்படுகிறது. அதேபோல ஷர்ட்டிங்ஸ் என்ற பெயரிலே கைலி நெய்யப்பட்டு—அது இப்போது கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், தயவுசெய்து அதை ஷர்ட்டிங்ஸ்ஸாகவே நெய்யுங்க; கைலியாக நெய்யக் கூடாது என்று அவர்களை நாங்கள் வேண்டுகோள் மூலம்—சட்டத்தின் மூலம் அல்ல—கேட்டுக்கொண்டு இருக்கிறோம். கிரே காடா போன்றவற்றை எல்லாம் கொள்முதல் செய்து, அதை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு இன்னும் எங்களுடைய முயற்சிகள் சிறப்பாக அமையவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்,. Export Promotion Council-லே கேட்டு எப்படி அதை வெளிநாட்டிற்கு அனுப்புவது என கோ-ஆப்டெக்ஸ் மூலம் முயற்சி செய்ய முடியுமேயொழிய, முற்றிலும் அரசே கொள்முதல் செய்து விசைத்தறியைக் காப்பாற்றுவது என்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியால்தான் கைத்தறி பாதிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு கருத்து கைத்தறியாளர்கள் மத்தியில் நிலவிக்கொண்டு இருக்கிறது. கைத்தறி, விசைத்தறியால் பாதிக்கப்படாத வண்ணம், கைத்தறியால் உற்பத்தி ஆகின்ற துணிகளை மற்ற மாநிலங்களிலே விற்பனை செய்வதற்கு, அங்கே நீங்கள் Show room என்று அழைக்கின்ற கடைகளைத் திறந்து, கைத்தறி, விசைத்தறியால் எந்தக் காலத்திலும் பாதிக்கப்பட முடியாத அளவிற்கு நடவடிக்கை எடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே தமிழகத்திலே இருக்கின்ற கோ-ஆப்டெக்ஸ் ஒன்றுதான் இந்தியா முழுமைக்கும் தன்னுடைய கிளைகளை வைத்து கைத்தறித் துணியை விற்பனை செய்கிறது. வேறு எந்தவொரு மாநிலமும் இந்தியா முழுமைக்கும்—ஏறத்தாழ 300-க்கு



1998 மே 13]

மேற்பட்ட—கடைகளை வைத்து நடத்துவதாக இதுவரையில் இல்லை. ஆகவே, கைத்தறியைப் பொறுத்தவரையிலே சிறப்பாக அந்தப் பணியை இப்போது செய்து வருகிறோம். இன்னும் ஒன்று ஏதோ உறுப்பினர் கேட்டார்; மறந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Show room மட்டும்தான் கேட்டார்; வேறு கேட்கவில்லை. அடுத்து, திரு. எஸ்.எஸ். பொன்முடி.

முற்பகல் 10-10

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 6 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. 20 இலட்சம் விசைத்தறித் தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். விசைத்தறியாளர்கள் மின் கட்டண விதிப்பையும், பருத்தி நூல் வரியையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின் கட்டண குறைப்புக்குச் சாத்தியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறிவிட்டார்கள். ஆகவே, மின் கட்டணத்தின் மீது உள்ள மேல் வரியையோ, பருத்தி நூல் மீதான வரியையோ குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? கைத்தறியும், விசைத்தறியும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் இருக்கின்றன. ஒரு பிரிவினருக்கு மட்டும் சலுகைகள் அளிப்பதைப்போல் இன்னொரு பிரிவினருக்கும் ஏதாவது சலுகை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலில் ஏற்பட்ட சங்கடத்தையொட்டித்தான் மாண்புமிகு உறுப்பினரின் பல்லடம் தொகுதியில், இந்த ஆண்டு மட்டும் பல விசைத்தறிச் சங்கங்கள் உருவாவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்கள் எல்லாம் கடந்த காலத்தில் வெளிநாட்டுக்கே கிரே காடாவை உற்பத்தி செய்து அனுப்பிக் கொண்டிருந்தவர்கள்தான். இன்று வேறு வழியில்லாத காரணத்தால், விசைத்தறிச் சங்கங்கள் வேண்டுமென்று கேட்டதால், பல்லடம் தொகுதியில் கூட 5,6 விசைத்தறிச் சங்கங்கள் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டு, அவர்களும் உற்பத்தி செய்து கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு நெருக்கடி ஏற்பட்ட நிலையில்தான்

[1998 மே 13

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நிறுவப்பட்டது. அந்த நிறுவனம்தான் இப்போது கைத்தறியையும், விசைத்தறியையும் சேர்த்துப் பார்த்து வருகிறது. இதைச் சேர்த்துப் பார்ப்பதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தமிழக அரசு கைத்தறிக் குழு அமைத்தபோதுகூட விசைத்தறியாளர்கள் முறையிட்டபோது, இது கைத்தறிக்காக அமைக்கப்பட்ட குழு, இதிலே விசைத்தறியை நுழைக்கக்கூடாது என்று பலபேர் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆகவே, விசைத்தறிக்கு என்று தனியாக ஒரு வாரியம் அமைக்கப்படும் என்று சென்ற கூட்டத் தொடரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அந்த வகையில், விசைத்தறியாளர்களின் நலனைக் காக்கும் வகையில், விசைத்தறியாளர்களின் பல்வேறு பிரச்சினைகளைக் கண்டறிவதற்கும், பல பிரச்சினைகளைப் போக்குவதற்கும், தனியாக விசைத்தறி வாரியம் ஒன்று அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிமம் என்ற பெயரில் இருந்த சங்கடங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, ரூ.1,000 கட்டினால் போதும், அவர்கள் விசைத்தறி ஓட்டலாம் என்ற உரிமை வழங்கப்பட்டுவிட்டது. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, வாரியம் அமைப்பதற்கு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, தக்க முடிவை எடுப்பதற்கு இயன்றதை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியில் கிரே காடா மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், இந்த விசைத்தறியில் பல வண்ணமயமான லுங்கிகளும், ஆடைகளும் தயாரித்து ஏற்றுமதி என்ற பெயரால் விசைத்தறியில் நெய்து, கைத்தறி என்று முத்திரை குத்தி, இப்போது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கைத்தறியாளர்கள் கண்ணீர் வடிக்கின்றார்கள் என்று இந்த அவையிலே எல்லா உறுப்பினர்களும் கண்ணீர் வடித்தார்கள். அதற்காகத்தான், கைத்தறியாளர்களுடைய துயர் துடைக்க ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற



1998 மே 13]

உறுப்பினர்களும் இடம் பெற்றிருந்தார்கள். இன்றைக்குப் பார்த்தால், கைத்தறிப் பிரச்சினை ஓரளவு தீர்ந்தவுடன், அந்தக் குழுவில் இருந்தவர்கள் எல்லாம் விசைத்தறிக்காகக் குரல் கொடுக்கின்றார்கள். குழுவில் இருந்தவர்களே ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு இங்கே விவாதம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே முதலில் பேசிய டாக்டர் இராமன் அவர்கள்கூட அந்தக் குழுவில் இருந்தவர்தான். இந்தக் கருத்துக்களை அந்தக் குழுவில் எடுத்துச் சொல்லாமல், இந்த அவையில் எடுத்துச்சொல்வது எனக்கு மிகுந்த வேடிக்கையாக இருக்கின்றது. அதைப்போலவே திரு. சுப்பிரமணி அவர்களும் இப்போது கைத்தறிக்காக வாதாடுகின்றார். அந்தக் குழுவில் இருந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒருமித்த கருத்தை அப்போது சொல்லாமல், இப்போது வேறுபட்ட கருத்தைச் சொல்வது, இனிமேல் குழு அமைக்கலாமா என்ற அந்தக் கேள்வியையே எழுப்புவதாக அமைந்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 495, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**495—**

**கால்நடை மருத்துவமனைகள் கட்டுதல்**

***11473—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பண்டஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த நெக்குந்தி, ஈச்சம்பள்ளம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பண்டஹள்ளி ஊராட்சியைச் சேர்ந்த நெக்குந்தி, ஈச்சம்பள்ளி கிராமங்களுக்கு அருகில் கால்நடைக் கிளை நிலையம் உள்ளதால் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

[1998 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 496, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**496—**

**தையல் பயிற்சி மையங்கள் அமைத்தல்**

***9604—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

*(அ) கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பு குறித்த தையல் பயிற்சி மையங்களை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பு குறித்த தையல் பயிற்சி மையங்களை அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் ஏற்றுமதிக்கு ஏதுவாக உள்ள சென்னை, பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு இடைப்பட்ட பகுதியிலே இருப்பதாலும், இந்த மாவட்டங்களிலே வசிக்கக் கூடிய பெண்கள் ஆண்டுக்குப் பாதி மாதங்கள் வேலையின்றி வெறுமனே சும்மா இருக்கக்கூடிய காரணத்தினாலேயும், இந்தப் பகுதிகளிலே அந்தப் பெண்களினுடைய உடலுழைப்புத் திறனைப் பயன்படுத்தி, ஆயத்த ஆடைகள் தயாரித்து, அந்நியச் செலாவணி ஈட்டுவதற்காக, இந்தப் பகுதிகளிலே தையல் பயிற்சி மையங்களை அமைத்து பெண்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு எதிர்காலத்திலாவது முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் ஒரு துணைக் கேள்வி...



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அப்புறம் கேளுங்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத்த ஆடைகள் தயாரிப்புக்கான பயிற்சியை வழங்குவதற்கு இப்போது அரசின் சார்பில் எந்த வாய்ப்பும் இல்லை. எனினும், தையல் பயிற்சியை நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கற்றுக்கொள்வதற்காக பயிற்சி மையம் கடலூரில், வல்லம் படுகையில் ஓர் இடத்திலும், திருவண்ணாமலையில், திருவண்ணாமலை நகரிலும், ஜவ்வாது மலைப் பகுதியில், பாலமலையூரிலும் அமைத்து மகளிருக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தையல் பயிற்சி பெறுகின்ற மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் உதவித் தொகையும் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. அந்தத் தையல் பள்ளிகள் மூலமாக பெண்கள் தையல் பயிற்சியை பெற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையிலே ஆயத்த ஆடைகளைச் செய்து விற்பனை செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, குரோம்பேட்டையிலே Export Processing Zone-ல் ஆய்த்த ஆடைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அங்கே பணி செய்யக்கூடிய பெண்களுக்கு மாதத்திலே மிக மிகக் குறைந்த அளவிற்கு, 400 ரூபாய், 500 ரூபாய் அளவிற்குக்கூட அவர்கள் ஊதியம் வழங்குவதில்லை. குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதற்கான சட்டமும், நடைமுறைகளும் இருந்தும்கூட அவர்கள் அதையும் கடைபிடிப்பதில்லை. எனவே, அந்தப் பகுதிகளிலே பணி செய்யக் கூடிய அந்தப் பெண்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 497, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**497—**

**விடுதியில் தங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

***4760—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் தங்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 110 மாணவர்களுக்கு விடுதியில் சேர்வதற்கான போதுமான விண்ணப்பங்கள் 1996-97 ஆம் ஆண்டு வராததால் 23 மாணவர் இருக்கைகளை வேறு இடத்திற்கு மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, இவ்விடுதிக்கு மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளி மாணவர்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களிலே, ஏற்கெனவே நிறைய கல்லூரி மாணவர்கள் நீலகிரி மாவட்டத்திலேயிருந்தும், அதேபோல விழுப்புரம், காஞ்சிபுரம் என்று பல்வேறு மாவட்டங்களிலேயிருந்தும் எங்களுடைய முத்துரெங்கம் அரசுக் கலைக் கல்லூரியிலே வந்து சேருகிறார்கள். ஆனால் ஆண்டுதோறும் அந்த மாணவர்களைத் தேர்வு செய்கிறபோது பாதி மாணவர்கள் விடுபட்டுப் போகிறார்கள். நிறைய மாணவர்கள் விண்ணப்பம் போட்டுவிட்டு அவர்களுக்கு இடம் கிடைக்காத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. பள்ளி மாணவர்களைப் பொறுத்தஅளவில் நிறைய இடங்கள் இருக்கின்றன. நான் இல்லையென்று சொல்லவில்லை, கல்லூரி மாணவர்களைப் பற்றித்தான் இந்த வினாவைத் தொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரி மாணவர்களுக்கு இப்போது இருக்கக் கூடிய எண்ணிக்கையை இரண்டு மடங்கு ஆக்கிக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் பொதுவாக ஆதிதிராவிடர்கள் நல விடுதி என்றுதான் கேட்கப்பட்டிருக்கிறது. பள்ளி விடுதி என்றோ கல்லூரி விடுதி என்றோ கேட்கப்படவில்லை. ஆனால் கல்லூரி விடுதி ஒன்று இப்போது அவசியம் தேவை என்று கேட்கின்றார். அந்தப் பகுதியில் அதாவது வேலூரைச் சுற்றி வேலூர், திமிரி, ஏற்காடு, பள்ளிகொண்டா போன்ற பகுதிகளில் பள்ளி மாணவர் விடுதிகள் இருக்கின்றன. மேலும், இந்த ஆண்டுகூட வேலூரில் கல்லூரி மேற்படிப்பு மாணவர் விடுதி ஒன்று தொடங்குவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன துணைக் கேள்வி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர் விடுதி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். ஆனால், கல்லூரி மாணவர் விடுதி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்லூரி மாணவர் விடுதிதான். இந்த ஆண்டு தொடங்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கின்றார் இல்லையா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆதிதிராவிடர்களுக்கு ஒரு மாணவர் விடுதி இருக்கிறது. வேலூரிலே இருக்கக்கூடிய அந்த விடுதியில் மாணவர்களுடைய இருக்கைகளை, நிறைய பேர் மனு போடுகிற காரணத்தினாலே, தயவு செய்து இப்போது இருக்கக்கூடிய இடங்களை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வினாவே.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். கடந்த 4 ஆண்டுகளாக 110 மாணவர்களுக்குக் குறைவாகத்தான் அந்த மாணவர்கள் விடுதியில் இருக்கின்றார்கள். மேலும், விண்ணப்பங்கள் அதிகமாக

[1998 மே 13

வரவில்லை. ஆகவே, அந்த விடுதியில் மாணவர்களை அதிகமாக்கும் எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூன்றாவது வினாவா? நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, நீங்கள் பள்ளி மாணவர்களைப் பற்றிப் பேசுகிறீர்கள், அவர் கல்லூரி மாணவர் களைப் பற்றிக் கேட்கிறார். கல்லூரி மாணவர்கள் எத்தனை பேர் அந்த விடுதியில் இருக்கின்றார்கள் என்ற விவரம் உங்களிடம் இருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால், தனிக் கேள்வி போடச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. கல்லூரி மாணவர்களுடைய விடுதி அங்கே இருக்கிறது, பள்ளி மாணவர்கள் விடுதியும் அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய வேலூரில் நெடுங்காலமாக முத்துரெங்கம் கலைக் கல்லூரி இருக்கிறது. காமவீரர் காமராஜர் காலத்தில் தொடங்கப்பட்டு, அப்போதிருந்து ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி நெடுங்காலமாக இருக்கிறது. ஏற்கெனவே, வேலூரில் இடம் இல்லாத காரணத்தால், பக்கத்திலே விருபாட்சிபுரம் என்ற இடத்திலே ஒரு புதிய விடுதியை கட்டி, புது கட்டடம் கட்டி, திறப்பு விழாவெல்லாம் 4 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்து, இப்போது நிறைய பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இனியாவது துறையினுடைய அதிகாரிகளைக் கேட்டு, இருக்கக்கூடிய அந்த மாணவர்களின்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேலூர் என்று சொன்னீர்கள், அந்த ஊர் பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேலூர்தான் அது. It is part and parcel of Vellore. அது தனி கிடையாது. முத்துரெங்கம் கலைக் கல்லூரி இருப்பதும் வேலூர்தான், விடுதியும் வேலூர்தான். அப்துல்லாபுரம், விருபாட்சிபுரம், கொசப்பேட்டை இப்படி area-க்கு பெயர் இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இருக்கக்கூடிய strength-ஐ தயவுசெய்து இரட்டிப்புச் செய்து ஆணை இடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



1998 மே 13]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவில் கல்லூரி மாணவர்கள் விடுதி என்று கேட்டிருந்தால் இந்தக் குழப்பம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் எண்ணிக்கை கூட்டித் தரப்படுமா என்று கேட்கிறார். ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 498, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**498—**

### ஆண்டிப்பட்டியில் கல்லூரி அமைத்தல்

***10633—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், ஆண்டிப்பட்டியில் ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக கல்லூரி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா;

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசியலிலும், ஆன்மீகத்திலும் நிலைத்தப் புகழை நாட்டிச் சென்ற அமரர் திரு. பி.கே. மூக்கையா தேவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாலே தரப்பட்டு, உசிலம்பட்டியிலே இயங்கி வருகின்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியும், அதைப்போல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய முயற்சியால்,

[1998 மே 13

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டு, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாலே கடந்த ஆண்டு தரப்பட்டு, இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிற, தேனியில் இருக்கிற நாடார் மகாஜன சங்கக் கல்லூரியும்' தவிர, மதுரைக்கு மேற்கே கேரளப் பகுதி வரை 120 கிலோமீட்டருக்கு அரசு சார்பாக ஒரு கல்லூரி என்று சொல்கிற அளவுக்கு, ஒரு கல்லூரிகூட இல்லை. எனவே, கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் என்கிற அளவுக்கு ஒரு இலட்சியத்தை வைத்து சாதனை நிகழ்த்திக் கொண்டிருக்கிற இந்த அரசு, பல தொடக்கப் பள்ளிகளை உருவாக்கி, பல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்படுத்தியும், பல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்படுத்தியும் தந்து கொண்டிருக்கிற இந்த அரசு, இந்தச் சூழ்நிலையிலே அந்தப் பகுதியில் ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக ஒரு கல்லூரியை வரும் ஆண்டிலாவது அமைத்துதர ஆவன செய்ய முயற்சி எடுக்குமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே தனியார் கல்லூரி ஒன்று தேனியில் ஆரம்பிப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது என்பதையும், பெரியகுளத்தில் ஒரு மகளிர் கல்லூரி இருப்பதையும், ஆண்டிப்பட்டியிலிருந்து உசிலம்பட்டியில் தேவர் கல்லூரி ஒன்று, 16 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, ஆண்டிப்பட்டிக்கு அருகிலே இந்தக் கல்லூரி அமைந்திருக்கிற காரணத்தினால், இதைக் கருத்தில்கொண்டு, ஆண்டிப்பட்டியில் மீண்டும் ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 499, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**499—**

### சுற்றுலா மையத்தை விரிவுபடுத்துதல்

***3408—திரு. இரா. தாமரைக்கனி :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மே 13]

(அ) விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் அணைப் பகுதியில் மாவட்ட சுற்றுலா மையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் அணைப் பகுதி மாவட்ட உலாத்தலமாக்கப்பட்டுள்ளது. அதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் கேள்வி வந்து அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். பழையபடியும் இந்தக் கேள்வி வந்திருக்கிறது. ஒரே கேள்வி இரண்டு தடவை Agenda-வில் வருகிற மாதிரி, பதில் சொல்கிற மாதிரி Department-ல் கவனக் குறைவாக இதைப்போட்டு இருக்கிறார்கள். இருந்தாலும் பரவாயில்லை.

இந்த பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்குவதற்கு இந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி பக்கத்தில் உள்ள P.R.C. போக்குவரத்துக் கழகத்திலிருந்து வருடா வருடம் சுற்றுலா மையத்திற்கு நிதி ஒதுக்குவார்கள். அதை ஒதுக்குவதற்கு, சுற்றுலா மையத்திலிருந்து போக்குவரத்துக் கழகத்தைக் கேட்பதற்கும், உங்களுடைய Department-லிருந்தும் போக்குவரத்துக் கழகத்திலிருந்தும் நிதி ஒதுக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளவக்கல் அணைப் பகுதிக்கு சுற்றுலாத் துறையின் சார்பாக எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஆனால், அணைப் பகுதிகளில் படகு விடுவதற்காக வருகிற நிதிநிலை ஆண்டில் 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கக்கூடிய செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது என்பதைமட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 500, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

[1998 மே 13

**500—**

**பனைப்பொருள் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்**

***11479—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சாத்தான்குளம் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி பள்ளி ஒன்றைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், அதிலும் குறிப்பாக என்னுடைய சாத்தான்குளம் பகுதியில் பனைத் தொழில் முக்கியமாக உள்ளது. அந்தப் பனை மரங்களிலிருந்து எடுக்கப்படுகின்ற நார், ஓலை, தும்பு ஆகியவற்றின் மூலம் பல அழகிய பொருட்கள் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. எனவே, அந்தத் தொழிலை அரசே ஏற்று, அதைக் கற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் உள்ள மாநில பனை வாரியத்தின் மூலமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. அதோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக நிதி உதவி பெற்று பயிற்சி அளிக்கப்படுகிறது. திருச்செந்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் உடன்குடிக்கு அருகிலே இருக்கிற மனப்பாடு போன்ற இடங்களில் பனைத் தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, சாத்தான்குளம் பகுதியில் உள்ள பனைத் தொழிலில் பயிற்சி பெற விரும்புகிறவர்கள், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



## 2. தகவல் கோரல்

### (அ) முதலமைச்சர் பவள விழா ஆண்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவித்தல்

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிலே clarification?

**திரு. கே. சுப்பராயன்:** நேற்றைய Demand-லே ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைய Demand-லே இன்றைக்கு எப்படி clarification கேட்க முடியும்?

**திரு. கே. சுப்பராயன்:** நேற்று அனுமதிக்காததால், இன்று காலையிலே கேட்டுக்கொள்ளலாம் என்று இருந்தேன். நேற்று நேரம் ஆகிவிட்டதால் - நான் வலியுறுத்தினேன் - தாங்கள் அனுமதிக்க இயலாத அளவிற்கு நேரம் ஆகிவிட்டது. ஆகவே, அதுகுறித்து ஒரு விளக்கம் பெறவேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நேற்று அனுமதிக்காததற்குக் காரணம், நேரம் ஆனது மாத்திரம் அல்ல. பேசிய உறுப்பினர்கள் 9 பேர்கள். விளக்கம் கேட்பதற்கு 20 பேர்கள் எழுந்து நின்றார்கள். அதனால்தான் நான் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. சரி, இப்போது என்ன பிரச்சினை என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோது வலியுறுத்திய ஒரு விஷயத்தைத்தான் கேட்க விரும்புகிறேன். காலம் அதிகமாகி விட்டதால், அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கவில்லை என்று கருதுகிறேன். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுடைய பவள விழா ஆண்டு, இந்த ஆண்டிலே தமிழ்நாட்டில் சிறைகளிலே அடைக்கப்பட்டிருக்கிற ஆயுள் தண்டனை சிறைவாசிகள், முதலமைச்சருடைய பவள விழா ஆண்டையொட்டி, தங்களுக்கு ஏதாவது காலக் குறைப்பு ஏற்பட்டு, விடுதலைக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். எனவேதான், நான் நேற்று விவாதத்திலே பங்கேற்கிறபோதே, நம்முடைய அண்டை மாநிலமான கேரளாவில் 8 ஆண்டுகள் பூர்த்தி அடைந்த ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், ஆந்திராவிலே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தக் கருத்தை எல்லாம் நேற்றே சொல்லிவிட்டீர்கள், முதலமைச்சரிடமிருந்து பதில் மட்டும் கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** எனவே, 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்திருக்கிற ஆயுள் தண்டனை சிறைவாசிகளை விடுவிக்கின்ற ஒரு கொள்கை முடிவை அரசு எடுத்து அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவு என்ற காரணத்தால், உடனடியாக அறிவிக்க இயலாது. அவர்கள் குறிப்பிட்ட அண்டை மாநிலங்களைப் பற்றிய விவரங்களை எல்லாம் அறிந்து, எப்போது, எந்தக் காரணத்திற்காக அந்தத் தண்டனைக் காலத்தைக் குறைத்து அவர்களை விடுதலை செய்வது என்பதுபற்றி அரசு ஆலோசித்து, பின்னர் அறிவிக்கும்.

### (ஆ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பிரச்சினை?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேசவிட்டால்தானே என்ன என்று சொல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதைப் பேசப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அறையிலே வந்து கேட்டீர்கள். நான் இன்றைக்கு எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டேன். திருப்பி அதைப்பற்றிப் பேசினீர்கள் என்றால், பிரச்சினையாகும், உட்காருங்கள். (குறுக்கீடு) அது எனக்குத் தெரியும். அதற்காகத்தான் என்ன என்று கேட்டேன். ஏன் என்றால், நான் புறப்பட்ட நேரத்திலே அறையிலே வந்து கேட்டீர்கள். இன்றைக்கு எடுக்க முடியாது என்று சொல்லி விட்டேன். எனவே, உட்காருங்கள். (குறுக்கீடு) அதைச் சொல்ல முடியாது. நான் எப்போது எடுப்பேன், எப்போது எடுக்கமாட்டேன் என்பதை நீங்கள் அறையிலே வந்து என்னிடம் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) Time எல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் அறையிலே வந்து கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அது எனக்குத் தெரியும். முக்கியமான பிரச்சினை என்ன என்பது எனக்குத் தெரியும். என்





அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) ஆமாம், அதைக் கொடுக்க வேண்டும் என்று எனக்குக் கட்டாயம் கிடையாது. அதை நான் பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-30

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 3 நாட்களாக நான் தங்கள் அறையிலே வந்து கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் என்ன? மூன்று நாட்கள் என்ன? 30 நாட்கள் கூடக் கேட்கலாம். நான் அதனுடைய முக்கியத்துவத்தைப் பொறுத்துத்தான் முடிவு எடுப்பேன். நான் உட்காரவேண்டுமென்று சொன்னால் உடனே நீங்கள் உட்காரவேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் பேசினால் மட்டும் நீங்கள் mike கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். மற்றவர்கள் பேசினால் மட்டும் கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாமல் நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. mike இல்லாமல் நீங்கள் இவ்வளவு நேரம் பேசியிருக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருவாரூரில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த குமரன் கொலையுண்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. அ. அசோகன் ஆகியோர் ஓர் அவசர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த செவ்வாய்க்கிழமை திருவாரூர் மாவட்டம், குமரன் என்ற பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய இளைஞர் மன்றத்தினுடைய துணை அமைப்பாளர் மேலக் கடை வீதியில் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் வருகை தந்து கொண்டிருந்தபோது 10 பேருக்கு மேற்பட்டிருக்கக்கூடியவர்கள் பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தாக்கிப் படுகொலை செய்திருக்கிறார்கள். அவர் படுகொலை செய்யப்பட்டதனுடைய விளைவாக, திருவாரூர் நகரிலே பல கடைகள்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 13

அடித்து நொறுக்கப்பட்டு, கடைகள் அடைக்கப்பட்டு ஒரு பதட்டமான சூழ்நிலை இன்றையதினத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆக, இந்தக் கொலையைச் செய்திருக்கிற குற்றவாளிகளைக் கைது செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு, இந்தக் கொலையைப் பயன்படுத்திக் கொண்டு சில சமூக விரோதிகள் மீண்டும் ஒரு பதட்டத்தை, கலவரத்தை அந்தப் பகுதியில் ஏற்படுத்திவிடாமல் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நபர்களைக் கண்டறிந்து, என்ன காரணத்தினால் இந்தக் கொலை நடந்தது? அரசியல் நோக்கமா அல்லது தனிப்பட்ட சொந்த விவகாரத்தின் காரணமாக இந்தப் படுகொலை நடத்தப்பட்டிருக்கிறதா? இதன் காரணமாக இன்றைய சூழ்நிலையில் இதுபோன்ற ஒரு பதட்டமான சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டதன் காரணமாக, திருவாரூர் நகரத்திலே வர்த்தகர்கள் எல்லோம் கூடி இதுபோன்ற பாதிப்புகள் எது நடந்தாலும், இதுபோன்ற வன்முறையில் சிலபேர் ஈடுபடுகிறார்கள், இதன் காரணமாக எங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டு இன்றைய தினத்திலே அங்கேயிருக்கக் கூடிய வர்த்தகர்கள் எல்லாம் கடையடைப்பிலே ஈடுபட்டிருப்பதாகக் காலையில் எனக்குச் செய்தி வந்திருக்கிறது. ஆகையால் அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாலை 6 மணி அளவில் திருவாரூர் மேலக் கடைத் தெருப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மாவட்ட பா.ஜ.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் குமரன் என்பவரை சில அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள், திட்டமிட்டு சினிமாவிலே வருவதுபோல, படுகொலை செய்துவிட்டதாலும், அந்தப் பகுதியில் இருக்கிற 50-க்கும் மேற்பட்ட கடைகள் சூறையாடப்பட்டும் உள்ளதால் திருவாரூர் நகரத்திலே ஒரு பதட்ட நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி குறிப்பிட்டதைப் போல இன்றைக்கு திருவாரூர் முழுவதும் கடையடைப்பு நடத்துகிற அளவுக்கு



1998 மே 13] [திரு. அ. அசோகன்]

நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்களும் கொண்டு வந்துள்ள இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பு பற்றிச் சில விவரங்களை வெளியிட விரும்புகிறேன்.

*12-5-1998* அன்று இரவு 7½ மணி அளவிற்கு திருவாரூர் நகரம் மேலக் கடைத் தெருவில் சுப்பிரமணியம் என்பவருடைய மகன் குமரன் என்பவர் முன் விரோதம் காரணமாக எதிரிகள், (1) ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி (2) செந்தில் (3) சோபா - இவர் எதிரி 1-ன் தம்பி, (4) செட்டி (5) சிங்காரவேலு (6) முத்துக்கிருஷ்ணன், (7) சரவணன் மற்றும் சிலரால் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே குமரன் இறந்துவிட்டார். குமரன் கடந்த 1½ மாதங்களாக பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்து வருகிறார். இதற்கு முன் அவர் அ.இ.அ.தி.மு.க.விலே இருந்திருக்கிறார்.

*முற்பகல் 10-35*

இவரது நெருங்கிய நண்பர் பி. நாகேந்திரன் இன்னமும் அ.இ.அ.தி.மு.க.விலேதான் இருக்கிறார். இவர்கள் இருவரின் போட்டித் தரப்பினர்—ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி, ஜெயலலிதா பேரவையின் செயலாளர். எதிரிகள் பட்டியலிலே உள்ளவர்களும் அ.இ.அ.தி.மு.க.வின் உறுப்பினர்கள் மற்றும் அனுதாபிகள். இரு பிரிவினருக்கும் தனிப்பட்ட முறையிலே முன் விரோதம் இருந்து வந்தது. கடந்த 4-5-1998 ஆம் நாள் திருவாரூர் தாலுகா அலுவலகத்தில் அயல்நாட்டுத் தயாரிப்பு இந்திய மது வகைகள் விற்பனைக்கான ஏலம் நடத்தப்பட்டதில் 6-ஆம் எண் கடையின் விற்பனை உரிமையை மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி ரூ.10 லட்சத்து 75 ஆயிரத்திற்கு ஏலம் எடுத்துள்ளார். அதே கடையை, குமரன், நாகேந்திரனுக்காக ஏலம் கேட்டுள்ளார். ஏலம் நடைபெறும்போது, 'ஏன் ஏலத் தொகையை ஏற்றிவிட்டுக் கொண்டு இருக்கிறாய்' என்று குமரனுக்கும், மூர்த்திக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு, அது அந்த இடத்திலே சமாதானப்படுத்தி வைக்கப்பட்டது. குமரனைக் கொலை செய்தது தொடர்பாக திருவாரூர்

நகரக் காவல் நிலையக் குற்ற எண் 343/98, பிரிவுகள் 147, 148, 341, 324 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலே உள்ளது. குற்றவாளிகளில் சரவணன், சிங்காரவேலு என்ற இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப் பட்டுள்ளார்கள். மற்ற குற்றவாளிகளைத் தேடுகின்ற பணி தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே ஏற்பட்ட தகராறில், ஏலம் கேட்டவர்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். நாகேந்திரனும், தட்சிணாமூர்த்தியும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். இதிலே குமரன், நாகேந்திரனுக்காக ஏலத் தொகையை உயர்த்தினார், அதனால் தட்சிணாமூர்த்திக்கு 10¾ இலட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கும் நிலைமை ஏற்பட்டது என்ற ஆத்திரத்தில் விளைந்த விளைவு இது என்று கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்டவர் ப.ஜ.க. காரர் என்பதால் இதிலே மதவாதம் எதுவும் இல்லை. கொலை செய்யப்பட்டவரும், கொலை செய்தவரும், இருவருமே ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே இது மதப் போட்டி அல்ல, மதுப் போட்டிதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவில் இந்தப் பிரச்சினையை இதோடு போலீசார் நிறுத்தாமல், மேலும் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்ற உறுதியை இந்த அவைக்கு வழங்கி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

## (ஆ) போலி மருத்துவர்கள் செயல்பட்டு வருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாட்டில் போலி மருத்துவர்கள் பரவலாகச் செயல்பட்டு வருவதால் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. அ.வ. அப்துல் நாசர் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. டி. மணி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மனோகரன் என்கிற ஒரு டாக்டர் ஒரு குழந்தைக்கு சிகிச்சை செய்து, அந்தக் குழந்தையின் பெயரும் மனோகரன், அந்தக்





குழந்தை இறந்துபோனதையொட்டி, புலன் விசாரணை தொடங்கி இன்று தமிழ்நாடு எங்கும் கிட்டத்தட்ட 2,000 போலி டாக்டர்கள் இருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதிலே அரசாங்கத்தின் நிலை கொஞ்சம் சர்க்கஸ் கம்பெனியிலே நடப்பது போன்ற நிலைமைதான். அதே நேரத்தில் காவல்துறையை முடுக்கிவிட்டு யாரெல்லாம் போலி டாக்டர்கள் என்று கண்டுபிடிக்கிறபோது, ஏற்கெனவே சித்தா, யுனானி, ஆயுர்வேதம் போன்ற படிப்புகளை முடித்துவிட்டு சான்றிதழ்களை வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய மருத்துவர்களுக்கும் இப்போது சோதனை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களையெல்லாம் போய் இவர்கள் பிடிக்கிறபோது, உண்மையைக் கண்டறியவேண்டும் என்றால், போலீஸ் துறை ஆராய்ந்துதான் ஆக . வேண்டும். அந்தவகையிலே ஆராய்ந்து பார்க்கும்போது, சிலபேர் certificate இல்லாமல் 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் compounder-களாக இருந்தால் அல்லது நர்சுகளாக வேலை செய்திருந்தால் அந்த அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் தனியாக ஒரு கடையை ஆரம்பித்து, இன்று நிறைய கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே இந்த மனோகரன் என்ற டாக்டரைப் பார்ப்போம் என்று சொன்னால், அவர் நிறைய பேருக்கு appointment கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு டாக்டராக ரூ.3,500 சம்பளம் என்று, வரக் கூடிய compounder, நர்சுகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஆங்காங்கே ஒரு பிராஞ்ச் ஆரம்பித்து, ஒரு பெரிய ஆர்கனைசேஷனை நடத்திக்கொண்டு இருக்கக்கூடிய கொடுமையை நம்மாலே பார்க்க முடிகிறது. அந்த வகையிலே, இன்னொரு குழந்தை இறந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏன் வருகிறது. என்பதையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தீர ஆராய வேண்டும். நம்முடைய தமிழகத்திலே இப்போது pollution போன்றவற்றாலும், கலப்பட உணவுப் பொருட்கள் போன்றவற்றாலும் நிறைய நோய்கள் வந்துவிட்டன.

முற்பகல் 10-40

நோய்கள் நிறைய பெருகிவிட்ட காரணத்தினால் அதனை ஈடு கொடுக்கக்கூடிய அளவுக்கு டாக்டர்கள் இல்லையோ என்ற ஒரு ஏக்கமும், தாக்கமும்கூட தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல மருத்துவக் கல்லூரிகளை தனியாருக்குக்கூட கொடுத்து, நீங்கள் நிறைய

டாக்டர்களை உருவாக்க வேண்டும். 2 மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். குறிப்பாக என்னுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போலி டாக்டர்களுக்கும், கல்லூரிகளுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழகத்திலே ஏற்கெனவே இதுவரை எத்தனை போலி டாக்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றார்கள்? எவ்வளவு பேர் இந்த போலி டாக்டர்களுடைய சிகிச்சையாலே பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள்? இவர்களை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு தனிக் குழுவைப் போட்டாவது இன்னும் கொஞ்சம் அதிகமான கவனத்தைச் செலுத்தி இந்த போலி டாக்டர்களை அறவே ஒழிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதைப்போல ஓமியோபதி, சித்தா போன்ற டாக்டர்கள் எல்லாம் இப்போது பயந்துபோய், நேற்றுகூட குடியாத்தம் போன்ற பகுதிகளிலிருந்து எல்லாம் வந்து என்னிடம் மனுக்களைத் தந்தார்கள். நாங்கள் 1992 ஆம் ஆண்டே stay வாங்கியிருக்கிறோம்; எங்களையும் வந்து போலீஸ் தொல்லை கொடுக்கிறது என்றெல்லாம் மனு தந்திருக்கிறார்கள். ஆகவே அப்படி ஏற்கெனவே சித்தா, யுனானி போன்ற துறைகளிலே எல்லாம் சான்றுகள் பெற்றிருக்கக்கூடிய டாக்டர்களுக்கும் நீங்கள் பாதுகாப்பு அளித்து, சான்று இல்லாமல் போலி டாக்டர்களாக இருக்கக்கூடியவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கி, நல்ல சிகிச்சை தமிழகத்திற்குக் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4,5 நாட்களாகத் தமிழ்நாட்டு மக்களை உலுக்கிக் கொண்டிருக்கிற இந்த போலி மருத்துவர்களுடைய பிரச்சினை என்பது மிகவும் உஷார் தன்மையோடு கவனிக்கப்பட வேண்டிய ஒரு பொருள் ஆகும். ஏனென்றால் மனித உயிர்களோடு விளையாடக்கூடிய இந்தக் கொடுமை தமிழ்நாட்டில் இனிமேல் அறவே இல்லாத அளவுக்கு ஒழிக்கப்பட வேண்டும். இதுவரையிலும் 33 போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அப்படிக் கைது செய்யப்பட்ட போலி மருத்துவர் ஒருவர் கொடுத்த வாக்குமூலத்தில் இன்னும் 2,000 போலி



மருத்துவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார். அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் அந்த போலி மருத்துவர் வாக்கு மூலத்திலே தெரிவித்திருக்கிறார். நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு மக்களுடைய சுகாதாரத்தை, நல்லாரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான பல நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறது. தனியார் மருத்துவமனைகளைக்கூட போதுமான அளவுக்கு பலப்படுத்துவதற்கு, அவர்களுடைய கட்டுமான வசதிகளை எல்லாம் உத்தரவாதப் படுத்துவதற்கு என்று ஒரு பிரத்தியேக சட்டமே நம்முடைய அரசு கொண்டு வந்தது. அதேபோல் இப்படி மனித உயிர்களோடு விளையாடக் கூடிய இந்த போலி டாக்டர்களை அடியோடு வேரறுக்கத்தக்க வகையிலே ஒரு நல்ல முயற்சியை அரசு எடுக்க வேண்டும். அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இதனால் சித்த மருத்துவர்களோ, பாரம்பரிய அடிப்படையிலே வைத்தியம் பார்த்துக்கொண்டிருப்பவர்களோ பாதிக்கப்படாத அளவிலும் இந்த நடவடிக்கை அமைய வேண்டும் என்று வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஒரு சாதாரண பிரச்சினை அல்ல. மனிதனுடைய உயிரோடு விளையாடக்கூடிய ஒரு பிரச்சினை. நாம் இன்று துவங்குகின்ற ஒவ்வொரு தொழிலுக்கும், மற்ற காரியங்களுக்கும் licence பெறவேண்டும் என்று குறிப்பிட்டு, அதற்கென்று ஒரு வரையறை வைத்திருக்கின்ற வேளையிலே, டாக்டர்கள் clinic-கள் வைப்பதற்கு மட்டும், தன் இஷ்டத்திற்கு இதை எங்கே வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், கிளைகளை அமைத்துக்கொள்ளலாம் என்ற நிலை தமிழகத்திலே இருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டு நமது அரசு மருத்துவமனை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதை இன்னும் அமல்படுத்தவில்லை. இதுபோன்ற சட்டங்களின் வாயிலாக இதை ஒழுங்குமுறைப்படுத்தி clinic திறந்தாலும் சரி அல்லது consulting முறையிலே திறந்தாலும் சரி, அதற்கெல்லாம் licence முறையாகப் பெற வேண்டும்; அதை ஆங்காங்குள்ள J.D. யிடமோ அல்லது அங்கே உள்ள Superintendent-டமோ முறையாகப் பதிவு பெற்று, அனுமதி பெற்ற பிறகுதான் clinic-களைத் திறக்க வேண்டும் என்ற ஒரு control-ஐ இந்த அரசு விதிக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1998 மே 13

clinic-குகளும் சோதனையிடப்பட்டு முறையான பயிற்சி அளிக்கப்பட்ட, தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் மற்றும் பரிசோதகர்களும் இருக்கிறார்களா என்ற ஒரு ஆய்வையும் இந்த அரசு நடத்தி, இதையெல்லாம் ஒழுங்குமுறைப் படுத்தி, மக்களின் உயிரோடு விளையாடக்கூடியவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி அமர்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, சென்னை, வண்ணாரப்பேட்டையில் Eva clinic-கில் வைத்தியம் பார்க்கும்போது, ஒன்பதாவது படித்த டாக்டர் வைத்தியம் பார்த்ததினால் மனோகரன் என்ற ஒரு சிறு பையன் இறந்து இருக்கிறான். உடனே postmortem பண்ணுவதற்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் இருக்கிறார்கள். அந்த postmortem பண்ணிய பிறகுதான் இந்தப் பையனுக்கு என்ன மருந்து கொடுத்திருக்கிறார்கள் என்று விசாரித்து அந்த டாக்டருடைய prescription-ஐப் பார்த்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வியாதிக்கு அந்த மருந்து கிடையாது, அப்படி விசாரித்துதான் கண்டுபிடித்து இருக்கிறார்கள். பொதுமக்கள் எல்லாம் முற்றுகையிட்டு போராட்டம் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். prescription-ஐ தமிழில் எழுதியதால்தான் இந்தப் பிரச்சினை எல்லாம் வருகிறது. அதனால் இந்த மருந்துப் பெயர்களை எல்லாம் தெரியாத விதத்தில் எழுதி போலி மருத்துவமனை துவங்குவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதனால் எப்போதும் நீங்கள் ஆங்கிலத்தில்தான் எழுதவேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். மருத்துவமனையில் எடுபிடியாக வேலை செய்கிறவர்கள் அனுபவத்தை வைத்துக்கொண்டு கூட இந்த மாதிரி போலி மருத்துவமனைகளைத் துவக்குகிறார்கள். இப்போது 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி டாக்டர்கள் போலி certificate வாங்கியிருக்கிறார்கள் என்று இன்று பத்திரிகையில் கூட செய்தி வந்திருக்கிறது. இதுவரைக்கும் எத்தனை போலி certificate-கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை போலி டாக்டர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்? போலி certificate-களைத் தயார் செய்தது யார்? எத்தனை பேரைக் கைது செய்திருக்கிறீர்கள்? சென்னையைச்



1998 மே 13] [திரு. இரா. தாமரைக்கனி]

சார்ந்த தண்டையார்பேட்டையில், கூலித் தொழிலாளர்கள் இருக்கிற area-வில் இந்த மாதிரி நடந்து இருக்கிறது. அங்கே சென்னையில் இருப்பவர்கள் மட்டும் அல்லாமல் கிராமப் பகுதிகளில் இருந்தும் வைத்தியம் பார்ப்பதற்கு வருகிறார்கள். ஏன் என்றால் அவர்கள் வைத்தியம் பார்த்து விட்டு உடனே காசு வாங்குவது இல்லை, கடனாக வைத்தியம் பார்த்துவிட்டு ஏதாவது ஒரு ஊசிபோட்டு விடுகிறார்கள். ஊசி போடுவதற்கு என்று பயிற்சி எடுத்தவர்கள்தான் போட வேண்டும். நரம்பிலே போடுவது; தசையிலே போடுவது எப்படி என்று தெரியவேண்டும். தெரியாமல் ஊசி போடுவதாலேயே நிறைய பேர் இறந்து விடுகிறார்கள். பயிற்சி பெற்ற ஒரு compounder ஊசி போட்டால்தான் சரியாக இருக்கும். டாக்டர் போட்டால்தான் நன்றாக இருக்கும்.

டாக்டர் பட்டங்கள் என்பது—திடீர் என்று நிறைய வெளி மாநிலங்களிலிருந்து போலி certificate கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டிலும் certificate கொடுக்கிறார்கள். சிங்கப்பூரில் கூட டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள். இந்த டாக்டர் பட்டங்களை துட்டுக் கொடுத்து வாங்கி வந்து விடுகிறார்கள். டாக்டர் என்றால் அவர் எம்.பி.பி.எஸ். படித்தவரா, என்ன படிப்பு என்று இல்லை. போர்டு போட்டுக்கொண்டு அவர்கள்பாட்டுக்கு வைத்தியம் செய்கிறார்கள். உண்மையான டாக்டர்கள் வைத்தியம் செய்து விட்டு திடீர் என்று வேறு இடத்திற்கு இடம் மாறி விடுகிறார்கள். போலியான டாக்டர்கள் இருக்கிறார்கள். இயற்கையாகவே உள்ள டாக்டர் என்று சொல்லி வைத்தியம் பார்த்து, அது வேறு பிரச்சினையாக இருக்கிறது. போலி டாக்டரால் ஒரு சிறுவன் இறந்து விட்டான். இந்த மாதிரி பொதுமக்களிடம் ஒரு பிரச்சினை ஏற்படும்போதுதான் நீங்கள் வந்து சோதனை போடுகிறீர்கள். வருடத்திற்கு ஒரு முறை; 6 மாதத்திற்கு ஒரு முறை; இந்த certificate-கள் ஒழுங்காக இருக்கின்றனவா; clinic-குகள் ஒழுங்காக இருக்கின்றனவா? என்று அடிக்கடி சோதனை போடவேண்டும். இப்போது மனோகரன் என்ற ஒரு சிறுவன் இறந்து இருக்கிறான். அரசாங்கத்தின் சார்பில் அந்த இறந்த மாணவனின் குடும்பத்திற்கு, அந்தச் சிறுவனுக்காக 2 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

இன்னும் ஒன்று, நம் நாட்டில் கூட ஒருவனுக்கு உடம்பு சரியில்லை என்றால் சாரிடான் மாத்திரை சாப்பிடுங்கள், நோவால்ஜின் மாத்திரை

சாப்பிடுங்கள் என்று சொல்லி நாமே டாக்டராக மாறிவிடுகிறோம். சமீபத்தில்கூட நீங்கள் தினமும் 1½ லிட்டர் தண்ணீர் குடித்தால் சர்க்கரை நோயே வராது என்று அமைச்சர் சொன்னார்கள். எங்கள் சுந்தரம் எம்.எல்.ஏ. தண்ணீரைக் குடித்து மூச்சுத் திணறிக் கிடந்தார், அப்புறம் நான்தான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது நல்ல தண்ணீரைக் குடிக்கச் சொன்னேன். (சிரிப்பு) திரு. சுந்தரம் அவர்கள் என்ன தண்ணீர் குடித்தார் என்று எனக்குத் தெரியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடி தண்ணீர்தான் குடித்தார். குடிநீர் 1½ லிட்டர் குடித்து அதனால் தான் ஏற்பட்டது. அந்த மாதிரிதான் டாக்டர் ஹண்டேவுக்கும். திரு. சௌந்திரராஜன் பழைய மந்திரி. அவர் மந்திரியாக இருந்தபோது ஒரு தைலம் தேய்த்தால் முடி வளரும், வழுக்கை எல்லாம் போய் விடும் என்று சொன்னார். திரு. பொன்னையன், முன்னாள் மந்திரி அந்தத் தைலத்தை தேய்த்ததால் உள்ள மயிரும் போய்விட்டது. (சிரிப்பு) அந்த மாதிரி எல்லோருமே டாக்டர் ஆகக்கூடாது. எனக்கு நோய் என்றால் பக்கத்தில் இருப்பவர்கள் இதைச் சாப்பிடு; அதைச் சாப்பிடு; இப்படி, அப்படி என்று வைத்தியம் சொல்வது எனக்கு நல்லது அல்ல. ஆகவே மாண்புமிகு அமைச்சர் ஆனாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அந்தந்தத்துறையில் இருப்பவர்கள், அது அதற்கு வைத்தியம் பார்க்கவேண்டும். படிக்காதவர்கள், இந்த மாதிரி இருப்பவர்கள் எல்லாம் வைத்தியம் பார்த்துத்தான் இந்த மாதிரிக் கோளாறு எல்லாம் வருகிறது. இந்த மாதிரி வைத்தியம் பார்ப்பதற்கு அரசாங்கம் ஓர் அறிவுரை சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, போலி certificate-கள் தமிழ்நாட்டில் நிறைய இருக்கின்றன, அதேசமயத்தில் வெளி மாநிலத்தில் இருந்தும் வாங்கிக்கொண்டு வருகிறார்கள்; வெளி நாட்டிலிருந்தும் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தன்னிலை விளக்கமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்குப் பிறகு நான் தினமும் 1½ லிட்டர் தண்ணீர் குடித்துக் கொண்டுதான்





இருக்கிறேன். நல்ல தண்ணீர்தான் குடித்துக்கொண்டு இருக்கிறேன். முதலில் 1 லிட்டர் குடித்தேன், அது சிறிது கஷ்டமாக இருந்தது. பிறகு 1¼ லிட்டர், பிறகு 1½ லிட்டர் குடிக்கும்போது மூச்சுத் திணறுகிறது. இன்னும் ஒரு வார காலம், 10 நாட்கள் சென்றால் அது சரியாகி விடும் என்று சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) நல்ல தண்ணீரைத்தான் குடித்துக்கொண்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-50*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு அமைச்சருடைய பேச்சைக் கேட்டு, இந்த சுந்தரத்தைக் கொல்வதற்கு வேண்டிய முயற்சிகளைப் பண்ணிவிட்டீர்கள். (சிரிப்பு) அதனாலே, இந்த மாதிரி ஆலோசனைகளைச் சொல்லி, நாங்கள் - சட்டமன்ற உறுப்பினர்கள், மந்திரி சொல்கிற வைத்தியத்தினால் உயிரைக்கூடப் பணயம் வைக்கக் கூடிய நிலையெல்லாம் இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, நான் ஒன்றும் டாக்டர் என்று சொல்லி அதைச் சாப்பிடுங்கள் என்று சொல்லவில்லை. ஏறக்குறைய பெரும்பாலான மக்கள் ஜப்பான் நாட்டிலே இன்றையதினம் காலையிலே எழுந்தவுடன் இந்தத் தண்ணீர் குடிப்பதன் மூலமாகப் பல நோய் வராமலேயே தடுக்கப்படுகிறது என்று அவர்களுடைய நாட்டிலேயிருந்து அறிக்கைகள் இங்கே வந்து பலபேர் அதைப் பின்பற்றுகிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றையதினம் தண்ணீர் குடிப்பது உடலுக்கு நல்லது என்று எல்லா டாக்டர்களுமே சொல்கிறார்கள். ஆகவேதான், தண்ணீரைக் குடியுங்கள் என்று சொன்னேன். எடுத்தவுடனேயே 1½ லிட்டர் தண்ணீர் குடிக்க முடியாது. முதலிலே 1 டம்ளர் தண்ணீர், பிறகு 2 டம்ளர் என்று இப்படிப் படிப்படியாகத்தான் செல்ல வேண்டும். இருந்தாலும், நம்முடைய சுந்தரம் அவர்களுக்கு ஒரு ஆசை. 1½ லிட்டர் ஒரேயடியாகக் குடித்துப் பார்க்கலாமே என்று முயற்சி செய்திருக்கலாம். மீண்டும் சொல்கிறேன். தண்ணீர் குடிப்பதாலே எந்தவிதமான ஆபத்தும் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓரிரு வாரங்களாக எல்லாப் பத்திரிகைகளிலும் மிகப் பரப்பரப்பாக வருகின்ற செய்தி போலி டாக்டர்களைப் பற்றிய

[திரு. லா. சந்தானம்] [1998 மே 13

செய்தியாகத்தான் இருக்கிறது. சில பத்திரிகைகளிலே ஏறத்தாழ இரண்டாயிரம் போலி டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும், சில பத்திரிகைகளிலே 33 போலி டாக்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் இதுவரையிலும் என்றும் செய்தி வருகிறது. இப்படிப் பலதரப்பட்ட செய்திகளை மக்கள் பார்க்கின்றபொழுது, கிராமப் புறங்களில் இருக்கின்றவர்களும், மற்றவர்களும் மிகுந்த அச்சத்தோடு இருக்கிறார்கள்.

இன்றைக்கு, நகரங்களிலே எல்லா வைத்திய வசதிகளும் உள்ள இடங்களிலேகூட, இப்படிப் போலி டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, கிராமப்புறங்களிலே எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு கிராமத்திலேயும் இதுமாதிரி போலி டாக்டர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதை நாம் நேரடியாகவே பார்க்கின்ற நிலையிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட டாக்டர்களையெல்லாம் கண்டறிந்து அவர்களைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி டாக்டர்கள் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே 14 வயதுடைய ஒரு சிறுவனுக்கு காய்ச்சலுக்கு என ஒரு ஊசி போடப்பட்டு அதற்குப் பின்னால் அவன் இறந்து போனதற்குப் பின்னாலே ஏற்பட்டு இருக்கக்கூடிய பிரச்சினைகள் 5-ஆம் தேதி ஆரம்பித்து, இன்றையதினம் வரையிலும் பத்திரிகைகளிலே பெரிய இடம் பிடித்திருக்கிறது.

நூற்றுக்கணக்கான போலி டாக்டர்கள். அதற்குக் கீழே சிப்பந்திகள் வேறே, அதில் பொம்பளை, ஆம்பளை என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது.

இது இங்கே, நம்முடைய சென்னை மாநகரத்திற்குள்ளே மட்டும் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. இது கன்னியாகுமரியிலேயிருந்து இங்கே வரையிலும் இருக்கக்கூடிய ஒரு நோய். குறுக்கு வழியிலே பணம் சம்பாதிப்பதற்காக இருக்கின்ற ஓர் ஏற்பாடு. நோக்கம் குறுக்கு வழியிலே பணம் சம்பாதிப்பதுதான். ஆனால், இவர்கள் கையாள்வது அதிகாரப்பட்ட ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டருடைய விளம்பரப்பலகையை வைத்துக் கொள்வார்கள். வைத்துக்கொண்டு, அதற்குக் கீழேதான்



1998 மே 13] [திரு. டி. மணி]

இந்த போலி டாக்டர்கள், பட்டதாரிகளாக இல்லாமல், முழுமையாகப் படிக்காத எம்.பி.பி.எஸ். அல்லாத டாக்டர்கள்தான், மாநிலம் பூராவிலுமே இந்தப் பணியைச் செய்து வருகிறார்கள்.

இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. அது எப்படி என்பதுதான் முக்கியப் பிரச்சினை. இதைக் கண்டறிவதிலே சில சிக்கல்களும் அதற்குள்ளே இருக்கலாம். இருந்தாலும் இது ஒரு கொடுமையான நிகழ்ச்சி என்பதை நாம் மாநிலம் பூராவிலும் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே இதை முழுமையாகத் தடை செய்வதற்கு என்ன வழிவகைகளைக் கையாண்டால், இந்தப் போலி டாக்டர்களை, இப்படிப்பட்ட Clinic-களை நாம் காலாகாலத்திலே Checkup பண்ண முடியும் என்பதையெல்லாம் பார்த்து, இனிமேலாவது நம்முடைய மாவட்டத்திலே, மாநிலத்திலே இப்படி இந்தப் போலி டாக்டர்களால் ஒருவர்கூட துன்பப்படக்கூடாது அல்லது பலியாகக் கூடாது. அந்த வகையிலே ஒரு சிறப்பான கவனம் எடுத்து, முழுமையாக, இந்தப் போலித்தனமாக மருத்துவம் செய்கின்ற டாக்டர்களை அல்லது இது போன்ற புள்ளிகளைக் கைது செய்து, கடினமான தண்டனைக்கு ஆளாக்க வேண்டும். எப்படி, இவர்கள் போலிச் சான்றிதழ்களைப் பெற்றார்கள் என்பதையும் ஆராய வேண்டும். ஆனால், இதை சொல்லி யுனானி மற்றும் அதுபோன்ற டாக்டர்கள் இருக்கின்றார்களே அவர்களுக்குக் குந்தகம் வரக் கூடாத அளவில் அரசு செயல்பட வேண்டுமென்பதற்காக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. வ. அன்பழகன்:** Point of clarification..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அக்கறையோடு போலி டாக்டர்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால், எனக்கு இருக்கின்ற கவலை, இந்த அவையிலே பல உறுப்பினர்கள் முறையாக மருத்துவம் படித்து டாக்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் யாரும் போலி டாக்டர்களைப் பற்றிப் பேசவில்லை. ஒருவேளை பொது மக்கள் ஏன் இவர்கள் இது பற்றி

[திரு. வ. அன்பழகன்] [1998 மே 13

பேசவில்லையென்று, இவர்கள் மீது சந்தேகம் கொண்டுவிடக் கூடாது என்கிற காரணத்தினால், இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் ஏன் அந்த அக்கறையை எடுத்துக்கொள்ள்வில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒன்றும் Point of clarification அல்ல. ஒரு டாக்டர் பேசவிருக்கிறார். அதற்கு பிறகு விவரமாக நீங்கள் கேட்டிருக்கலாம். அடுத்ததாக, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்தின் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரகாலமாக தமிழகத்திலேயுள்ள போலி மருத்துவர்களைப் பற்றி பரபரப்பாக செய்திகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. இந்தப் போலி மருத்துவர்கள் வருவதற்குக் காரணமே முறையாகப் படித்த எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிராமப்புறங்களுக்கு வேலை செய்வதற்குச் செல்லத் தயாராக இருப்பதில்லை என்பதுதான். அவர்கள் நகர்ப் பகுதியிலேதான் வேலை செய்ய விரும்புகிறார்கள். அதைவிட்டால், வெளிநாட்டிற்குச் செல்வதற்கு விரும்புகிறார்கள். நம்முடைய வரிப் பணத்திலே, மக்களுடைய வரிப் பணத்திலே இங்கே மருத்துவப் படிப்பு படித்துவிட்டு வெளிநாடுகளிலும், நகர்ப் பகுதியிலேயும் மட்டுமே வேலை செய்வதற்கு முறையான மருத்துவம் படித்த எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலேதான் கிராமப்புறங்களிலேயும், நகர்ப்புறங்களிலே வறியவர்கள் வாழ்கின்ற பகுதிகளிலேயும் இத்தகைய போலியான மருத்துவர்கள் உருவாகிவிடுகிறார்கள். ஆகவே, நான் அரசாங்கத்திடம் விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் என்ன என்று சொன்னால்—

> 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்.'

என்று வள்ளுவர் சொல்வார். இந்தப் போலி மருத்துவர்கள் எப்படி வருகிறார்கள்? எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களிடம் 5, 6 ஆண்டு Compounder, நர்ஸாகப் பணி செய்தவர்கள்தான், 5, 6 ஆண்டுகளுக்குப் பின்னாலே வேறு இடங்களுக்குச் சென்று டாக்டராகத் தங்களை விளம்பரப்படுத்திக்கொண்டு இப்படி மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆகவே, முறையான மருத்துவர்களிடம் பணி செய்யக்கூடியவர்கள் கூட, பயிற்சி பெற்ற செவிலியர்களாகவும், Compounder களாகவும்



1998 மே 13] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இருக்கின்ற வகையிலே அரசாங்கம் அதைக் கண்காணிக்க வேண்டும். அதோடு புதிய மருத்துவமனைகள் தொடங்குவதற்கு உரிமை வழங்கப்படுகிற நேரத்திலே சான்றிதழ் உட்பட்ட அனைத்து நெறிமுறைகளையும் முறையாகக் கண்காணிக்க வேண்டும். அகில இந்திய மருத்துவ Council-ன் தமிழகப் பிரிவானது, தமிழ்நாடு அரசுக்குச் சில பரிந்துரைகளைச் செய்ததாக இன்றைக்கு பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தோம். அந்தப் பரிந்துரைகளை முறையாக ஏற்று அமல்படுத்தியிருந்தாலே இந்தப் போலி மருத்துவர்களைத் தடுத்திருக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, தமிழக அரசானது, உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கின்ற போலி டாக்டர்களைத் தடுப்பதற்காக, முறையான மருத்துவர்கள் கிராமப்புறங்களிலே பணியாற்றுவதற்காக, ஏதேனும் ஒரு சிறப்பு திட்டத்தைத் தீட்டி, நெறிமுறைப்படுத்தி, நடைமுறைப்படுத்தினால் ஒழிய இந்தப் போலி மருத்துவர்களை ஒழிக்க இயலாது என்ற காரணத்தினாலே, இதுகுறித்தும் அரசு ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதே நேரத்திலே பரம்பரை பரம்பரையாக மருத்துவத் தொழில் செய்கின்றவர்களுக்கு, அது இந்திய மருத்துவமாக இருந்தாலும் சரி, வேறு மருத்துவ முறைகளாக இருந்தாலும் சரி, அவர்கள் இந்தச் சோதனைகளிலே பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்பு சென்னையிலே போலி மருத்துவர் ஒருவரால் தவறாக சிகிச்சை அளிக்கப்பெற்று ஒரு சிறுவன் இறந்ததைத் தொடர்ந்து இப்போது இந்தப் பிரச்சினை பெரிதாக்கப்பட்டிருக்கிறது. போலி மருத்துவர்கள் என்று அழைக்கப்படக்கூடிய quacks-இந்தப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இந்திய மருத்துவக் கழகத்தால் எழுப்பப்பட்டிருக்கிறது. ஏதோ ஒருசில இதுபோன்ற விபத்துக்கள் மட்டுமல்ல, பல உயிர் இழப்புகள் இந்தப் போலி மருத்துவர்களால் கடந்த காலத்திலே நடந்திருக்கின்றன. இப்போதும் அவையெல்லாம் வெளியே தெரியாமல் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் போலி மருத்துவர்கள் அதிகமாவதற்கு, அவர்கள் வாழ்வதற்கு மூன்று மிக முக்கியக் காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமே கிராமப் புறங்களே அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கிராமப் புறங்களிலே

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1998 மே 13

இருக்கக்கூடிய மக்கள் போக்குவரத்து இன்மையின் காரணமாக, பல்வேறு குறைகளின் காரணமாக அரசு மருத்துவமனைகளுக்கு உடனடியாகச் சென்றடைய முடியவில்லை. எனவே, தங்கள் பகுதியிலே இருக்கின்ற ஒரு மருத்துவர், யாராவது board போட்டிருந்தால்கூட, கல்வி அறிவு இன்மையின் காரணமாக, சரியான விழிப்புணர்ச்சி இன்மையின் காரணமாக, ஏதாவது ஒரு சிகிச்சை கிடைக்கட்டும் என்று அவர்கள், அந்த மருத்துவரை அணுகிவிடுகிறார்கள். இரண்டாவது, இந்தப் போலி மருத்துவர்கள் ஏதோ அங்கே சாதாரணமாக பார்க்கக்கூடியவர்கள் மட்டுமல்ல, இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து செய்தித் தாள்களிலே விளம்பரம் செய்கிறார்கள். அது எப்படிப்பட்ட விளம்பரம் என்றால், குறிப்பாக sex பற்றியது. அதாவது, ஆண்மைக்குறைவு என்பதைப் பயன்படுத்திக் கொண்டு இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து சில மாத்திரைகளைச் சாப்பிட்டு, அவை ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமை எல்லாம் இருக்கிறது. இளைஞர்களும், திருமணமானவர்களும் இதுபோன்ற விளம்பரங்களுக்குப் பலியாகி அங்கே சென்று, இருக்கக்கூடிய சக்தியையும் இழந்து மனமுடைந்து வாழக்கூடிய நிலைமைகளையெல்லாம் காண்கின்றோம்.

முற்பகல் 11-00

இதேபோல மிக முக்கியமான இன்னொன்று கருக்கலைப்பு. கருக்கலைப்பு என்பதற்கு சட்டபூர்வமான வடிவமும், அதற்குத்தக்க பாதுகாப்பும் கொடுக்கப்படாத காரணத்தால் பல பெண்கள் இதுபோன்ற மருத்துவர்களை அணுகி, அதிலும் குறிப்பாக பெண் மருத்துவர்கள் என்று board போட்டுக் கொண்டிருப்பவர்களிடத்திலே சென்று கருக்கலைப்பு செய்து பல பெண்கள் உயிரிழந்திருக்கிறார்கள். எனவே, ஏதோ ஒருவர், இருவர்தான் இறந்ததாகக் கருதிவிடாமல் நூற்றுக் கணக்கான பெண்கள், ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் இதே போன்ற ஆபத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள்; ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மனதிலே கொண்டு அரசு ஒரு நல்ல ஆலோசனை செய்து இதுபோன்ற விளம்பரங்களைக் கொடுப்பவர்களையும் தடுக்க வேண்டும்.

கருக்கலைப்புக்கு அரசு மருத்துவமனைகளிலேயே சட்டபூர்வமான பாதுகாப்புக் கொடுத்து, அவர்களுக்கு உரிய விதத்திலே உதவ வேண்டும். அதேபோல் எல்லா கிராம மக்களுக்கும் எளிதாகச் சிகிச்சை



1998 மே 13] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அளிக்கக்கூடிய விதத்திலே எல்லா மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும் Ambulance வசதி ஏற்படுத்தி, கிராமப்புறங்களிலே ஆபத்து என்றால் அவசர சிகிச்சைக்குச் சென்று வருவதற்குத் தக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மருத்துவர்கள் board போடுகிறபோது அலோபதி மருத்துவரா அல்லது ஹோமியோபதியா அல்லது யுனானியா அல்லது சித்தா மருத்துவரா என்று தெளிவுபட அவர்கள் அந்த board போட வேண்டும். அதற்கு முன்பாக மாவட்ட அளவிலேயோ அல்லது அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய Deputy Director அளவிலே இருக்கக் கூடியவர்களிடத்திலோ அனுமதி பெறாமல் யாரும் மருத்துவமனை அல்லது Clinic வைக்கக்கூடாது என்பதற்கும் இந்த அரசு திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இதன் மூலமாகத்தான் போலி மருத்துவர்களை ஒழிக்க ஒரு நிரந்தரமான தீர்வினைக் காண முடியும், அவர்களை ஒழிக்க முடியும் என்று சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலதாமதமாக வந்த பாட்டாளி மக்கள் கட்சி-1-ன் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றேன். காலதாமதமாக வந்து அனுமதி பெறுவதை ஒரு முன்மாதிரியாக இனிமேல் வைத்துக்கொள்ளக் கூடாது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் காலதாமதமாக வந்தது, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த 4 பேர் மருத்துவமனையில் விபத்தால் இறந்துவிட்டதன் காரணமாகவும், 25 பேருக்கு மேலே மருத்துவமனை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு அவர்களை நான் பார்த்துவிட்டு வந்ததன் காரணமாகவும் நேரம் ஆகிவிட்டது என்பதைச் சொல்லிக்கொண்டு, போலி டாக்டர்களைப் பற்றி இந்த அவையிலே பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்கிறேன்.

தமிழகம் முழுவதும் இதுவரை 33 போலி டாக்டர்களை நம்முடைய அரசாங்கம் கைது செய்திருப்பதாக நாளிதழ்களிலே செய்தி வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 2,000 போலி டாக்டர்கள் தமிழ்நாட்டிலே இருப்பதாகவும்,

[திரு. ஐ. கணேசன்] [1998 மே 13

அவர்களுக்கு, தனிப்பட்ட ஒருசிலர் சான்றிதழ்களை அளிப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதன்மீது நம்முடைய அரசு சிறப்பாகக் கவனம் செலுத்தி, அதுபோன்று இருந்தால் போலியாக பெற்ற அத்தனை பேர்களுடைய சான்றிதழ்களையும் பறிமுதல் செய்ய வேண்டும்.

நம்முடைய அரசாங்கம் ஒரு டாக்டரை உருவாக்க கிட்டத்தட்ட 8 இலட்சம் ரூபாய்க்கு மேலே செலவு செய்கிறது. அப்படி செலவு செய்யப்பட்டு ஒரு மாணவன் டாக்டராக உருவாக்கப்படுகிறான். ஆனால், இவ்வளவு பணத்திலே, பொதுமக்களுடைய வரிப் பணத்திலே படித்து டாக்டரான அந்த மாணவன் கிராமப்புறங்களிலே சென்று மருத்துவம் பார்ப்பதைக் கேவலமாகக் கருதுவதன் காரணமாகத்தான் ஆங்காங்கே போலி டாக்டர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். பத்தாவது வகுப்பு வரை படித்துவிட்டு, ஊசி போடத் தெரிந்தால் போதும், போலியாக ஒரு Certificate-ஐ வைத்துக்கொண்டு டாக்டராகிவிடலாம் என்ற ஒரு கேவலமான நிலை தமிழ்நாட்டிலே மிக அதிகமாக இருக்கிறது.

*முற்பகல் 11-05*

டாக்டர். கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதுபோல, எங்கள் பகுதியிலே தாய்மார்கள் கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு பல போலி டாக்டர்கள் இருக்கிறார்கள். எத்தனையோ தாய்மார்கள் வெளியே சொல்ல முடியாமல், இந்தக் கருக்கலைப்பினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்திருக்கிறார்கள் என்பதையும் சொல்லி, இதுபோன்ற போலி டாக்டர்கள் உருவாக்கப்படாமல் இருக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இருப்பினும், கிராமங்களிலே பரம்பரை பரம்பரையாக சித்த வைத்தியம் செய்து கொண்டிருப்பவர்கள் மீது இந்தச் சட்டம் பாய்ந்து, அவர்களுடைய பரம்பரைத் தொழில் கெடாமலும் நாம் பாதுகாக்க வேண்டும். நம்முடைய அரசு இந்த சித்த வைத்தியத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பைத் தேடித் தரவேண்டும். போலி டாக்டர்கள் தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவுக்கு இந்த நடவடிக்கை கடுமையாக்கப்பட வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உருவாகி இருக்கின்ற போலி டாக்டர் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்



1998 மே 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

திரு. சி. ஞானசேகரன், திரு. நா. பெரியசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. லா. சந்தானம், திரு. டி. மணி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் திரு. ஐ. கணேசன் ஆகியோர் கொண்டு வந்த இந்த சிறப்புக் கவன ஈர்ப்பின் தீர்மானத்தின் மீது ஒருசில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல, 3-5-1998 காலை 9.30 மணியளவில் அப்பாசாமி தோட்டம், 2-வது சந்திலே குடியிருக்கும் மனோகரன், 15 வயது உடையவர், உடல்நிலை சரியில்லாத காரணத்தாலே ஒரு தனியார் மருத்துவமனைக்கு - ஈவா மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றிருக்கிறார். அதற்குப் பிறகு அவர் இறந்துவிட்டார். அவருக்குச் சிகிச்சை செய்த டாக்டர் மனோகரன் என்பவரும், செவிலியர் வில்லி ஜேம்ஸ் என்பவரும் தவறான மருந்து கொடுத்ததன் மூலமாக இறந்துவிட்டார் என்ற செய்தி உடனடியாகக் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப் பட்டார்கள். இந்தச் செய்தி வெளிவந்தவுடன் சென்னை நகரத்திலும், தமிழ்நாட்டில் மற்ற பகுதிகளிலும் இப்படிப்பட்ட போலி டாக்டர்கள் இருக்கிறார்களா என்பதைக் கண்டறியும்படி மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக இணை இயக்குநர் அவர்களையும், துணை இயக்குநர் அவர்களையும் இந்த அரசாங்கம் வேகமாக இந்தப் பணியிலே ஈடுபடுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆங்காங்கே உள்ள காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், எங்கெங்கே புகார்கள் ஏற்கெனவே வந்ததோ அதையெல்லாம் அடிப்படையாக வைத்து பல இடங்களிலே சோதனை செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் சென்னையைப் பொறுத்தவரையில், டி. மனோகரன், வில்லி ஜேம்ஸ், சக்திவேல், ரேகா என்கிற சசிரேகா, ஓமனா, வெங்கடேசன், விஸ்வேஸ்வரராவ் ஆகியோர் எம்.பி.பி.எஸ். படிக்காமலேயே, எந்தப் பட்டமும் பெறாமல், இப்படிப்பட்ட போலி மருத்துவர்களாக தங்களுடைய தொழிலை நடத்தி வந்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைக்கப்பெற்று அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது இன்றையதினம் வழக்கு தொடரப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, நாமக்கல் மாவட்டத்திலே பிச்சைமுத்து, வீரமணி, பெரியசாமி, கதிரேசன், பாலசுப்பிரமணி, சுப்பிரமணி, அருணாசலம், துரைசாமி, எஸ்.வி. முத்து, ஜோதிமணி, இராமசாமி, பாண்டியன்,

தலைந் பாட்சா, ராஜ்குமார் என்ற 11 பேரும் இப்படிப் போலி டாக்டர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். பலருக்கு சிகிச்சை செய்திருக்கிறார்கள். அவர்கள் மீதும் காவல் துறைக்குப் புகார் வந்திருக்கிறது என்று சொல்லி அவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதிகாரபூர்வமாக, சென்னையிலே 7 பேரும், நாமக்கல் மாவட்டத்திலே 14 பேரும் ஆக 21 பேர்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று காலையில் தினமணி பத்திரிகையிலே 33 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அதைப்போல, தினத்தந்தி பத்திரிகையிலே கைது செய்யப்பட்ட ஒருவர் ஏற்கெனவே இப்படிப்பட்ட போலிச் சான்றிதழ்கள் ஒரு சங்கத்தின் மூலமாக விநியோகிக்கப்பட்டு, 2 ஆயிரம் பேர் தமிழ்நாடு முழுவதும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதாகவும் சொன்ன வாக்குமூலமும் வந்திருக்கிறது. இருந்தாலும் அரசு இதையெல்லாம் புறக்கணிக்காமல் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மருத்துவமனைகளிலும் பரிசோதனை செய்து, எங்கேயாவது போலி டாக்டர்கள் இருக்கிறார்களா என்பதைக் கண்டறியும்படி ஏற்கெனவே அறிவுரை வழங்கியிருக்கிறது.

இப்படிப் போலி டாக்டர்கள் பெருகுவதற்கு என்ன காரணம் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தெளிவாகச் சில நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறது. ஒருவர் எம்.பி.பி.எஸ். டாக்டர் பட்டம் பெற்றால், அவருக்கு மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒரு சான்றிதழ் வழங்கப்படுகிறது. அது உடனே பதிவு செய்யப்பட வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்பட்ட டாக்டர்கள், எங்கே அவர்கள் தொழில் செய்கின்றார்களோ அங்கே, மருத்துவப் பல்கலைக்கழகத்தால் கொடுக்கப்பட்ட அந்தப் பட்டத்தினுடைய xerox copy-யைக் கண்ணாடி போட்டு, அந்த மருத்துவமனையிலே வைக்க வேண்டுமென்று ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சிலபேர் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை.

முற்பகல் 11-10

இன்னொரு பக்கத்திலே மருத்துவர்கள் மருத்துவக் கல்லூரியிலே படித்து முடித்தபின், அவர்கள் தொழில் செய்கின்ற நேரத்திலே, முறையாகப் பதிவு செய்யப்பட்ட எண்களைப் போட்டு, அவர்களும் அவர்களுடைய தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். இவற்றையெல்லாம்



மனதிலே கொண்டுதான், கடந்த ஆண்டு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், ஆலோசனைப்படி இப்படிப்பட்ட போலி டாக்டர்களைத் தடுக்க வேண்டும்; அதேநேரத்தில் நல்ல மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு தனியார் மருத்துவமனைகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை நாம் நிறைவேற்றினோம். இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒப்புதலோடு அது சட்டமாக்கப்பட்டது. ஆனால், மருத்துவர்களுடைய எதிர்ப்பு காரணமாக, இந்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய உத்தேசித்து, அச்சட்டம் அமல்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், மாற்றங்கள் எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்பதால், தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற இப்படிப்பட்டதொரு அவல நிலையைப் போக்குவதற்காக இன்று முதற்கொண்டே அந்தச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் போலி டாக்டர்கள் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கப்பட்டு, கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சில மருத்துவமனைகளிலே கருத்தடை செய்துகொள்ளச் செல்கின்ற சகோதரிகளுக்குத் தவறான முறையிலே கருத்தடை செய்து, அதனாலே உயிரிழக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு பக்கத்திலே, போலி டாக்டர்களாலே இறந்து விடுகிறார்கள். இன்னொரு பக்கத்திலே முறையாகத் தேர்ச்சி பெற்ற டாக்டர்களால் தவறான மருந்து கொடுக்கப்பட்டு அல்லது தவறான சிகிச்சை கொடுத்ததன் மூலமாகவும் இறந்து விடுகிறார்கள். இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமானால், அவர்கள் தொழில் செய்கின்ற இடம் முறையாக இருக்க வேண்டும். அது ஒரு மருத்துவமனைதானா, அங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆராய்வதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. உதாரணத்திற்குச் சொல்கிறேன்; வசதிபடைத்தவர்கள் சிலபேர் மருத்துவமனைகளைக் கட்டி விடுகிறார்கள். ஆனால், அங்கே முறையாகப் பயிற்சி பெற்ற டாக்டர்களை நியமிப்பதில்லை. தனியார் மருத்துவமனை என்று வைத்துக் கொண்டு, முறையாகப் பயிற்சி பெற்ற டாக்டர்களை அங்கே நியமிக்காத காரணத்தினால், ஏதோ, எம்.பி.பி.எஸ். என்று சொல்லி, ஒருவர் அங்கே உட்கார்ந்து கொண்டு கொடுக்கின்ற சிகிச்சை

மூலமாகவும் சிலர் இறந்து விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் அரசு பரிசீலித்து, தமிழ்நாட்டிலே இருக்கின்ற தனியார் மருத்துவ மனைகள் எதுவாக இருந்தாலும் சரி; அப்பலோ மருத்துவமனையிலே இருந்து, கிராமப்புறங்களிலே ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவமனை வரையிலே இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, முறையாக ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த உரிமம் சரியாக இருக்கிறதா; அங்கே மருத்துவமனைகள் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா; அடிப்படை வசதிகள் இருக்கின்றனவா; நவீனக் கருவிகள் இருக்கின்றனவா; இவை எல்லாவற்றையும் ஆய்ந்து, அவர்களுக்கு உரிமம் தொடர்ந்து வழங்கப்படும். அப்படி யார் தொடர்ந்து அந்த உரிமத்தைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்கள்தான் இந்த மருத்துவமனையைத் தொடர்ந்து நடத்தலாம். ஏற்கெனவே இந்த அவையிலே கொண்டுவரப்பட்ட, உங்களால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை இந்த அரசு தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம் இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றலாம் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே, இந்தச் சட்டத்தை இன்று முதலே இந்த அரசு அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, போலி டாக்டர்கள் எங்கிருந்தாலும் சரி, அவர்கள் எவ்வளவு பெரிய சக்தி படைத்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனையை இந்த அரசு அளிக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவருடைய குடும்பத்திற்கு ஏதாவது நிதியுதவி செய்ய வேண்டும். பாவம், அவர்கள் ஏழ்மையான குடும்பம்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் யார் இறந்தாலும் கருணையோடு நம்முடைய முதல்வர் அவர்கள் தேவையான நிதியை அளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இறந்தவருடைய குடும்பத்தின் நிலைமையையெல்லாம் பார்த்து, இந்த அரசு அதுகுறித்து விரைவிலே ஒரு முடிவு எடுக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டம் உடனடியாக அமலுக்கு வரும் என்று சொன்னார்கள். ஆனால், போலி மருத்துவர்கள் பிரச்சினை என்பது, இன்னும் ஆழமானது; சற்று வித்தியாசமானது. கிராமப்புறங்களில் மருத்துவமனைகளையே கட்டாமல், Clinic என்று சாதாரண அறைகளிலே துவக்கி, அவர்கள்





நடத்துகிறார்கள். இதுபோன்ற மருத்துவமனைகளினாலேதான் பிரச்சினைகள் வருகின்றன. பயிற்சி பெறாதவர்கள், அதாவது அலோபதி பயிற்சி பெறாதவர்கள், டாக்டர்கள் என்று board போட்டுக் கொண்டு, ஊசி போட்டுக் கொண்டு, அலோபதிக்குரிய சிகிச்சை அளிப்பதால்தான் இதுபோன்ற சிக்கலே வருகின்றது. எனவே, அதைத் தடுப்பற்கு இந்தச் சட்டம் வழிவகுப்பதாகத் தெரியவில்லை. அந்தச் சட்டம் மருத்துவமனைகளைக் கட்டுப் படுத்துவதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதிலே ஆழமாகக் கவனம் செலுத்த வேண்டும். நான் வேறொரு ஆலோசனையைச் சொல்ல விரும்புவது, சீனாவிலே bare foot டாக்டர்கள் என்று இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அவர்கள் இருக்கிறார்கள். அதுபோல, நாமும் ஏதாவது ஒரு பயிற்சி அளித்து, அவர்களை நியமித்தால் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுத்ததாகக்கூட இருக்கும். எனவே, bare foot டாக்டர்களை நியமிப்பதன் மூலம் எளிய சிகிச்சையை அளிக்கலாம். எல்லோருக்கும் சிகிச்சை அளித்ததாகவும் இருக்கும். அதேபோல, போலி மருத்துவர்களையும் ஒழித்ததாக இருக்க முடியும்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே பேசியாகிவிட்டது. இப்போது மீண்டும் ஒரு சொற்பொழிவை ஆற்றுகிறீர்களே? மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உறுப்பினர் சொன்ன கருத்துக்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து, இந்த அரசால் பரிசீலிக்கப்படும். சில டாக்டர்கள் கட்டடங்கள் இல்லாமலே 'clinic' என்ற பெயரால் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்துமா என்று கேட்கிறார்கள். இந்தச் சட்டத்திலே, அதையும் ஒரு பிரிவாகச் சேர்த்து, அவர்களையும் இந்தக் கட்டுப்பாட்டிற்குள்ளே கொண்டு வருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் போன்றவர்கள் எல்லாம், இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இப்படி இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலம், இந்திய மருத்துவ முறையிலே இருக்கக்கூடிய சித்தா, யுனானி, ஆயுர்வேதம் போன்ற துறையிலே இருக்கக்கூடிய அந்த டாக்டர்களையும் பாதித்துவிடக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக, இந்திய மருத்துவ முறையில்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 13

பயிற்சி பெறுகின்ற டாக்டர்கள், ஊசி போடக் கூடாது; Operation செய்யக்கூடாது என்றெல்லாம் இருக்கிறது. ஆனால், சிலபேர், சித்த மருத்துவ டாக்டர்கள்கூட, இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள். எனவே, சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம், ஓமியோபதி போன்ற மருத்துவத்திலே தேர்ச்சி பெற்ற டாக்டர்கள், அவர்கள் பெற்ற certificate-ஐ வைத்துக் கொண்டு, முறையாகப் பதிவு செய்து கொண்டவர்கள்தான் இந்த நாட்டிலே practice செய்யலாமே தவிர, யார் வேண்டுமானாலும் அந்த முறையிலே practice செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே, அவர்களையும் இந்த அரசாங்கம் கண்காணிக்கும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி *55-ன் கீழ்* கொடுக்கப்பட்ட கவன ஈர்ப்புகள், காலத்தின் அருமை கருதி ஒத்திவைக்கப்படுகின்றன.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1997-98* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின், *39* முதல் *42* வரையிலான *4* அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 — 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு

*(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, *1998-99* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் *12 — 1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய *12* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. *21,22,48,000*/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *2703*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டத்தில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான உடைமைகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடமிருந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, திருக்கோயில்களின் சொத்தை மீட்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய *12* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்".

[1998 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 154, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் 15 வேலம்பாளையம் க.சா. 304-ல் கோயிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தை உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்குக் கல்வித் துறைக்கு மாற்றித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1449, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1220, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 980, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



1998 மே 13]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், தொட்டிப்பாளையம் ஊராட்சி, ஜல்லிக்கல்மேட்டில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் 30 ஆண்டுகளாகக் குடியிருக்கும் 50 ஏழைக் குடும்பங்களுக்கு அரசு நிர்ணயிக்கும் ரூபாயைப் பெற்றுக் கொண்டு, அக்குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1755, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பரம்பரையாக கோவில்களில் இசைக் கலைஞர்களாக உள்ளோர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3560, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை ஸ்ரீநீலாயதாட்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமான புண்டரிக குளத்தைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3587, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிலக்கோட்டை தாலுகா, செக்கர்பட்டியில் உள்ள சக்தி வாய்ந்த விநாயகர் கோபுரம் சாய்ந்து விழுந்துவிடும் அபாயத்தில் உள்ளதால், அதனை விரைந்து செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2463, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் கோயில் அறங்காவலர்களாக நியமனம் செய்யும்போது, பக்தி உடையவர்களையும், பொது வாழ்க்கையில் நேர்மையாக நடந்து கொள்பவர்களையும் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2411, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கட்டளை கிராமத்தில், திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான காலி இடத்தை அரிசன மக்களுக்குப் பிரித்து அளந்து அவற்றுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1670, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்து சமய அறக்கட்டளை கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் *50* ஆண்டுக்காலமாகக் குடியிருப்பவர்களுக்குக் குடிபட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2626, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிரசித்தி பெற்ற மன்னார்குடி ஆலயத் தெப்பக்குளத்தைத் தூர்வாரி, அக்குளத்தின் சுற்றுச் சுவரைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *21,22,48,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2149, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் கோவில் திருப்பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே. தங்கமணி] [1998 மே 13

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 938, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1916, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3756, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுவாமிமலை, ஸ்ரீசுவாமிநாத திருக்கோவில் திருப்பணியை உடனே மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,22,48,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி—பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 24,63,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2065, திரு. சி. ஞானசேகரன்.



1998 மே 13]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழறிஞர் திருமுருகக் கிருபானந்தவாரியாருக்கு, காட்பாடியை அடுத்த காங்கேயநல்லூரில் நினைவு மண்டபம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 186, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2764, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1716, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 13

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2523, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றக் காரணமாக இருந்த குலாம்காதர் நாவலர் அவர்கள் பிறந்த ஊரான நாகூரில் அவருக்கு நினைவு மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3670, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1096, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அரசு அலுவலகங்களில் அனைத்துக் கோப்புகளும் தமிழில்தான் எழுத வேண்டும் என்பதை அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதன்



1998 மே 13] [திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்]

அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1854, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir,

"To discuss policy" I move—

"That the allocation of Rs. 24,63,37,000/- under Demand No.51 - Tamil Development-Culture be reduced by Rs. 100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் ஏண் 3961, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரையில் இயங்கிவரும் தமிழ்ச் சங்கத்திற்குப் போதிய நிதி வழங்கி உதவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,63,37,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தீர்ப்பில் மாண்புறும் அரசின் எல்லாத் தரப்பும் ஏற்றிடும் வகையில் இரண்டாம் ஆண்டினை இனிதே முடித்து, மூன்றாம் ஆண்டில் முதலடி பதிக்கும் இன்றைய ஆட்சியின் ஈடுஇணையற்ற குன்றாப் புகழுடை முதல்வரை வாழ்த்தி, என்றும் துணை நிற்கும் உங்களை வாழ்த்தி, மானியக் கோரிக்கையை மகிழ்வுடன்

படைத்தோம். அரிய கருத்தால் அறமும் தமிழும், ஓங்கி வளர உறுதுணையாவீர் என்று வேண்டி, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதிச் சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உணவு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையையொட்டி காலை 11-00 மணியிலிருந்து சிற்றுண்டியும், பகலில் உணவும் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கவிருக்கிறார்கள்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 — 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைக்க திரு. டி. சுதர்சனம் அவர்களை அழைக்கின்றேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானிய கோரிக்கையின்மீது தேசியத்திலும், தெய்வ நம்பிக்கையிலும்

@ 389 முதல் 443 வரையிலான ஆம் பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



அதிக ஈடுபாடு கொண்டவர்களைக் கொண்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழக முதல்வர் அவர்கள் இரண்டு ஆண்டு காலம் இந்த நாட்டுக்கு நல்லாட்சியைக் கொடுத்து, அந்த நல்லாட்சியின் பயனாக இப்போது நாட்டு மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றிருப்பதையும், இரண்டு ஆண்டு கால சாதனையையும் நேற்றைக்குப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றபோது அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதுமட்டுமல்ல இந்த இரண்டு ஆண்டு கால சாதனையை மட்டும் அல்லாமல், இன்னும் மூன்றாண்டுகள் கழித்து ஐந்தாண்டுகளின் சாதனையை சொல்லக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் வணங்குகின்ற திருப்பதி வெங்கடாசலபதி பெருமாளையும், தமிழகத்திலே கோவில் கொண்டிருக்கின்ற, அறுபடை வீடுகள் கொண்டிருக்கின்ற முருகப் பெருமானையும் வணங்கி, தமிழகத்திலே தொடர்ந்து ஐந்தாண்டுகள் நல்லாட்சி அமைய வேண்டும் என்று வாழ்த்துவதற்கு வயதில்லை என்று சொன்னாலும், அதற்காக வேண்டிக்கொண்டு, என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

இன்றைக்கு தமிழகத்திலே சுமார் 36,000 கோவில்கள் இருக்கின்றன. 36,000 கோவில்களைக் கொண்ட இந்தத் துறையை இரண்டு ஆண்டு காலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே ஒரு மோசமான ஆட்சி இதற்கு முன் நடைபெற்று, அந்த மோசமான ஆட்சியின் காரணமாக கோவில் நிலங்கள் எல்லாம் சூறையாடப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்ட செய்தி, அத்தனை பேரும் பேசி முடித்த செய்தி இருந்தாலும்கூட, இந்த இரண்டு ஆண்டு காலத்திலே தமிழக முதல்வர் அவர்கள் இந்த இந்து சமய அறநிலையத் துறையிலே அக்கறை காட்டி பல்வேறு சிறப்பு செய்திருந்தாலும்கூட, போதிய அளவு இந்தத் துறை சிறப்பு அடையவில்லை என்றுதான் என்னாலே சொல்ல முடியும்.

முற்பகல் 11-25

அடுத்து, இந்து சமய அறநிலையத் துறையிலே, தெய்வ காரியங்களுக்காக, தேச நலனுக்காக பல்வேறுபட்ட பெரியவர்கள் கோயில்களுக்குச் சொத்துக்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கோயில்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற சொத்துக்களை எல்லாம் கடந்த ஆட்சிக் காலத்திலே எப்படியெல்லாம் சூறையாடினார்கள், எப்படி எல்லாம் கொள்ளையடித்தார்கள் என்பதை

எல்லாம் விவரமாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்வதற்கு நேரம் அதிகமாக இல்லை என்பதால் அதைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவரவர் இருக்கைகளுக்குச் சென்று அமர வேண்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** சென்ற ஆட்சிக் காலத்தில் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை எல்லாம் திரும்பப் பெறுவதற்கு கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே பெரு முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றுதான் என்னால் சொல்லமுடியும். இன்றைக்குக்கூட பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்தேன். ஒரு கோடியே, 86 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்து கோவையிலிருந்து மீட்கப் பெற்றிருக்கின்றது என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்படிக் கொள்ளையடிக்கப் பட்ட சொத்துக்களின் மதிப்பு எத்தனை கோடி என்பதை நீங்கள் உங்கள் பதில் உரையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே, இந்துக்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, கிருஸ்தவர்களாக இருந்தாலும் சரி, சீக்கியர்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேரும் சகோதரர்கள் என்ற முறையில் வாழும் நிலைமை இருந்து வந்தது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இப்போது மதவாதம் என்ற பெயரில், மதவாத சக்திகள் தமிழகத்திலே தலை தூக்கி இருக்கின்றன. அப்படி மதவாத சக்திகள் தலை தூக்கியது மட்டுமல்ல, அந்த மதவாத சக்திகளுக்குத் தமிழகத்திலே இருக்கின்ற சில தீய சக்திகள் உடனிருந்துகொண்டு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து வருகின்றன. இந்து மதம் என்று சொன்னால், முஸ்லிம் மதம் என்று சொன்னால், கிருஸ்தவ மதம் என்று சொன்னால், ஏதோ அவர்கள் எல்லாம் வேறு வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு குறுகிய எண்ணத்தை, இந்த ஓராண்டு காலத்திலே கொண்டுவந்திருக்கிறார்கள். இதன் காரணமாக இந்தத் துறையைத் திறம்பட நிர்வகிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே, தமிழ் வளர்ச்சித் துறையிலே அக்கறை காட்டுகின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறையிலே அக்கறை காட்டவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

அடுத்ததாக, தமிழகத்திலே இருக்கின்ற 36 ஆயிரம் கோயில்களுக்கு இந்த ஆண்டு மட்டும் 102 கோடி ரூபாய் நிலத்தின் மூலமாக வருமானம்



வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 102 கோடி ரூபாய் என்பது நஞ்சை, புஞ்சை, மானாவாரி நிலங்கள் மூலமாக, சுமார் 4.91 இலட்சம் ஏக்கர் நிலத்தின் மூலமாக வந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 20,530 வீடுகள், 22,629 கட்டடங்கள், 73,320 வீட்டு மனைகள் என்று அசையாச் சொத்துக்களின் மூலமாகவும் அந்த வருமானம் வந்திருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் நிறைய பாக்கித் தொகை இருக்கிறது. அதற்காக 11 வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, அந்த 11 வருவாய் நீதிமன்றங்களிலே 1206 திருக்கோயில்கள் சார்பாக 28,764 வழக்குகள் போடப்பட்டு சுமார் 2,700.73 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பாக்கித் தொகை வரவேண்டி இருப்பதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 13,431 வழக்குகள் இன்னும் முடிக்கப்படவில்லை. முடிக்கப்பட்டுள்ள வழக்குகள் மூலமாக 830.80 இலட்சம் ரூபாய் வசூலாகி இருப்பதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், 12,333 வழக்குகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி முடிக்கப்படாமல் இருக்கின்ற வழக்குகளை எல்லாம் விரைந்து முடித்து அந்தப் பணத்தை எல்லாம் கோயில் நிர்வாகங்களுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வரவேண்டிய பாக்கித் தொகை மட்டும் சுமார் ரூ. 18 கோடி ஆகும்.

அடுத்து, கோயில் நிர்வாகத்திற்காக அறங்காவலர்களை நியமிக்கிறோம். அறங்காவலர்களை நியமிக்கும்போது தெய்வ நம்பிக்கை உள்ளவர்களையும், தேசப்பற்று உள்ளவர்களையும் நியமிக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையினை நீண்ட நெடுங்காலமாக இங்கே சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இதற்கு முன்னால் இருந்த அரசு அவர்களுடைய கட்சிக்காரர்களையே அறங்காவலர்களாக நியமித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே, கோயில் கூடாது என்பதற்காக அல்ல, கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்று, அதுமாதிரி அன்றைக்கு இருந்த அரசு, கோயில்களை கொடியவர்களின் கூடாரமாக ஆக்கியது. இப்போது இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட, இன்னும் அது கொடியவர்களின் கூடாரமாகத்தான் இருந்து கொண்டே இருக்கிறது. ஏனென்றால், 5 ஆண்டு காலம் அந்தக் கோயில்களில் ஊழல் செய்து பிழைத்தவர்கள், அந்தக் கோயிலின் நிலத்தைச் சுரண்டியவர்கள், கட்டடங்களை எல்லாம் அனுபவித்தவர்கள் மீதெல்லாம் இன்னும் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்

அவர்கள் இன்னமும் அங்கேயேதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் இதில் அதிக கவனம் செலுத்தி அந்தக் கொடியவர்களை அந்த இடத்தை விட்டு அகற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது நீங்கள் எப்படி அறங்காவலர்களாக நியமித்து இருக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால், வருகின்ற காலங்களில் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களை, பெரியவர்களை, தவறு செய்யாதவர்களை கோயில்களிலே அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அந்தப் பகுதியிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் அழைத்து ஆலோசனைகளைக் கேட்டாவது தயவு செய்து நீங்கள் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோன்று, கோயில்களில் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது இந்த அரசினுடைய கடமை. அரசு பொறுப்பு ஏற்ற சமயத்திலே திருவண்ணாமலையிலே இருக்கின்ற கோயிலினுடைய முற்பகுதி இருண்டு போய் இருந்தது. இப்போது இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. அங்கு அமைச்சர் அவர்கள் கூடப் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தக் கோயிலுடைய முன் மண்டபம் கட்டி முடிக்கப்படவில்லை. அதனை உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, தயவு செய்து உடனடியாக அந்த வேலையினை ஆரம்பித்து, செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் வெகுவிரைவிலே கட்டிக் கொடுப்போம் என்று இந்த மன்றத்திலே சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று....

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் நேரிடையாக பார்வையிட்டிருக்கிறோம். இதற்கு மலையிலிருந்து கற்களை வெட்டி எடுத்து வந்து பணி செய்ய வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே நிறைய கற்கள் வந்து இப்போது கொத்து வேலை நடந்து கொண்டிருக்கின்றது. எனவே, முறைப்படி அவை அனைத்தும் விரைவில் கட்டி முடிக்கப்படும், வேலை தொடங்கி நெடு நாட்களாகிவிட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், வீட்டு வசதித் துறை



அமைச்சரும் பார்த்ததை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பார்த்து இருக்கிறார்கள், ஆனால், இன்னமும் பணி தொடங்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அதை வலியுறுத்துவதனால், இப்போதே நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்று மாலையே நாம் புறப்பட்டுப் போகலாம். பணி தொடங்கி இருக்கிறதா இல்லையா என்பதை நாம் நேரில் பார்த்து விடலாம்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எது உண்மை என்று அறிய விரும்புகிறேன், எது உண்மை என்று தெரியவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் அவர்கள் இரண்டு பேருக்குந்தான். நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பேசட்டும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் கேட்பதிலே என்ன தப்பு இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் பி.ஆர். சுந்தரம் எது உண்மை என்று கேட்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோயில்களுடைய சொத்துக்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன என்பதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் என்னதான் சொல்கிறார் என்று பார்ப்போம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலையே ஆரம்பிக்கவில்லை என்று கூறுகின்றார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று கூறுகிறார். எது உண்மை என்றுதான் கேட்டேனேயொழிய, நான் கேட்டதற்கும், அவர்கள் எங்களுடைய ஆட்சியைப் பற்றிப் பேசுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எது உண்மை என்று கேட்டால், மாலையில் அவர்கள் போகும்போது நீங்களும் கூடப் போங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஏற்பாடு பண்ணுங்கள், அவர்கள் போகும்போது நானும் போகிறேன்.

*முற்பகல் 11-35*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களும் அங்கே போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நானும் போகவேண்டிய அவசியம் இல்லை. நண்பர் திரு. சுந்தரத்தை அழைத்துக் கொண்டு போனால் நிலைமை என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குத் தகுந்த பாதுகாப்பை நீங்கள் கொடுக்கத் தயாரா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், திரு. சுந்தரம் அவர்கள் அங்கே போனால், அங்கே உள்ள மக்கள் எல்லாம், கோயில்களினுடைய சொத்துக்கள் எல்லாம் எப்படி கொள்ளையடிக்கப்பட்டன என்று கேட்க ஆசைப்படுவார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க எங்களால் முடியாது. எனவே, திரு. சுந்தரம் அவர்கள் கேட்டுக் கொண்டதனால், நாங்கள் அங்கே போகவில்லை. கோயில் பணி ஆரம்பித்தால் நல்லது என்று மட்டுமே நான் கருதுகிறேன்.

அடுத்து, கோயில்கள் நிறைந்த ஊர் காஞ்சிபுரம். அண்ணா அவர்கள் பிறந்த ஊர் காஞ்சிபுரம். 108 சிவன் கோயில்களையும், 18 விஷ்ணு கோயில்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிற ஊர் காஞ்சிபுரம். அங்கே மிகவும் தொன்மை வாய்ந்த வரதராஜப்பெருமாள் கோயில் இருக்கிறது. பேசும்பெருமாள் என்று புகழ்பெற்ற அந்த வரதராஜப்பெருமாள் கோயில் இப்போது கவனிப்பாரற்று சிதிலமடைந்து கிடக்கிறது. அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அந்தக் கோயிலுக்கு வேண்டிய அத்தனை பணிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டு நிமிடங்கள் பேசுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற பாப்பான்சத்திரம் கிராமத்திலே காசி விஸ்வநாதர் மற்றும் வேணுகோபாலசுவாமி கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு உதயகிரி வெங்கையா அவர்கள் 1884 ஆம் ஆண்டு 177.77 ஏக்கர் நிலம் கொடுத்தார்கள். ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்தபோது அந்த நிலத்தைக் கோயிலுக்குக் கொடுத்தார்கள். அந்த நிலத்தை ரெவின்யூ துறையினரும், அந்த நிலத்தை



அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும் அநாதீனம் என்று சொல்லிவிட்டார்கள். அந்தக் கோயில் நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் எல்லாம் ரெவின்யூ துறை அதிகாரிகளுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்து, அந்த 177.77 ஏக்கர் நிலம் அநாதீனம் என்று அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்ட பின்னர், அந்தப் பகுதி மக்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த 177.77 ஏக்கர் நிலத்தைக் கோயிலுக்கு சொந்தமாக்க வேண்டுமென்று 1991 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, பின்னர் அந்த வழக்கு முடிவு பெற்று, அந்தக் கோயில் பெயருக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று நீதி வழங்கப்பட்டது. ஆனால், 1991 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, அந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை, கோயில் பெயருக்கு பட்டா போட்டுக் கொடுங்கள் என்று பலமுறை அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டும்கூட, இதுவரை பட்டா போட்டுக் கொடுக்கவில்லை, பாப்பான்சத்திரம் கிராமம், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் இருக்கிறது. அங்கே, ஓர் ஏக்கர் நிலத்திலே தனியார் உயர்நிலைப் பள்ளி ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். St. Johns உயர்நிலைப் பள்ளி என்று, அந்தக் கோயில் நிலத்திலே கட்டிக்கொண்டு, அந்த நிலம் புறம்போக்கு நிலம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். புறம்போக்கு நிலத்திலே இப்படிப்பட்ட பள்ளிக் கட்டடத்தைக் கட்ட முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. சென்ற ஆட்சிக் காலத்திலே கட்டினார்கள். இப்போது இந்த ஆட்சி வந்திருக்கிறது. எனவே, அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? அந்த 177.77 ஏக்கர் நிலத்தை அந்தக் கோயில் பெயருக்குப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பூவிருந்தவல்லியில், திருக்கச்சிநம்பி, வரதராஜப்பெருமாள் கோயில் இருக்கிறது. 170 ஏக்கருக்குச் சொந்தமான கோயில். பூவிருந்தவல்லி Bye Pass Road-லேயே இருக்கிற ஓர் ஏக்கர் நிலம் இப்போது 30 இலட்சம் ரூபாய்க்கு விலை போய்க்கொண்டிருக்கிறது, அடிக்கடி உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. ஓர் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றபோது, அதிகாரிகளுடைய அனுமதியைப் பெற்றுத்தான் உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், எப்படி அவர்கள் உரிமை மாற்றம் செய்கிறார்களோ தெரியவில்லை. கோயிலுக்குக் கட்ட வேண்டிய குத்தகையைக்கூடக் கட்டாமல் இருக்கிறார்கள். ஓர் ஏக்கர் நிலத்தை 20 இலட்சம், 30 இலட்சம் ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது இந்த அரசின் கடமை என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசையாழ்வார் வாழ்ந்த திருமழிசையில் உள்ளது அருள்மிகு ஜெகன்நாதப் பெருமாள் கோயில். அந்தக் கோயிலுக்கு 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. அப்படியிருந்தும், அந்தக் கோயிலுக்கு நித்தியப்படிக்கு என்று அந்த நிலத்திலிருந்து ஒன்றும் கிடைக்கவில்லை. இதைப்பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். ஜெகன்நாதப் பெருமாளுக்கு நித்தியப்படி நெய்வேத்தியம் செய்ய முடியாத ஒரு துர்பாக்கிய நிலை இருக்கிறது. 300 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரரான அந்தப் பெருமாள் நித்தியப்படி நெய்வேத்தியத்திற்கு கூட்டுறவுக் கடையிலே போய் அரிசி வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஆனால், அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று, திருநின்றவூர் பக்தவத்சலப் பெருமாள் கோயில்....

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை நான் வரவேற்கிறேன். நான் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்ற பிறகு, ஒருநாள்கூட மாண்புமிகு உறுப்பினர் என்னை நேரில் சந்தித்து இது குறித்துத் தெரிவிக்கவில்லை. தெரிவித்திருந்தால் நிச்சயமாக நானே நேரிடையாகச் சென்று நடவடிக்கை எடுத்திருப்பேன். எனினும், குறைவில்லை, அடுத்த வாரம் நேரில் செல்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநின்றவூர் பக்தவத்சல பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 500 ஏக்கர் நிலத்திலிருந்து ஒரு ரூபாய்கூட வருமானம் கோயிலுக்கு வருவதில்லை. அதுபோல சென்னீர்குப்பம் புகழ் பெற்ற கிராமம். ஒருவரை உயிரோடு எரித்த கிராமம் சென்னீர்குப்பம் கிராமம்-இந்தக் கோவிலுக்கு ஒரு ஏக்கர் 22 சென்ட் நிலம் சொந்தமானதாக இருக்கிறது. இந்த நிலம் சபிதா டென்டல் கல்லூரிக்கு அருகில் அமைந்திருக்கிறது. அந்த 1 ஏக்கர் 22 சென்ட் நிலத்தைத் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, கோவிலுக்குக் கொடுக்க மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே விற்கிறார்கள், வாங்குகிறார்கள். இதையெல்லாம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது



என்னுடைய கடமை என்ற காரணத்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் கவனம் செலுத்தி, குறைகளைப் போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழி, இந்து சமய அறநிலையத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கின்ற எங்களுடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல சென்னை மாநகர மேயர், வணக்கத்திற்குரிய அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் பழனி திருக்கோவில் இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து பக்தர்கள் காவடி எடுத்துச் செல்கிறார்கள்; நடைபயணமாகவும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகிறார்கள். அந்த பக்தர்களுக்கு அங்கே தங்குவதற்குப் போதுமான வசதிகளை செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்பதி கோவிலிலே பக்தர்களுக்கு உணவு எப்படி வழங்குகிறார்களோ அதைப்போல பழனி திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்களுக்கு உணவு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையும், இந்தத் துறையினுடைய அமைச்சர் அண்ணன் தமிழ்க்குடிமகனார் அவர்களையும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, என்னுடைய வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் இராமகிரி என்கிற நரசிங்கபெருமாள் திருக்கோவில் இருக்கிறது. அந்தத் திருக்கோவில் பழையகாலத்து கோவில். அந்தக் கோயிலைப் புதுப்பிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நான் கேட்டிருக்கிறேன். அந்த கோவிலுக்கு 9 மண்டகப்படிகள் உள்ளன. அந்தத் திருக்கோவிலின் மண்டகப்படிகள் செய்பவர்கள் யாதவ இனத்தைச் சேர்ந்தவர்கள், கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவர்கள், தச்சர் இனத்தைச் சேர்ந்தவர்கள், முதலியார் இனத்தைச் சேர்ந்தவர்கள், செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள், இப்படி 9 இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆக, பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மண்டகப்படிகள் வைத்து

கும்பிடுகிறார்கள். அந்தக் கோவிலுக்கு 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை எல்லாம் தனியார்கள் ஆக்கிரமித்து, அந்தக் கோவிலுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலையில் இருப்பதனால், இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு உத்தரவிட்டு, கோவிலுக்கு வருமானம் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது என்னுடைய தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். இதை நிறைவேற்றுகிற அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள இந்தக் கோவிலில்தான் பெரிய தேர் இருக்கிறது. அந்தத் தேரை மூன்று தினங்களுக்கு முன்பாக சென்று பார்த்தேன். அங்கே திருப்பணி Committee அமைக்கப்பட்டு, அந்தத் திருப்பணி Committee சார்பிலே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னையும் அழைத்தார்கள். அந்த இடத்திற்குச் சென்ற நேரத்திலே, தேர் வெயிலிலே இருப்பதைப் பார்த்தேன். நான் இந்த நேரத்திலே நம்முடைய முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அன்போடு, பண்போடு, பாசத்தோடு, கேட்டுக்கொள்வது, பழனி திருக்கோவிலிலிருந்து நிதி ஒதுக்கி, இராமகிரி நரசிங்க பெருமாள் கோவிலைப் புதுப்பித்துத்தர வேண்டுமென்பதுதான்.

முற்பகல் 11-45

அதைப்போல என்னுடைய தொகுதியிலே உள்ள வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய 3 ஒன்றியங்களிலும் அய்யலூர், வடமதுரை, எரியோடு, வேடசந்தூர், பாளையம் ஆகிய 5 பேரூராட்சிகளிலும் உள்ள சுமார் 3 லட்சம் மக்களுக்கு மின்தட்டுப்பாடு இருந்தது. நம்முடைய மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் திண்டுக்கல் வந்திருந்த நேரத்தில் கோயிலூர் மின்நிலையத்திற்கு 10 K.V. Transformer தேவை என்று நான் கேட்டு இருந்தேன். உடனடியாக அவர்கள் 10 K.V. Transformer-ஐக் கோயிலூருக்கு வழங்கியதுடன் சத்திரப்பட்டி மின்நிலையத்திற்கும் 5 K.V. Transformer-ஐ வழங்கி எங்கள் பகுதியில் இருக்கிற விவசாயிகளுடைய மின்தட்டுப்பாட்டை போக்கியதற்காக நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



குஜிலியம்பாறை பகுதி என்று சொன்னால், அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் அதை மலைப்பகுதி என்று சொல்வார்கள்; பாம்பு area என்றும் சொல்வார்கள். இரவு நேரங்களில் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சச் செல்கிற நேரத்தில் ஒரு விவசாயி குறைந்தது 15 பாம்புகளை பார்ப்பார். விவசாயிகள் அந்தப் பகுதியை பாம்பு area, hill area என்று சொல்வார்கள். நான் முதலமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இரவு நேரங்களில் மின்சாரத்தைக் குறைத்து, பகல் நேரங்களில் மின்சாரத்தை கூட்டித்தர வேண்டும். அதற்கு ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய குஜிலியம்பாறை பகுதி மக்களின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய கோவில்களில் அர்ச்சகர்கள் இதுவரைக்கும் வடமொழியிலே அர்ச்சனையை சொன்னார்கள். அதுவும் குறிப்பாக பழனி கோவிலில் நம்முடைய பக்தர்கள் சென்று பார்க்கிற நேரத்தில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு நிறைவேற்றி இருக்கிறார்கள்; அதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்னும் சில கோவில்களில் வடமொழியிலே அர்ச்சனை செய்கிறார்கள். அங்கும் தமிழ் மொழியிலே அர்ச்சனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு 197 கோடி ரூபாயை ஒதுக்கியதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்களுக்கும், நம்முடைய ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் இ. பெரியசாமி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரியிலிருந்து வேடசந்தூர் தொகுதிக்கு, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 197 கோடி ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளை குஜிலியம்பாறை ஒன்றியத்திலே 290 சிற்றூர்களுக்கும், வேடசந்தூர் ஒன்றியத்திலே 234 சிற்றூர்களுக்கும் வடமதுரை ஒன்றியத்திலே 242 சிற்றூர்களுக்கும், ஆக மொத்தம் 766 சிற்றூர்களுக்கும் காவிரி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க, அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றித் தந்த தமிழக முதல்வர் அண்ணன் கலைஞர்

அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் அமைச்சர் அண்ணன் இ. பெரியசாமி அவர்களுக்கும் வேடசந்தூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

ஒரே ஒரு கோரிக்கை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கைகள் வைத்தார்கள். போலி டாக்டர்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் அய்யலூரில், வடமதுரையில், எரியோட்டில், டி. கூடலூரில் இப்படி பல்வேறு இடங்களில் ஆரம்ப சுகாதார மருத்துவமனைகள் இருக்கின்றன. வேடசந்தூரில் அரசு பொது மருத்துவமனை இருக்கிறது. குஜிலியம்பாறையில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் பணியாற்றும் என்று போர்டு வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் ஒட்டுமொத்தமாக அங்கே இருப்பதில்லை. அவர்கள் படித்திருக்கிறார்கள. சேவை செய்து வருகிறார்கள். ஆனால் ஒரு மணி நேரம்கூட அந்த மருத்துவமனைகளில் அவர்கள் தங்குவதில்லை. நான் முதலமைச்சர் அவர்களையும், மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்வது, அந்த மருத்துவமனை டாக்டர்கள் காலை 11 மணி அளவிலாவது அங்கே தங்குகிற நிலைமையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

கடந்த ஆட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 700-க்கு மருந்துகள் கொடுத்தார்கள். ஆனால் இப்போது. ரூ. 3 இலட்சத்திற்கு ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் போய்ச சேருகின்றன. நான் நேரடியாக மருத்துவமனைகளுக்குச் சென்று கடந்த ஆட்சியில் எவ்வளவு மருந்துகள் வந்தன, இந்த ஆட்சியில் எவ்வளவு மருந்துகள் வந்தன என்று ஆய்வு செய்த நேரத்தில் அங்கே இருக்கிற நர்ஸ்கள் இதைச் சொல்கிறார்கள். ஒரு மருத்துவமனையில்கூட நான் சென்ற நேரத்தில் டாக்டர்கள் காலை பத்து மணி வரையிலும் வரவில்லை. இந்த நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை மற்றும் அறநிலையத்துறை சார்பாக வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்



கொள்கிறேன். தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு மிகச் சிறப்பாக வைக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள், அவருக்கே உரித்தான தனிச் சிறப்பு அம்சங்களோடு இந்த அறிக்கையினைத் தயாரித்து இருக்கிறார்கள் என்பதால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக ரூ.10 இலட்சத்திற்குக் குறைவான வருமானம் உள்ள கோவில்களில் அறங்காவலர்களை நியமிப்பது என்ற கருத்து வரவேற்கக்கூடிய ஒன்று. கோவில்களில் இந்த இரண்டாண்டுக்கால ஆட்சிக் காலத்திலே குடமுழுக்கு விழாக்கள், கும்பாபிஷேகங்கள், மற்ற பெரிய நிகழ்ச்சிகள் எல்லாம் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. ஆனால், கடந்த ஐந்தாண்டுக்கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கோவில்களில் கும்பாபிஷேகம் போன்ற விழாக்கள் நடைபெற்றாலே அநேகமாக அந்தக் கோவில்களில் இருக்கிற நகைகள், சிலைகள் களவாடப்படும் என்பது உறுதியான நடவடிக்கையாகத்தான் நடைபெற்றது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் — மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் வருத்தப்படுவார்கள். என் தொகுதியில் — சொந்த — ஊரில் மன்னார்குடியில் இருக்கிற இராஜகோபால்சுவாமி கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேக விழா மூலமாக நூற்றுக்கணக்கான பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்பது உண்மை. அதற்கான ஆதாரபூர்வமான கணக்குகள் அரசிடத்திலே இருக்கின்றன. ஆகவே சொல்கிறேன், அவர்கள் அதை மறுக்க இயலாது. வரிசையாகப் பட்டியலிட வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் சொல்கிறேன்.

கும்பாபிஷேகம் என்று சொன்னாலே கடந்த ஆட்சியிலே அது கொள்ளை அடிக்கப்படுவதற்குரிய முயற்சியாகத்தான் இருந்தது என்பதுதான் உண்மை. அப்படி வரலாற்று ரீதியாக எடுத்துப் பார்க்கும்போது பல்வேறு கோவில்களில் கொள்ளை அடிக்கப்பட்ட வரலாறுகள், நகைகளுடைய எண்ணிக்கை, சிலைகளுடைய எண்ணிக்கை, வழக்குகளுடைய எண்ணிக்கை, பட்டியலாக நம்முடைய அரசாங்கத்திடம் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிகழ்ச்சி என்பது இந்த இரண்டாண்டுக் காலத்தில் கண்டிப்பாக இல்லை என்பது பாராட்டுக்குரிய ஒன்று. அதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, அறநிலையத்துறை நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்தி, சீரமைத்து மிகச் சிறப்பாக செயல்படுத்துவதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்

பட்டிருக்கிறது. குறிப்பாக நான் சார்ந்திருக்கிற கட்சி, பகுத்தறிவுக் கொள்கையைக் கொண்டவர்களாக நாங்கள் இருக்கிறோம். அதைப் போல் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்கும் அறநிலையத் துறைக்கும் பொறுப்பேற்றிருக்கிறவர் மிகச் சீரிய முறையிலான பகுத்தறிவுக் கொள்கையை உள்ளடக்கியவர். அனுபவத்தோடு கூடிய பகுத்தறிவுக் கொள்கையைச் சொல்வதற்கான ஆற்றல் படைத்த அமைச்சர் அவர். இருந்தாலும் பக்தர்களுடைய மனம் புண்படாமல், மக்களுடைய மனம் புண்படாமல், அவர்கள் எண்ணத்தை, விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில் இந்தத் துறைகளைச் செயல்படுத்துகின்றார் என்பதைத்தான் மிக மிகப் பாராட்டுக்குரிய ஒன்றாக நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலே குறிப்பாக ஒன்றைச் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. 1996 ஆம் ஆண்டு சட்டப்படி கோவில்கள், மடங்கள் மற்ற தர்ம ஸ்தாபனங்களுடைய நிலங்களின் குத்தகை விவசாயிகளின் பிரச்சனைகளைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஆண்டுதோறும் வரக்கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது என்பது உண்மைதான். கோவில்களுக்கு, மடங்களுக்கு இருக்கிற நிலங்கள் பிரச்சினைக்குரிய ஒன்றாக இருப்பதும் உண்மைதான். ஆகவே, அந்த நிலங்களை எல்லாம் மாற்றுவதற்குரிய முயற்சிகளை எடுக்கவேண்டும். நிலங்கள் காணாமல் போகின்றன. கோயில் மனைகள், இடங்கள் ஆகியவற்றை யார் யாரோ வைத்திருக்கிறார்கள் என்ற பிரச்சினைகள் எல்லாம் கடந்த வாரம் இங்கே சட்டமன்றத்தில்கூட விவாதிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அவைமீது நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-55

கடந்த கால வரலாறுகளிலேயிருந்து பார்க்கிறபோது தஞ்சை பெரிய கோவிலுக்கு பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்ததாக வரலாறுகளிலே சொல்லப்படுகிறது. ஆனால் இன்று இந்த இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அது எப்படியோ, யாரிடமோ, எந்த வகையிலோ போய்ச் சேர்ந்து இருக்கிறது என்பதுதான் உண்மை நிலையாக இருக்கிறது. நேரு ஆட்சிக் காலத்திலேகூட, இப்படி நிலங்கள் கொள்ளையடிக்கப்பட்டதை, காணாமல் போனதை, பரிசீலனை செய்து, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக சர் சி.பி. இராமசாமி அய்யர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, எல்லா இடங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறபோது சர் சி.பி. இராமசாமி அய்யர் அவர்களாலே, அவர்களுடைய குடும்பத்தின் சார்பில்,



அவர்களுடைய தாத்தாவின் குடும்பத்தின் சார்பிலே கொடுக்கப்பட்ட நகைகளேகூட பித்தளை, வெள்ளியாக மாற்றப்பட்டு இருப்பதாகக்கூட அவருடைய அறிக்கையிலே மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்ததாக தகவல்கள் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் ஏற்கெனவே நடந்திருக்கின்றன. இந்தக் கோவில் நிலங்கள், கோவில் நகைகள் ஆகியவற்றை தனி நபர்கள் கையாளுவதற்கான முயற்சிகள் என்பது கடந்த காலங்களிலே அதிகமாக இருந்திருக்கின்றன.

அதேபோல, கோவில் நிலங்கள் என்று வருகிறபோது சுமார் 4 இலட்சத்து 91 ஆயிரம் ஏக்கருக்கு மேலே இருப்பதாகக் குறிப்பிட்டு அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலங்கள் மூலமாக வருமானம் வரவேண்டும் என்றால் பல கோடி ரூபாய் வருவதற்குரிய வாய்ப்புகளெல்லாம் இருக்கின்றன. ஆனால், அவை தடைபடுவதாகவும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, குத்தகை விவசாயிகள் நிலத்திலிருந்து கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கிகளை அவர்களாகவே கொடுக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இயற்கைச் சீற்றங்கள் மாறி, மாறி...

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஆனால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக திருவாரூரிலே தியாகராஜசுவாமி கோவிலுக்குச் சொந்தமாக 896 ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது. அதிலே ஒரு ஆண்டுக்கு 2098 குவிண்டால் நெல் வரவேண்டும். கடந்த 12 ஆண்டுகளாக அது வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு முறைகூட விளையாமல் போகவில்லை, விளைந்தும் அவர்கள் அதற்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் கொள்ளவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குத்தகை பாக்கிகள் என்பது அநேகமாக 12 ஆண்டுகாலமாக நிலுவையில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வது என்பது உண்மைதான். ஆனால் இடையிடையே ஓராண்டு புயல் வருகிறது, மறு ஆண்டு வெள்ளம் வருகிறது, மறு ஆண்டு கழித்து வறட்சி வருகிறது. ஆகவே இவை மாறிமாறி வருகிறபோது, குத்தகை பாக்கிகளை நிலுவையாக மாற்றுகிற காரணத்தினாலே தொடர்ந்து 12

ஆண்டுகாலம் செலுத்தவில்லை என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே சுமையாக ஆக்கப்படுகிற இந்தக் குத்தகை பாக்கியிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அந்தக் குத்தகை பாக்கியிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். குறிப்பாக, நான் இந்தக் கருத்தைச் சொல்கிறபோது ஆன்மீகவாதியாக இருந்து அனுபவம்பெற்ற, முன்னாள் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெற்ற விவசாயிகள் சங்க மாநாட்டில், அந்தக் காலத்திலேயே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவர்களேகூட கோவில் காரியங்கள் அனைத்துமே நன்றாக நடைபெறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, இந்த நில வருமானம் வருவது, விவசாயிகளுக்கும் கோவில்களுக்கும் இடையிலே சில இடைத்தரகர்களாலே தடைபடுகிறது என்ற கருத்தை அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிவிட்டு அவர் சொல்கிறபோது தமிழகத்தில் ஜமீன்தாரி முறைகள் ஒழிக்கப்பட்டதைப்போல, கோவில், மடம், தர்மஸ்தாபனங்களுடைய நிலங்களை அந்தந்த குத்தகை விவசாயிகளிடத்திலே அளித்து, அவர்களிடத்திலே நஷ்டஈடாகப்பெற்று, அதை வங்கிகளிலே வைப்பு நிதியாக வைத்து, அதன் மூலமாக வருகிற வருமானத்திலே கோவில்களில் மற்ற தர்ம காரியங்களையெல்லாம் வெகு சிறப்பாகச் செய்ய முடியும் என்ற கருத்தை முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கருத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, தாங்கள் குறிப்பிடுகிறபோது திருமூலர் திருமந்திரத்தினை மேற்கோள் காட்டி மிக அழகாகத் தொடக்க உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். திருமூலர் திருமந்திரத்திலேயேகூட,

'நடமாடும் கோவில் நான் மாடக் கூடம்
நண்பர்க் கொன்றையேன்
பழமாடக் கோவில் பங்கொன்று ஆகும்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே நடமாடும் கோவிலான மனிதனுக்கு நன்மை காரியங்கள் செய்தாலே அது கோவிலுக்கு, தெய்வத்திற்கு செய்கிற காரியங்களாக இருக்கும் என்று சொல்லப்பட்டுள்ள கருத்தின் அடிப்படையில் பார்த்தால், விவசாயி என்பவன், குத்தகை விவசாயியாக இருக்கிறானே தவிர, அவனுடைய ஒளி அவனுக்குக் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளிடத்தில்



இருக்குமானால், கோவிலுக்கு அவன் அள்ளி அள்ளிக் கொடுக்கக் காத்திருக்கிறான். உதாரணத்திற்கு கிராமப் பகுதியிலே இருக்கின்ற பெரிய கோவிலானாலும், சிறிய கோவிலானாலும் அல்லது காணிக்கை செலுத்துகிறபோது உண்டியலை நிரப்புகிறபோது அல்லது நல்ல காரியங்களைச் செய்கிறபோது, அவனுக்கு வருமானம் வருகிறபோது நேர்த்திக் கடன் செய்கிறேன் என்ற பெயரிலே எல்லா கோவிலுக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே, இந்தக் குத்தகை விவசாயிகள் அப்படிப் பாதிக்கப்படுகிற இந்த சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். Revenue Court மூலமாக நடவடிக்கை எடுத்து நில வெளியேற்றம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. நிறைய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு இருக்கின்றன. பல அரிய நூல்களை மொழியாக்கம் செய்வதற்கான வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, நீண்ட காலம் சிறைவாசம் இருந்து, நம்முடைய இந்திய விடுதலைக்காகப் போராடிய சிறந்த தமிழ் இலக்கிய மேதை ராகவன் ஜெமதக்கினி அவர்கள், இந்திய மொழிகளிலேயே, முழு அளவில் முதன் முதலாகத் தமிழில் எழுதியுள்ள காரல் மார்க்சின் "மூலதனம்" மற்றும் 'மிகை மதிப்பு' ஆகிய நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்காக 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கக்கூடியதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

நண்பகல் 12-00

அதுபோல வெளிமாநிலங்களில் தமிழ் மொழியைப் பரப்புவதற்கு உதவி செய்வது மிகப் பாராட்டுக்குரியது. பாரதியார், ம.பொ.சி., கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தேவநேயப் பாவாணர், திரு.வி.க. கல்கி ஆகியோருடைய அரிய நூல்களை நாட்டுடைமையாக்கியது வரவேற்கக்கூடிய ஒன்று; அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்று. அதேபோல இலக்கிய மேதை ஜீவாவினுடைய நூல்களையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு மணிமண்டபத்தை பட்டுக்கோட்டையிலே அமைப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு

நிலுவையிலே இருக்கிறது. அந்த மணிமண்டபத்தைக் கட்டுவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மிகச் சிறப்பாக இருக்கின்ற துறையாக, நம்முடைய முன்னாள் முதலமைச்சராக செயல்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களாலே இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் உருவாக்கப்பட்டு, இப்போது இருக்கக்கூடிய தற்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அதற்கு உருவகம் கொடுக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய செயல்பாடுகளைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது, அமைச்சரிடத்திலும் அதைச் சொல்லியிருக்கின்றேன். அந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக மிகச் சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மொழி சிறப்பு, இலக்கியத்தினுடைய பெருமை ஆகியவற்றை உலகத்திற்கு எடுத்துக்காட்ட...... (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து ஒரு நிமிடம் கொடுங்கள். மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிற அந்தத் துறையில் பணிபுரிகிறவர்கள், அநேகமாக மிகச் சொற்பமான எண்ணிக்கையிலே இருக்கின்றார்கள். அதிலே குறிப்பாக ஆராய்ச்சி அலுவலர்கள் 15 பேர்கள், நிர்வாகப் பணியாளர்கள் 20 பேர்கள், ஆக 35 பேர்கள் மட்டுமே அதிலே பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு பல்கலைக்கழக விதிப்படியும், அரசு நிர்வாகப் பணியாளர்களுக்கான விதிப்படியும் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் மற்றபடியான அரசு சலுகைகள், ஓய்வு ஊதிய விரிவாக்கம் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது, அமைச்சரிடத்திலும் அது சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்நிறுவனத்தில் இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற, தமிழ் மேதையும் திருக்குறள் மணியுமான அமரர், முனைவர் திருநாவுக்கரசு அவர்களும், அண்மையிலே முதுநிலை ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தமிழ் மேதை தணிகைமணி செங்கல்வராயன் பிள்ளை அவர்களுடைய மகளான முனைவர் வி.சி. சசிவல்லி அவர்களும் ஓய்வூதியம் பெறாமலேயே ஓய்வு பெற்றுவிட்டார்கள். ஆகவே இந்நிறுவனம் தொடங்கி, வெள்ளி விழா கொண்டாடுகிற இந்த நேரத்தில் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை இந்தக் கூட்டத் தொடரிலே, இந்தச் சபையிலே, இந்த மானியக் கோரிக்கையின் பதில் உரையின்போது, நம்முடைய அமைச்சரவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துபேசி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். (குறுக்கீடு) சரி. திரு. வை. சிவபுண்ணியம் பேசி முடிக்கட்டும்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகாலமாக Ph.D., M.Phil. பட்டப் படிப்புகள் மேற்கொண்டு, பல சிரமங்களுக்கு இடையில் பலர் அந்தப் படிப்பை முடித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடைபெறாதது மிக வருத்தத்திற்குரியது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மேதகு ஆளுநர் அவர்களிடத்தில் கேட்கப்பட்டு, வெகுவிரைவில் பட்டமளிப்பு விழா நடைபெற இருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி. அடுத்ததாக, அந்தத் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு அதிகமாக செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மன்னார்குடி கோயிலில் முன்புறம் இருக்கக்கூடிய இடத்திலே, வணிக வளாகம், தங்கும் விடுதிகள் கட்டப்பட வேண்டும்; இதுபற்றி தாங்கள் அங்கு வந்தபோது நேரிலே கோரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டும். திருராமேஸ்வரம் என்ற ஒரு சிறப்பான கோயில் இருக்கிறது. அங்கு குடமுழுக்கு விழா செய்வதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன். அன்பு வணக்கம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசும்போது, எங்களுடைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுக்காலமாக கோயில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன, ஆதாரங்கள் வைத்து இருக்கிறோம் என்றெல்லாம் கூறியிருக்கின்றார்கள். அந்த ஆதாரங்களை அவர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அடுத்தபடியாக, எங்களுடைய ஆட்சிக்காலத்திலாவது, நிறைய கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்தோம், ஆனால் இந்த ஆட்சி வந்ததற்குப்பிறகு எப்போது நீங்கள் பண்ணாரி அம்மன் கோவிலில் தீ மிதித்தது காட்டுமிராண்டித்தனம் என்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கும்பகோணத்தில் நடந்த மகாமகம் கும்பாபிஷேகம்பற்றிச் சொல்கிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தஞ்சை கோவிலில் கும்பாபிஷேகம் என்பது, இந்த ஆட்சி வந்ததற்குப்பிறகுதான்....

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையினுடைய விதிகள் தெரிந்துதான் பேசுகிறாரா என்று தெரியவில்லை. ஒன்று, ஏதாவது ஒழுங்குப்பிரச்சினை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நிச்சயமாக நேருக்கு நேர் மறுப்பதற்கு செய்தி இருக்க வேண்டும். அந்த அளவோடுதான் அவருடைய பேச்சு இருக்க வேண்டும், இது சொற்பொழிவு அல்ல. அப்படியிருந்தாலும், அவையினுடைய நேரம் வீணடிக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி, பண்பாடு, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சி-2-னுடைய சார்பாக என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். நெருக்கடி நிலை காலத்திலே மாநில பட்டியலிலே இருந்த கல்வியானது, பொதுப்பட்டியலுக்கு கொண்டு போகப்பட்டதன் விளைவாக, இப்போது நம்முடைய மாநில மொழியான, நம்முடைய தாய்மொழியான தமிழ் மொழியை வளப்படுத்துவதிலே, அமல்படுத்துவதிலே, பல்வேறு சிக்கல்கள் வந்து கொண்டிருக்கிற சூழ்நிலையிலே, இப்போது தமிழுக்கு என்று ஒரு தனித் துறையை ஏற்படுத்தி, அந்தத் துறையின் மூலமாகவாவது, தமிழ் வளர்ச்சியை மேம்படுத்தலாம் என்ற சீரிய தமிழ் நெஞ்சத்தோடு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையினை முதன்முதலாக அமைத்துத் தந்திருப்பதை நான் மீண்டும் ஒரு முறை இந்த நேரத்திலே நன்றியுடன் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-05*

தமிழ் வளர்ச்சித் துறை பற்றிக் குறிப்பிட வேண்டுமானால் நம்முடைய அரசியல் சட்டத்தின் 350-வது பிரிவு (சி) உட்பிரிவிலே தெளிவாக தாய்மொழி வழியிலேதான் தொடக்கக் கல்விகள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, நம்முடைய தமிழ்நாட்டிலே விடுதலைபெற்று 50 ஆண்டுகள் ஆனதற்குப் பின்னாலேயும்கூட, இப்போது தொடக்கக் கல்வியினை தாய்மொழியின் மூலமாக படிக்க வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, உண்மையிலேயே வேதனைப்பட வேண்டியதாக இருக்கிறது. 14 வயது



நிரம்பிய அனைவருக்கும் 10 ஆண்டுக்காலத்திற்குள்ளாக கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்று நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய முன்னுரையிலே வலியுறுத்தியும்கூட, அது கனவாகிக் கொண்டிருந்த ஒரு சூழ்நிலையிலே தமிழ்நாட்டிலாவது, அது நனவாகட்டும் என்று சொல்லி, தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அத்தகைய சீரிய முயற்சியிலே இந்தத் தமிழ் வளர்ச்சியும் ஒன்றாக இணைக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நான் சில கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு ஜோதிபாசு அவர்களிடம் 4 மாதங்களுக்கு முன்னாலே பத்திரிகையாளர்கள், தொடக்கக் கல்வியிலே ஒரு பாடமாகக்கூட நீங்கள் ஆங்கிலத்தைச் சொல்லித் தராத காரணத்தாலே, மேற்கு வங்க மாணவர்கள், ஆங்கிலத்தினுடைய அறிவிலே மிகவும் குறைந்து போய் விடுகிறார்களே, அதனாலே கேடு வராதா என்று கேள்வி கேட்ட நேரத்திலே, அந்த முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். வங்க மொழி அறிவைக் கற்றுக் கொள்ளாததால், கேடு வருமே தவிர, ஆங்கில மொழியைப் படிக்காததால், ஒன்றும் வங்காளிகளுக்குக் கேடு வந்துவிடாது; எனவே வங்காள மொழியிலே, தொடக்கக் கல்வியை படிப்பதை கட்டாயமாக்குவதுதான் எங்களுடைய அரசினுடைய கொள்கை என்று திட்டவட்டமாக அன்றைக்கு அறிவித்தார்கள். நான் இதை எதற்காக இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், நம்முடைய தமிழக அரசினுடைய கொள்கையும், தமிழ் வழியிலே படிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

இப்போது ஆந்திராவிலே, கர்நாடகத்திலே, கேரளாவிலே இப்படி தென்னிந்திய மொழிகளிலே நம்முடைய அண்டை அயல் மாநிலங்களிலேகூட தொடக்கக் கல்விகள் எல்லாம் அவரவர்களுடைய தாய்மொழியிலேதான் கற்பிக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டிலேதான், இப்போது ஒரு மோசமான சூழ்நிலையிலே சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கிலவழிப் பள்ளிகளின் மூலமாக எல்லாமே ஆங்கிலமயமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தமிழக அரசு இதிலே ஆழ்ந்த கவனம் செலுத்தி, தொடக்கக் கல்வியிலாவது தமிழ் வழியிலே பயிற்றுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பொறியியல் கல்லூரிப் பாடங்களை தமிழ் வழியிலே சொல்லித் தருவதாக அவையிலே முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அது இன்றும் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளிலே மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்புகள் எல்லாம் நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மொழியிலே சொல்லித் தரப்படுகிறபோது, தமிழ்நாட்டிலே இந்தப் பொறியியல் படிப்பைக்கூட நம்மால் ஏன் சொல்லித்தர முடியவில்லை? இதிலே பாடத் திட்டம் சரியாக வகுக்கப்படவில்லையா? அல்லது தமிழிலே சரியாக நூல்கள் மொழி பெயர்க்கப்படவில்லையா? அல்லது என்ன தடைகள் இருக்கின்றன என்பதை அரசு தயவுசெய்து ஆய்வு செய்யவேண்டும். அதுவும் முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேயே இது முடியாது என்றால், வேறு எந்த ஆட்சி வந்து, இந்தத் தமிழ் ஆட்சியை இங்கே கொண்டு வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளை உடனடியாக தமிழ் வழியிலே நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழிலே படி, தமிழிலே படி என்று சொல்கிறபோது யாரும் படித்துவிட மாட்டார்கள். 1971-லே இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வீற்றிருந்த இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வரலாறு, பொருளியல் போன்ற பாடங்களையும் தமிழ் வழியிலே கொண்டு வந்தபோதுகூட, கடுமையான எதிர்ப்பு அன்றைக்கு அரசியல் காரணங்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.

பிற்பகல் 12-10

அந்த நேரத்திலே கலைஞர் அவர்கள் மாணவர்களுடைய போராட்டத்தை மிக எளிதாக சமாளித்ததோடு அவர்கள் ஓர் ஊக்கத் திட்டத்தையும் அறிவித்தார்கள். தமிழ் வழியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 180 என்று ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஆக, அந்தத் தொகையிலே வேறுபாடு இருக்கலாம். அப்படி ஊக்கத்தொகை கொடுத்ததன் விளைவாக என்ன நடைபெற்றிருக்கிறது என்றால், 10, 20 ஆண்டுக்காலத்தில், ஆங்கிலத்திலே படிக்கிற மாணவர்கள்கூட தமிழ் வழியிலே அந்தப் பாடங்களை எழுதுகிறார்கள். இப்போது தமிழ் வழியிலே படிக்கின்ற மாணவர்கள்



நிரம்ப வந்துவிட்டார்கள். விரும்பி தமிழ் வழியிலேதான் அவர்கள் படிப்பதற்கு விண்ணப்பம் செய்கிறார்கள். இப்போது ரூ. 400 அரசு அளிக்கிறது. ஆக, இந்த மாதிரி ஒரு ஊக்கத் திட்டத்தை அறிவித்ததே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் இப்போது நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால், தமிழ் வழியிலே படிக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை என்ற ஒரு சட்டத்தை நீங்கள் இயற்றிவிட்டால் தானாக தமிழ் வழியில் படிப்பதற்கு எல்லோரும் முன்வந்து விடுவார்கள். (மணியடிக்கப்பெற்றது)

கொஞ்ச நேரத்தில் முடித்துவிடுகிறேன். உதாரணத்திற்கு ஆந்திராவிலே ஆந்திர முதல்வர் 1976-லே இத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தபோது அங்கே நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உடனடியாக ஆந்திர முதல்வர் என்ன செய்தார் என்றால், தெலுங்கு மொழியிலே படிப்பவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை என்று அவர் சட்டம் இயற்றியதை எதிர்த்து, நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, அவர்கள் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்தார்கள். 5 மதிப்பெண்கள் தெலுங்கு வழியிலே படிப்பவர்களுக்கு சிறப்பு மதிப்பெண்களாகக் கொடுத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்க ஆவன செய்தார்கள். அப்படியாவது நீங்கள் இந்த வேலைவாய்ப்பிலே தமிழ் வழியிலே படிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு தேர்வாணையத் தேர்வுகளில், Group 1 services-ஐ ஆங்கிலத்திலேகூட நடத்தலாம். ஆனால் Group 4 போன்ற இந்தப் பிரிவுகளில்கூட பொது அறிவுத் தேர்வுகளை மட்டும்தான் நீங்கள் ஆங்கிலத்திலும் எழுதலாம், தமிழிலும் எழுதலாம் என்றிருக்கிறது. ஆனால் கட்டாயமாக ஆங்கிலத் தாள் ஒன்று இருக்கிறது. இதுமாதிரியான பிரிவுகளிலாவது நீங்கள் தமிழ் வழியிலே நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நேரத்திலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று பல்கலைக்கழகங்களுக்கு திருக்குறள் இருக்கைகள் அமைப்பதற்காக பணம் தந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 13

கழகத்திற்கு வழங்கப்பட்ட அந்தத் திருக்குறள் ஆய்வு இருக்கையிலே கடந்த மூன்று ஆண்டுகளாக பேராசிரியர் பதவியே நியமிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. நான் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், அந்தத் திருக்குறள் ஆய்வு இருக்கைக்காக ஒதுக்கிய 3 லட்சம் ரூபாயை அவர்கள் பயன்படுத்தவில்லை என்றால், அதை வேறு பல்கலைக்கழகத்திற்காவது கொடுத்து, அவற்றை நீங்கள் திறம்பட நிர்வகிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படம் வைக்கப்பட்டிருப்பதை, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கரையான் அரித்துக் கிடக்கிறது. அதைக்கூட கவனிக்காமல் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். வெங்கடசாமி நாட்டார், சிதம்பரநாதன் போன்ற தமிழ் அறிஞர்களுடைய படங்கள் எல்லாம்கூட கரையான் அரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இப்படி கவனம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிற சூழ்நிலையிலே திருக்குறள் ஆய்வு இருக்கைக்கான பணத்தை வேறு பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு முக்கியமான செய்தி. மதுரைப் பல்கலைக்கழகமும், அண்ணாமலை பல்கலைக்கழகமும் எம்.ஏ. படிப்பதற்கு 25 வயது தகுதி இருந்தாலே போதும்; யார் வேண்டுமானாலும் எம்.ஏ. படிக்கலாம் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், நம்முடைய அமைச்சர் பெருமகனாரும் சரி, நம்முடைய கல்வியமைச்சர் அவர்களானாலும் சரி, அன்றைக்கு யாராக இருந்தாலும் சரி, பி.ஏ. படித்துவிட்டுத்தான் எம்.ஏ. படிக்கமுடியும். ஆனால் இன்று 25 வயதில், ரூ. 3,000 பணம் செலுத்திவிட்டு, 25 வயது நிரம்பியவர்கள் எல்லாம் 8 தாள்களை எழுதினாலே எம்.ஏ. பெறலாம் என்று சொன்னால், அதிலே என்ன தகுதி இருக்கும்? இன்றைக்கு Distance Education என்று சொல்லக்கூடிய அந்தத் தொலைக் கல்வி பற்றி பல்கலைக்கழக மானியக் குழுவானது தெளிவாகச் சொல்லியிருக்கிறது, 3 ஆண்டு பட்டப் படிப்பை முடித்தவர்களுக்குத்தான் எம்.ஏ. படிப்பு எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இருந்தும்கூட, மதுரைப் பல்கலைக்கழகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் பணத்திற்காக, யாரை வேண்டுமானாலும் எம்.ஏ. பட்டதாரிகளாக ஆக்கலாம் என்று இப்போது வைத்திருக்கிற நிலைமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.



1998 மே 13] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

உலகத் தமிழ்ச் சங்கத்தை உடனடியாக தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கியது, ஜெயலலிதாவினுடைய ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆரை இருட்டடிப்புச் செய்ததுபோல் அந்த அம்மையார் எம்.ஜி.ஆர் கொண்டு வந்த அந்த உலகத் தமிழ்ச் சங்கத்தைக்கூட இருட்டடிப்புச் செய்தார்கள். இந்த உலகத் தமிழ் மாநாடேகூட இத்தகைய உலகத் தமிழ்ச் சங்கத்தின் மூலமாக நடத்தப்பட வேண்டுமென்றுதான் அவர்கள் சொன்னார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். தமிழ் ஆய்ந்த தமிழன்தான் தமிழகத்தின் முதலமைச்சராய் வருதல் வேண்டுமென்று புரட்சிக் கவிஞர் அவர்கள் சொன்னார்கள். எனவே தமிழ் ஆய்ந்த தமிழன் டாக்டர் முதல்வர் அவர்களுடைய ஆட்சியிலே ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையிலே நடத்தப்பட வேண்டுமென்பதை நான் ஒரு வேண்டுகோளாக இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பணிகள் மேலும் மேலும் சிறப்பதற்காக தமிழ்க் கல்லூரிகளையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தையும் அதனோடு இணைத்தால், அதனுடைய பணிகள் செவ்வனே நடைபெற வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 12-15

தஞ்சை சரஸ்வதி மகால் இயக்குநர் பதவி நிரப்பப்படாமல் உள்ளது. அந்த இயக்குநர் பதவியை நிரப்ப வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே அறநிலையத் துறையினுடைய சார்பிலே தேவஸ்தானங்களின் மூலமாக புத்தகம் வெளியிடுகிற ஒரு நிதியுதவியைக்கூட செய்யலாம். மயிலை கபாலீஸ்வரர் கோயிலிலிருந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு திருவருட்பா பதிப்பதற்கு நிதியுதவி செய்திருக்கிறார்கள். அதேபோல, இந்தத் தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு, இந்த அறநிலையத் துறையிலுள்ள வருமானம் உள்ள கோயில்களில் உள்ள நிதியிலிருந்து தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக ஆக்கலாம் என்ற ஒரு சட்டத்தை முன்பு கலைஞர் நிறைவேற்றி அனுப்பினார். அது உச்ச

நீதிமன்றத்திலே போய் அடிபட்டுவிட்டது. நான் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். திருச்சிக்குப் பக்கத்திலே உள்ள ஆகமக் கல்லூரியிலே நீங்கள் எப்படித் தேர்வு செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. அதிலேகூட இப்படி ஒதுக்கீடு முறைப்படி தேர்வு செய்தால் நல்லது. அதிலே உயர்ந்த சாதியினர் என்று சொல்லக்கூடிய ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே ஆகம விதிகளுக்குட்பட்டு அர்ச்சகராக வரவேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருந்தால், அதை மாற்றியமைத்து அனைத்து சாதியினரும் குறிப்பாக ஆதிதிராவிடர்கூட அர்ச்சகராக வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்றவகையில் அதிலே ஓட்டை உடைசல்கள் இருந்தால், அவற்றை சரிசெய்து, அந்தச் சட்டத்தை மீண்டும் நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைத்து, இந்தத் தமிழ் வளர்ச்சித் துறையிலே மீண்டும், மீண்டும் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆக்கபூர்வமாக அமைச்சர் பெருமகனார் இன்னும் ஆர்வத்தோடு, மேலும் ஊக்கத்தோடு நல்ல பல பணிகளைச் செய்து தமிழையும், தமிழர்களையும் வாழவைக்க வழிவகைகளை காண வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சியும், கோயில்களும் ஒன்றோடொன்று இணைந்த வரலாறு தமிழகத்தினுடைய வரலாறு ஆகும். புற வாழ்வைப்பற்றி அதிகமாகப் பேசாவிட்டாலும் ஆகமிய ஆத்மீகத்தைப்பற்றி அதிகமாக பேசிய இலக்கியங்கள் நம்முடைய தமிழ் இலக்கியங்கள். இந்த இலக்கியங்கள் எல்லாம் நம்முடைய பண்டைக்கால கோயில்களை இணைத்துத்தான் பேசி வருகின்றன, பேசியிருக்கின்றன. எனவே, இப்போது இரண்டு துறைகளும் ஒரே அமைச்சருடைய நிர்வாகத்திலே இருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. அதிலும் தமிழையே தன்னுடைய முழு பாடமாக, முழு கவனத்தோடு, அக்கறையோடு, தமிழிலே நீக்கமறா பற்று கொண்ட ஒரு பெருமகன், பச்சையப்பன் கல்லூரியிலே தமிழிலே முதுகலைப் பட்டம் பெற்ற நம்முடைய மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் இந்தத் துறைக்கு அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருப்பது எங்களுக்கு மனநிறைவைத் தருகிறது.



இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் இப்போது கோயில்களுக்குப் பயன்படாமல் இருப்பது குறித்தும், கோயில்களிலே நாம் நினைத்துக்கூட பார்க்க முடியாத தகாத சில திருட்டுத்தனங்கள் நடைபெறுகின்றன என்பது குறித்தும் இங்கே சொன்னார்கள். ஏதோ பொருட்களைத் திருடுகிறார்கள் என்று சொன்னால் அது சாதாரணமாக நடைபெறுகிற ஒன்று என்று விட்டுவிடலாம். ஆனால், யாரை வைத்து கர்ப்பக்கிரகங்களை ஏற்படுத்தி, அவர்களுக்காக கோயில்களை நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தினார்களோ அந்தக் கோயில் சிலாசாசனங்களையே திருடுகிறார்கள் என்றால் மனிதன் எவ்வளவு தாழ்ந்துவிட்டான், எவ்வளவு கேவலமாக ஆகிவிட்டான் என்று எண்ணிப்பார்க்கும்போது நெஞ்சம் பொறுக்குதில்லையே என்ற நிலைதான் ஏற்படுகிறது. ஏற்கெனவே பத்திரிகைகளில் செய்திகள் வரும்போது படிப்பதற்கே நமக்குப் பிடிக்கவில்லை. பஞ்சலோக சிலைகள் எல்லாம், மற்ற சிலைகள் எல்லாம் திருடப்பட்டுவிட்டன, அமெரிக்காவிற்கு கடத்தப்பட்டுவிட்டன என்றெல்லாம் பேசி அது பத்திரிகைச் செய்தியாக வருவது நம்முடைய கலாச்சாரத்திற்கே ஒரு மாபெரும் கேவலம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் முதலிலேயே ஒன்றைப் பேசிவிடுகிறேன், ஏனெனில் கடைசியாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, இல்லையோ? கோயில்களிலே பணிபுரிகின்றவர்கள், அர்ச்சகராக அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்கள் அவர்களுக்கெல்லாம் வாயும், வயிறும் இருக்கிறதா இல்லையா என்றுதான் எனக்குத் தெரியவில்லை எல்லோருக்கும் நீங்கள் அடிக்கடி அகவிலைப்படியை ஏற்றுகிறீர்கள்; கோயில்களிலே இருப்பவர்களுக்கு மட்டும் ஆண்டவன் நேரிடையாகக் கொடுத்துவிடுவான், அவர்களுக்கு கொடுக்கவே தேவையில்லை என்ற ஓர் எண்ணம் அரசுக்கு இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆனால், அப்படி இருந்தால், அவர்களுடைய வருமானம் உயரவேண்டும். மாதத்திற்கு 500 ரூபாய் மட்டும் இருந்தால் யார் வாழ முடியும்? இன்றைக்கு ஒவ்வொருவருக்கும் Pocket செலவிற்கே 500 ரூபாய் வேண்டும். கோயிலிலே இருப்பவர்கள் தேவைக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். ஆண்டவனுடைய சந்நிதானத்திலே அர்ச்சகர்களாகப் பணியாற்றக்கூடியவர்கள் வீட்டிலே பருப்பு இல்லை, அரிசி இல்லை என்ற எண்ணத்தோடு ஆண்டவனை அர்ச்சனை செய்தால் நிறைவான இருதயத்தோடு ஆகம ஆத்மீகத்தோடு அவர்களால் செயல்பட முடியுமா? அவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அங்கே

பூஜை செய்யக்கூடியவர்கள், எல்லாம் பெற்று வாழ்க, இறைவனே அவர்கள் வேண்டுவதை அவர்களுக்கு அளித்து அருள் செய்க என்று அவர்களும் சேர்ந்து வேண்டுவார்கள். நாசமாகப் போவார்கள், எங்களைப் பட்டினி போட்டுவிட்டு இங்கே மட்டும் வந்து ஆண்டவனைக் கேட்கிறார்கள் என்று சொன்னால் அதிலே நன்மை இல்லை. எனவே, தயவுசெய்து அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்காக 1996-லேயே ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்படுவதற்கே 9 மாதம் ஆனது. பிறகு அந்தக் குழு உட்கார்ந்து தங்களுடைய பரிந்துரைகளைச் செய்வதற்கு 6 மாதம் ஆனது. 6 மாதம் ஆகி இப்போது பரிந்துரை கொடுக்கப்பட்டிருப்பதாக, அவை சபையிலே வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவற்றை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்துகிறீர்களோ அந்த அளவுக்குத்தான் நம்முடைய நியாயங்கள் கண் திறந்து பார்க்கும். நம்முடைய ஆகம ஆத்மீகமும் உயரும் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 12-20*

நான் வாழ்கிற பகுதி பாலாற்றங்கரை. பாலாற்றங்கரையில் இருக்கிற கோயில்கள் தமிழ்நாட்டு கோயில்களிலேயே முதல் கோயில்கள். ஏனென்றால் நம்முடைய பொருணையாற்று நாகரீகமாக இருந்தாலும் அல்லது காவிரி நாகரீகமாக இருந்தாலும் அல்லது வைகை நாகரீகமாக இருந்தாலும் இந்த நாகரீகங்களுக்கு எல்லாம் முதல் நாகரீகம் பாலாற்று நாகரீகம் என்பதை நான் உறுதிபடச் சொல்ல விரும்புகிறேன். அந்த பாலாற்றங்கரையிலேதான் பல்லவர் காலத்திற்கு முந்தியேகூட பல்லவர்களுடைய தொண்டு மிக அதிகம். அவர்கள் ஏற்படுத்திய கோயில்கள் தமிழுக்குச் செய்த தொண்டுகள் அளப்பரியன. எங்களுடைய பகுதியில்தான் அந்தப் பாலாற்றங்கரையினுடைய நாகரீகமே தொடங்குகிறது. தமிழகத்திலே பாலாறு நுழைகிற இடம்தான் வாணியம்பாடி. இந்த வாணியம்பாடியில் மிகப் பழங்காலக் கோயில் அதிதீஸ்வரர் ஆலயம். ஆண்டவனே அதிதியாக அந்தப் பகுதிக்கு வந்தானாம். வந்த இடத்திலே அந்தப் பகுதியினுடைய சிறப்பின் காரணமாக, மேன்மையின் காரணமாக கற்பகோடி வருஷங்களாக ஆண்டவன் அங்கே அதிதியாகவே இருந்துகொண்டிருக்கிறான். கலைவாணி அங்கேயே நீக்கமற எழுந்தருளியிருக்கிறாள். எனவே, கலைவாணியினுடைய கல்வி மேன்மையும், அந்தப் பகுதியினுடைய



நில வளம், நீர் வளம், மன வளம், ஆகம ஆன்மீக வளம் இந்த வளத்தின் காரணமாக அதிதியாக வந்தாலும் அந்த இடத்தை விட்டுப்போக முடியாமல் இதுவரையிலே அங்கே அதிதியாகவே இருக்கிற காரணத்தினால் அவன் அதிதீஸ்வரன் என்று சொல்லப்படுகிறான். (குறுக்கீடு) அதிதி என்றால் விருந்தாளி. சமஸ்கிருதத்திலே அதிதி என்று சொன்னால் விருந்தாளி. அந்தக் காலத்திலே அதிதிகளைத்தான் தேவர்கள் என்று சொல்வார்கள். 'அதிதி தேவோ பவ' என்பது அந்தக் காலத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிதிகள் வந்தால் அவன் தேவன், குரு, பிரம்மம் என்றெல்லாம் குருவையும் போற்றியிருக்கிறார்கள். நீங்களும் ஒரு குருதானே. அந்தக் கோயிலுக்கு அந்தக் காலத்தில் 1974-லே 3 இலட்சம் ரூபாய் வழங்கினீர்கள். அது இதுவரையிலே வந்து சேரவில்லை. தயவுசெய்து அந்தக் கோயிலை பிரபலமாக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுடைய காலத்திலே பாலாற்றங்கரையினுடைய முதல் கோயில், சிறப்புக்குரிய கோயில் அது அதிதீஸ்வரர் கோயில் — அதிலே கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும்.

அதை அடுத்து வந்தால் ஆம்பூரிலே நாகநாதன் கோயில் மிக மேன்மை மிக்க கோயில். அதை அடுத்து வந்தால் நம்முடைய வெட்டுவானத்திலே ரேணுகாம்பாள் கோயில். அதற்குப் பிறகு நம்முடைய விரிஞ்சிபுரத்திலே மார்க்கபந்தீஸ்வரர் கோயில்.

அதை அடுத்து வந்தால் வேலூரில் இருக்கக்கூடிய கோயில் நீங்கள் எல்லாம் அதை ஜலகண்டேஸ்வரர் கோயில் என்று சொல்வீர்கள். அது தவறு. ஜலகண்டேஸ்வரர் அல்ல. அந்தக் கோயிலுக்கு நீங்களாவது சரியான பெயரை வைக்க வேண்டும். அந்தக் கோயில் இறைவன் நஞ்சு உண்ட காரணத்தினால் அவனுடைய கண்டத்திலே ஏற்பட்ட ஜுரம், அந்த ஜுரமுடைய ஆண்டவன், நஞ்சு உண்ட காரணத்தினால் அவருடைய கண்டத்திலே ஜுரம் ஏற்பட்டது என்பதற்காக ஜுரகண்டேஸ்வரன் என்று பெயர் வைத்தார்கள். அதை நம்முடைய ஆட்கள் எல்லாம் என்ன பண்ணிவிட்டார்கள் என்றால் ஜலகண்டேஸ்வரர் என்று பெயர் வைத்துவிட்டார்கள். ஜலகண்டேஸ்வரர் அல்ல. அதற்குத் தனி ஒரு ஏற்பாட்டைச் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜுரகண்டேஸ்வரர் என்று — அது சமஸ்கிருத பெயர்தான். இருந்தாலும் ஜலகண்டேஸ்வரர் என்று தவறாக ஏன் சொல்ல வேண்டும்? ஜுரகண்டேஸ்வரர் என்றுதான் சொல்ல வேண்டும் — பெயர் வைக்க வேண்டும்.

அதை அடுத்து நீங்கள் வந்தால் இறைவன் நரசிம்ம அவதாரம் எடுத்திருக்கக்கூடிய கோயில் சோளிங்கர் கோயில். அதைவிட பொன்னை என்ற ஓர் ஊர் இருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு அந்த ஊர் நன்றாகத் தெரியும். அந்தத் தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். பொன்னையில் வள்ளிமலை என்று ஓர் ஊர் இருக்கிறது. தொல்காப்பியர் நமக்கு இலக்கணம் எழுதித் தந்தார். ஆனால் இரண்டாவது இலக்கணம் எழுதியவர் பவனந்தி முனிவர் என்று சொல்லுவார்கள். பவனந்தி சூத்திரங்கள் என்றுகூட இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். பவனந்தி முனிவர் பிறந்து வாழ்ந்த இடம் பொன்னை. அந்த இடத்திலே தான் தமிழுக்கு இரண்டாவது இலக்கணம் எழுதப்பட்டது. எனவே அப்படிப்பட்ட சிறப்புக்கு உரிய அந்த இடத்தை ஏதோ ஒரு பகுதியில் இருக்கிறது என்பதற்காக நாம் மறந்துவிட்டு இருக்கிறோம். அதையும் பிரபலப்படுத்த வேண்டும். அதற்குச் சரியான சாலைகள் அமைக்கவேண்டும். அதற்குரிய சீரான, சரியான விளம்பரம் செய்யவேண்டும்.

*பிற்பகல் 12-25*

விநாயகன் (பிள்ளையார்) முருகனைவிட கொஞ்சம் விவேகத்தில் அதீதமான காரணத்தால் அவன் ஞானப்பழத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டான் என்ற வரலாறு நமக்குத் தெரியும். எனவே, அந்த ஞானப்பழம் முருகனுக்குக் கிடைக்காமல் தான் தன் தந்தையிடம் பெற்றுக்கொண்ட இடம் கைலாசமாக இருந்தாலும், அதற்குரிய கோவில் பாலாற்றங்கரையில்தான் உள்ளது. அதுதான் திருவலம் கோவில். பொன்னை ஆற்றங்கரையில் இருப்பது திருவலம் கோவில். அவ்வளவு மகாத்மியம் பெற்ற அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, அதுவும் தேவாரப் பாடல்பெற்ற ஒரு ஸ்தலம், திருவலம், திருவலம்பதியே என்பது பாடல். எனவே அதுகுறித்தும் கொஞ்சம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அது ரொம்ப ஏழ்மை நிலையில் இருக்கிறது. அதற்குப்பிறகு வந்தால் காஞ்சிபுரம் இருக்கவே இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரியும். நகரேஷு காஞ்சி, நாரீஷு ரம்பா, புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு என்று.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அப்படியே சென்னைக்கு வந்து சேருவதற்குள் நேரம் அதிகமாகப் போய்விடும் போல் இருக்கிறது.





**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாணினியே பாடினான், பாணினி பெரும் கவிஞன், வட நாட்டுக் கவிஞன். நகரங்களுக்கு ஈஸ்வரன் யார் என்றால் காஞ்சிபுரம் என்று சொன்னான். நகரங்களுக்கு ஈஸ்வரன் காஞ்சிபுரம். புஷ்பங்களுக்கு தெய்வம் ஜாக்கி. ஜாக்கி மலர், ஜாதி மலர் இங்கே இல்லை, அது தேவலோகத்தில் இருப்பதாக ஐதீகம். இந்தக் காஞ்சிபுரத்தைப்பற்றிச் சொல்லும்போது வேகவதி ஆற்றங்கரை, பாலாற்றங்கரை, அண்ணா வாழ்ந்த இடம். அப்போதெல்லாம் அண்ணா வந்து அந்த இடத்திலே அதிகமாக உட்கார்ந்து இருந்தார்கள். வரதராஜஸ்வாமி கோவில் பற்றிச் சொன்னார்கள். அண்ணா அவர்களுக்கு நம்பிக்கை இருந்ததோ, இல்லையோ, ஆனால் அங்கேயுள்ள வரதராஜஸ்வாமி கோவில் கோபுரத்தின் நிழலில்தான் வளர்ந்தார் அண்ணா அவர்கள். எனவே, அந்த இடத்திற்கு நாம் சிறப்புக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு வருகிற பாலாற்றங்கரை கோவில், திருவிடந்தை இவற்றைப் பற்றி எல்லாம் விரிவாகப் பேச நேரம் இல்லை, இதையெல்லாம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, இஸ்லாமியர்கள் தமிழுக்காக மிகப் பெரிய சேவை செய்திருக்கிறார்கள். தமிழ் அறிந்த, தமிழ் கற்ற அமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். உமறுப் புலவரிலிருந்து, காசீம் புலவரிலிருந்து, மஸ்தான் புலவரிலிருந்து, பலர் அதற்குச் சேவை செய்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய காதர் புலவர், நாவலர் என்று அவர்களைச் சொல்லுவார்கள். (குறுக்கீடு) பார்த்தீர்களா குலாம் காதர் நாவலர் என்று அவர் திருத்திச் சொல்லிவிட்டார். குலாம் காதர் நாவலர் அவர்கள் தமிழுக்காக நான்காவது சங்கத்தை ஏற்படுத்தியவர் என்ற சிறப்புப் பெற்றவர். அந்த நான்காவது தமிழ்ச் சங்கத்தை குலாம் காதர் நாவலர் அவர்கள் ஏற்படுத்திய காரணத்தால் அவருக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், அந்த குலாம் காதர் வழியில் வந்தவர்கள் எல்லாம் ஆதீதப் புலவர். அவர் நம்முடைய கலைஞருக்கு மிக நெருக்கமான நண்பர். தொடக்க காலத்திலிருந்தே மிக நெருக்கமான நண்பர். அந்த குலாம் காதர் நாவலரின் ஊரான நாகூர் புகைவண்டி நிலையத்திலே 'நான்காம் சங்கத்தை ஏற்படுத்திய குலாம் காதர் நாவலர் பிறந்த ஊர்' என்று ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலே board வைத்திருந்தார்கள். இப்போது அந்த board-ஐக் காணோம். அதனாலே அவருக்கு என்ன பெருமை என்று சொன்னால், முஸ்லீம்களும் தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதை நினைவூட்டுவதற்காக அது தேவை

என்பதற்காகத்தான் நான் இதனைச் சொல்லுகிறேனே தவிர வேறு அல்ல.

இங்கே மற்றவர்களால் கோயில்களுடைய சொத்துக்கள் கையகப் படுத்தப்பட்டுவிட்டன, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையிலே இப்போது இரண்டு பெரும் சொத்துக்களைக் கண்டுபிடித்து மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள், மேலும் மீட்பதற்கு சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், மிக துரிதமாக நடவடிக்கையை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சி. அதற்கு அவருக்கு நான் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சட்டபூர்வமாக நீங்கள் செய்தாலன்றி எந்தவிதத்திலும் இதிலே பயன் ஏற்படாது. ஏனென்றால் அரசு, சக்தியுள்ள அரசு என்று சொன்னாலும் அதை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் மிக, மிக, மிக அதிகமான சக்தி படைத்தவர்கள். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும். எனவே, தயவுசெய்து Cultivating Tenants Protection Act, City Tenants Protection Act, Limitation Act என்று இருக்கக் கூடிய இந்தச் சட்டங்களிலேயிருந்து தெளிவான exemption இந்தக் கோயில் நிலங்களுக்கும் மற்றும் அறக்கட்டளைகளுக்கும் வழங்காவிட்டால் என்ன முயற்சி செய்தாலும் நடக்காது.

*பிற்பகல் 12-30*

உதாரணமாக ஒன்றைச் சொல்வேன். முதலமைச்சரவர்கள் தொகுதி, சேப்பாக்கம் தொகுதி. அதற்கு முன்பு நானும் உறுப்பினராக அந்தத் தொகுதியிலே இருந்திருக்கிறேன். அங்கே திருவட்டீஸ்வரன் கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அங்குள்ள அம்மனின் பெயர் தாயார் சண்முகாம்பிகா: சுவாமியின் பெயர் திருவட்டீஸ்வரர். அந்தக் கோயிலிலே இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. ஒன்று ஆறுமுகசுவாமி சந்நிதி, இன்னொன்று தாயார் சண்முகாம்பிகைக்கு என்று தனியாக ஒரு சந்நிதி இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு ஆற்காடு நவாப் ஆறுகால பூஜை நடப்பதற்காகவே நிலம் வழங்கியிருக்கிறார். இன்றைக்கு அங்கே போய்ப் பார்த்தால் ஒரு மனை நிலத்தின் வருமானம்கூட திருவட்டீஸ்வரனுக்கு அதிலேயிருந்து வருவது இல்லை. நான் அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, அங்கே பணியாற்றுகின்ற குருமார்களெல்லாம் என்னிடத்திலே வந்து முறையிட்டார்கள். தெப்பக்குளத்தைக் கண்டால் தண்ணீர் இல்லை. அதிலே தண்ணீர் இல்லாவிட்டால் எங்களுக்கெல்லாம் கண்ணீர் வரும். அந்த மாதிரி அந்தத் தெப்பக்குளத்தினுடைய நிலை.



எனவே, சாந்நித்தியங்கள், தூய்மை, சுத்தங்கள் இருக்க வேண்டும். அதுதான் கோயிலுக்கு மிக இன்றியமையாதது என்ற அடிப்படையிலே, கோயிலைச் சுற்றியிருக்கின்ற அந்த சாந்நித்தியம் தூய்மை, முழுமையாக இருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நேரம் தெரியும் எனக்கு. இன்னும் இரண்டே நிமிஷங்கள். Mr. Deputy Speaker, Sir, I want just two minutes more.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 6 பேர் பேசி அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ம, அப்துல் லத்தீப்:** ஆகையினாலே இதைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலே — இப்பொழுது என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்களும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள் அறம் - அறம் தான், அதனால்தான் அருள்மிகு - அருள்மிகு என்று நாம் ஆண்டவர்களைக் குறிப்பிடுகிறோம். அருள் நிறைந்த இடங்களாக இருக்கக்கூடிய இடத்திலே அருள் சுரந்து, உலகத்தைக் காப்பாற்ற வேண்டும். அந்த அளவுக்கு மனித உள்ளங்களும், எண்ணங்களும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அதற்குப் பயன்பட வேண்டிய இடங்கள், கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள். ஆண்டவனை வணங்கப் போகின்ற இடங்களில் அடக்கம் இருக்க வேண்டும். ஆண்டவன்தான் உயர்ந்தவன் என்று சொல்லும்பொழுது, மனிதனை யார் காப்பார்? அந்த வகையிலே நான் பெரியாரைப் போற்றுகிறேன். ஏதாவது மதம் என்று சொன்னால் பெரியார் ஒன்றுதான் சொன்னார். என்ன சொன்னார்? 'கடவுளை மற; மனிதனை நினை' என்று சொன்னார். அப்பொழுது மனிதனை நினைத்து நீ மனிதனுக்குத் தொண்டாற்றுகின்ற வரையிலே கடவுளின் பக்கம் இருப்பதற்கு உனக்கு யோக்கியதை இல்லை என்று சொன்னதாக, அந்த அர்த்தத்தில்தான் சொன்னார் பெரியார். கடவுளை வணங்க நீ யோக்கியதையை, தகுதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமானால் மனிதனுக்கு நீ நன்மை செய்திருக்க வேண்டும். மனிதர்கள் மக்களாக வாழவேண்டும். மாண்புமிகுந்த வாழ்வை அவர்கள் கொள்ள வேண்டும். எல்லா மனிதர்களும் அணுக்கத்தோடு, இணக்கத்தோடு வாழவேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய முன்னோர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, சிவம் என்றால் அன்பு என்று சொன்னார்கள். அன்பே சிவம் என்று சொன்னார்கள். எனவே, அந்த அன்பு - யார் அன்போடு, அன்பு செலுத்தி, அன்புக்காக வாழ்கிறார்களோ

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 13

அவர்களெல்லாம் சிவனை வணங்குகிறார்கள், சிவனை நாடுகிறார்கள். அந்தச் சிவன் என்பவன் அன்பு உருவம் பெற்றவன். அருள் நிறைந்தவன் என்ற கருத்திலேதான் நம்முடைய முன்னோர்கள் தமிழகத்திலே அன்பே சிவம் என்று சொன்னது மட்டுமல்ல, அதிலேகூட தென்னாட்டிலே ஒரு பண்பு இருக்கிறது அல்லவா, தென்னாட்டிலே அன்பு இருக்கும், அருள் இருக்கும், தென்னாட்டிலே, 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற நிலை இருக்கும். அதனால்தான் நம்முடைய முன்னோர்கள் சொன்னார்கள், 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று. அந்தத் தென்னாடு, தென்னாடுடைய சிவன் வந்து இங்கே மட்டுமல்லாமல், எந்நாட்டுக்கும் உடையவன் போற்றி போற்றி. அந்தத் தென்னாடுடைய சிவன்தான் எந்நாட்டுக்கும் உடைய ஒரு சிவனாக இருக்க வேண்டும். அதனால் எந்த நாட்டிலும் அன்பு இருக்க வேண்டும், அந்த அன்புதான் சிவம் என்று பாடிய இந்தத் தமிழகத்தில் கோயில்களுக்குச் சென்றாலும், மசூதிகளுக்குச் சென்றாலும் எங்கு சென்றாலும்.....

**Hon. Deputy Speaker:** Hon. Member, kindly keep up your words.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நாம் ஒத்துழைக்க வேண்டும் எனபதைச் சொல்லி, கோயில்கள் தழைத்தால், தேவாரம் ஓதப்பட்டால், திருப்புகழ் ஓதப்பட்டால் நிச்சயமாக அருள் நிறைந்த ஆகமியம் உயரும். அதைச் செய்வதற்கு கோயில்களையும் நாம் காப்பாற்ற வேண்டும். கோயில்களைக் காப்பாற்றினால் தமிழ் நிலைநிறுத்தப்படும். அது எந்தக் கோயிலாக இருந்தாலும் உள்ளங்களில் கோயில் இருக்க வேண்டும்; உள்ளங்களில் அன்பு என்னும் சிவன் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். எல்லோரும் எல்லாமும் என்ற நிலையிலே சகோதரர்களாக வாழ்ந்தார்கள். நம்முடைய அமைச்சர் தமிழ்க்குடிமகனுடைய தமிழ் ஆர்வம், அவர்களுடைய தமிழ்ப் பண்பாடு, தமிழ் வளர்ச்சிக்காக அவர்களுடைய உள்ளத்திலே கொண்டிருக்கக்கூடிய நீக்கமறா வேட்கை இவையெல்லாம் நிறைவேறும். அவை நிறைவேறினால் நாட்டின் வேட்கையும் நிறைவேறும். அந்த அடிப்படையிலே இந்தத் துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெற்றுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். சுப்பிரமணி. ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே, ஒவ்வோர் உறுப்பினருக்கும் கண்டிப்பாக 5 நிமிடங்கள்தான் ஒதுக்கப்படும். அதற்குள் நீங்கள் முடிக்கவில்லையென்றால், நானே அடுத்த உறுப்பினரை அழைத்துவிடுவேன்.



1998 மே 13]

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை, தமிழ் வளர்ச்சி பண்பாட்டு துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்"*

என்றார் திருவள்ளுவர். அப்படித் தொழுதல் பணி செய்வதற்காக, தமிழ்நாட்டில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பல திருக்கோவில்கள் உண்டாயின. மன்னர்கள் ஆட்சியில் அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும், பூசைகள் தொடரவும் ஏராளமான சொத்துக்களை ஏற்படுத்தினார்கள். கோவில்களைப் பாதுகாக்க இன்றளவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த வரிசையில் நமது தானைத் தலைவர் ஆட்சியில் அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமையில் இந்து சமய அறநிலையத் துறை செவ்வனே இயங்கி வருகிறது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டவனை நோக்கி அர்ச்சனை செய்யும்போது தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டு செயல்படுத்தியதும் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இப்போது திருவாரூர் வீதிகளில் தேரோட்டம் நடைபெறுவதும் கலைஞரால்தான். கலைஞரின் ஆட்சியெனும் தேர் ஓடும் வரையில் கோவில்களில் உள்ள தேர்கள் எல்லாம் தவறாமல் ஓடும்

தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலைக் கோவிலில் ரூபாய் 3 கோடியும், ஆனைமலை மாரியம்மன் கோவிலில் 2 கோடி ரூபாயும், மேட்டுப்பாளையம் பத்ரகாளி அம்மன் கோயிலில் 2 கோடியும் நிதியுள்ளது. மேற்கண்ட கோவில்களில் திருப்பணிகள் செய்வதற்கு அறங்காவலர்கள் முயற்சி செய்தாலும் பணி செய்ய வரைபடம் மற்றும் அனுமதிகள் கொடுக்க ஒரே ஒரு civil பொறியாளர்தான் உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆகவே, தனியார் பொறியாளருக்கு அனுமதி வழங்கக் கோருகிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட கலைஞர்தான் கோவில்களில் கருணை இல்லங்களைத் தொடங்கினார். அது சம்பந்தமான விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கலைஞரைப் பாராட்டிப் பேசினார்கள். இப்போது பல இடங்களில் கருணை இல்லம் சரியாக

நடைபெறவில்லை. அவற்றைச் சீர்த்திருத்த நடவடிக்கை தேவை என்பதையும் பணிவோடு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சுற்றி காசி விஸ்வநாதர் ஆலயம், வசிஷ்டர் ஆலயம் இன்னும் பாலாற்றங்கரையில் ஐந்து பழைய சிவன் கோவில்கள் அமைந்துள்ளன. பழமை வாய்ந்த இக்கோயில்களைப் பழுதுபார்த்து பொலிவூட்ட நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்கள் சமயம் வளர்க்கும் இடமாக இருந்தால் மட்டும் போதாது என்று மனித நேயம் வளர்க்கும் இடமாக இப்போது மாற்றி அமைககப்பட்டு வருகின்றன.

'கோவில்கள் கூடாது என்பதல்ல, கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாகி விடக் கூடாது' என்ற கலைஞரின் பராசக்தி உரையாடல் வரிகளை மனதில் வைத்துள்ள அமைச்சர் அவர்கள் இதை உணர்ந்து பக்தர்களின் புகார்களுக்கு இடமின்றி கோயில்களைப் பராமரித்து வருகிறார்கள். இதை உணர்ந்து அரசு அதிகாரிகளும், அறங்காவலர்களும் பணியாற்ற வேண்டும் என வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி பண்பாடு மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழி. அதன் வளர்ச்சி என்பது முடிவு காணாதது. தமிழ் மொழியில் இருந்துதான் உலக மொழிகளே தோன்றின என்ற ஆராய்ச்சி முடிவும் பாவாணரால் நிலை நிறுத்தப்பட்டது. அப்படிப்பட்ட தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக இந்த அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சென்னை இராஜ்யம் தமிழ்நாடானது. பஞ்சாயத்து ஊராட்சியானது, ஜில்லா மாவட்டமானது. மராமத்து பொதுப் பணித் துறையானது. நமஸ்காரம், வணக்கமானது. எல்லாமே திராவிட பாரம்பரிய ஆட்சியின்போது பேரறிஞர் அண்ணா காலத்திலும், தமிழ் இனத் தலைவர் கலைஞர் ஆட்சியிலும் ஏற்பட்ட மாற்றங்கள். இன்னமும் தமிழ் வளர்ச்சிக்காக ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன.

உலகத் தமிழர்கள் வாழுகின்ற நாடுகளில் எல்லாம் இப்போது தமிழையே மறந்து அந்த நாட்டு மொழிகளில் பேசுகிறார்கள். ஆங்கில மொழியில் இப்போது Mummy, Doddy என்று பேசுகிறார்கள். பர்மாவில் வாழ்ந்த தமிழர்கள், வசதியாக இருந்து, இப்போது ஆதரவற்றவர்களாக வந்து இந்திய எல்லையில் இருக்கின்ற தமிழர்கள், தமிழ் படிப்பதற்கு



வசதியில்லாத இளைஞர்கள், அம்மாவுக்கு அம்மே எனவும், அக்காவுக்கு அம்மாஜி எனவும், தங்கைக்கு இம்மாலே எனவும், அண்ணன் தம்பிகளுக்கு அக்கூ எனவும், ஒன்று, இரண்டு என்று சொல்வதற்குப் பதில் பர்மா மொழியில் டீ, நே, தோங், லீ, ங எனவும், பத்து என்பதற்கு டகே, நகே என்றும், 100-க்கு டையா என்றும், 1000 என்பதற்கு டடவ் என்றும் அந்த இடத்தில் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பர்மா பஜார் பக்கம் போய் வந்தீர்களா?

**திரு. பி.என். சுப்பிரமணி:** இவர்கள் தமிழ் கற்க மணிப்பூர் மாநில எல்லையான மோரோவிற்கு தமிழ்ப் புத்தகங்களை அனுப்பி வைக்கக் கோருகிறேன். அந்த மாநிலத்திற்கு நான் சென்ற நேரத்தில் எனக்குத் தெரிந்த அளவிற்கு 'தோடா, தோடா' இந்தி பேசினேன். அங்குள்ள மக்கள் இந்தி பேசுபவர்களுக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டார்கள். ஆனால், தமிழகத்தில் எல்லா மொழிகளிலும் பேச வாய்ப்புண்டு. அதே நேரத்தில் வாணிபம் செய்பவர்கள் மராத்தி, குஜராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் இரசீது புத்தகங்களை அச்சடிக்கிறார்கள். அதை மாற்றி, தமிழ்நாட்டில் தமிழில்தான் இரசீது புத்தகம் அச்சடிக்க வேண்டும் என சட்டமே இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழை முதன்மை மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். தமிழுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் மாண்புமிகு கலைஞர் அரசு செய்யும் பணிகளையும், சேவைகளையும் தமிழ் உணர்வு உள்ள அனைவரும் பாராட்டுகின்றனர். தமிழ் உலகம் அவரை இருகரம் கூப்பி வணங்கி வாழ்த்துகின்றது. அவர்களுடன் நானும் சேர்ந்து எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம், கண்டிப்பாக 5 நிமிடங்களில் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”

என்பதற்கு எடுத்துக்காட்டாக புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவேங்கைவாசல் கோவிலுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை வர வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அந்த திருவேங்கைவாசல் கோவில் இப்போது உலகத்திலேயே தலைசிறந்த கோவில்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. அங்குதான் உலகத்திலே தலைசிறந்த, ஞானதட்சிணாமூர்த்தி ஆண்பாதி, பெண் பாதி உருவமாகக் காட்சி தருகிற அந்த அற்புதமான காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து பார்த்து, அந்தக் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்துவதற்குத் தேவையான 1 கோடி ரூபாய்க்கு மேலான தொகையை வழங்க அனுமதி வழங்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோவிலின் இன்னொரு சிறப்பு என்னவென்றால், சிவன் கோவில்களிலே இருக்கக்கூடிய சிவனைப் பார்க்கிறபோது அந்தச் சிவலிங்கம் மொட்டும் முளையுமாக இருக்கும். ஆனால் அந்தக் கோவிலிலே இருக்கக்கூடிய சிவன், புலித் தலையுடன்கூடிய சிவனாக—லிங்கமாக - காட்சியளிக்கக்கூடிய அந்த அற்புதமான காட்சி அந்தக் கோவிலில் இருக்கிறது. ஆகவேதான் அந்தக் கோவிலுக்கு திருவேங்கைவாசல் என்ற அற்புதமான பெயரை அன்றைக்குச் சூட்டியிருக்கிறார்கள். அந்தக் கோவிலைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மன்னர் இராஜராஜ தொண்டைமானால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் கட்டி பராமரிக்கப்பட்டது. அந்தக் கோவிலினுடைய குலதெய்வமாக பிரகதாம்பாள் விளங்கி வருகிறார். அந்தக் கோவிலுக்காக, 1838-ல் இருந்த அரசால் சிறிய பொற்காசுகள் அச்சடிக்கப்பட்டு அவை செலாவணியில் இருந்தன என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, அந்தக் கோவிலுக்கு 20,000 ஏக்கருக்கு மேல் இப்போது நிலங்கள் இருந்தாலும்கூட அந்த நிலங்களிலிருந்து அந்தக் கோவிலுக்கு 10 ரூபாய் கூட வருமானம் கிடைக்காத அவல நிலைதான் இருக்கிறது; தனியார்கள் அந்தக் கோவிலினுடைய நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையிலிருந்து 17 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது திருமயம். திருமெய்யம் என்ற சொல்லே இப்போது திருமயம் என்று மாறி வந்திருக்கிறது. திருமயம் என்றால் உண்மையின் இருப்பிடம் என்று



இலக்கியத்தில் சொல்லப்படுகிறது. திருமயத்தில் சிலபெருமானும், விஷ்ணுபெருமானும் அருகருகில் இருக்கக்கூடிய அந்தக் காட்சி, அந்தக் கோவிலில் அற்புதமாக இருக்கிறது. அந்தக் கோவில் திருமங்கையாழ்வாருடைய பாடல் பெற்ற சிறந்த ஒரு கோவில். அங்கே வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தம்பி ஊமைத்துரையால் கட்டப்பட்ட கோட்டையும் மிகச் சிறப்பாக இருக்கிறது. ஆனால் திருமயம் கோட்டை மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்திடம் இருக்கக்கூடிய காரணத்தால் தமிழ்நாடு அரசு தலையிட்டு அந்தக் கோவிலின் திருப்பணியைச் செய்யவோ, அந்தக் கோவிலில் இருக்கக்கூடிய பாதிப்புகளை அகற்றி சரியான முறையிலே பராமரிக்கவோ முடியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவில் நிலங்கள், 1748-க்கு முன்பு இனாம் சொத்துக்களாக, கோவிலுக்குத் சொந்தமாக இருந்தன. ஆனால் 1748-ல் ஆங்கிலேயர்கள் லாரன்ஸ் என்பவரை இந்தியாவிற்குக் கொண்டு வந்து வரி வசூல் செய்ய ஆரம்பித்தபோது, அந்தக் கோவில் இனாம் சொத்துக்களுக்கு எல்லாம் இரயத்து வரி என்று ஒரு வரியை விதித்து அந்தக் கோவில் நிலங்களைத் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டார்கள். இதற்கான புத்தகங்கள், ஆவணங்கள் சென்னையில் இருக்கக்கூடிய பிரிட்டிஷ் நூலகம் என்று சொல்லக்கூடிய அந்த நூலகத்தில் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1848-க்கு முன்பு அந்தக் கோயில் நிலங்கள் இனாம் சொத்துக்களாக கோயில் பெயரிலேயே இருந்தன. பிறகு வரி விதிக்கப்பட்டு 1848-க்குப் பிறகுதான் அந்தக் கோயில் நிலங்கள் தனியாருக்கு மாற்றப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ப. மோகன் கந்தசாமி (குறுக்கீடு) திரு. அ. வெங்கடாசலம், ஏற்கெனவே உங்களுக்கு 5 நிமிடங்கள்தான் என்று சொல்லியாகிவிட்டது. இன்னும் 4 பேர் பேசி அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1998 மே 13

துறை ஆகிய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த, தமிழ்க் கடவுளாம், என்னுடைய முருகப் பெருமானையும், எங்களுடைய அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களையும் வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். தமிழ்ப் பண்பாட்டுக்கு அடித்தளமே இந்து சமய அறநிலையத் துறை ஆகும். சங்க காலத்திலேயிருந்து முருக வழிபாடும், சைவ வழிபாடும், மூத்த கடவுளாம் சிவ வழிபாடும் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதைத்தான் இங்கே எனக்கு முன்பாகப் பேசிய அப்துல் லத்தீப் சாயபு அவர்கள் மிக அற்புதமாக எடுத்துச் சொன்னார்கள், அவர்களை லத்தீப் சாயபு என்று சொல்வதா அல்லது லத்தீப் சாஸ்திரி என்று சொல்வதா (சிரிப்பு) என்றே தெரியவில்லை. அந்த அளவுக்கு அற்புதமாக அவர்கள் நம்முடைய சமயத்தைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இதுதான் நம்முடைய பண்பாடு. இதை வலியுறுத்தித்தான் விவேகானந்தர் போன்றவர்களெல்லாம் சொன்னார்கள். இந்து சமயத்திலேதான், கடவுள் உருவவழிபாட்டிலேதான், இந்து தத்துவங்களிலேதான், புத்தகங்களிலேதான் மனித நேயத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் இன்றைக்கு இந்த அவையிலே நான் கண்டேன். ஆகவே, கிராமங்களிலே உள்ள சிறிய கோயில்களாக இருந்தாலும் சரி, பெரிய கோயில்களாக இருந்தாலும் சரி, பண்பாட்டையும் மக்களுடைய ஒழுக்கத்தையும் அவை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் கோயில்களில் தக்கார்களை நியமிக்கும்போது தயவுசெய்து கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாகப் பார்த்து நியமியுங்கள். உங்களுடைய கட்சிக்காரர்களாக இருந்தாலும் பரவாயில்லை. நான் சென்ற முறையே இதுபற்றிப் பேசினேன். இந்த முறையும் சொல்கிறேன். உங்களுடைய கட்சிக்காரர்களாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால், கொஞ்சம் நம்பிக்கை உள்ளவர்களாகப் நியமியுங்கள் என்று சொன்னேன். இப்போது என்ன நடக்கிறது? சில கோயில்களில் நானே பார்த்தேன். சில பக்தர்கள் மனம் புண்படுகிறது என்று சொன்னார்கள். கோயில்களில் தக்கார்கள் சிறப்பாக வரவேற்பைப் பெறுகிறார்கள். ஆனால், விபூதியைக் கொடுக்கும்போது, அங்கே இருக்கின்ற மக்கள் முன்பாகவே, பக்தர்கள் முன்பாகவே அதைக் கீழே எறிந்துவிடுகிறார்கள். அந்தக் காட்சியெல்லாம் அங்கே நடக்கிறது. தயவுசெய்து, நம்முடைய அமைச்சர் தமிழ்க்குடிமகனார் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, இதையெல்லாம் மனதில் கொண்டு, அடுத்த முறை தக்கார்களைப் போடுகின்றபோது, கொஞ்சம் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகப் போடுங்கள் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.





[1998 மே 13] [திரு. ப. மோகன் கந்தசாமி]

அடுத்து நிறைய விஷயங்களைப்பற்றி இங்கே சொன்னார்கள், கோயில்களுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்தை இலவசமாகக் கொடுங்கள். இலவச மின்சாரம் எல்லோருக்கும் கொடுக்கிறோம், கோயில்களுக்கும் கொடுங்கள். இல்லையென்றால், வீட்டுக்குக் கொடுக்கின்ற அந்த tariff படியாவது கொடுங்கள். இப்போது Commercial tariff விகிதத்தில் கொடுக்கிறார்கள். அதேபோல, விவசாயத்திற்கு இலவச மின்சாரம் கொடுக்கிறோம். கோயில் நிலங்களும் விவசாயத்திற்குத்தான் பயன்படுகின்றன. வேறு எதுவும் விளைவிப்பதில்லை. அவைகளுக்கு Commercial tariff விகிதத்தில் போடுகிறார்கள். தயவுசெய்து அதற்கும் முடிந்தால் இலவசமாகக் கொடுங்கள், இல்லையென்றால், வீடுகளுக்குக் கொடுக்கின்ற அந்த tariff விகிதத்தில் நீங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயில் பணியாளர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கோயில் பணியாளர்கள் வயிற்றுப் பசியோடு பூசை செய்தால் எந்த அளவுக்குச் செய்ய முடியும்? ஆத்மார்த்தமாக பூசை செய்யவேண்டும். ஆனால் அரை வயிறு சாப்பிட்டுவிட்டு பூசை செய்தால், எப்படி அங்கே ஆண்டவன் இருப்பான் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்த்து அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். இப்போது எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறோம். அதைப்போல, அந்த இறைபணியாளர்களுக்கும் ஊதியத்தை கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயில்களுக்குகென்று வாரியம் அமையுங்கள், அதிலே எல்லா தரப்பு மக்களையும் அழைத்துப் பேசி அதற்குரிய பரிந்துரையை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயில்களில் தமிழ்ப் பாட்டுதான் பாடுகிறார்கள். நான் அமைச்சர் தமிழ்க்குடிமகனாருக்கு ஒன்றைச் சொல்வேன். தேவாரம், திருவாசகத்தை அங்கே அற்புதமாகப் பாடுகின்றார்கள். அவர்களுடைய சம்பளத்தைப் பற்றிக் கேட்டால், வெளியே சொல்லக்கூட முடியாது. (மணியடிக்கப் பெற்றது) தயவுசெய்து, என்னுடைய முருகனை வேண்டுகிறேன், நான் பேசுவதற்கு இன்னும் கொஞ்சம் நேரத்தைக் கொடுத்தாக வேண்டும். நான் முதலிலேயே பேச வேண்டும் என்று நினைத்தேன், உங்களிடமும் கேட்டுக் கொண்டேன். ஆகவே, அவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தாக வேண்டும்.

*பிற்பகல் 12-50*

அடுத்து, தமிழைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி விடுகின்றேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை அமைத்திருக்கிறீர்கள். இதுகுறித்து நமது உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும் சொன்னார்கள். அங்கே கடந்த ஆட்சியிலே முறையில்லாமல் ஒரு Director-ஐப் போட்டிருக்கிறார்கள். அவருக்குத் தமிழ்மேல் பற்று கிடையாது. ஆனால், இந்த அரசு வந்ததற்குப் பின்னால், அதற்காக அதிக நிதியை ஒதுக்கி இருக்கிறீர்கள். அந்த நிதியை வைத்துக்கொண்டு மூன்று Air-conditioner கள் புதிதாக வாங்கியிருக்கிறார்கள். தனக்காகச் செலவு செய்து கொள்கிறாரேயொழிய, தமிழ் ஆராய்ச்சிக்காக அவர் செலவு செய்யவில்லை. குறைந்த அளவில் தான் அங்கே பணியாளர்கள் இருக்கிறார்கள். 35 பேர்தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஆணைப்படி கொடுக்க வேண்டிய சம்பளத்தைக் கூடக் கொடுக்கவில்லை; ஓய்வூதியம் கொடுக்கவில்லை. எனவே, தயவுசெய்து அதை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திருக்கோவில் என்ற ஒரு பத்திரிகையை நமது அறநிலையத் துறையினர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம். (குறுக்கீடு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே சொல்லப்பட்டுவிட்டது. ஒருவருக்கு ஐந்து நிமிடங்கள்தான் என்று, நீங்கள் ஆறு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்" என்ற அடிப்படைக் கொள்கைக்குச் சொந்தமாகவும், தமிழ் அறிந்த தலைமகன் இந்த நாட்டின் முதலமைச்சராக வரவேண்டும் என்ற பாவேந்தருடைய வைர வரிக்கு இலக்கணமாகவும், அத்தகைய ஆட்சியில் தமிழை நன்கறிந்த ஒரு தமிழ்க்குடிமகன், மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் ஓர் அமைச்சராகவும் இருக்கின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு மொழி அவசியம். அந்த மொழி வளர்ச்சிக்கு



மொழி பெயர்ப்புத் துறை மிக மிக அவசியம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். இப்போது நம்முடைய தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற மொழி பெயர்ப்புத் துறை இன்னும் தீவிரமாகச் செயல்படுகின்ற அளவிற்கு, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். கணிப்பொறி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம், மொழி பெயர்ப்புத் துறைக்கு அதிக அளவில் சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியில் பல்வேறு வகைகளில் தமிழகத்தினுடைய தாய்மொழியாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதனை முன்னிலைப்படுத்தி பல காரியங்களைச் செய்து வருகிறோம். கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், சிறந்த நூல்களுக்கு 29 தலைப்புகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல, சிறந்த அறிஞர்களுடைய நூல்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. திருவள்ளுவர் பெயரால் விருதுகள் வழங்கப்படுகின்றன. பாவேந்தர் பெயரால் விருதுகள் வழங்கப்படுகின்றன. திரு.வி.க. பெயரால் விருதுகள் வழங்கப்படுகின்றன. பாரதியார் பெயரால் விருதுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல, சிறந்த தமிழ் அறிஞர்களுடைய நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய குடும்பத்திற்கு பரிவுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மாநில அளவில், மாவட்ட அளவில் தமிழில் அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப்படி, மொழி வளர்ச்சிக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்ற இந்த அரசு, மேலும் அதிகக் கவனம் எடுத்துக் கொண்டு, பொறியியல் துறை, மருத்துவத் துறை ஆகிய துறைகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய முதல்வர் அவர்கள் தமிழிலே கையெழுத்துப் போடுகின்ற ஒரு பழக்கத்தை எப்படித் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்களோ, எப்படி இந்த நாட்டில் தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டு வருகின்றார்களோ, அதைப்போல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், எல்லா நிலையிலும் கட்டாயமாக தமிழிலே கையெழுத்துப் போடுகின்ற நியதியை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நீதிமன்றங்களிலே அரசினுடைய உத்தரவுகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும் என்பதற்கு நம்முடைய

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் பல்வேறு கோளாறுகளுக்கு இடையே, செத்துப் பிழைத்த இந்தத் துறை, இப்போது நமது அரசினுடைய மிகப் பெரிய சொத்தாக நம்முடைய ஆட்சியிலே ஆக்கப்பட்டிருக்கின்றது. கோவில் நிலங்களில், அரசுக்கு வருவாய் வருகிற வகையில், வணிக வளாகம், திருமண மண்டபம் போன்றவை கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கோவில் நிலங்களில், கல்லூரிகள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு குறைந்த விலையில் நிலத்தை அரசு விற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரத்தநாடு வட்டத்தில், கோவிலூர் கிராமத்தில், வன்மீகநாதனர் கோவிலுக்கு கிட்டத்தட்ட 150 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலத்தில், பெண்கள் கல்லூரி ஒன்று தொடங்குவதற்கு, அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய சொந்த ஊரில் இருக்கின்ற நாகநாதசுவாமி திருக்கோவிலுக்கு திருமண மண்டபம் கட்டுவதற்கும், திருப்பணிகள் செய்வதற்கும் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நீடாமங்கலத்தில் புறவழிச் சாலை அமைப்பதற்கும், I.T.I. தொழில் பயிற்சிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒருமானை கரத்தினில் வைத்து
ஒருமானை சிரத்தினில் வைத்து உலகமேழும்
தருமானை இடத்தினில் வைத்து
அருள்வானை பவளநெடும் சைலம்போல



வருமானை முகத்தானை அளித்தானை
பெருமானை மகிட மேறும்
பெருமானை அருணகிரி அம்மானை
அடிபணிந்து பிறவி தீர்ப்போம்."

எங்களை எல்லாம் வாழவைக்கிற அருணாச்சலேஸ்வரரை அடிபணிந்து, எங்கள் இதயதெய்வம் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களை வணங்கி, என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீதும், தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மானியக் கோரிக்கையின் மீதும் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், ஆலயச் சொத்துக்களைச் சிறப்பாகப் பாதுகாப்போம் என்ற நிலையை எடுத்திருப்பதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். அதேசமயம், ஆலயங்களுக்கு உண்டான சொத்துக்களை எல்லாம் நீங்கள் முழுமையாக சிறப்பான முறையிலே பாதுகாத்து, மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருவண்ணாமலை, அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமாக, அடையாறு பகுதியில் சுமார் 50 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதை சில தனியார்கள் விற்பதற்கான முயற்சிகளை எடுத்திருப்பதாகவும் சொல்கிறார்கள். அதனை மீட்டு, அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்கு வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகரம், அக்னிக்ஷேத்திரம், சித்தர்கள் அதிகமாக வாழ்கின்ற ஒரு புண்ணிய பூமி. அந்த புண்ணிய பூமியிலே, மாதா மாதம், பவுர்ணமிதோறும் சுமார் ஐந்து அல்லது ஆறு இலட்சம் மக்கள் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரரை வணங்கி, கிரிவலம் வந்து கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்குப் போதுமான பாதுகாப்பும், அடிப்படை வசதிகளும் செய்துதர முடியாமல், திருவண்ணாமலை நகராட்சி திணறுகிறது. அதனைப் போக்குகின்ற வகையிலே திருவண்ணாமலைக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்குக் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் தங்கும் வசதிக்குண்டான அனைத்து வசதிகளையும் அரசே ஏற்று செய்து தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

219 098'

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்குண்டான சொத்துக்கள் பல இராயப்பேட்டை பகுதியிலே இருப்பதாகவும் சொல்கிறார்கள். அவற்றையும் மீட்டுத் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆட்சி அமைந்து இன்றைக்கு மூன்றாவது ஆண்டு தொடங்குவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறபோது, காலையிலே, தமிழ் உணர்வோடு பாராட்டினார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால், இன்று இந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கையும் நடைபெறுவதையொட்டி, கடவுள் பெயரால்கூட அவர் வாழ்த்துச் சொல்லியிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்துமத பக்தர்கள், ஆன்மீகம் உள்ளவர்கள் ஆகியோரது மனம் புண்படாத வண்ணம் நடந்து கொண்டாலும், இன்று கடவுள் பெயரால் வாழ்த்து சொல்லியிருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், திருவண்ணாமலை அருணச்ாசலேஸ்வரர் ஆலயத்திற்கு ஒருமுறை குடும்பத்தோடு வருகை தந்து (சிரிப்பு) அருணாச்சலேஸ்வரருடைய அருளைப் பெற்று, நீடுழி வாழ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருவண்ணாமலை ஆலயத்திற்குப் பல முறை சென்றிருக்கின்றேன். அங்குள்ள சிற்பக் கலைகளையெல்லாம் பார்ப்பதற்கும், ஆலயத்தினுடைய பழுதுபார்ப்புப் பணிகளைப் பார்வையிடுவதற்கும் பலமுறை சென்றிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் திருவாரூருக்கு வருமாறு அழைக்கின்றேன். (சிரிப்பு)

பிற்பகல் 1-00

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைக் கலைப்பதாக, 356-வது பிரிவை பயன்படுத்தப்போவதாக சில படைகள் சொல்லிக் கொண்டிருப்பதை விலக்குவதற்கு அக்னிக்ஷேத்திரமான புண்ணிய பூமி திருவண்ணாமலைக்கு தாங்கள் வருகை தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்து சமய அறநிலையத் துறைக்குத் தேவையான நிதி, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்



இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த கோவில்கள் மட்டுமல்லாமல் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள், அருந்ததியர், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே 300, 400 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்துக் கோவில்கள் எல்லாம் பராமரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கெல்லாம் சிறு, சிறு நிதியுதவியாக அதாவது ஒவ்வொரு கோவிலுக்கும் குறைந்தது 5,000 ரூபாயை நிதியுதவியாக வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் முகப்புத் தோற்றமாக, சிறப்பு வாயிற்படியாக பதினாறுகால் மண்டபம் இருந்தது. பல சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த அந்தப் பதினாறுகால் மண்டபம் இயற்கைச் சீற்றத்தினால், பெருந்தீயினால் சீரழிந்து, இடிந்துபோன நிலையை எடுத்துச் சொல்லிய பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓராண்டிற்குள்ளாக அது கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். கடந்த ஓராண்டிற்கு முன்பாக ஏற்கெனவே அந்தத் துறைக்கு பொறுப்பு வகித்து வந்த அமைச்சர் அவர்கள் அங்கே வந்து அந்தப் பணியைத் தொடங்கி வைத்தார்கள். கடந்த வாரம் நமது அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலைக்கு வருகை தந்தார்கள். அப்போது அந்தப் பணி தொடங்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலே அந்தப் பணிகள் முழுமையாகத் தொடங்கப்படவில்லை. ஒப்பந்தக்காரர்கள் தவறான தகவல்களை அரசுக்குக் கொடுப்பதாக நான் நினைக்கின்றேன். இப்போது எத்தனை பணியாளர்கள் வேலை செய்கிறார்கள், எவ்வாறு பணிகள் நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். உடனடியாக அந்த முகப்புத் தோற்றத்தை, பக்தர்களும், ஆன்மீக உணர்வுள்ளவர்களும் எதிர்பார்க்கின்ற அந்த முகப்புத் தோற்றத்தை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே கடைகள் வைத்திருந்த 63 கடைக்காரர்கள் இன்று வாழ்விலே மோசமான நிலையினை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தப் பகுதியிலே கட்டடங்களைக் கட்டி, 63 கடைகளை அமைத்துத் தர வேண்டும். அந்தப் பகுதி இப்போது சரியான முறையிலே பராமரிக்கப்படாத நிலையிலே இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கின்றபோது பக்தியுள்ளம் கொண்டவர்களாக, நேர்மையானவர்களாக பொதுப்பணிகளிலே ஈடுபாடு கொண்டவர்களாக, நல்லவர்களாக நியமனம் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்து சமய அறநிலையத் துறை மூலம் திருக்கோவில்களைச் செப்பனிடுவதற்கும், திருப்பணிகள் செய்வதற்கும் அவர்கள் உதவியாக இருப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 1976 ஆம் ஆண்டு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதற்குப் பிறகு 22 ஆண்டு காலமாக இன்று வரையிலும் கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கின்றது. எனவே திருப்பணிக் குழு ஒன்றை நியமனம் செய்து உடனடியாக கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை மலையைச் சுற்றி கிரிவலம் வருகின்ற பாதையிலே 140 மெர்க்குரி விளக்குகளை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலே இலவசமாக அமைத்துத் தந்திருக்கிறார்கள். அவருக்குப் பக்தர்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலிருக்கின்ற ஆணாய்ப் பிறந்தான், அடிஅண்ணாமலை, வேங்கைகால், அத்தியேந்தல் போன்ற ஊராட்சி மன்றங்கள், அந்த மின்சார விளக்குகளுக்குண்டான மின்சார கட்டணங்களைக் கூட கட்டமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த விளக்குகளைப் பராமரிப்பதற்கும், அதற்குண்டான மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கும் அரசே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏகப்பட்ட பக்கங்களைப் பார்த்துப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உரையை விரைவில் முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயத்தையும், மனித நல்லிணக்கத்தையும் உருவாக்குகிற வகையிலே, கிராமப்புற மக்களை ஒற்றுமைப்படுத்துகின்ற வகையில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்த ஏற்பாடு செய்ய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியிலே உள்ள சீனிநாயக்கன் குளத்திலே அரிய சித்திரங்கள் இருக்கின்றன. அதைத் தெரிவித்தவுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான வேலியை அமைத்துத் தந்திருக்கிறார்கள். ஆனால் அந்த அரிய சித்திரங்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாவலர்கள் இன்றுவரை நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அதற்கு பாதுகாவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 1-05

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள அரடாப்பட்டு என்ற கிராமத்தில் அனவரத தாண்டவேஸ்வரர் என்ற ஆலயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஆலயமாக இருக்கிறது. அந்த ஆலயம் இடிந்து, சிதைந்து போன நிலையில் இப்போது இருக்கிறது. அந்த ஆலயத்தைச் செப்பனிடுவதற்கும், திருப்பணி செய்வதற்கும் அரசு முன்வரவேண்டும். அல்லது தனியார் நிறுவனங்களுக்குத் தெரிவித்தால், தனியார்களை அரசு கோரினால், நிச்சயமாக ஏதேனும் ஒரு தனியார் நிறுவனம் அதை எடுத்துத் திருப்பணி செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணிவர்மா அவர்கள் கடவுளை வாழ்த்தி நீங்கள் சொல்லாமல் விட்டுவிட்டீர்களே என்று கவலைப்பட்டார்கள். அதற்காக அவரே ஒரு பாடலைப் பாடி இனிமையாக வாழ்த்தியிருக்கிறார்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"

என்று திருமூலர் கூறினார். அதையும் நினைவூட்டி, அதிலே ஒரு சிறு மாறுதலாக

"என்னை நன்றாக கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணி செய்யுமாறே"

என்ற என்னுடைய தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை இருக்கின்ற தாரக மந்திரத்தையும் நினைவூட்டி, என்னுடைய துறை மானியக் கோரிக்கைகளை உங்கள் முன்வைக்கிறேன்.

10 மாண்புமிகு உறுப்பினர்கள் இதன்மீது பேசியிருக்கிறார்கள். பலர் தங்களுடைய முழுமையான கருத்துக்களைச் சொல்வதற்கு நேரம் வாய்க்காவிட்டாலும், வருகை தந்திருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேருமே தங்களுடைய கருத்துக்களைப் பல்வேறு வகையிலேயும் தெரிவிக்க வேண்டும் என்று விரும்பி, அவற்றைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பைப் பெறாவிட்டாலும், நீங்கள் அனைவரும் கொடுத்திருக்கின்ற மடல்கள், அவற்றினுடைய கருத்துக்கள் போன்றவற்றை நினைவில் வைத்துக்கொண்டு பெருமளவுக்குச் செயல்படுகிறேன் என்பதை நீங்கள் மறக்கமாட்டீர்கள். எனவே, அந்த அளவுக்கு, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களில் இருக்கின்ற செய்திகளும் சரி, இன்று முன் வைக்கப்பட்ட செய்திகளும் சரி, அனைத்துமே நினைவில் கொள்ளப்படும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தவகையில், சில செய்திகளுக்கு நான் இங்கே முன்வருவதற்கு முன்னால், குறிப்பாக கோயில் சொத்துக்களை மீட்பது குறித்துதான் எல்லோருமே பேசினார்கள். ஒவ்வொருவரும் கொடுத்திருக்கின்ற கணக்கைப் பார்த்தால், நான் சொன்ன 5 இலட்சத்திற்கும் மேலே போகும்போல் இருக்கிறது. இப்போதுதான் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறோம். இது உண்மைதான். இப்போது 14 ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர்களைப் போட்டு ஆராய்ந்த பிறகு, இதிலே 320 ஏக்கர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் எங்கள் சொத்து என்று அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குக் கோயில் சொத்துக்களை மீட்பதற்கு இந்த அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஏற்கெனவே, இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலும், வரவு-செலவுத் திட்டத்திலும் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையிலும் தனியாரிடமிருந்து 1367 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. 354 மனை மீட்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, ஆக்கிரமிப்பு நிலங்களைக் கைப்பற்றுவதற்காக நீதிமன்றத் தின் மூலம் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்தில் இருக்கின்ற வீரன்வயல் என்ற இடத்தில் 621 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. அதிலே 495 ஏக்கர் நிலம் நன்செய் நிலமாகும். இரு பக்கமும் ஆறுகளை அணிகலன்களாகக் கொண்டு நடுவில் இருக்கின்ற நன்செய்



நிலமாகும். அதுவும் மீட்கப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்ற தீர்ப்பு வரை சென்று அது மீட்கப்பட்டிருக்கிறது. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, இதுவரையில், இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் 125 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன என்பதை நான் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். இதை ஏற்கெனவே இருக்கின்ற சொத்துக்களோடு ஒப்பிடுகிறபோது இது மிகவும் குறைவு என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இப்போதுதான் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணிவர்மா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அண்ணாமலை கோயிலின் சொத்து அடையாறில் இருக்கிறது. இராமநாதசாமி கோயிலின் சொத்து திருத்துறைப்பூண்டியில் இருக்கிறது. யாரோ அமீர்சிங் என்பவர், 209 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தச் சொத்துக்களை எழுதி வைத்து விட்டு போய் இருக்கிறார். 200 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்து இப்போதுதான் மீட்கப்பட்டிருக்கிறது. அதேபோல, 559 ஏக்கர் மனைநிலத்தை, இங்கிருக்கின்ற கணக்குப்படி ground நிலத்தை அடையாற்றிலே அம்மாயீ அம்மாள் கொடுத்துவிட்டு போயிருக்கிறார்; ஒரு நூற்றாண்டுக்கு முன்னால். அதை இப்போது அடையாளம் பார்க்கிறபோது, ஏற்கெனவே 230 ground காணாமலேயே போய்விட்டது. ஏனென்று சொன்னால் கிரயம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அரசரின் ஆணையருடைய கையொப்பத்தோடு அது போயிருக்கிறது; அந்தக் காலத்திலேயே, நீண்ட காலத்திற்கு முன்னால். அதிலே இப்போது குடியிருப்பவர்களையெல்லாம் பார்த்தால், பெரிய வழக்குகளையெல்லாம் போட்டு, 50 ஆண்டுகள் குத்தகை, 99 ஆண்டுகள் குத்தகை என்று வாங்கியிருக்கிறார்கள். எனவே, 99 ஆண்டுகள் குத்தகைக்கு இந்த அரசே கொடுத்திருக்கிறது என்பதைக் காட்டி அவர்கள் எங்களை தடைசெய்து விடுகிறார்கள். அது ஒரு இக்கட்டான நிலைமை என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதே நேரத்திலே 50 ஆண்டுகளுக்குப் பின்னால் மீண்டும் நாம் குத்தகையை புதுப்பிக்கும்போது வழக்கு போடுகிறார்கள். அது 11 ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கிறது. ஆனாலும் நானே நேரில் சென்று அவற்றைப் பார்த்து இருக்கிறேன் என்பதையும், வெகு விரைவில் அதனை மீட்பதற்கான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதுவும் குறிப்பாக திருவண்ணாமலை உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

[முனைவர் மு. தமிழ்க்குடிமகன்] [1998 மே 13

பிற்பகல் 1-10

அதுபோன்ற நிலைகள் பற்றித்தான் நேற்றுகூட செய்தித்தாள்களிலே வந்திருக்கிறது. கோபிசெட்டிபாளையத்திலே 1½ கோடி பெறுமானமுள்ள கோயில் நிலங்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் மீட்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்று நீங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்ற அனைத்தையும் நாங்கள் குறிப்பிலே வைத்திருக்கிறோம். அந்தக் குறிப்புகளின் அடிப்படையில் கோயில் நிலங்கள் முறைப்படி அதிகாரிகளாலும், அரசுத் துறையாலும் மீட்கப்படும் என்பதையும், அப்படி மீட்கப்பட்ட பின்புதான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய இன்னொரு பக்கத்தினுடைய ஆதங்கத்தையும் நான் புலப்படுத்த முடியும்.

கோயில்களுக்கு சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் கோயில்களில் விழாக்களோ அல்லது பூஜைகளோ நடைபெறுவதற்கு வருமானம் இல்லை என்கிற ஏழ்மை நிலை. அதற்குக் காரணம் என்ன? இதை கையில் வைத்துக் கொண்டு இருப்பவர்கள், பக்தர்களா, பக்தர் அல்லாதவர்களா என்றெல்லாம் நாங்கள் ஆராய்ச்சி செய்யவில்லை. எல்லா தரப்பினர்களும் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் கோயிலுக்குத் தரவேண்டிய வருமானத்தை மட்டும் நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சில இடங்களை நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஒரு கோயிலினுடைய ஒரு பெரிய மனை கிட்டத்தட்ட 1200 சதுர அடி இருக்கும். ஆனால் அவர்கள் இதுவரை கொடுத்துக் கொண்டிருக்கின்ற அடிமனை குத்தகை 75 காசு. இப்பொழுது நாம் வாடகை நிர்ணயம் செய்கிறோம். அதற்கு இப்பொழுது கிட்டத்தட்ட 1000 ரூபாய் கொடுக்க வேண்டும். பக்கத்திலே இருக்கிற கடைக்காரரிடமிருந்து தனியார் அவ்வளவு வாங்குகிறார். அதையும் கட்டுப்பட்டு கொடுக்கிறார்கள். ஆனால், தெய்வம் என்று வருகிறபோது ஓர் இளக்காரத்தன்மை. அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. 75 காசு கொடுப்பவர்களை இப்போது போய் கேட்டால் 25 விழுக்காடு உயர்த்துங்கள் என்று சொல்கிறார்கள். அதாவது விழுக்காடு கணக்கிலே 75 காசுக்கு 25 விழுக்காடு எவ்வளவு வரும்? சுமார் 1¼ ரூபாய் கொடுப்பார்கள். இதை வைத்துக்கொண்டு எப்படி வேலை செய்ய முடியும் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். அதனாலேதான் இப்போது சந்தை மதிப்பு என்ன என்பதைப் பார்த்து அந்த மதிப்பின் அடிப்படையில் செய்தால்தான் இவற்றை மீட்க முடியும். அதனாலேதான் கடைகளுக்கேகூட மறு வாடகை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அதற்காக தனிப்பட்ட ஒருவர், எந்த அலுவலரும் தன்னுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அதைச் செய்யவில்லை,



1998 மே 13] [முனைவர் மு. தமிழ்க்குடிமகன்]

அதற்கு ஒரு வழிகாட்டி நெறிமுறைகளை அரசு தருகிறது. அந்த நெறிமுறைகளின்படி, அந்தந்த ஊருக்கு ஏற்ப அது நிர்ணயம் செய்யப்படுகிறது. பலபேர் அதைத் தந்திருக்கிறார்கள். இப்போது அந்தவகையிலே பார்த்தால் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலத்திலே மட்டும் அதிகமான அளவிற்கு நிலுவைகள் கட்டப்பட்டு, இன்று வரவில் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு மாதத்தில் ஒரு கோடி ரூபாயை நேரடி வருமானமாக மீட்டுக்கொண்டு வரக்கூடிய அளவிற்கு இந்தத் துறை இயங்குகிறது என்பதை நான் பெருமைப்பட சுட்டிக்காட்ட முடியும்.

இரண்டு துறைகளைப் பற்றி இன்னும் சில மணித்துளிகளில் நான் பேசி முடிக்க வேண்டும். அதேநேரத்தில், திருக்கோயில் சொத்துக்களின் வருவாயினைப் பெருக்க எடுத்த இந்த முயற்சிகளுக்கு அப்பால் நிறைய திருக்கோயில் சொத்துக்களுக்கு நியாய வாடகை எதுவோ அதுகுறித்து நிர்ணயம் செய்ய தயவுசெய்து நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். காரணம் அந்தந்த ஊர்களிலே இருப்பவர்கள் கொஞ்சம் ஒத்துழைப்பார்களேயானால் இதிலே பெரிய அளவிற்கு வருமானத்தை ஈட்ட முடியும். நீங்கள் எந்தெந்தக் கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று கருதுகிறீர்களோ அந்தக் கோயில்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கான உதவியை நீங்கள் செய்தால் நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கிற 36253 கோயில்களில் இப்போது நாங்கள் செய்தது போக மீதம் இருக்கிற அத்தனை கோயில்களையும் பழுதுபார்த்து திருப்பணி செய்ய முடியும். காரணம், கோயில்கள் பல ஆண்டுகளுக்கு, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. மாமல்லபுரம் 1700 ஆண்டுகளுக்கு முற்பட்டது, தஞ்சை பேருடையார் கோயில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. எல்லாமே கிட்டத்தட்ட 100-லிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானவை. அன்று அவர்களுக்கு இருந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி மிகப் பெரிய சிற்பங்களோடு, அழகிய தூண்களோடு, கலை நயத்தோடு அந்தக் கோயில்களை நிர்மாணித்து இருக்கிறார்கள். ஆனால், இப்போது பழுதடைந்த நிலையிலே இருக்கிறபோது ஒரு கோயிலைச் சீர்படுத்த வேண்டுமானால் ஏறத்தாழ 15 இலட்சத்திலிருந்து 25 இலட்சம் ரூபாய்வரை செலவிட்டால்தான் முடியும். ஆனால், கோயில்களுக்கு வருமானம் என்று பார்த்தால் 200 ரூபாயாக இருக்கும். இந்த இரண்டு முனையையும் எப்படி ஒட்ட வைப்பது என்பதுதான் இக்கட்டான நிலை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, பெரிய கோயில்களை எடுப்பது என்பது ஒரு வகை. ஆனாலும், அந்தப் பெரிய கோயில்களுக்கு மேலும் மேலும் நன்மை செய்ய வேண்டுமென்பதை மறந்து விடக்கூடாது.

எந்தக் கோயில்களுக்கு பக்தர்கள் அதிகமாக வருகிறார்களோ அந்தக் கோயில்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்தால்தான் அவை சிறப்பாக வர முடியும் என்பதை நினைவுகூர விரும்புகிறேன். ஆனாலும்கூட, நாங்கள் சட்டத்திருத்தத்தை செய்து இருக்கிறோம். இதற்கு முன்னால் உரிமையியல் வழக்குகள், சிவில் வழக்குகளைத்தான் தொடர முடியும். ஆனால், இந்த அரசு வந்த பிறகு அதைக் குற்றவியல் வழக்குகளாக மாற்றி 79(அ) என்ற பிரிவின்படி யாரெல்லாம் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களோ அதைச் சரி செய்து மீட்பதற்கு நேரடியாக குற்றவியல் வழக்குகளைத் தொடர முடியும், அப்படிப் பல வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறோம், தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன, அதனுடைய விளைவாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புக்கு மூன்று மாதம் முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டி இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்னால் அப்படி இல்லை. இந்த அரசுதான் அந்தச் சட்டத்திருத்தத்தைச் செய்திருக்கிறது. எனவே, இதுபோன்ற நிலைகளில் நிச்சயமாக ஒவ்வொரு காலகட்டத்திலும் சிறந்த வெற்றி இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

*பிற்பகல் 1-15*

அதேநேரத்தில், கோயில்களிலே நடைபெறுகின்ற திருவிழாக்கள், வேறு சில நிகழ்ச்சிகள், கோயில்களுக்குப் பெருமை தரத்தக்க முறையில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு விழாக்கள் நடைபெறுகின்றன. இவர்கள் சமயக் குரவர்கள். அதேநேரத்தில், சந்தானக் குரவர்கள் என்று நான்கு பேர். மெய்கண்டத்தேவ நாயனார், அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்த சிவம், உமாபதி சிவம். இவர்களுடைய சிலைகளும் நிறுவப்பட்டு, பல கோயில்களில் இப்போது சிறப்புமிக்க விழாக்கள் எடுத்து நடத்தப்படுகின்றன.

அதேநேரத்தில், அருளாளர்களைப் பற்றிய விழாக்கள் தமிழ்நாடு எங்கும் நடைபெறுகின்றன. காரணம், கோயில்களில் என்ன நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்துகொள்வது இந்த அவைக்கு ஒரு கடமையாகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், காரைக்கால் அம்மையார், சூடிக்கொடுத்த நாச்சியார், நக்கீரர், பரஞ்சோதி முனிவர், தாயுமானவர், குமரகுருபரர், அருணகிரிநாதர், சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோருடைய விழாக்கள் மிகச் சிறந்த முறையில் பல்வேறு



கோயில்களிலே இப்போது நடைபெற்று வருகின்றன. அண்மையிலேகூட, முதன்முறையாக, திருப்பரங்குன்றத்திலே திருமுருகாற்றுப்படையிலே வரும் அத்தனை வரிகளும் கல்வெட்டிலே பொறிக்கப்பட்டு, அங்கே நக்கீரர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதுபோன்று எல்லாக் கோயில்களிலும் நடைபெறுகின்றன. அந்தந்தக் கோயில்களுக்குத் தொடர்புடைய விழாக்கள் பெருமளவிலே நடத்தப்படுகின்றன.

அத்தோடு நிற்காமல், தமிழ்ப் புலவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற வகையிலும், அவர்கள் தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் போன்றவற்றைக் கற்றுக்கொண்டு பணியாற்றுகின்ற வகையிலும், 135 தமிழ்ப் புலவர்கள் இப்போது இந்த அரசால் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மேலும், இதை இன்னும் பல பெரிய கோயில்களுக்கு விரிவுபடுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு இப்போது ரூ. 1500/- தொகுப்பு ஊதியம் வழங்கப்படுகிறது.

இதுபோக, ஒருகால பூஜைத் திட்டம். அதுதான் மிகவும் முக்கியம். காரணம், பல கோயில்களுக்கு வருவாய் இல்லை. அதனால், பூஜை நடைபெறுவதில்லை. எனவே, அரசே என்ன செய்கிறது என்றால், ஒரு கோயிலுக்கு 25 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி, அதை நிரந்தர வைப்பில் வைத்து, அந்த வைப்பிலிருந்து வருகின்ற வட்டியைப் பயன்படுத்திக் கொண்டு, ஒருகால பூஜை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் ஏறத்தாழ 7268 கோயில்களுக்கு ஏற்கெனவே நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலும் இப்போது 24 சிறு கோயில்கள் — நான் சொல்வது, சட்டப் பிரிவு 46(i), 46(ii), 46(iii) என்ற பட்டியலில் வருகின்ற, ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து இலட்சத்திற்குக் கீழும் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களுக்கு இது வரவில்லை. அதற்கும் குறைவாக வருமானம் உள்ள கோயில்களுக்கு இது தேவை என்று கருதி, அரசு இதைச் செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே ஓய்வுபெற்ற ஆலய அர்ச்சகர்கள், வேதபாராயணர்கள், திருமுறை ஓதுவார்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 300/- ஆக இருந்த ஓய்வு ஊதியத்தை, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வகையில் இப்போது 701 பேர் பயன்பெறுகிறார்கள்.

அதேபோல, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு, 622 பேருக்கு, 500 ரூபாய் என்ற அளவில் இப்போது ஓய்வு ஊதியம் வழங்கப்படுகிறது. அதிலே ஒரு வியப்பைப் பார்க்க வேணடும். அவர்கள் கிராமக் கோயில்களில் பூசாரிகளாக இருந்த காலத்தில் அவர்களுடைய மாத வருமானம் ரூபாய் 50 அல்லது 100 ஆகத்தான் இருந்திருக்கும். அவர்கள் பூசாரிகளாக இருந்த காலத்தில் கிடைத்தது அவ்வளவுதான். ஒரு கிராமத்தில் யாரும் தட்டில் காசைப் போடுவதில்லை. ஒரு கிராமத்தில் பெரிய அளவில் வழிபாடு நடைபெறுவதில்லை. ஆனாலும், ஓய்வு ஊதியம் மட்டும் 500 ரூபாய் தரப்படுகிறது என்பதை அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும், நம்முடைய உறுப்பினர்களும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

ஆலயத் திருப்பணி, குடமுழுக்குப் பணிகள் நடைபெறுகின்றனவா என்றால், ஏராளமான அளவில் நடைபெறுகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 923 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் முடிவுற்று, குடமுழுக்குகள் நடைபெற்றிருக்கின்றன. தற்போது 488 கோயில்களுக்குத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மட்டுமே நாங்கள் ரூபாய் 43 கோடியே 40 இலட்சத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலவசத் திருமணங்கள் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். தினமலர் இதழிலே 'டீக் கடை பெஞ்ச்' என்று ஒரு பகுதி வருகிறது. அதிலேகூட சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஆச்சரியம்தான் நாணா. சிவ பக்தனான நந்தனை நெருப்பிலே குளிச்சிட்டு வந்து சுவாமியைத் தரிசிக்கச் சொன்னதுபோய், தாழ்த்தப்பட்டவர்களும் ஆலயப் பிரவேசம் செய்ய வழி வகுத்து, சுதந்திர நாளிலே அவாளோடே சமபந்தி போஜனம் செய்து, இன்றைக்கு அவாள்லே வசதியற்றவாளுக்கு கோயில் செலவிலேயே திருமணம் நடத்தி வைக்கிறாண்ணா, நல்ல டெவலப்மென்ட்தான்" என்று அது பாராட்டியிருக்கிறது. அந்த அளவுக்கு இப்போது இலவசத் திருமணங்கள் மட்டுமே ஏறத்தாழ 867 நடைபெற்றிருக்கின்றன. எத்தனை வேண்டுமானாலும், நண்பர்கள் குறிப்பிட்டுச் சொன்னால் எல்லாக் கோயில்களிலும் இந்த இலவசத் திருமணங்கள் நடைபெறும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இந்தத் துறையின் மூலமாக நடத்தப்பெறும் கருணை இல்லங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது அவை கவனிக்கப்படுகின்றன. ஆனால், சில இடங்களில் கருணை இல்லங்கள் தொடங்கியும் போதுமான மாணவ, மாணவியர்கள் அங்கே வந்து சேருவதில்லை. சில இடங்களில் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. இருந்தாலும்கூட, இப்போது கருணை இல்லங்கள் 43 கோயில்களில் இருக்கின்றன. அவற்றிலே 835 சிறுவர்களும், 376 சிறுமியர்களும் சேர்ந்து பயிலுகிறார்கள். அவர்களுக்கு அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். எனவே எங்கேயாவது கருணை இல்லங்கள் சரியாக நடைபெறவில்லை என்று உங்களுடைய கவனத்திற்கு வருமேயானால், அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரும்படி வேண்டுகிறேன்.

அதேநேரத்தில், தமிழ் இசைப் பயிற்சி கோயில்களுக்கு மிகவும் முக்கியமானது. இளைய தலைமுறையினருக்கு உரிய வழிமுறைகளில் இசைப் பயிற்சி தருவதற்காக 8 சைவத் திருக்கோயில்களிலும், 7 வைணவத் திருக்கோயில்களிலும் இசைப் பயிற்சிகள் நடைபெறுகின்றன. சைவப் பள்ளிகளில் 93 பேரும், திவ்யப்பிரபந்த இசைப் பள்ளிகளில் 98 பேரும் சேர்ந்து பயிலுகிறார்கள்.

பிற்பகல் 1-20

தமிழ் அர்ச்சனையை நடைமுறைப்படுத்துவது, மிக முக்கியம். இப்போது இந்த அரசு எடுத்த பெரிய நடவடிக்கைகளில், உரிய நடவடிக்கைகளில், வரலாற்றில் முத்திரை படைத்த நடவடிக்கை என்பது, தமிழில் முழுமையான அர்ச்சனையைச் செயல்படுத்தியிருப்பதுதான். இது நீண்டகாலக் கனவு. தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடக்கத்திலிருந்து வலியுறுத்தி வந்த ஒன்று. ஆதீனகர்த்தர்கள் வலியுறுத்தியது. குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள் எல்லாம் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். இப்போது அதை முழுமைப் படுத்தியிருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். அதிலே முழுமை என்று சொன்னால், ஏதோ அவசரப்பட்டு நாங்களாகவே எழுதிக்கொள்ளவில்லை, எங்களுக்கும் எழுதத் தெரியும் என்பது வேறு. ஆனால் நான் அதை எழுத முடியாது, எழுதக் கூடாது. எனவே தேவாரத்தில், திருவாசகத்தில், திவ்யபிரபந்தத்தில் யார் தேர்ச்சிப் பெற்றிருக்கிறார்களோ அந்தப் புலவர்கள் அதை எழுதுகிறார்கள், அறிஞர்கள் எழுதுகிறார்கள். அதற்குப் பிறகு யார் அதைப் பயன்படுத்துகிறார்களோ அந்த சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள், முன்னிலையில் வைக்கப்பட்டு

அவர்கள்முன் அவை அரங்கேற்றப்படுகின்றன. இவை எல்லாம் இதில் இருக்கின்றனவா, சரியாகப் பொருந்துகின்றனவா என்று பார்த்து அதற்குப் பிறகு எல்லா ஆதீனகர்த்தர்களுக்கும் இந்தக் கருத்து அனுப்பப்பட்டு, அவர்களுடைய கருத்தும் கேட்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தத் திருத்தங்கள் செய்த பிறகுதான், இப்போது அந்தப் போற்றிப் பாடல்கள் அச்சாகிக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அந்த அர்ச்சனைப் பாடல்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற 36,253 கோவில்களிலே, எல்லா தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைச் சொல்வதற்குக் காரணம் சில இடங்களில் 1008 போற்றிப் பாடல்கள்; சில இடங்களில் 108 போற்றிப் பாடல்கள்; தேவைப்படுகிற இடத்திலே 16 போற்றிப் பாடல்கள், இன்னும் சுருக்கமாகச் சொன்னால் 8 போற்றிகள் என்று அறிஞர்கள் வகைப்படுத்தித் தந்திருக்கிறார்கள். இந்த முறைதான் அரசு அதற்குப் பெரிய முயற்சி எடுத்து இந்தப் போற்றிப் பாடல்களைத் தந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே இன்னொரு குறிப்பைச் சொல்ல வேண்டுமானால், தமிழ் அர்ச்சனையை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தியிருக்கிற கோயில்கள் 4331, சைவத் திருமுறைகள் முற்றோதல் நடக்கின்ற இடங்கள் 657, திவ்யப்பிரபந்தப் பாராயணம் நடக்கின்ற இடங்கள் 269, தமிழ் இலட்சார்ச்சனை நடத்தப்பட்ட கோவில்கள் 2453, கோடி அர்ச்சனை நடத்தப்பட்டவை 14 இடங்களில்.

திருமுறைப் பதிகங்கள் கல்வெட்டில் பதிக்கப்படுகின்றன ஏனென்றால் அருமையான பாடல்களை திருஞானசம்பந்தர் போன்றவர்கள், அருணகிரிநாதர் போன்றவர்கள் பாடி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோவில்களுக்குப் போகிறவர்களுக்கும் வருகின்றவர்களுக்கும் யாருக்கும் அந்தக் கோவிலுக்கும் அருணகிரிநாதருக்கும் என்ன தொடர்பு என்று தெரியாது. எனவே இப்போது அவை எல்லாம் கல்வெட்டுகளில் முறையாக பதிப்பிக்கப்படுகின்றன. அதிலேகூட 335 கல்வெட்டுகள் அப்படி பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, திருக்கோவில்களில் நண்பர்கள் கேட்டார்கள் - திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருவெம்பாவை, திருப்பாவை போன்ற எல்லாப் பாடல் நூல்களைப் பற்றிய சொற்பொழிவுகள் நடக்கின்றன. இப்போது 571 கோவில்களில் அவை நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுபோக, தமிழ்நாட்டில் இப்போது இருக்கிற இந்த இசைப் பயிற்சிக்கு நாதஸ்வர தவில் இசைப் பயிற்சி மிகவும் முக்கியம்,





கோவில் என்பதற்காக, 11 ஆலயங்களில் இத்திட்டம் துவக்கப்பட்டு, நாதஸ்வர வித்துவான்களுக்கு 1000 ரூபாயும், தவில் வித்துவான்களுக்கு 750 ரூபாயும், தாளம் போடுகின்றவர்களுக்கு 500 ரூபாயும் என்று முதன்முறையாக ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து இப்போது அவர்களுக்கு அரசு வாழ்வளித்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறகு எல்லாத் தரப்பினருக்கும் புத்தொளிப் பயிற்சி நடைபெறுகிறது. சிலபேர்கூட நினைக்கிறார்கள், செயல் அலுவலர்களுக்கு அல்லது உதவி ஆணையர்களுக்கு இறைப்பற்று இருப்பதில்லை என்று. அவர்கள் எப்படி இந்த இறையோடு ஈடுபட்டு வருவார்கள், இணைந்து வருவார்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் பணிக்கு வந்தபிறகு அந்தப் பணியை தங்களுடைய வாழ்நாள் பணியாகக் கொள்கிறார்கள். எனவே மூன்று தரப்பினருக்கும் புத்தொளிப் பயிற்சி கொடுக்கிறோம். ஒன்று செயல் அலுவலர்கள், உதவி ஆணையர்களுக்கு, மற்றொன்று பொது மக்களுக்கு, மற்றொன்று ஏற்கெனவே ஓதுகின்ற அர்ச்சகர்களுக்கு. எனவே மூன்று தரப்பிலும் முழுப் பயிற்சி, புத்தொளிப் பயிற்சி என்ற முறையில் தரப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்தினுடைய கோவில் சிறப்புகளை உலகம் எங்கும் அறிய வேண்டுமென்று கருதுகிறோம். அதற்கு இணையம் போன்ற அமைப்புகளும் Internet போன்றவையும் வந்துவிட்டன. ஆனால் இதைத் தனியார் இடத்திலே கொடுத்து அதை வணிகமாக்காமல் நம்முடைய அரசு, இப்போது இருக்கிற திரைப்படத் துறையில், திரைப்பட நகரில் இருக்கிற, திரு. அமிர்தம் அவர்கள் தலைமையில் இருக்கிற அந்தத் துறையில் கொடுத்து 11 கோவில்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 1,10,000 ரூபாய் கொடுத்து அந்தக் கோவில்களுடைய எல்லாச் சிறப்புகளையும் ஒலி நாடாக்களாகவும், ஒளிப் பேழைகளாகவும் கொண்டு வந்திருக்கிறோம். விரைவில் அனைவருக்கும் வழங்கக்கூடிய அளவிற்கு, உலகம் எங்கும் தரப்படக்கூடிய அளவுக்கு இப்போது சிறப்புப் பெறுகின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, திருவண்ணாமலை கோவிலில் நகை காணாமல் போய்விட்டது என்று தமிழன் எக்ஸ்பிரஸ் செய்தியாளர்கூட செய்தி கொடுத்தார். ஏற்கெனவே நகை மதிப்பீட்டாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். எனவே அதை மதிப்பீடு செய்வதற்கு சில கோவில்களுக்கு 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று ஆகிறது. ஆனாலும் அரசு அதற்குக் கூடுதலான பணியாளர்களை நியமித்து, இதுபோல கவனத்திற்கு

வருபவற்றைக் கூட உடனுக்குடன் செயல்படுத்தி இருக்கிறோம். அந்தச் செய்தியாளர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், திருவண்ணாமலை கோவிலில் இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது, எங்கெல்லாம் அவர்கள் குறைகளைச் சுட்டிக்காட்டினார்களோ, அந்தக் குறைகள் நிறைவு செய்யப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல முழுமையாக எல்லா சமயத்தினரும் போகக்கூடிய அளவிற்கு கோவில்களில் ஒரு சமபந்தி விருந்து நடைபெறுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தச் சமபந்தி விருந்துகூட சுதந்திரப் பொன் விழாவினையொட்டி, அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி, ஏறத்தாழ 47 லட்ச ரூபாய் செலவில் இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் நடத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எல்லாக் கோயில்களிலும் நடைபெற்று இருக்கிறது. அதுபோக இந்தத் திருக்கோயில்களைப் பற்றிய கருத்துகளைச் சொல்வதற்கு உயர்மட்ட ஆலோசனைக் குழு இருக்கிறது. பல ஆதீனகர்த்தர்கள் சிறந்த தொழில் அதிபர்கள், சமயப் பற்றாளர்கள் எல்லாம் சேர்ந்து ஓர் ஆலோசனைக் குழு ஏற்கெனவே இருக்கிறது. அதனுடைய இரண்டு கூட்டத்திலும் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பெற்று இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அப்படிப்பட்ட நிலையில் திருக்கோயில்களுக்கு இருக்கின்ற இந்தப் பல்வேறு பிரச்சினைகளில் நீங்கள் பல கோயில்களை சுட்டிக்காட்டி இருக்கிறீர்கள்.

*பிற்பகல் 1-25*

பலபேர் வெட்டுத் தீர்மானத்தில் தங்களுடைய பகுதியில் இருக்கிற கோயில்களை எல்லாம் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவை அனைத்திற்கும் முறையான ஆய்வு செய்யப்பட்டு திருப்பணிகள் நிச்சயமாக செய்துதரப்படும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோக, நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும், தனிப்பட்டவர்களால் கொடுக்கப்படுகிற விண்ணப்பங்கள் கவனிக்கப்பட்டு, இப்போது இருக்கிற இந்தப் பெருவாரியான திட்டங்களின்மூலம் அவை செய்யப்படும் என்பதை இந்தத் துறையின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஏனென்றால் அறிவிப்புகளை பின்னால் சொல்லுகிற காரணத்தினால்.

இடையில் தமிழ் வளர்ச்சி பற்றிய செய்திகளை இப்போது உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். பொதுவாகவே, 1974-ல் இங்கு இருந்த



சட்டமன்ற மேலவையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் உரை ஆற்றி இருக்கிறார்கள். அப்போது திரு. ம.பொ.சி. அவர்கள் வைத்த அந்த வேண்டுகோளுக்கு, முதல்வர் அவர்கள் அளித்த விடையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "தமிழுக்கு, அதன் வளர்ச்சிக்கு ஒரு தொகை இதில் ஒதுக்கப்படவில்லை என்று தன்னுடைய மனக்குறையாக ம.பொ.சி. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களே அதற்கு ஒரு சமாதானமும் சொல்லிக்கொண்டார்கள். கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற பெருந்தொகையில், தமிழுக்கும் போய்ச் சேர்கிறது என்று ஒருபுறம் இருந்தாலும் தமிழுக்கு என்கிற தனித் தலைப்பில் அந்தக் காரியம் நடைபெற வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தமிழுக்காக, தமிழர்களுக்காக, தமிழ்ச் சமுதாயத்திற்காக, தமிழ் மரபு காக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழர்களுடைய நாகரீகம், கலாச்சாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக நம்முடைய சிலம்புச் செல்வர் போன்றவர்கள் எடுத்துச் சொல்கிற எந்தக் காரியமானாலும், அவைகளை இந்த அரசு தட்டிக் கழித்ததில்லை என்பதை நாடு நன்றாக உணரும். ஆகவே, வெகு விரைவில் தமிழுக்கு ஒரு தனித் தொகை ஒதுக்குகிற அளவிற்கும், தமிழின் மேம்பாட்டிற்காக அந்தத் தொகை பயன்படுகிற அளவிற்கும் நிச்சயமாக ஒரு தனித் தலைப்பிலே தொகை ஒதுக்கப்படும் என்பதையும், அதுபற்றி பரிசீலித்து விரைவிலே அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்" என்று முதல்வர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் சொன்னதன் நினைவாகத்தான் இப்போது தனித் தொகை ஒதுக்கப்பட்டு, தனி அமைச்சர் விடை சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, தலைவர் கலைஞர் அவர்கள் எதையும் மறந்துவிடுபவர் அல்ல. எதையும் நினைவில் வைத்துக்கொண்டு செயல்படுபவர் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

அதேநேரத்தில் நண்பர்கள் இராமன் போன்றவர்கள், திரு. டி.என். ராஜரத்தினம் பிள்ளையின் நூற்றாண்டு விழா, மங்கள கிழார் நூற்றாண்டு விழா எல்லாம் கொண்டாட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதையெல்லாம் கவனித்து ஆவன செய்யப்படும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் தமிழுக்கு என்று ஒரு வாய்ப்பு வந்தால், நேர்ந்தால், எப்போதும் தொகையை வழங்கக்கூடியவர் என்பது உங்களுக்குத் தெரியும். உ.வே.சா.-வினுடைய சிலைக்கு பீடம் அமைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள் என்ற ஒரு செய்தி வந்தது.

அவ்வளவுதான், அந்தச் செய்தி தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட உடனேயே, வண்டியைவிட்டு இறங்கிய உடனேயே, திரு. சண்முகநாதனை கூப்பிட்டு, 50 ஆயிரம் காசோலையை வழங்குங்கள் என்று ஆணையிட்டவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். எனவே, தமிழ்த் தாத்தாவுக்காக, ஏற்கெனவே அவருக்கு எவ்வளவோ சிறப்பு செய்தாலும் 50 ஆயிரம் ரூபாயை உடனே வழங்கி அன்றைக்கு அந்தப் பணி நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

அதேபோல் திராவிடப் பல்கலைக்கழகம். அவர்கள் கேட்டபோதே, முதல் தொகையாக 50 லட்சம் கொடுத்து — இப்போது வேறு எந்த தென் மாநிலத்தையும்விட அதிகத் தொகையை ஒதுக்கி, திராவிடப் பல்கலைக்கழகத்தைத் தூக்கி நிறுத்தி இருப்பதே தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, வெளி மாநிலத்திலும் தமிழ் வளர, தமிழ்ப் பண்பாடு சிறக்க, அதேநேரத்தில் தமிழ்நாட்டிலும் எல்லாத் துறைகளிலும் அது சிறப்பதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு நிதியும் ஒதுக்கித் தந்து இருக்கிறார்கள் என்பதை பெருமையுறக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பற்றிச் சொன்னார்கள். அதில் ஏற்கெனவே பணியாளர்களுடைய பணியைப் பற்றிய மதிப்பீடு நடந்து கொண்டு இருக்கிறது. காரணம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் — இந்த இரண்டிலுமே ஒரு சின்ன குறை; பலபேர் என்ன வேலை செய்கிறார்கள் என்பதே தெரியவில்லை. எனவே, அரசு எப்போது ஊதியம் கொடுக்கிறதோ, இந்த ஊதியம் கொடுக்கிறபோது, அவர்களுடைய ஊழியம் என்ன என்பதையும் பார்க்க வேண்டியது எங்களது கடமை. முதன்முறையாக இந்த இரண்டு நிறுவனத்திற்கும் தக்க அறிஞர்களைக் கொண்டு, இந்தப் பணி மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும், அதன் அடிப்படையிலே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நீங்கள் சொன்ன இந்த ஓய்வூதியம் முதலான மற்ற குறிப்புகள் கவனிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் முறைப்படி கலந்து ஆவன செய்யப்படும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 1970-லே தலைவர் கலைஞர் அவர்களால்தான் அது பதிவு செய்யப்பட்டது. 1968-லே அறிஞர் அண்ணா அவர்களால் அது அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்சி, பொறுப்பேறுவதற்கு முன்னால், 29 லட்சம்தான் அதற்கு ஒதுக்கப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.



ஆனால், இப்போது அந்த 29 லட்சம் ரூபாயை கடந்த 2 ஆண்டுகளில் 48 லட்சம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்த பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அதுமட்டுமல்ல. இப்போது வெள்ளி விழாவை யொட்டி 19½ லட்ச ரூபாய் தனித் திட்டங்களுக்கு வேறு தொகை ஒதுக்குகிறார். எனவே, 29 லட்சம் ரூபாயாக இருந்தது, 2 ஆண்டுகள் இறுதியில் 67½ லட்சம் ரூபாயாக உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால், இதைவிட தமிழுக்குத் தொண்டு செய்வதற்கு இன்னொருவர் பிறந்துதான் வரவேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டுவதிலே தவறு இருக்க முடியாது.

அதேநேரத்தில், உலகத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்னார் தொடங்கியது என்பதற்காகவோ, இவர்கள் செய்தார்கள் என்பதற்காகவோ, மாறுபட்ட கருத்தை என்றைக்கும் தமிழ் மனம் ஏற்றுக்கொள்ளாது; தலைவர் கலைஞர் அவர்கள் அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே உலகத் தமிழ்ச் சங்கத்தை ஆய்வு செய்கின்றபோதே என்ன சிக்கல் இருக்கிறது என்று சொன்னால், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செய்கின்ற அதே பணிகள் சிலவற்றை தமிழ்ப் பல்கலைக்கழகமும் செய்கிறது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** அதேநேரத்தில் உலகத் தமிழ்ச் சங்கமும் வேண்டுமென்று சொன்னால், மூன்றினுடைய பணிகளையும் வரையறுக்க வேண்டும். இப்போது முறைப்படி அது ஒரு Society என்ற முறையில் ஓர் அமைப்பாக, கூட்டுறவு அமைப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அந்தவகையில் அது கூட்டுறவு அமைப்பாகப் பதிவு செய்ய தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு முழு அனுமதி கொடுக்கப்பட்டு, விரைவில் அது பதிவு செய்யப்பட்டு, பிறகு முறைப்படி அதுவும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தது ஆசியவியல் நிறுவனம். அதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஏராளமான நூல்களை வெளியிடுகிறார்கள். இங்கே உலகத் தமிழ் மாநாடு பற்றிச் சொன்னார்கள்; அதை அரசே நேரடியாகக் கொண்டாட முடியாது. அதற்கு என்று International Association of Tamil Research என்ற உலகத் தமிழ் ஆய்வுக் கழகம் இருக்கிறது. அவர்களோடு பேசியிருக்கிறோம். அந்த அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையில்

நடத்துவதா, தமிழ்நாட்டில் நடத்துவதா, உலகத்தில் வேறு எங்காவது நடத்துவதா என்பதைக் கலந்துதான் முடிவெடுக்க வேண்டுமே தவிர இப்போது திட்டவட்டமாக இதைச் சொல்லமுடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பொதுவாகவே தமிழ்நாட்டில் அரசு இசைப் பள்ளிகள் இப்போது அதிக அளவில் வளர்ந்திருக்கின்றன. இந்த ஆட்சி தொடங்கியபோது மூன்றே மூன்று கல்லூரிகள்தான் இருந்தன. இப்போது திருவையாறு கல்லூரி, அதுபோக ஐந்து இடங்களில் இசைப் பள்ளிகள் உள்ளன. இன்னும் ஐந்து இசைப் பள்ளிகள் மேலும் வரவிருக்கின்றன. இடங்கள் என்னென்ன என்பதைப் பற்றி இறுதியில் சொல்கிறேன். எனவே எங்களுடைய நோக்கம் 29 மாவட்டங்களிலும் இது வரவேண்டும் என்பதுதான்.

அதேபோல், சவகர் சிறுவர் இல்லங்கள் என்று சொன்னால், ஏற்கெனவே இருந்தது மூன்றுதான். இந்த இரண்டாண்டுகளில் 13 ஆகி இருக்கிறது. இப்போது இன்னும் 5 அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே 18. அதுவும் 29-க்கு வரும்.

அதுபோல் அருங்காட்சியகங்கள் ஏற்கெனவே இருந்தது 12. நாங்கள் வந்தபிறகு பழனியில், சிவகங்கையில், திருவாரூரில், இப்போது மேலும் இரண்டு இடங்களில் என்று இப்படி ஒவ்வொரு தரப்பிலும் - அது பண்பாட்டுத் தொடர்பாக இருந்தாலும் சரி, கலைத் தொடர்பாக இருந்தாலும் சரி, வேறு வகையான பரிமாற்றத் தொடர்பாக இருந்தாலும் சரி, இந்த அரசு அனைத்து நிறுவனங்களையும் மேம்படுத்துவதற்கு ஏராளமான தொகையை ஒதுக்கியதன் விளைவுதான் இப்போது நிறுவனத் தன்மைகள் கூடி எங்கும் குறையில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் வளர்ச்சித் துறை என்பது உதவி இயக்குநர்களே இல்லாத துறை. ஒரு மாவட்டம் என்று. சொன்னால் ஒரே ஒருவர்தான் அந்த மாவட்டத்தில் தமிழை முழுவதுமாக வளர்க்க வேண்டும். அதுதான் பழைய நிலை. ஆனால் இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உதவி இயக்குநர், ஓர் உதவியாளர், ஓர் இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர் என்று 29 மாவட்டங்களுக்கும் அளித்து இந்தச் சிறப்பைச் செய்திருக்கிறார் என்று சொன்னால், 29 மாவட்டங்களிலும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் தம் கிளையை முறைப்படி விரிவாக்கியிருக்கிறது என்றுதான் பொருள். எனவே இந்த அடிப்படையில்தான் எங்களுடைய பணிகள் அமைகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.



அதேநேரத்தில் ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்னும் ஏராளமான அமைப்புகள் தமிழ் வளர்ச்சித் துறையில் இருக்கின்றன. அதே நிலைமை அறநிலையத் துறையிலும் இருக்கின்றது. என்றாலும் நேரத்தின் அருமை கருதி நான் அவற்றையெல்லாம் விரிவுபடுத்தவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பில் அவற்றை விரிவாகக் கொடுத்து இருக்கிறோம். மேலும் அடுத்தடுத்து வருகிற வாய்ப்புகளில் அவற்றை விரிவாகப் பேசமுடியும் என்ற வகையில் இப்போது என்னுடைய அறிவிப்புகளை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

முதலில் அறநிலையத் துறையில், பாடல் பெற்ற மற்றும் மங்களா சாசனம் பெற்ற 50 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்குச் செய்யப்படும். ஏனென்றால் பாடல் பெற்றிருக்கின்றன. ஆனால் திருப்பணிக்கான வாய்ப்பே இல்லாமல் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட 50 இடங்களில் குடமுழுக்குச் செய்யப்படும். பிறகு மங்களா சாசனம் மற்றும் பிரசித்தி பெற்ற சரித்திரப் புகழ்வாய்ந்த 20 திருக்கோயில்களில் நாதஸ்வரக் கலைஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்களின் பணியிடங்கள் ரூ. 2.40 இலட்சம் செலவில் உருவாக்கப் படும். ரூ. 21 இலட்சம் செலவில் புதிதாக ஓதுவார்கள் பணியிடங்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. ஏனென்றால், பல கோயில்களில் ஓதுவார்கள் இல்லை, அர்ச்சகர்கள் இல்லை என்ற குறை வருகிறது. எனவே 100 ஓதுவார் பணியிடங்களுக்கு ரூ. 21 இலட்சம் ஒதுக்கப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், இப்போது ஒருகால பூசை தொடர்பாக நான் சொன்னேன். 7768 கோயில்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு 1000 கோயில்களுக்கு ஒரு கால பூசைக்காக ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ. 25,000 நிதி ஒதுக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தொகுதியில் இருக்கின்ற நான்கு கோயில்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால், அந்தக் கோயில்களுக்கு அந்தத் தொகை வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல, திருக்கோயில்களுக்குச் செல்வோர் தங்குவதற்கு விடுதிகள் பல கோயில்களில் இல்லை. பெரிய கோயில்களில்கூட வழிச்செல்வோர் தங்க விடுதிகள் இல்லை. அந்தவகையில் 50 பெரிய கோயில்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருவேற்காடு போன்ற பெரிய இடத்தில் சைவத்திருமுறை ஆகமங்களுக்கான மற்றும் வைணவத் திவ்யபிரபந்தத்திற்கான ஒரு பெரிய மையம் அமைக்கப்பட்டு எல்லாவகையான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

திருவாரூர் சென்றவர்களுக்குத் தெரியும், பல்வேறு கோயில்களில் உள்ள சிலைகள் எல்லாம் தொகுக்கப்பெற்று, அங்கே உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஒன்று இயங்குகிறது. ஒருகாலத்தில் யாராலோ திருடப்பெற்று, இலண்டன் வரை சென்ற நடராஜர் சிலையும் திருப்பிக் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பாக அங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள நடராஜர் திரும்பி வந்திருக்கிறார். அது மட்டுமல்லாமல், வேறு சில கோயில்களிலும் உள்ள சிலைகள் பாதுகாப்பாக இல்லை. எனவே அந்தச் சிலைகளும் அங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இப்போது அந்தக் கட்டடம் போதுமானதாக இல்லை. ஏனென்றால் 2500-க்கும் மேற்பட்ட சிலைகள் இருக்கின்றன. கட்டட வசதி போதுமானதாக இல்லை என்ற முறையில் இப்போது நடப்பாண்டுக்கு ரூ. 20 இலட்சமும், ஒட்டு மொத்தத்தில் ரூபாய் 49.45 இலட்சமும் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கின்றன.

புதிதாக உருவாக்கப்படும் சில மண்டல மையங்கள்--உதவி ஆணையர் மையங்களைப் பொறுத்தவரையில் அரியலூர், திருவள்ளூர், நாமக்கல், கரூர், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை போன்ற 8 இடங்களில் 8 உதவி ஆணையர் மையங்கள் அமைக்கப்படும். அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் அவர்கள் பெருந்தன்மையோடு அந்த 8 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் 8 மாருதி சிருந்துகளையும் சேர்த்து வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வசதி இதுவரைக்கும் இல்லை, இப்போதுதான் இந்தத் துறை இந்த வசதியைப் பெறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே எல்லாக் கோயில்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அந்தக் கல்வெட்டுக்களைப் படி எடுத்திருக்கிறோம். மைசூர் நிறுவனம் படியெடுத்திருக்கிறது. நாமும் படி எடுத்திருக்கிறோம். ஆனால் அவை அச்சிடப்பட்டு வெளிவரவில்லை. கிட்டத்தட்ட 30,000 கல்வெட்டுக்கள்



அச்சில் வராமல் அப்படியே இருக்கின்றன. எனவே அந்த வரலாற்று உண்மைகள் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. யாருக்கும் போய்ச் சேர முடியாத நிலைமை. தலைவர் கலைஞர் அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அந்த 30,000 கல்வெட்டுக்களில் இந்த ஆண்டு 10,000 கல்வெட்டுக்களை அச்சிட்டுக் கொள்ளலாம் என்று அதற்கு 8.25 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைவிட முக்கியம் எங்களுக்கு 1076 இடங்களில் செயல் அலுவலர்கள் தேவை. ஆனால் இருப்பவர்கள் 487 பேர்தான். அதிலேயும் 108 பேர் பணிநீக்கம் காரணமாகவோ அல்லது பல்வேறு இடர்கள் காரணமாகவோ தற்போது பணியில் இல்லை. எனவே தற்போது இருக்கின்றவர்களை வைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் 3 அலுவலகங்களைக் கவனிக்கிறார்கள். ஒவ்வொரு அலுவலகத்திற்கும் 20 கோயில்கள் என்ற அளவில் பார்த்தால் ஒவ்வொருவரும் 60 கோயில்களைக் கவனிக்கிறார்கள். எனவே, பணிகளில் தேக்கம் ஏற்படுகின்றது என்பதனால் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்த பெரிய வாய்ப்பு இந்த முறை 3 ஆம் நிலை செயல் அலுவலர்கள் என்ற முறையில் 100 பேரைப் புதிதாகப் பணியமர்த்திக்கொள்ளலாம் என்றும், 4 ஆம் நிலை செயல் அலுவலர்கள் என்ற முறையில் 100 பேரைப் பணியமர்த்திக்கொள்ளலாம் என்றும், ஆக 200 பேர் இந்தத் துறைக்குப் புதிதாக பணியமர்த்திக் கொள்ளப்படவிருக்கிறார்கள். எனவே, எல்லா கோயில்களுக்கும் நிச்சயமாக ஒரு செயல் அலுவலர் இருப்பார். ஆகவே, இதிலே நேரடி கவனம் செலுத்தப்படும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல அல்ல, பதவி உயர்வுகள், 7 உதவி ஆணையர் பணியிடங்கள் துணை ஆணையர் நிலைக்கும், 16 முதல் நிலை செயல் அலுவலர் பணியிடங்கள் உதவி ஆணையர் நிலைக்கும், 7 இரண்டாம் நிலை செயல் அலுவலர் பணியிடங்கள் முதல் நிலைக்கும் என்று படிப்படியாக பல பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. அதுபோக தணிக்கை செய்கிறபோது, பல கோயில்களுக்குத் தணிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. வரவு-செலவுகள் எல்லாம் நடந்துவிடுகின்றன. ஆனால் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க தணிக்கை தேவை. அதற்கும் தலைவர் கலைஞர் அவர்கள் 50 தணிக்கை ஆய்வாளர்களை அமர்த்திக்கொள்வதற்கு 27.68 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக பழனி கோயிலைத்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அதுதான் இப்போது தலையாய வருமானத்தையும் தலையாய சிறப்பையும் பெற்றிருக்கிறது. பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோவிலில் ஏற்கெனவே இருக்கிற நிர்வாகத்தைத் கவனிக்க முடியாமல் கடும் நிர்வாகக் குறை ஏற்படுகிறது என்பதனால் அதற்கு மட்டும் புதிதாக ஒரு கூடுதல் ஆணையரை, Additional Commissioner என்ற முறையில் அமர்த்திக்கொள்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, அந்தக் கோயிலில் இருப்பவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள், திருப்பதி கோயிலில் என்னென்ன வசதிகள் உண்டோ அவை அத்தனையும் பழனி கோயிலிலும் செய்து தரப்படும் என்று அவர்கள் உறுதிபடுத்தி இருக்கிறார்கள். அதை நானும் இந்த அவையிலே உறுதிபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஏற்கெனவே சொன்னார்கள், ஆதிதிராவிடர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கோயில்களைப் பராமரிக்க நிதியுதவி தரவேண்டுமென்று. இந்த இடத்தில்தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெருந்தன்மை, கருணை வெளிப்படுகிறது. காரணம், கடந்த ஆண்டு ஆதிதிராவிடர்கள் பகுதி மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் எங்கள் ஆளுகையின்கீழ் இல்லாத 50 கோயில்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டது. இந்த முறையும் 50 கோயில்களுக்குத்தான் வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் 50 கோயில்கள் அல்ல, 100 கோயில்களுக்கு வைத்துக்கொள்ளுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலேயும் உறுப்பினர்களுடைய விண்ணப்பங்கள், முறையான அணுகுமுறைகள் நிச்சயமாக கவனிக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முக்கியமாக, இங்கே நான் சொல்ல விரும்புவது, திருக்கோயில் பணியாளர்களைப்பற்றி. எல்லோருக்கும் ஊதியம் கிடைத்துவிட்டது. அரசு ஊழியர்களுக்கெல்லாம் நிறைய கொடுத்திருக்கிறார்கள். திருக்கோயில் பணியாளர்களைப் பட்டினி போட்டிருக்கிறார்களே, அவர்கள் ஆன்மார்த்தமாக இந்தத் தொண்டுகளைச் செய்ய முடியுமா என்றெல்லாம், அந்தச் சொற்றொடரையெல்லாம் பயன்படுத்திக் கேட்டார்கள். இந்த அறிவிப்பை இந்த நேரத்திலே, திருக்கோயில் பணியாளர்களுக்கு — ஏனென்றால் குழுவினுடைய அறிக்கை வந்த இந்த நேரத்தில் — செயல்படுத்துவது என்னுடைய கடமையென்ற முறையிலே அதை நான் அறிவிக்க விரும்புகிறேன். திருக்கோயில் பணியாளர்களுடைய ஊதிய விகிதங்கள் 1-1-1990 முதல்தான் மாற்றியமைக்கப்பட்டது. இந்த இடத்தில் நீங்கள் கவனிக்க வேண்டும்.



அப்போது மாற்றியமைத்தவரும் இதே தலைவர் கலைஞர்தான்; இப்போது மாற்றி அமைப்பவரும் அதே தலைவர் கலைஞர்தான். இடைப்பட்ட காலத்தைப் பற்றி எண்ணாமல், அன்றும் அவரே, இன்றும் இவரே என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அன்றைக்கு ஊதியத்தை மாற்றியமைத்தவர், இன்றைக்கும் இந்தக் குழுவினுடைய அறிக்கைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஆய்வு செய்து அவர்களுக்கு ஏராளமான அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதிலே நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போது 10,000 ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாய் வரைக்கும் வருவாய்பெறும் முதல்நிலை அல்லாத திருக்கோயிலில் பணியாற்றுபவர்களுக்கும் இந்த ஊதிய உயர்வு வருகிறது. இதுவரைக்கும் அப்படியல்ல. ஓர் இலட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தால் மட்டும்தான், இதற்கு முன்னால் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்போது 10 ஆயிரம் ரூபாய் இருந்தால்கூட ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதுநிலை திருக்கோவில் பணியாளர்களுக்கு அதிகபட்ச ஊதிய விகிதம் ரூ.5,900-லிருந்து ரூ. 9,900 வரைக்கும் நீள்கிறது; நிகர ஆதாயம் 719 ரூபாய் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறைந்தபட்ச ஊதியம் ரூ. 1600-லிருந்து ரூ. 2,630-ஆக உயருகிறது, நிகர ஆதாயம் 306 ரூபாய். இவற்றுள் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு 11 நிலைகளில் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதமும் அடங்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதுநிலை அல்லாத திருக்கோவில் பணியாளர்களுக்கு அதிகபட்ச ஊதியம் ரூ. 2,200-லிருந்து 4,000 ரூபாய் வரைக்கும். அதேநேரத்தில் குறைந்தபட்ச ஊதிய விகிதம், ரூ. 1,100-லிருந்து ரூ. 1,660 வரைக்கும்.

பிற்பகல் 1-40

ஓர் இலட்சம் ரூபாய்க்கு மேல் 5 இலட்சம் ரூபாய் வரை வருமானம் பெறும் கோயில்களில் இருக்கிற ஊழியர்களுக்கு அதிகபட்ச ஊதியம் ரூ. 2 ஆயிரத்திலிருந்து ரூ. 3,200 வரை, குறைந்தபட்ச ஊதியம் ரூ. 1,100-லிருந்து ரூ. 1,660 வரை. 10 ஆயிரத்திற்கு மேல் உள்ள ஓர் இலட்சத்திற்கு உட்பட்ட கோவில்களுக்கு முதல் தடவையாக ஊதியம் உயர்த்தப்படுகிறது. அதிகபட்ச ஊதியம் ரூ. 600-லிருந்து உயர்ந்த கட்டத்தில் 1,250 ரூபாய் வரைக்கும் தரப்படுகிறது. இந்தத் திருத்திய சம்பள முறை, 1-7-1997 முதல் செயல்படுத்தப்படும். மேலும் திருத்திய ஊதியப்படி 1-7-1997-ல் பெறப்பட்ட அடிப்படை சம்பளம், அகவிலைப்படி ஒன்றாக இணைக்கப்படும்.

இவை நான்கு தவணைகளில் நிலுவைகளாக வழங்கப்படும். இதிலே ஒரு சிறப்பு, நாங்கள் கோரிக்கையை தலைவரிடத்திலே வைத்தபோது, 20 விழுக்காடு கூட்டித்தர வேண்டும் என்றுதான் கேட்டோம். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் அள்ளித் தந்திருப்பதால், இதிலே இன்னொரு திருத்தத்தையும் செய்து, 'நீங்கள் கேட்டது 20 விழுக்காடு, நான் தருவது 30 விழுக்காடு' என்று ஊதியத்தை உயர்த்தினார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே தலைவர் கலைஞர் அவர்கள் நிதி தந்ததோடு மட்டுமல்ல, அதைக் கருணையோடு தந்திருக்கிறார்கள் என்பதால்தான் அவர்கள் அந்த 'கருணை நிதி'யாகவே இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்ல வேண்டும். அதேநேரத்தில், அகவிலைப்படியாக அனைவருக்கும்—மேலே இருக்கின்றவர்களுக்கு - 60 ரூபாய், அடுத்தவர்களுக்கு 40 ரூபாய் என்று ஒரு பட்டியல் இடப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியல் விரைவில் முழுமையாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வாடகைப்படி 50 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது; நகர ஈட்டுப்படி அதேபோல உயர்த்தப்படுகிறது. இப்போது இந்த ஊதிய விகிதத்தைப் பெறுகின்ற எல்லோருக்கும் பல்வேறு வாய்ப்புகளை, வேறு குறைகள் இருக்குமானால், அமைப்புகளோடும், எங்களுடைய குழுவோடும் சேர்ந்துபேசி, அதற்கு சிறப்பான வாய்ப்புகளை செய்வோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக தமிழ் வளர்ச்சித் துறையிலே சில அறிவிப்புகள். அந்த அறிவிப்புகளில் நான் பெரிதும் விரும்புவது, தமிழ் வளர்ச்சித் துறைக்கு என்று ஏற்கெனவே அமைப்பு ரீதியாக பலவற்றைச் செய்து விட்டோம். இப்போது மேலும் சிலவற்றை விரிவுபடுத்த வேண்டும். அதிலே ஒன்று சாகித்ய அகாடமி என்று சொல்லப்படுகிற இலக்கியக் கழகம்; டெல்லியிலே இருக்கிறது. அது பல்வேறு நூல்களை மொழி பெயர்க்கிறது, சிறப்பு சேர்க்கிறது. ஆனால் கேரளாவில், மைசூர் போன்ற இடங்களில் இருக்கிறது. நம் மாநிலத்திற்கு இல்லை என்று உணர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள், அதற்கு இந்தப் பெயரைச் சூட்டுகிறார் — 'தமிழ்நாடு அரசு இலக்கிய சங்கப் பலகை' என்ற பெயரைச் சூட்டி — 'தமிழ்நாடு அரசு இலக்கிய சங்கப் பலகை' - தமிழ் சாகித்ய அகாடமி என்பதைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதேநேரத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் தமிழ் கற்க விரும்புகின்றன. தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் எந்தப் பல்கலைக்கழகம் ஒப்புக்கொள்கிறதோ, தமிழ் இருக்கையை வைத்துக்கொள்ள, அதற்கு எழுதி இசைவு பெற்றபிறகு, அவர்களும் ஒரு தொகையை ஒதுக்குகிறபோது, நாம் கண்டிப்பாக இலட்சக்கணக்கான ரூபாய்களை இருபதோ, பதினைந்தோ, பத்தோ, அந்தத் தொகையை கண்டிப்பாக ஒதுக்குவோம் என்று வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.





அதுமட்டுமல்லாமல், தமிழிலே இதுவரைக்கும் ஒரு பெரிய குறை. தொல்காப்பியம் கி.மு.500-ஐச் சேர்ந்தது; அதேநேரத்தில், நன்னூல் கி.பி. 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆக, 800 ஆண்டுகளாக புதிய தமிழ் இலக்கண நூலே வரவில்லை. எத்தனையோ மாற்றங்கள், மொழி நடையிலே ஏற்பட்டு இருக்கின்றன. குறைபாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன, நிறைகள் ஏற்பட்டிருக்கின்றன, புதிய வரவுகள் இருக்கின்றன, ஆனால் புதிய இலக்கண நூல் இதுவரைக்கும் உண்டாகவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கும் வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைத்து, புதிய இலக்கண நூலை இந்தப் பொற்காலத்தில் மீண்டும் உருவாக்குங்கள் என்று எங்களுக்குச் சுட்டிக்காட்டி இருக்கிறார்; எனவே புதிய இலக்கணக் குழு செயல்படும்.

ஐந்து மாவட்டங்களில் இசைப் பள்ளியைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. விழுப்புரம், கடலூர், கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் புதிய இசைப் பள்ளிகள் தொடங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, 5 மாவட்டங்களில் சவகர் சிறுவர் இல்லங்கள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. வேலூர், திண்டுக்கல், தருமபுரி, இராமநாதபுரம், தேனி ஆகிய 5 மாவட்டங்களில் புதிய சவகர் சிறுவர் இல்லங்கள் தொடங்கப்படும். இப்போது தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் கணினிகளுக்கு வகை செய்து, தமிழ்ப் பாரம்பரியம் மற்றும் ஏனைய பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவேடுகளாக—C.D. ROM என்ற முறையில் கொண்டு வருகிறோம்; இணையத்திலும் கொண்டு வருகிறோம். அதற்கென்று ரூ. 4 இலட்சத்தை தலைவர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற ஓலைச் சுவடிகளை நூல்களாக வெளியிட அனுமதி. கங்கைகொண்ட சோழபுரத்திலும், குற்றாலத்திலும் அருங்காட்சியகங்களுக்குக் கட்டடங்கள், தஞ்சாவூர் மாளிகையில் தமிழ் பண்பாட்டு பாரம்பரிய அருங்காட்சியகம், அதுபோக, வெளி மாநிலங்களான, மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம் ஆகியவற்றிற்கு தமிழ் ஆய்வு மையத்தை அமைத்துக் கொள்வதற்கு ஒவ்வொன்றுக்கும் 6 இலட்சம் ரூபாய் வீதம் 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

அருங்காட்சியகங்கள் ஏற்கெனவே 15 இருக்கின்றன. இந்தமுறை காஞ்சிபுரத்திலும், நாகப்பட்டினத்திலும், அருங்காட்சியகங்கள் தொடங்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பொதுவாகவே தலைவர் கலைஞர் அவர்கள், கலைஞர்கள்மீது மிகுந்த நம்பிக்கை வைப்பவர்கள். இதுவரைக்கும் ஆண்டுக்கு 300 பேர்களுக்குத்தான், நலிந்த கலைஞர்களுக்கு உதவி செய்தோம். இந்த முறை, தலைவர் கலைஞர் அவர்கள், 500 கலைஞர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். இதுதான் நீண்டகாலத்திற்குப் பின்னாலே வந்திருக்கிற முதன் முதல் அறிவிப்பு. எனவே, கலைஞர்களின் நிலை உணர்ந்த கலைஞர் ஆட்சியில் நலிந்த கலைஞர்களுக்கு நல்வாழ்வு கிட்டுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதுபோக, மொரீசியஸ் நாட்டிற்கு ஏற்கெனவே சென்று வந்தோம். ஒரு குழு சென்று வந்தது. அந்த அடிப்படையில் அங்கே இருக்கிற 215 தமிழ் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு, இங்கே பயிற்சி பெற்ற ஒரு தமிழ் பேராசிரியர் அனுப்பி வைக்கப்படுவார். அதுமட்டுமல்லாமல், அங்கே ஏற்கெனவே இசை பயில விரும்புகிறவர்களுக்கு இசைப் பயிற்சி தருவதற்கும் ஓர் இசை ஆசிரியர் அனுப்பி வைக்கப்படுவார்.

இதுபோக, மொரீசியஸ், டர்பன், மடகாஸ்கர், ரீ-யூனியன் போன்ற நாடுகளுக்கு, சென்னைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிக் கல்வியில் தமிழ் இலக்கிய பாடத்தை நடத்துவதற்கு முன்வந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, உலகமெங்கும் இருக்கிற தமிழர்களை இணைப்பதற்கு இப்போது அறிவியல் கருவிகள் வந்து விட்டாலும்கூட, அந்த அறிவியல் கருவிகளுக்கு அப்பால், தமிழகம் தன்னையும் வளர்த்துக் கொண்டு, உலகெங்கும் இருக்கிற தமிழர்களையும் ஆரத்தழுவி இரண்டு பணிகளையும் செய்யவேண்டும் என்பதால்தான், தமிழுக்கு இவ்வளவு பெரிய வளமான வாய்ப்புகளை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவார்கள். "தமிழ், தமிழர்களுக்குப் பேச உதவும் கருவி மட்டுமல்ல, அது தமிழர்களுக்கு வழிகாட்டியாகவும், ஆசானாகவும், துணைவனாகவும், இருக்கிறது. எனவேதான், அதற்கு ஆபத்து என்றால், தமிழகம் கொதித்து எழுகிறது" என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு காலகட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள், 1953-வது ஆண்டில், கல்லக்குடி, பழங்காநத்தம்





என்ற பழம் பெயரை மீட்பதற்காக, டால்மியாபுரம் என்ற அயற்பெயரை மாற்றுவதற்காக, தண்டவாளத்தில் தலை வைத்து படுத்து 6 மாதம் கடுங்காவல் பெற்றவர்கள் என்பதை நீங்கள் வரலாற்றில் உணர்வீர்கள். அன்றைக்கு அவர் களம் புகுமுன், அவர் பேசிய பேச்சை நான் இப்போது மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். "தரித்திரம் பிடித்தவர்களின் தளர்ந்து போன நரம்புகளைத் தொட்டுத் தம்புரா மீட்டுபவர்கள் அல்ல நாங்கள்; ஒடிந்துபோன உழைப்பாளியின் நரம்புக்கும், யானையின் தந்தத்திற்கும் ஒப்புமை பேசிக் கொண்டு இருக்கும் உருப்படாத கலாரசிகர்களும் அல்ல; நாங்கள் ஏழைகள், எங்கள் கழகமே ஏழைகளின் கூடாரம். மந்தமாருதம் வீச மந்தகாச இரவு வேளைகளில் மகிழ்ச்சியுடன் உலவிக் கொண்டு இருப்பவர்கள் அல்ல; புயலின் நடுவே உலவிக்கொண்டு இருப்பவர்கள்; என்றோ. ஒருநாள் எங்கள் தோழர்களில் எவரோ ஒருவர் பட்டுச்சட்டைப் போட்டு இருப்பதைப் பார்த்துவிட்டு, எங்களை டாட்டாவின் மகன் என்றோ, டால்மியாவின் மாப்பிள்ளை என்றோ, பிர்லாவின் பேரன் என்றோ தப்புக் கணக்கு போட்டு விடாதீர்கள்; நாங்கள் என்றும் ஏழைகளுக்கு, ஏழைத் தமிழர்களுக்கு இறுதிவரைக்கும் துணை இருப்பவர்கள்" என்று அன்றைக்குப் பேசினார்கள் 1953-லே. அதைத்தான் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு ஏழை பாமரத் தமிழர்களையும் தொட்டு, அதே நேரத்திலே உயர்மட்டத்திலே இருக்கிற அனைவரையும் அரவணைத்து உலகமெங்கும் இருக்கிற தமிழர்களையும் ஒருங்கிணைத்து, தமிழனுக்கு எங்கேனும் ஏதோ ஒரு மூலையிலே ஒரு தீங்கு என்றால், தட்டிக் கேட்கக்கூடிய ஒரு குரலாக, அதேநேரத்தில் இங்கேயிருக்கிற தமிழர்களுக்கு எல்லாவகையான நன்மைகளையும் செய்வதற்குத் தாராளமாக நிதி உதவியையும், அதே நேரத்தில் நேரடி உதவிகளையும் செய்யக்கூடிய ஓர் அரசாக, கருணை உள்ளம் படைத்த அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதால்தான், தலைவர் கலைஞர் அவர்களே இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் சொல்லி, நான் உரையை முடிக்க விரும்புகிறேன். "அதற்காக ஏதோ அந்தக் கொள்கையிலே நாம் விட்டுக்கொடுத்துவிட்டோம் என்றோ, தமிழ் கட்டாயமாக ஆக்கப்படாமல் போய்விடும் என்றோ யாரும் கருதத் தேவையில்லை. தமிழ் ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான், தமிழுக்காக இந்தத் துறையை அமைத்திருக்கிறோம். இந்த அமைச்சகத்தின் சார்பில், தமிழ் வளர்ச்சிப் பண்பாடு இவைகளை மாத்திரம் அல்லாமல், தமிழ் ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழ்நிலையையும் படிப்படியாக உறுதியாக இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் நாங்கள்

வெற்றி பெறுவோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உங்களுடைய பல்வேறு கோரிக்கைகளுக்கு நான் விடை சொல்லாவிட்டாலும், அனைத்தையும் நினைவில் வைத்துக் கொண்டு நிச்சயமாக அவற்றைச் செயல்படுத்துவோம் என்று கூறி,

“இன்றேனும் கலையட்டும் தூக்கம்
நாட்டில் இனியேனும் பெருகட்டும் ஆக்கம்
வாழ்வில் ஒன்றேனும் நல்லதையே செய்வோம்
தாயாம் உண்டமிழுக்கு பகைவர் தலை கொய்வோம்
அன்னை என்றேனும் அரியணையில் ஏறும் காட்சி
எப்படியும் வந்தேதான் தீரும்,
நாமே நன்றாய்ந்து தீதகத்துச் செல்வோம்
எந்த நாள்வரினும் கொள்கைதனில் வெல்வோம்''

என்று கூறி உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு விஷயம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் முக்கியமானதுதான். நான் ஒருவருக்குக் கொடுத்தால், பல பேர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) பின்னாலே திரும்பிப் பாருங்கள். (குறுக்கீடு) என்ன முக்கியமான விஷயம், சொல்லுங்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே 1965-ல் மாணவர் பருவத்தில் சட்டத்தை எரித்த மொழிப் போர் மாணவர்களாக இருந்து, ஜெயிலுக்குப் போன அருமை அண்ணன் பெ. சீனிவாசன், நா. காமராசன், கா. காளிமுத்து, கவிஞர் முத்துராமலிங்கம், நாவலவன் போன்றவர்களுக்கு, அந்தத் தியாகிகளுக்கு இன்னும் அரசு உதவித் தொகை வழங்கப்படவில்லை. இன்னும் அந்த certificate கொண்டு வாருங்கள், இந்த certificate கொண்டு வாருங்கள் என்று சொல்லி, காலதாமதப்படுத்துகிறார்கள். இது ஒரு மரியாதையான உதவித் தொகை. அது உடனே கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா'' என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன். அருமை அண்ணன் சீனிவாசன் அவர்கள் பல தடவை முதலமைச்சரையும், அமைச்சரையும் சந்தித்து மனு கொடுத்துக்கொண்டே இருக்கிறார். நானும்



பார்த்துக்கொண்டே இருக்கிறேன். கொஞ்சம் கருணை உள்ளத்தோடு மொழிப் போர் வீரர்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் பட்டீஸ்வரன் கோவிலில் தன்னார்வ நிறுவனங்களால் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடந்து வந்தது. அதற்கு இப்போது அனுமதி மறுக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். மீண்டும் அனுமதி வழங்க அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தத் தொகுதிக்கென்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறாரே, நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965-ல் சட்டத்தை எரித்து, 6 மாதங்கள் சிறை சென்ற எடப்பாடியைச் சார்ந்த துரை அங்கப்பன் என்பவர் உதவித் தொகைக்காக பல ஆண்டுகளாக விண்ணப்பித்து வந்தார்கள். இதே அவையிலே நான் மூன்று முறை இங்கே கேட்டிருக்கிறேன். அதைப்பற்றி அமைச்சரவர்கள் நல்ல முடிவினை அறிவிப்பாரா? அவர் தற்போது மிக தள்ளாத வயதிலே இருக்கிறார். (சிரிப்பு) அமைச்சரை அல்ல, துரை அங்கப்பன் அவர்களை, அவருக்கு விரைவில் உதவித்தொகை கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அதேபோல் எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவிற்காக ராஜகோபுரம் கட்டப்பட்டு, பாதியிலே தடைப்பட்டிருக்கிறது. அதற்கும் பொருள் உதவி அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, நான்காம் சங்கத்தை உருவாக்கிய குலாம் காசிர் நாவலரைக் குறித்தும், அதே நேரத்தில் மறைந்த கலைமாமணி கா.மு. செரீப் அவர்களுடைய குடும்பத்திற்கு,

மற்றவர்களுக்கு செய்வதைப் போல் நிதியுதவி செய்வது குறித்தும், நான் இங்கே குறிப்பிட்டிருந்தேன். அதைக் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது அறிவிப்பு செய்தால் தமிழகம் மகிழும். செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைவுச் சின்னங்கள் எழுப்புவது நேரடியாக என்னுடைய துறையில் வரவில்லை, இருந்தாலும் முறைப்படி கலந்துகொண்டு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மொழிப் போரைப் பற்றி நண்பர் தாமரைக்கனி நினைவுப்படுத்தியதால் ஒரு விளக்கத்தை இங்கே வைக்க விரும்புகிறேன். மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டு அரசியல் சட்டத்தை அல்லது அரசியல் சட்ட நகலைக் கொளுத்தி சிறைப்பட்டவர்களுக்கு, போராடியவர்களுக்கு எல்லாம் நிதி வழங்க வேண்டும் அல்லது ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று பெயர்களைக் குறிப்பிட்டு இங்கே சொன்னார். ஆனால் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின்போது மொழிப் போரில் ஈடுபட்டு அரசியல் சட்டத்தினுடைய நகல்தான்—நகலை ஒரு தாளிலே எழுதிக் கொளுத்தியதற்காக, இங்கே அமர்ந்திருக்கின்ற நம்முடைய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள், அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்தார். அவரும், அவரோடு சேர்ந்து அவர் உள்ளிட்ட 10 பேரும் இந்த அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஒரு நாள் அல்ல, அவையிலே உறுப்பினர்களாகவே இருக்கக்கூடாது என்று பதவியே பறிக்கப்பட்டார்கள். அப்போது தாமரைக்கனி எங்கே இருந்தார்? தமிழ் எங்கே இருந்தது என்பதை மனதிலே அவர் நினைவுபடுத்திக் கொண்டால் போதுமானது. பதில் சொல்லத் தேவையில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மொழிப் பற்றுடன் சட்டத்தை எரித்தோம். ஆட்சிக்கு வந்த பிறகு இந்திய அரசியல் சட்டத்தை மதித்தே நடக்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதிக நேரம் பேசியிருக்கிறீர்கள். அதன் பிறகும் என்ன விளக்கம்? அனுமதிக்க முடியாது.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

[1998 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 21,22,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

*பிற்பகல் 1-55*

### (ஆ) கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி - பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

[1998 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்;** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



1998 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.24,63,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை, பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

166. மானியக் கோரிக்கை எண் 12 — தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99 (தமிழ் - ஆங்கிலம்).

167. தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (தமிழ்).

[1998 மே 13

168. மானியக் கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99 (தமிழ் - ஆங்கிலம்).

169. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1997-98.

170. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1997-98.

171. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1997-98.

172. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை, 1997-98.



1998 மே 13]

## இணைப்பு I

*(306 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 12**

## தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம்

**கொள்கை விளக்கக் குறிப்பு—1998-99**

*"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே"*

என்று திருமூலர் திருமந்திரத்தில் செப்பியுள்ள அரிய கருத்தினை உள்ளத்தில் நிறுத்தி தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிறுவனங்களையும், அன்றாட வாழ்வின் சுழற்சியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு அமைதி நல்கும் இடங்களாக அமைந்துள்ள திருக்கோவில்களையும், அவற்றின் சொத்துக்களையும் பாதுகாக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

### இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பும் நிர்வாகமும்

தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களும், இந்து சமய மற்றும் சமண நிறுவனங்களும், அறக்கட்டளைகளும் தமிழகத்தை ஆண்டு வந்த மன்னர்களாலும் அடுத்தடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய முகமதிய மன்னர்களாலும், ஆங்கிலேய அரசாலும் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், அவற்றின் பராமரிப்புக்கென நிரந்தர உறுதுணையாக நிலங்களை மானியமாக அளித்து, அன்றாட நிருவாகத்தினை மேற்பார்வையிட்டனர். நம் முன்னோர்கள் திருக்கோவிலை நிலைக்களனாக வைத்து ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தி செம்மையாக செயல்பட்ட வரலாற்றினை உத்திரமேரூர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், பல்வேறு சட்டங்களின் மூலமாக இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகத்தை ஓரளவு கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன், அவர்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்தோர் இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பிற்கு என மானியமாக நிலங்கள் அளித்ததை உறுதிப்படுத்தி இனாம் சாசனங்கள் வழங்கி இந்து சமய அற நிறுவனங்களின் சொத்துரிமையை நிலைநாட்டினர்.

[1998 மே 13

திருக்கோயில்களின் அன்றாட நிருவாகம், சொத்துக்கள் பராமரிப்பு ஆகியவற்றைக் கண்காணிக்க 1927 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம், "இந்து சமய அறநிலைய வாரியம்" அமைக்கப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகம் ஒருமுனைப்படுத்தப்பட்டது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்து சமய அறநிலைய வாரியம் கலைக்கப்பட்டு 1951 ஆம் ஆண்டு 19 ஆவது சட்டத்தின்படி இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஏற்படுத்தப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் அமைப்பு சீர்படுத்தப்பட்டது. அறங்காவலர்களின் செயல்பாட்டை மேற்பார்வையிட வட்டாரக் குழுக்களும் அமைக்கப் பட்டன. திருக்கோயில்களின் நிருவாகத்தில் முழுமையான பலனுள்ள நிருவாகக் கட்டுப்பாட்டினை இச்சட்டம் கொண்டுவர இயலாததால் குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் 1959 ஆம் ஆண்டின் 22 ஆவது சட்டமாக, தற்போதுள்ள சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு 1968 ஆம் ஆண்டின் 19 ஆவது சட்டத்தின்படி வட்டாரக் குழுக்களை நீக்கிவிட்டு முழுப்பொறுப்புகளையும் ஆணையரிடமும் அவரது சார்நிலை அலுவலர்களிடமும் ஒப்படைத்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட அரசு மாற்றங்களுக்கேற்ப பல சட்டத் திருத்தங்கள் 1976, 1978 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்டன.

இந்த அரசு பதவி ஏற்றதும், இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகத்தைச் சீர் செய்யும் முதற்கட்டப் பணியாக 1991 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு, செயற்படாமலிருந்த திருக்கோயில் நிருவாக வாரியத்தையும், மாவட்டக் குழுக்களையும் கலைத்து விட்டு இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகம் அரசு அலுவலர்களான ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் வகையில், 1996 ஆம் வருடத்திய 39 ஆவது திருத்தச்சட்டம் இயற்றப்பட்டு 09-12-1996 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இச்சட்டத்தின்படி மாநில அளவில் அரசுக்கும், ஆணையருக்கும் ஆலோசனை கூறி வழி நடத்திட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் பின்வரும் பெருமக்கள் அங்கம் வகிக்கின்றனர்:—



1998 மே 13]

**அலுவல் சார் உறுப்பினர்கள்:**

| | | |
|---|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | : | தலைவர் |
| மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | : | துணைத் தலைவர் |
| தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலர் | : | உறுப்பினர் |
| இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் | : | உறுப்பினர்-செயலர் |

**அலுவல் சாரா உறுப்பினர்கள்:**

தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி.

தவத்திரு திருப்பனந்தாள் மடாதிபதி, திருப்பனந்தாள்.

தவத்திரு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை.

தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.

தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார், பேரூர்.

திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை.

திருமதி உமாமகேஸ்வரி, மேயர், திருநெல்வேலி.

திரு. கருமுத்து கண்ணண், மதுரை.

**சிறப்பு அழைப்பாளர்:**

தருமபுர ஆதீனகர்த்தரின் பிரதிநிதி.

இவ்வாலோசனைக் குழுவின் முதல் கூட்டம் 04-03-1997 அன்றும், இரண்டாம் கூட்டம் 30-12-1997 அன்றும் நடைபெற்றன. இக்கூட்டங்களில் திருக்கோயில் நிலங்கள், காலி மனைகள் மற்றும் கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் மூலம் திருக்கோயில் வருவாயைப் பெருக்குதல், தமிழகத் திருக்கோவில்களின் கலைச் சிறப்புகள், நித்தியப்படி பூசைகள், திருவிழாக்கள், முதலானவற்றை ஒலி, ஒளிப்பதிவு செய்தல், திருமுறை ஓதுவார்கள், அர்ச்சகர்கள், நாதசுர இசைக் கலைஞர்கள் ஆகியோர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி அளித்தல், ஒருகால பூசைத்

திட்டம் மற்றும் திருக்கோயில் நகைகள் மற்றும் சிலைகள் பாதுகாப்பு, திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனையை நடைமுறைப்படுத்துதல், குத்தகை நிவாரணச் சட்டத்திலிருந்து திருக்கோயில் நிலங்களுக்கு விலக்களித்தல், கல்வெட்டாய்வுக் குழு அமைத்தல், திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க வணிகவளாகம் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட நிதி ஆதாரத்தைப் பெருக்குதல் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்களைக் கூடுதலாக நியமித்தல் ஆகிய இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

1996 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட 29 மாவட்டக் குழுக்களின் ஆலோசனைப்படி ரூபாய் பத்து லட்சத்திற்குக் குறைவான வருமானம் உள்ள திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**சமய நிறுவனங்களின் எண்ணிக்கை:**

இத்துறையின் நிர்வாகத்தின்கீழ் சமண சமயம் மற்றும் இந்து சமய அறநிறுவனங்கள் 36,253 உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 34,213 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடத்தைச் சார்ந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | **36,253** |

மேலே கண்ட சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன:





| | எண்ணிக்கை |
|---|---|
| **1. பட்டியலைச் சாரா நிறுவனங்கள்** | |
| சட்டப்பிரிவு 49-ன்படி ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறைவாய் வருவாய் உள்ளவை | 33,314 |
| **2. பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள்** | |
| (i) சட்டப்பிரிவு 46 (i)-ன்படி ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல் ரூபாய் இரண்டு லட்சத்திற்குக் கீழ் ஆண்டு வருவாய் உள்ளவை | 2,529 |
| (ii) சட்டப்பிரிவு 46 (ii)-ன்படி ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து லட்சத்திற்குக் கீழும் ஆண்டு வருவாய் உள்ளவை | 302 |
| (iii) சட்டப்பிரிவு 46(iii)-ன்படி ரூபாய் பத்து லட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருவாய் உள்ளவை | 108 |

இந்து சமய நிறுவனங்கள், இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின் படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் உள்ள திருக்கோயில்கள், அறக்கட்டளைகள் மற்றும் சமய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பசலி ஆண்டு 1406-ல் வரப்பெற்ற வருவாய், சுமார் 102 கோடி ரூபாய் ஆகும்.

**அறநிலையத் துறையின் நிர்வாக அமைப்பு:**

இத்துறையின் தலைவர் ஆணையர் ஆவார். இதன் நிர்வாகம் 10 இணை ஆணையர் மண்டலங்களாகவும், 21 உதவி ஆணையர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு மேலாண்மைப் பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆணையர் அலுவலகத்தில் நிர்வாகத்தில் ஆணையருக்கு உதவிட ஒரு கூடுதல் ஆணையரும், ஓர் இணை ஆணையரும், ஒரு துணை ஆணையரும், ஓர் உதவி ஆணையரும் உள்ளனர். சிறப்பு

காவலர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், திருக்கோயில் பாதுகாப்பினைத் தீவிரப்படுத்தவும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரும், மூன்று ஆய்வர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருப்பணிகள் தொடர்புடைய பணிகளுக்கு உதவிட ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு செயற் பொறியாளரும், ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும் அடங்கிய ஒரு குழு உள்ளது. தணிக்கை சம்மந்தப்பட்ட பணிகளைக் கவனிக்க ஒரு தலைமைத் தணிக்கை அலுவலரும், வழக்குகளைக் கண்காணிக்க ஓர் உதவி ஆணையரும், அத்துடன், திருக்கோயில் நிலங்களைக் கண்காணித்து முறையாகப் பராமரிக்க வருவாய்த் துறையில் இருந்து மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவரும் உள்ளனர். இத்துறையின் கணக்குப் பிரிவில் ஆணையருக்கு உதவியாக கருவூலத் துறையிலிருந்து ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலரும், ஓர் உதவிக் கணக்கு அலுவலரும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இத்துறையின் நிர்வாகத்தில் ஆணையர், சார்நிலை அலுவலர்கள், பொறியாளர்கள், தணிக்கை ஆய்வர்கள், அமைச்சுப் பணியாளர்கள், காவல் துறைப் பணியாளர்கள் ஆகியோர் மொத்தம் 2,190 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

**திருக்கோயில் செயல் அலுவலர்கள்:**

இத்துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் சட்டப்பிரிவு 45-ன் படி திருக்கோயில்களின் ஆண்டு வருமான வரம்புக்கேற்ப கீழ்க்கண்ட ஏழு நிலைகளில் 487 செயல் அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்:

| | |
|---|---|
| இணை ஆணையர் நிலை | 8 |
| துணை ஆணையர் நிலை | 5 |
| உதவி ஆணையர் நிலை | 12 |
| செயல் அலுவலர் நிலை-1 | 66 |
| செயல் அலுவலர் நிலை-2 | 117 |
| செயல் அலுவலர் நிலை-3 | 172 |
| செயல் அலுவலர் நிலை-4 | 107 |

**திருமடங்களின் நிர்வாகம்:**

தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 17 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிருவாகத்தில் உள்ள சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன்





பேரில் திருமடங்களின் நிருவாகக் குறைபாடுகளைக் களையவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும், ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டல தணிக்கை அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இந்தத் திருமடங்களும், கட்டளைகளும் முறையாக, குறிப்பிட்ட காலமுறை இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு நிர்வாகம் சீர்படுத்தப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் நிலங்கள் — கட்டடங்கள்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் அடங்கியுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| நிலத்தின் தன்மை. | பரப்பளவு (ஏக்கரில்.) |
|---|---|
| நன்செய் | 2,08,224.56 |
| புன்செய் | 2,64,430.88 |
| மானாவாரி | 18,761.90 |
| மொத்தம் | **4,91,417.34** |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 20,530 வீடுகள், 22,629 கட்டடங்கள், 73,320 வீட்டு மனைகள் ஆகியன வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

நிலக் குத்தகைத் தொகை நிலுவை தொடர்பான வழக்கினை மேற்கொள்ள 11 வருவாய் நீதி மன்றங்கள் இயங்கி வருகின்றன. இவைகளின் மூலம் 28,764 வழக்குகள் ரூ. 2,700.73 இலட்சம் நிலுவைக்காக 1,206 திருக்கோயில்களால் தாக்கல் செய்யப்பட்டு 13,431 வழக்குகளில் தீர்வு காணப்பட்டு ரூ. 830.80 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. குறைவான கட்டட வாடகை பெற்று வரும் இடங்களை ஆய்வு செய்து நியாய வாடகை நிர்ணயம் செய்ய நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இக்குழுக்கள் திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

மனை வாடகை நிலுவைகளை வசூலிக்கவும், குறைந்த அளவு வாடகை நிர்ணயங்களை நியாயமாக நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நியாய வாடகை நிர்ணயத்தை ஏற்றுக் கொள்ளாதோரைத் திருக்கோயில் மனைகளிலிருந்து வெளியேற்றத் தேவையான சட்டத் திருத்தங்கள் தமிழ்நாடு மாநகர குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தில் செய்யப்பட்டு உள்ளன. அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோரையும் குத்தகை முடிவுற்ற குத்தகைதாரர்களை வெளியேற்றவும், அவர்களின் மீது குற்ற நடவடிக்கை தொடர்ந்து தண்டனை பெற்றுத் தரவும் 1996 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர்கள்:**

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் சுமார் 50,000 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் முதுநிலைத் திருக்கோயில்களில் 4,703 பணியாளர்களும், முதுநிலையல்லாத திருக்கோயில்களில் 43,100 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு 12 ஊதிய விகிதங்களிலும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு 18 ஊதிய விகிதங்களிலும் தற்போது ஊதியம் வழங்கப்படுகிறது.

**(அ) திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் பத்து இலட்சம் கொண்டதான முதலீடு ஏற்படுத்தப்பட்டு மாதந்தோறும் ரூ.20 வீதம் செலுத்தும் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய சந்தா தொகை வட்டியுடன் அவருக்கு வழங்கப்படுவதுடன் ரூ.500 ஒருமித்த தொகையும் மேற்படி நிதி முதலீட்டின் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது.

**(ஆ) திருக்கோயில் பணியாளர் நலத்திட்டம்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் மூல நிதி உருவாக்கப்பட்டு அதிலிருந்து





கிடைக்கின்ற வட்டித் தொகை ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 10,000 குறைவாக உள்ள ஆலயங்களில் மாதச் சம்பளம் ரூ.400க்குக் குறைவாக வாங்கும் பணியாளர்களுடைய ஊதிய நிலுவைகளைக் கொடுக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை 1,630 பணியாளர்கள் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு ரூ.27.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(இ) ஓய்வூதியத் திட்டம்:**

திருக்கோயில்களில் பணியாற்றி மூப்பின் காரணமாக பதவி ஓய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்படி திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வு பெற்ற ஓதுவார், அர்ச்சகர், வேதபாராயணர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அரசால் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 622 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன:

**(i) அகவிலைப்படி:**

ஒவ்வொரு முறையும் அரசு ஊழியர்களுக்கு எத்தனை சதவீதம் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படுகிறதோ அதே அளவு அகவிலைப்படி உயர்வு முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**(ii) வீட்டு வாடகைப்படி:**

அரசு ஊழியர்களுக்கு இணையாக முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கும் 01-04-1993 முதல் வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(iii) நகர ஈட்டுப்படி:**

01-04-1986 முதல் கீழ்க்கண்டவாறு நகர ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

[1998 மே 13

| அடிப்படைச் சம்பளம் | சென்னை மற்றும் அதனைச் சுற்றி 32 கிலோமீட்டர் தூரம் வரை அனுமதிக்கப்பட்ட தொகை | கோவை, மதுரை மாநகராட்சியைச் சுற்றி 16 கிலோமீட்டர் தூரம் வரை | இதர ஊர்களுக்கு அனுமதிக்கப்பட்ட நகர ஈட்டுப்படி விபரம் |
|---|---|---|---|
| ரூ.699 வரை | ரூ.40.00 | ரூ.25.00 | இல்லை |
| ரூ.700 அதற்கு மேல் | ரூ.55.00 | ரூ.35.00 | இல்லை |

**(iv) கருணைத் தொகை:**

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் பொங்கல் திருநாளை முன்னிட்டு கருணைக் கொடை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு கருணைக் கொடையாக ரூ.625 வழங்கப்பட்டது.

**(v) மருத்துவப்படி:**

மாதமொன்றுக்கு ரூ.50 மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது.

**(vi) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:**

இத்திருக்கோயில்களில் 10 ஆண்டுகள் வரை பதவி உயர்வு இன்றி ஒரே பதவியில் பணிபுரிபவர்களுக்கு தேர்வு நிலையும், இருபது ஆண்டுகள் ஒரே பதவியில் உள்ளவர்களுக்கு சிறப்பு நிலையும் வழங்கி ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

**(vii) குடும்ப நல நிதி:**

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.30,000 (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்கப்படுகிறது.

**(viii) விடுப்புச் சலுகைகள்:**

இத்திருக்கோயில் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி விடுப்புச் சலுகைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன:



1998 மே 13]

**(1) ஈட்டிய விடுப்பு:**

1/11 என்ற கணக்கீட்டின் அடிப்படையில் 120 நாட்கள் வரை சேமித்து வைக்கலாம்.

**(2) ஒப்படைப்பு விடுப்பு:**

(1) ஆண்டொன்றுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புச் செய்து பணம் பெறலாம்.

(2) ஆண்டொன்றுக்கு ஒரு முறை ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்வதுடன் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பில் இருந்து 15 நாட்கள் ஒப்படைப்பு செய்து சம்பள படிகளைப் பெறலாம்.

**(3) மருத்துவ விடுப்பு:**

180 நாட்கள் (பணிக்காலம் முழுமைக்கும்).

**(4) பெண் பணியாளர்கள் மகப்பேறு விடுப்பு:**

60 நாட்கள்.

**(ix) சிறப்பு ஊதியம்:**

ஒவ்வொரு ஆண்டிலும் திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரம் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒரு மாத சம்பளம் அல்லது ரூ.1,300 (ரூபாய் ஆயிரத்து முன்னூறு மட்டும்) இதில் எது குறைவோ அது சிறப்பு ஊதியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(x) இடைக்கால நிவாரணம்:**

மேற்படி திருக்கோயில் பணியாளர்கள் பெறும் சம்பளத்துடன் மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் ஒட்டு மொத்தத் தொகையும், 10% அடிப்படை ஊதியமும் இடைக்கால நிவாரணமாக வழங்கப்படுகிறது.

[1998 மே 13

### (xi) பட்டப்படிப்பிற்கு சிறப்பு ஊதிய உயர்வு:

திருக்கோயில் பணியாளர் அவர்களது அடிப்படைக் கல்வித் தகுதியைக் காட்டிலும் கூடுதலாகப் படித்து பட்டம் பெற்றபின் ஒரு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

### (xii) திருப்பணி மற்றும் திருக்குடமுழுக்குச் சிறப்பு ஊதியம்:

திருக்கோயில் திருப்பணி மற்றும் குடமுழுக்கின்போது சிறப்புப் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்க திருப்பணி குடமுழுக்கு வசூல் நிதியிலிருந்து ஒரு மாதச் சம்பளம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படுகிறது.

### (xiii) திருமணக் கடன்:

திருக்கோயில்களில் பணிபுரியும் ஆண் பணியாளர் அல்லது பணியாளர்களின் ஆண் வாரிசுகளின் திருமணத்திற்கு ரூ.6,000/-மும், பெண் பணியாளர் அல்லது பணியாளர்களின் பெண் வாரிசுகளின் திருமணத்திற்கு ரூ.10,000/- மும் திருமணக் கடன் வழங்கப்படுகிறது.

## முதுநிலையல்லாதத் திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள்:

### 1. அகவிலைப்படி:

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும்போது இந்தப் பணியாளர்களுக்கும் கீழ்க்கண்ட விகிதப்படி அகவிலைப்படி உயர்வு வழங்கப்படுகிறது:

i) ரூ. 1 இலட்சம் முதல் ரூ. 5 இலட்சம் வரை வருவாயுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு

அ) ரூ.400/- வரை அடிப்படை சம்பளம் பெறும் பணியாளருக்கு 1-1-1996 முதல் உயர்வு செய்ய வேண்டிய அகவிலைப்படி ரூ.20/-

ஆ) ரூ.400/-க்கு மேல் அடிப்படை சம்பளம் பெறுவோருக்கு 1-1-1996 முதல் வழங்க வேண்டிய அகவிலைப்படி ரூ.30/



1998 மே 13]

ii) ரூ. 5/- இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சத்திற்குள் வருவாயுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு

அ) ரூ. 500/- வரை அடிப்படை சம்பளம் பெறுவோருக்கு 1-1-1996 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி ரூ. 20/-

ஆ) ரூ.500/-க்கு மேல் அடிப்படை சம்பளம் பெறுவோருக்கு 1-1-1996 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி ரூ. 30/-

இப்பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் கிராமப்படி வழங்கப்படுகிறது.

| அடிப்படைச் சம்பளம் | வீட்டு வாடகைப்படி | நகர ஈட்டுப்படி | கிராமப் படி |
|---|---|---|---|
| ரூ.400/- வரை | ரூ.40/- | ரூ.25/- | ரூ.20/- |
| ரூ.400/-க்கு மேல் | ரூ.50/- | ரூ.35/- | ரூ.25/- |

### (iii) கருணைக் கொடை:

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் பொங்கல் திருநாளை முன்னிட்டு முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கும் கருணைக் கொடை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு (1998) ரூ.525/- வழங்கப்பட்டது.

### (iv) மருத்துவப்படி:

இப்பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50/- மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது.

### (v) குடும்பநல நிதி:

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு ரூ.30,000/- வழங்கப்படுகிறது.

[1998 மே 13

(vi) **விடுப்புச் சலுகைகள்:**

இப்பணியாளர்களுக்கு கீழ்க்காணும் விடுப்புச் சலுகைகள் வழங்கப்படுகின்றன:

**1) ஈட்டிய விடுப்பு:**

*1/11 என்ற கணக்கீட்டின் அடிப்படையில்*
*120 நாட்கள் வரை சேமித்து வைக்கலாம்.*

**2) ஒப்படைப்பு விடுப்பு:**

1) ஆண்டொன்றுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்து பணம் பெறலாம்.

2) ஆண்டுக்கு ஒரு முறை ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்து பயன் பெறுவதுடன் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பிலிருந்து 15 நாட்கள் ஒப்படைப்பு செய்து பலன் பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**3) மருத்துவ விடுப்பு:**

*180 நாட்கள் (பணிக்காலம் முழுமைக்கும்)*

**4) பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு:**

*60 நாட்கள்*

**(vii) சிறப்பு ஊதியம்:**

திருவிழா மற்றும் விசேட காலங்களில் கூடுதல் நேரம் (ஒரு வருடத்தில் 60 மணி நேரம்) பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை மாத சம்பளம் அல்லது ரூ.1,100/- (ரூபாய் ஆயிரத்து நூறு மட்டும்) இதில் எது குறைவோ அது சிறப்பு ஊதியமாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(viii) இடைக்கால நிவாரணம்:**

மேற்குறிப்பிட்ட திருக்கோயில் பணியாளர்கள் பெறும் சம்பளத்துடன் மாதம் ஒன்றுக்கு ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்) மற்றும் அடிப்படை ஊதியத்தில் 10% இடைக்கால நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.



1998 மே 13]

**(ix) பட்டப்படிப்பிற்கு சிறப்பு ஊதிய உயர்வு:**

தங்கள் பணிக்குத் தேவையான அடிப்படைக் கல்வித் தகுதியைக் காட்டிலும் கூடுதலாகப் பட்டப் படிப்புப் படித்துத் தேர்ச்சி பெற்றிருப்பின் அத்திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓர் ஊதிய உயர்வு (increment) சிறப்பு ஊதியமாக வழங்கப்படுகிறது.

**(x) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:**

10 ஆண்டுகளுக்கு மேல் பதவி உயர்வு இல்லாமல் ஒரே பதவியில் பணிபுரிந்து வருபவர்களுக்கு தேர்வு நிலையும், அதேபோன்று 20 ஆண்டுகள் ஒரே பதவியில் பணிபுரிவோருக்கு சிறப்பு நிலையும் வழங்கி ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

**(xi) திருப்பணி மற்றும் குடமுழுக்குக் காலங்களில் சிறப்பு பணியாற்றுபவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்குதல்:**

திருப்பணி முடிந்து குடமுழுக்கு, மகாசம்ப்ரோட்சணம் போன்றவை செய்யப்படும்போது கூடுதல் நேரம் பணி செய்யும் திருக்கோயில் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து சன்னதிகளிலும் திருப்பணி வேலை முடிந்தவுடன் அவர்களுக்கு ஒரு மாத சம்பளம் திருப்பணி சம்பந்தமாக வசூலிக்கப்படும் நிதியிலிருந்து மட்டும் வழங்கப்படுகிறது.

**(xii) திருமணக் கடன் வழங்குதல்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் ஆண் பணியாளர் அல்லது பணியாளர்களின் ஆண் வாரிசுகளின் திருமணத்திற்கு ரூ.6,000/-மும், பெண் பணியாளர் அல்லது பணியாளர்களின் பெண் வாரிசுகளின் திருமணத்திற்கு ரூ.10,000/-மும் திருமணக் கடன் வழங்கப்படுகிறது.

திருக்கோயில் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கவும், தற்போது செயல்பாட்டில் உள்ள நலத் திட்டங்களை மேம்படுத்தவும் நால்வர் குழு நியமிக்கப்பட்டு அக்குழுவின் அறிக்கை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருப்பணியும் பழுது பார்த்தலும்:**

ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா நடத்தப்படுதல் வேண்டும். திருப்பணிகள்

[1998 மே 13

மேற்கொள்ளப்பட வேண்டிய திருக்கோயில்கள் பொதுவாகக் கீழ்க்கண்டவாறு மூன்று வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன:

(i) சைவ மற்றும் வைணவ பெரியோர்களால் பாடல் பெற்ற புகழ்பெற்ற திருக்கோயில்கள்;

(ii) உடனடியாகத் திருப்பணி மற்றும் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதும், 12 ஆண்டுகாலம் முடிந்து குடமுழுக்கு விழா நடத்தப்பட வேண்டியதும் ஆகிய திருக்கோயில்கள்;

(iii) வரலாற்றுப் புகழ்மிக்கதும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததுமான திருக்கோயில்கள்.

பொதுமக்கள் நன்கொடை, அந்தந்த சமய நிறுவனத்தின் நிதி, உபரிநிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம், அரசு மானியம், பொது நல நிதி, திருக்கோயில் மேம்பாட்டு நிதியின் (ரூ.5 கோடி திட்டம்) வட்டி, கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணித் திட்ட நிதியின் (ரூ.1 கோடி திட்டம்) வட்டி மற்றும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதி ஆகிய நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில்களின் திருப்பணி, கட்டுமானம் மற்றும் இதர பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அ) அரசு மான்யம்:**

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு மான்யமாக ரூ.45.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அத்தொகை தமிழ்நாட்டிலுள்ள திருப்பணி செய்யப்பட வேண்டிய முக்கியத் திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

**ஆ) பொது நலநிதி:**

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 97-ஆம் பிரிவின் கீழ் பெறப்படும் நன்கொடைகள், இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, அத்தொகை திருக்கோயில்கள் திருப்பணி, பழுது பார்ப்புப்பணி மேற்கொள்ள நிதி உதவி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு வழங்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 20 திருக்கோயில்களுக்கு ரூ.21.22 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி ஆணையரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.



1998 மே 13]

**இ) ஆலய மேம்பாட்டுத் திட்டம்:**

போதிய நிதி வசதிமிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியைக் கொண்டு ரூபாய் ஐந்து கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு இவ்வைப்பு நிதியின் வட்டியிலிருந்து 20 விழுக்காட்டுத் தொகை, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்றதும், சரித்திரம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவ நிகழ்ச்சிகள் சார்புடைய திருக்கோயில்களுக்கும், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி மற்றும் இதர கட்டுமான மராமத்து பணிகளுக்காக மான்யமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 60 திருக்கோயில்களுக்கு ரூ.2,92,44,899/- வழங்கப்பட்டுள்ளது.

**ஈ) கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனத்தில் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு இதன் வட்டியிலிருந்து, வசதி குறைந்த மற்றும் நிதி தேவையுடைய கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி அறநிலையத் துறை ஆணையர், பழனி திருக்கோயிலின் செயல் அலுவலர், பழனி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் அல்லது தக்கார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுவால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குழு நிதி தேவைப்படுகின்ற திருக்கோயில்களின் பெயர்ப் பட்டியலைத் தேர்வு செய்து அரசின் முன் அனுமதி பெற்று ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.25,000/- வீதம் திருப்பணி வேலைகளுக்காக மான்யமாக வழங்கி வருகிறது. இந்த நிதி பழனி திருக்கோயில் நிர்வாகத்தில் வைத்து பராமரிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1,008 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.1,68,12,700/- வழங்கப்பட்டுள்ளது.

**உ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:**

திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி, கட்டுமானப் பணி மற்றும் இதர பழுது பார்த்தல் பணிகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு ஆன்மீகப் பெரியோர்களும், பொது மக்களும் மனமுவந்து ரூ.595 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளனர். இந்நிதி பல்வேறு வைப்பு நிதிகளாக முதலீடு செய்யப்பட்டு ரூ.348 இலட்சம் வட்டி பெறப்பட்டது. பல்வேறு

[1998 மே 13

திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், ஒரு காலபூசைக்காகவும், கன்னியாகுமரி திருக்கோயில்களின் நிர்வாகச் செலவுகளுக்காகவும் இதுவரை ரூ.540 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள நலிவடைந்த இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் வராத 50 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.25,000 வீதம் வழங்கப்பட்ட நிதி உதவியும் இதில் அடங்கும். தற்போது இந்நிதியில் ரூ.118 இலட்சம் வைப்பு நிதியாக உள்ளது.

## வேத ஆகம பயிற்சி நிலையம்:

வேதம், ஆகமம், இந்து சமய தத்துவம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் தமிழ்நாடு வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அரசால் ஏற்படுத்தப்பட்டு திருச்சி மாவட்டம், கும்பரசம்பேட்டையில் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக வேத ஆகம பயிற்சி வகுப்பு ஆறுவார காலத்திற்கு திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் தகுதிவாய்ந்த மாணவர்கள், ஆக மொத்தம் 51 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய மாணவர்களைச் சேர்த்து பயிற்சி நடத்தப்படவுள்ளது.

## உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்:

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் 65,723 உலோகத் திருமேனிகள் உள்ளன. அவற்றுள் 39,139 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் துறை சட்டத்தின் படி பதிவு செய்ய வேண்டியவை. இதுவரை 27,076 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 12,063 உலோகத் திருமேனிகளை தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட திருவாரூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இதுவரை 2,776 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ளன.

## கள்வர் எச்சரிக்கை மணி:

திருக்கோயில்களிலுள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளைப் பாதுகாக்க திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள் பொருத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 136 திருக்கோயில்களில்



1998 மே 13]

இவ்வெச்சரிக்கை மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 201 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## திருக்கோயில் பாதுகாப்புப்படை:

திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காக, 1,000 இரண்டாம் நிலை காவலர்கள் மற்றும் 3,000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டு இதுவரை காவல் துறையினரால் 1,000 இரண்டாம் நிலை காவலர்களும் 2,821 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2,632 திருக்கோயில்களில் இப்பாதுகாப்புப் படையினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 179 முன்னாள் இராணுவத்தினர் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர். சிறப்புக் காவலர்களின் பணிகளை கண்காணிக்கவும், பாதுகாப்பினைத் தீவிரப்படுத்தவும் ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், மூன்று காவல்துறை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருக்கோயில் பாதுகாப்புப் படையினரின் கடமை மற்றும் பணிகள் குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## திருக்கோயில்களால் நடத்தப்படும் நிறுவனங்கள்:

திருக்கோயில்களில் ஆன்மீகப் பணிகள் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் அதே நேரத்தில் அடித்தள மக்களின் நலன்களுக்காக திருக்கோயில்கள், கல்வி, மருத்துவம், இசை, ஆகமம், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் நலன்கள் ஆகிய சமூக நலப்பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன.

## சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து:

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் மற்றும் சுதந்திரத் திருநாள் ஆகிய நாட்களில் ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் சரிசமமாகப் பங்குபெறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய சுதந்திரப் பொன்விழாவினை ஒட்டி 15-08-1997 முதல் 31-08-1997 முடிய 1107 திருக்கோயில்களில் நடந்த பொது விருந்தில் அனைத்துத் தரப்பு மக்கள் ஏறத்தாழ 6.30 இலட்சம் பேர் பங்கேற்றனர்.

[1998 மே 13

**கருணை இல்லம்:**

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி, கலைப் பயிற்சி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975-ல் தொடங்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. அதனை 50 சதவீதமாக வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் 1977-78 ஆம் ஆண்டிலும், அதற்குப் பிறகும் அரசு மான்யம் வழங்கப்படவில்லை. திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன. இந்த கருணை இல்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும், கூடுதலாக, தேவைக்கேற்ப கருணை இல்லங்களை கோயில்களில் தொடங்கவும் நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதற்காகும் செலவில் 50 சதவீதத்தை இனிமேல் அரசு ஏற்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார். அதற்கேற்ப நடப்பு ஆண்டில் மேலும் புதியதாக 13 திருக்கோயில்களில் 9 சிறுவர் இல்லங்களும், 4 சிறுமியர் இல்லங்களும் தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போது மொத்தம் 43 கருணை இல்லங்கள் உள்ளன. அவற்றில் 1204 சிறார்கள் தங்கியுள்ளனர்.

**திருக்கோயில்களில் இலவசத் திருமணம்:**

அரசின் கொள்கைக்கேற்ப இந்து சமயத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சார்ந்த வசதியற்றவர்கள் திருமணத்திற்காக திருக்கோயில்களின் நிதியிலிருந்து திருமணம் ஒன்றிற்கு ரூ.3,000 வரை செலவிடப்படுகிறது. இவ்வகையில் 729 திருமணங்கள் இதுவரை நடந்துள்ளன. மேலும் 271 மணமக்களுக்கு இலவச திருமணங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

**பக்தர்களுக்கு வசதிகள்:**

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தில் 14 திருக்கோயில்களில் 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர் அறைகள் கட்டப்பட்டுள்ளன. முக்கியத்துவம் வாய்ந்த சில திருக்கோயில்களில் இறைவனுக்கு படைக்கப்பட்ட பிரசாதங்களை இலவசமாக பக்தர்களுக்கு வழங்கும் முறை வழக்கத்தில் உள்ளது.

பக்தர்களின் காலணிகளைப் பாதுகாப்பதற்காக மருதமலை, திருச்செந்தூர், மதுரை, திருப்பரங்குன்றம், திருத்தணி, வடபழனி மற்றும்



1998 மே 13]

காரமடையிலுள்ள கோயில்களின் காலணிகள் பாதுகாப்பு கட்டணமாக இணைக்கு 25 காசு வசூலிக்கப்படுகிறது. சில திருக்கோயில்களில் இதற்குக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

**தமிழ் வழிபாடு:**

தமிழ்நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களில் வடமொழியில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட்டு வந்தது. இந்த அர்ச்சனை முறையை தமிழிலும் செய்திடவும், அம்முறையை மிக வெற்றிகரமாகச் செயல்படுத்திடவும், அம்முறையை நெறிப்படுத்தவும் தக்க ஆலோசனைகள் வழங்கிட சைவம் மற்றும் வைணவ ஆன்மீகப் பெரியோர்களையும், தமிழில் புலமைப்பெற்ற பெருமக்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைக்கலாம் என அரசு உத்தேசித்து அதன்படியே கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | : தலைவர் |
| 2. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலாளர் | : துணைத் தலைவர் |
| 3. | இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் | : உறுப்பினர்/ செயலர் |
| 4. | திரு. முத்துக்கண்ணப்பர் | : தலைவர்/ புலவர் குழு |
| 5. | புலவர் திரு. சு. இளங்கோவன், தலைமை ஆசிரியர், திரு. தண்டபாணி ஓரியண்டல் பள்ளி. | : உறுப்பினர் |
| 6. | முனைவர் திரு. வை. இரத்தினசபாபதி | : உறுப்பினர் |
| 7. | முனைவர் திரு. சுப. அண்ணாமலை | : உறுப்பினர் |
| 8. | பெரும்புலவர் திரு. பா. நமச்சிவாயம், எம்.ஏ. | : உறுப்பினர் |
| 9. | முனைவர் திரு. தெ. ஞானசுந்தரம் | : உறுப்பினர் |
| 10. | திரு. வெங்கடவரதன் | : உறுப்பினர் |
| 11. | முனைவர் திரு. அ. அறிவொளி | : உறுப்பினர் |

[1998 மே 13

12. புலவர் திரு. கோ. சாரங்கபாணி : உறுப்பினர்
13. திரு. அருணை வடிவேல் முதலியோர் : உறுப்பினர்
14. திரு. த. அமிர்தலிங்கம், ஆசிரியர், திருக்கோயில் இதழ். : உறுப்பினர்
15. முனைவர் திரு. இரா. செல்வகணபதி : உறுப்பினர்

இக்குழு முதற்கட்டமாக விநாயகர், திருமால், சிவபெருமான், முருகவேள், அம்மன், துர்காதேவி, காளியம்மன் ஆகிய கடவுள்களுக்கு உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட 108 போற்றிகளை ஏற்றுள்ளது. மேலும் 1,008 போற்றிகள் தயாரிப்பது பற்றியும், பிற கடவுளர்களுக்கு போற்றிகள் தயாரிப்பது பற்றியும் பரிசீலித்து வருகிறது.

**கல்வெட்டு ஆய்வு:**

தமிழகத் திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் வரலாற்றுச் செய்திகளைப் பறைசாற்றும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. அவற்றை எல்லாம் அறநிலையத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, செய்திகளைப் புத்தக வடிவில் வெளியிட கீழ்க்கண்ட அறிஞர் பெருமக்களைக் கொண்ட ஓர் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது:

1. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : தலைவர்
2. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலாளர் : துணைத் தலைவர்
3. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் : உறுப்பினர்/ செயலர்
4. திரு. நடனகாசிநாதன், இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறை, தரமணி, சென்னை. : உறுப்பினர்
5. முனைவர் திரு. இரா. நாகசாமி, இயக்குநர் (ஓய்வு), தொல்பொருள் ஆய்வுத் துறை. : உறுப்பினர்
6. குடந்தை திரு. என். சேதுராமன், இயக்குநர், இராமன் & இராமன் நிறுவனம், கும்பகோணம். : உறுப்பினர்



1998 மே 13]

7. மருத்துவர் இரா. கலைக்கோவன், திருச்சிராப்பள்ளி. : உறுப்பினர்
8. செல்வி நளினி, பேராசிரியர், சீத்தாலட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி. : உறுப்பினர்
9. புலவர் திரு. செ. இராசு, தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். : உறுப்பினர்
10. முனைவர் திரு. கோ. விஜயவேணு-கோபால், மதுரை : உறுப்பினர்
11. திரு. கிருஷ்ணமூர்த்தி (தினமலர்) : உறுப்பினர்
12. திரு. நெல்லை நெடுமாறன் : உறுப்பினர்

**தலவரலாறு:**

திருக்கோயில்களின் சிறப்புகள் மற்றும் பெருமைகளை விளக்கும் வகையில் திருக்கோயில்களின் தல வரலாறு நூல்கள் வெளியிடப்படுகின்றன. 303 திருக்கோயில்களின் தல வரலாறும், 47 திருக்கோயில்களின் கையேடுகளும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில் பற்றியும் தல வரலாறோ அல்லது கையேடுகளோ வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**புத்தொளிப் பயிற்சி:**

01-07-1997 முதல் திருக்கோயில்களில் ஓராண்டு காலம் புத்தொளி பயிற்சி வகுப்புகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. 24 திருக்கோயில்களில் ஓராண்டுகாலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு 390 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்களுக்கு ரூ. 200 வீதம் ஊக்கத் தொகையும், பயிற்றாளர்களுக்கு ரூ. 700 சிறப்பூதியமும் தரப்படுகிறது.

**குறுகிய கால புத்தொளிப் பயிற்சி:**

திருக்கோயில்களில் ஆகம, சாத்திர விதிகளின் படி வழிபாட்டு முறைகளைச் சிறப்புடன் நிகழ்த்திட குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயம், மதுரை அருள்மிகு மதனகோபாலசுவாமி ஆலயம் ஆகியவற்றில் குறுகிய காலப்

[1998 மே 13

புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடந்து ஆலய செயல் அலுவலர்கள், ஆய்வர்கள், அருச்சகர்கள், ஓதுவார்கள் உள்ளிட்ட 484 ஆலய ஊழியர்கள் பயன் பெற்றுள்ளனர். தமிழகத்தில் உள்ள பிற முக்கிய ஆலயங்களிலும் குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் அத்திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள் 150 பேரை நியமனம் செய்ய ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது.

**நாதசுர இசைக் கலைஞர்களை புதிதாகப் பணியில் அமர்த்தல்:**

பல திருக்கோயில்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் நாதசுரம் இசை முழங்கவில்லை. நிதி வசதியற்ற 26 ஆலயங்களில் நாதசுரம், தவில், தாள இசைக் கலைஞர்களை முறையே ரூ. 1,000, ரூ. 750 ரூ. 500 வீதம் மாத ஊதியம் வழங்கிப் புதிதாகப் பணியில் அமர்த்துவது குறித்த முன்மொழிவு அரசின் ஆய்வில் உள்ளது.

**தமிழ் இசைப் பள்ளி:**

8 சைவத் திருக்கோயில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 7 வைணவத் திருக்கோயில்களில் திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகளும், 6 திருக்கோயில்களில் நாதசுர பயிற்சிப் பள்ளிகளும் 1997-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் உள்ளூர் மாணவர்களுக்கு ரூ. 300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு ரூ. 600 வீதமும் மாதமொன்றுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

**முடிவுரை:**

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்கிறார் திருநாவுக்கரசர். அவர்தம் திருவாக்கிற்கிணங்க சீரிய செயல் திட்டங்களை மேற்காட்டியவாறு திறம்பட வகுத்து, அறநிலைய ஆட்சித்துறை நாளும், நற்பணிகளைச் சிறப்புற பணியாற்றுதல் நமது தலையாய கடமை என்பதை இவ்வரசு உணர்ந்து செயலாற்றுகிறது.



1998 மே 13]

## இணைப்பு II

*(306 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 51**

## தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு - 1998—99**

மொழி, மக்கள் தம் உள்ளத்துத் தோன்றும் உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவது. மொழி மனித சமுதாயத்தின் வாழ்வோடும், வளர்ச்சியோடும் இரண்டறக் கலந்து நிற்கிறது. அச்சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கான செய்திப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவது. மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமன்றி அது பேசும் சமுதாயத்தின் இனத்தின் பண்பாட்டுப் பலகணி - கலாச்சாரக் கண்ணாடி. மொழியும், நாகரிகமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டின் மொழிவளத்தைப் பொறுத்தே அமைவதாகும். மொழி வளமுடையதாயின் அதனைப் பேசும் மக்கள், நாகரிகமும், நல்ல பண்பாடும் உடையவர்களாக விளங்குவர். மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படைகளாகின்றன.

ஒரு மொழியின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வது அம்மொழி கொண்டுள்ள மொழிப் பயன்பாட்டை (Language Use) அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. ஒரு மொழி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் அன்றாட இயக்கத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்குப் பயன்படுகிறது என்பதையும் அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய அன்றாட இயக்கத்திற்கு எந்த அளவிற்கு அந்த மொழியைச் சார்ந்துள்ளனர் என்பதையும் பொறுத்துமே அம்மொழியின் பயன்பாட்டின் தன்மையும், இன்றியமையாமையும் அறியப்படுகின்றன. இதிலிருந்து அம்மொழி கொண்டுள்ள வளர்ச்சியும் வெளிப்படுகிறது. மொழி வளர்ச்சிக்கு 1. அரசு, 2. மக்கள், 3. அறிஞர்கள் எனும் முத்தரப்பினரின் ஆதரவு தேவைப்படுகிறது. இவ்வகையில் அரசுப் பணிகளிலும், சமுதாயக் கடமைகளிலும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது.

ஆட்சிமொழித் திட்டம் 1956 இல் சட்ட வடிவம் பெற்று 1957-இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு மொழிப் பயன்பாட்டில் முழு

[1998 மே 13

நிறைவெய்த, தமிழ் மொழியை விரிவான முறையில் ஆட்சியிலும், ஆவணங்களிலும் அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்துதல், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு ஆகிய துறைகளும் பிரிவுகளும் ஓர் அமைப்பாகச் செயற்படும் வகையில் தலைமைச் செயலகத்தில் 1984 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறையின் கீழ் இயங்கும் அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்
ஆ) மொழிபெயர்ப்பு இயக்ககம்
இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
உ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**தொன்மரபு காப்பன**

ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்
எ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்
ஏ) அரசு அருங்காட்சியகங்கள்

**வளர்கலை ஊக்குவன**

ஐ) கலை - பண்பாட்டு இயக்ககம்

1) அரசு கலை - கைவினைத் தொழிற் கல்லூரிகள்
2) அரசு கட்டட - சிற்பக் கல்லூரி
3) அரசு இசைக் கல்லூரிகள்
4) இயல் இசை நாடக மன்றம்
5) சவகர் சிறுவர் இல்லம்
6) ஓவிய நுண்கலைக் குழு



1998 மே 13]

**1998-99 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ***2059.*** பொதுப்பணிகள் | | | |
| 01 அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 051 கட்டுமானம் | .. | 0.30 | 0.30 |
| 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 23.00 | 23.00 |
| ***2202.*** பொதுக்கல்வி | | | |
| 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் | | | |
| 102 பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | 20.00 | 133.00 | 153.00 |
| 05 மொழி வளர்ச்சி | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 19.47 | 148.74 | 168.21 |
| 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 0.03 | 30.00 | 30.03 |
| 800 ஏனைய செலவு | 20.50 | 667.06 | 687.56 |
| ***2205. 00*** கலையும் பண்பாடும் | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 33.43 | 27.27 | 60.70 |
| 101 நுண்கலைக் கல்வி | 171.66 | 271.56 | 443.22 |
| 102 கலை-பண்பாட்டை வளர்த்தல் | 70.36 | 234.90 | 305.26 |
| 103 தொல்பொருளியல் ஆய்வு | 28.62 | 220.13 | 248.75 |
| 105 பொது நூலகங்கள் (அரசு கீழ்த் திசை ஓலைச் சுவடி நூலகம்) | 8.30 | 23.15 | 31.45 |
| 107 அரும்பொருட் காட்சியகங்கள் | 87.18 | 213.62 | 300.80 |
| 800 ஏனைய செலவு | 0.01 | 0.01 | .. |
| மானியக் கோரிக்கை எண் 51 மொத்தம் | 459.55 | 1992.74 | 2452.29 |

[1998 மே 13

## (அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1968 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும் ஆட்சி மொழியாகிய தமிழ் மொழிப் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சிக்குரிய பிற பணிகளும் இத்துறையின் தலையாய பணிகளாகும்.

### தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

2. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்துத் தலைமைச்
செயலகத்தைத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளரும்,
துறைத் தலைமை அலுவலகங்கள் - மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்,
தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ்
வளர்ச்சி இயக்குநரும், மாவட்டச் சார்நிலை அலுவலகங்களை மாவட்டத்
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர்.

3. தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சி மொழியாவதற்குத் தடையாகத்
தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் குறைவாக உள்ளமையைக் கண்டறிந்து,
தலைமைச் செயலகத்தில் 65 விழுக்காடு தமிழ் தட்டச்சுப் பொறிகள்
இருக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக 25 விழுக்காடு அளவிலேயே
தமிழ் தட்டச்சுப் பொறிகள் உள்ளன என்பதை ஆய்வின் மூலம் தெரிந்து,
ரூ.50 இலட்சம் செலவில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பெற்று
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் பிரித்து
வழங்கப்பெற்றுள்ளன. மேலும், இவ்வாண்டு 500 தமிழ்த் தட்டச்சுப்
பொறிகள் வாங்கித் துறைத் தலைமை அலுவலகங்களுக்கு வழங்க ரூ.40
இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஆங்கில விசைப்பலகைகளை மாற்றித்
தமிழ்த் தட்டச்சுப் பொறிகளாக மாற்ற ரூ.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. வணிக நிறுவனங்கள், கடைகள் முதலானவற்றின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுவதற்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அடங்கிய சொற்பட்டியல் 10,000 படிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

### ஆட்சிச் சொல்லகராதி

5. ஆட்சிச் சொல்லகராதிக்கு இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்
பட்டுள்ளன. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான
சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. ஆட்சிச்



1998 மே 13]

சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு வெளியிடப்பெற்று அனைத்துத்
துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளுக்கு அவ்வத்
துறைகளில் வழங்கப்படும் அலுவலக ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து
அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களைத் தரும் முறையில் 1996 வரை 89
சிறப்புச்சொல் துணையகராதிகள் வெளியிடப்பெற்றுள்ளன.

### மாதிரி வரைவுகள் - குறிப்புகள் கையேடு

6. அரசுத் துறை அலுவலகங்களில் நாள்தோறும் தமிழில் எழுதப்படும்
முக்கிய குறிப்புகள் - வரைவுகளின் மாதிரிகளைக் கொண்ட கையேடு
ஒன்று தயாரிக்கப்பெற்று வெளியிடப் பெற்றது. இக்கையேடு அலுவலக
நடைமுறையில் மிகவும் பயன்பட்டு வருகிறது.

### ஆட்சி மொழிக் கருத்தரங்குகள்

7. ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்ய
மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் 1984 ஆம் ஆண்டு
முதல் நடத்தப்பெறுகின்றன. 1997 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை
48 இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன.

1997-98 ஆம் ஆண்டில் ஈரோடு, தூத்துக்குடி, காஞ்சிபுரம், விழுப்புரம்,
வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில்
ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில்
8 மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தத்
திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

8. தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும்
வகையில் 23 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள்
வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. முதல் பரிசு ரூ. 5 ஆயிரமும்,
இரண்டாம் பரிசு ரூ. 3 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூபாய் ஆயிரமும்
எனப் பணப் பரிசுகள் வழங்கப்பெற்றன. பரிசுக்குரிய நூல்களைப்
பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்குப் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பெறுகிறது.
1996 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களில் 56 சிறந்த நூல்களுக்கு 1.80
இலட்சம், 15-1-1998 இல் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில்
வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு முதல் பரிசுக்குரிய நூல்களின் 23
தலைப்புகள், 15 தலைப்புகளாக மாற்றியமைக்கப்பெற்று முதற்பரிசு
ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசு ரூ.5,000/-மும், மூன்றாம் பரிசு ரூ.2,000/
-மும் என உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

[1998 மே 13

## சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

9. நிலையான மதிப்பும், தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நூல் ஆசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகின்றது. இத்திட்ட விதிகளுக்கிணங்க வல்லுநர் குழு தெரிவு செய்து பரிந்துரைக்கும் கையெழுத்துப் படிகள் நிதியுதவிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி நூல் ஆசிரியர்களுக்குப் பெரும் அளவாக ரூ.8,000 அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50% என்னும் அளவில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1998 பிப்ரவரித் திங்கள் வரை மொத்தம் 555 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## அரிய நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

10. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ.20,000/- அல்லது நூல் அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1998 பிப்ரவரித் திங்கள் வரை 36 நூல்களுக்கு நிதியுதவி வழங்கப்பெற்றுள்ளது.

## சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்

11. 1996-97 ஆம் ஆண்டில் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப் பெற்றுள்ளது. பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகைசெய்கிறது. இதன்படி வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ.25,000/- அல்லது அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெறும். 1998 மார்ச்சுத் திங்கள் வரை 5 நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

12. இந்திய நாட்டு விடுதலைக்காக நீண்டகாலச் சிறைவாசம் ஏற்றவரும் - தலை சிறந்த தமிழ் இலக்கியவாதிகளில் ஒருவருமான - வேலூர் க. ராகவன் ஜமதக்னி அவர்கள், இந்திய மொழிகளிலேயே, முழு அளவில் முதன் முதலாகத் தமிழில் எழுதியுள்ள காரல்மார்க்சின் "மூலதனம்" மற்றும் "மிகை மதிப்பு" ஆகிய நூல்களை ஆறாயிரம் பக்கங்கள் கொண்ட புத்தகங்களாக வெளியிடுவதற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியளிக்கப்படுகிறது.



1998 மே 13]

## தமிழிருக்கை நிறுவுகை—ஆராய்ச்சிப் பணிகள்-பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல்-நிதியுதவித் திட்டம்

13. பிற மாநிலப் பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும், தமிழ்ச் சங்கங்களும் தமிழிருக்கை நிறுவவும், தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழில் பகுதி நேரப் பட்டயச் சான்றிதழ் வகுப்பு நடத்தவும் அரசு மானியம் வழங்கி வருகிறது. 1997 ஆம் ஆண்டில் சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குத் தமிழ் இலக்கியக் களஞ்சிய மூன்றாம் தொகுதி வெளியீட்டிற்காக ரூ. 2,15,737/-ம், தமிழியல் தொடர்பான திட்டப் பணிகளுக்காக 1997-98 ஆம் ஆண்டிற்கென ரூ.20 இலட்சமும், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்குத் தமிழாராய்ச்சித் தொடர்பான திட்டப் பணிகளுக்காக 1997-98 ஆம் ஆண்டிற்கென ரூ. 10 இலட்சமும், கருநாடக மாநிலம் ஹூப்ளியிலுள்ள தமிழ்ச் சங்கத்திற்கு ரூ. 80,000/- மும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கட்டடங்களைப் புதுப்பிக்கவும், நூலகத்திற்கும், ரூ.45 இலட்சமும், புதுதில்லி தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.10 இலட்சமும், ஜம்மு பல்கலைக்கழகத்திற்குத் தமிழ் வகுப்புகள் நடத்த ரூ.20,000/-மும், மானியமாக அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பெற்றுள்ளன. யுனெஸ்கோ கூரியர் வெளியீட்டிற்காக தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு ரூ.80,000/- மும் மற்றும் மைசூரிலுள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனத்திற்கு ரூ.15,000/- மும் வழங்கப்பட்டுள்ளன.

## மாநில/மாவட்ட அளவில் தமிழில் போட்டிகள் நடத்துதல்

14. இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள ஆர்வத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ் மொழித் தேர்ச்சியை ஊக்குவிக்கும் முறையிலும், அறிவியல் தமிழின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் வகையிலும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் வாயிலாக மாவட்ட/மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை அரசுச் சார்பு நிதி நிறுவனம் ஒன்றில் வைப்புத் தொகையாகச் செலுத்தி அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றவற்றை 1998-99 ஆம் ஆண்டு முதல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[1998 மே 13

## தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புத் திட்டம்

15. தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதுகாறும் 24 தொகுதி நூல்கள் வெளிவந்துள்ளன. 1936 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு நூல்களின் விளக்கம், பொருள் அகர வரிசை எழுதும் பணி நடைபெற்று முதல் தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தொகுதிக்குரிய ஆசிரியர் குறிப்பு அகர வரிசைப்படி புத்தகங்கள் பட்டியலிடல் ஆகிய தொகுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

16. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ. 400க்கு மேற்படாத 58 அகவை முடிந்த தமிழறிஞர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதி பெற்றவர்களாவர்.. நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பெறுவோர்க்குத் திங்கள்தோறும் ரூ.500 வீதம் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 452 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர்.

## தமிழ் மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம்

17. தமிழ் மொழி, பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள் தோறும் வழங்கப்பெறும் நிதியுதவி, படிப்படியாக உயர்த்தி அமைக்கப்பட்டு வந்துள்ளது. இத்தொகையை 15-8-1997 முதல் ரூ. 3,000 ஆக உயர்த்தியும் அத்துடன் மருத்துவப் படியாக ரூ.15-ம் சேர்த்து ரூ.3,015 ஆக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 15-8-1997 முதல் மொழிக் காவலர்களின் மரபுரிமையினருக்கு இத்தொகை ரூ. 750 லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தியும் மருத்துவப்படியாக ரூ. 15-ம் சேர்த்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அத்துடன் மரபுரிமையருக்கும் இலவசப் பேருந்துப் பயணச் சீட்டு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1609 மொழிக் காவலர்களும் 327 மொழிக் காவலர்களின் மரபுரிமையினரும் ஆக 1936 பேர்களுக்கு நிதியுதவி ஒப்பளிக்கப்பெற்றுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மொழிக் காவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

## வரலாற்று வரைவுத் திட்டம்

18. முறையான தமிழ் நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல் பழங்காலம், சங்க காலம்



1998 மே 13]

பகுதி-1 (அரசியல்), சங்க காலம் பகுதி-2 (வாழ்வியல்), பல்லவர்-பாண்டியர் காலம் (முதல் பகுதி), பல்லவர்-பாண்டியர் காலம் (இரண்டாம் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகளும், நான்காம் தொகுதியாகிய "சோழப் பெருவேந்தர் காலம்" நூலின் முதல் பகுதியும் வெளியிடப்பட்டுள்ளன. சோழப் பெருவேந்தர் காலம் இரண்டாம் பகுதியையும் பிற்காலப் பாண்டியர் - விசயநகர மூவேந்தர் காலம், பெருவேந்து அமையாக் காலம், வெள்ளையர் ஆட்சிக் காலமும் விடுதலைக்குப் பின்னரும் (இரு பகுதிகள்) ஆகிய மூன்று தொகுதிகளையும் விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்பு மிக்க இவ்வரலாற்று வரைவுத் திட்ட வல்லுநர் குழுவை இவ்வரசு திருத்தியமைத்துப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அமையும் செலவினங்களுக்கு ரூ. 5 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விழாக்களும் விருதுகளும்

### திருவள்ளுவர் விருது

19. திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவர் ரூ.20,000 பணப் பரிசும், தகுதியுரையும் பெறுவார். இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு முதலாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டிற்கான விருது பேராசிரியர் முனைவர் இரா. சாரங்கபாணி அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது

20. ஒவ்வோர் ஆண்டும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ்விருது வழங்கப்பெறுகிறது. இத்திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. விருது பெறுபவர் ரூ.20,000 பணப் பரிசும் தகுதியுரையும் பெறுவார். 1997 ஆம் ஆண்டிற்குரிய விருது முனைவர் (திருமதி) சரளா இராஜகோபாலன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

### திரு.வி.க. விருது

21. சிறந்த எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் பெயரால் விருது வழங்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. விருது பெறுபவர் ரூ.20,000

பணப்பரிசும், தகுதியுரையும் பெறுவார். 1997 ஆம் ஆண்டிற்குரிய விருது திரு. மா.சு. சம்பந்தன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

## பாரதியார் விருது

*22.* இவ்விருது 1997 ஆம் ஆண்டு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாரதி நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவரைத் தெரிவு செய்து ரூ.20,000 விருதுத் தொகை வழங்கப்பெறுகிறது. 1997 ஆம் ஆண்டிற்கான இவ்விருது கவிஞர் மதிவண்ணன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

## தமிழறிஞர்கள் நூல்களை நாட்டுடைமையாக்கல்

*23.* பாரதியார், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. 1997 ஆம் ஆண்டு மறைமலை அடிகளாரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகையாக ரூபாய் 30 இலட்சமும், கனகராயர் குடும்பத்திற்கு ரூ. 30,000 மும் மொத்தம் ரூ. 30,30,000 வழங்கப்பெற்றது.

*24.* கடந்த ஆண்டுகளில் தமிழ்ப் பேரறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு.வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி, அவரது வழித்தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்படும்.

*25.* தமிழர் வரலாறு - பண்பாடு - கலை - வீரம் பற்றிய "புதின இலக்கியம்" பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடைமையாக்கிட இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

## வெளிநாடுகளுக்குத் தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்கும் திட்டம்

*26.* வெளிநாடுகளுக்குத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, தொடர்பான நூல்களை அன்பளிப்பாக வழங்குவதற்கென அரசு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இலங்கை யாழ்ப்பாணம் நூலகத்திற்கும், சிங்கப்பூர், ரீயூனியன், மொரீசியஸ் ஆகிய நாடுகளுக்கும் அன்பளிப்பாக



நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன. பிற நாடுகளுக்கும் அனுப்பத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ் வளர்ச்சி மன்றம்

*27.* தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளில் அறிவுரை கூறும் ஓர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படும் வகையில் தமிழ் வளர்ச்சி மன்றம் அமைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இம்மன்றத்தை அரசு மீட்டுருவாக்கியுள்ளது.

## கலைக் களஞ்சியம் வெளியிடல்

*28.* 1997-98 ஆம் ஆண்டில் கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடும் திட்டம் தோற்றுவிக்கப்பெற்றது. இத்திட்டத்தைச் செயற்படுத்த முதற்கட்டமாக ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப் பெற்றுள்ளது. இத் தொடர்பில் நிருவாகக் குழு அமைக்கப்பெற்றது. அக்குழுவின் முடிவுகளுக்கிணங்க, தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பெற்ற 'சிறுவர் கலைக் களஞ்சியத்தை' மறுபதிப்பு செய்து வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இந்திய ஆட்சிப் பணித் தொகுதித் தேர்வினைத் தமிழில் எழுதுவோர்க்குக் கருவி நூல்கள் அச்சிட்டு வழங்கல்

*29.* இந்திய ஆட்சிப் பணித் தொகுதித் தேர்வினைத் தமிழில் எழுதுவோர்க்குக் கருவி நூல்கள் தயாரித்து அச்சிட்டு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கப்பெற்றுள்ளது. இந்நூல்களைத் தயாரிக்க 1. மொழி நூல், 2. இலக்கிய வரலாறு, 3. வரலாறு, 4. புவியியல் ஆகியவற்றுக்கென நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவில் உள்ள வல்லுநர்கள் கருவி நூல்களைத் தமிழில் தயாரித்து, தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## (ஆ) மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்நாடு அரசு உயரிய நோக்கமாகக் கொண்டுள்ள ஒளிவுமறைவற்ற செயற்பாட்டிற்கு உதவும் வகையில் மக்கள் மொழியில் அரசின் ஆட்சி நடைபெற்றிட மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது.

2. தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழிபெயர்க்கின்றது.

3. அறிக்கைகள், பொதுக்கணக்கு, பொது நிறுவனக் குழு அறிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், விதிகள், துணை விதிகள், விதிமுறைகள், பொதுத் துறையின் மறைபொருள் கோப்புகள். விசாரணை ஆணைய அறிக்கைகள், தேர்தல் ஆணையக் கோப்புகள் நிதிக் குழு அறிக்கைகள், காபிபோசா கோப்புகள், அரசாணைகள் போன்ற அனைத்துவகைக் கோப்புகளும் மொழியாக்கம் செய்யப்பெறுகின்றன.

4. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிப்பெயர்க்க, பணியாளர்களில் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித்துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

## (இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

1. தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில், அகரமுதலி உருவாக்குதலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பணியாகும். தமிழ் மொழியில் தனித்தன்மை வாய்ந்த பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடும் நோக்கத்தின் விளைவாய் இத்துறை 1974 இல் உருவாக்கப்பெற்றது. இரு மொழிப் பேரகராதியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக் காட்டுகளுடன் உரிய விளக்கமும் செந்தமிழ்ச் சொல்லாட்சியும் வேரும் வரலாறும் அளிக்கப்படுதலால், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன் அளிப்பதாயிருக்கும். திரட்டப் பெறும் சொற்களுக்குத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், மற்றும் இலக்கண இலக்கியங்களிலிருந்து விரிவான விளக்கங்களும் சான்றுகளும் மேற்கோள்களும் தரப்படுவதோடு, தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம்பெற்று இப் பேரகரமுதலிக்கு அணி சேர்க்கின்றன.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் 'அ' வரிசையில் தொடங்கும் முதற்பகுதியும் 'ஆ' முதல் 'ஈ' வரையிலான இரண்டாம் பகுதியும் முறையே 1985, 1993 இல் வெளியிடப்பெற்றன. 'உ' முதல் 'ஔ' வரையிலான மூன்றாவது



உயிரெழுத்துகள் வரிசையில் இறுதியுமான பகுதி 1997 இல் வெளியிடப் பெற்றது. இவற்றைத் தொடர்ந்து உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் 'க' 'ச' 'ஞ' 'த' 'ந' 'ப' 'ம' 'ய' 'வ' என்னும் எழுத்துகளில் தொடங்கும் பகுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடப்பெறும்.

3. பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் விரைந்து வெளிக் கொணரும் பொருட்டு கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் துணையுடன் திட்டமிட்டவாறு குறிப்பிட்ட கால வரம்பெல்லைக்குள் அகரமுதலியின் அனைத்துப் பகுதிகளையும் வெளியிட இலக்கு வரையறுக்கப்பட்டு, பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

## (ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம் - சுவடிப்புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம் என்ற நான்கு துறைகள் தற்போது உள்ளன. நிறுவனத்தில் தமிழ் இயல் தொடர்பான திட்டப்பணிகள்; நூல் வெளியீடுகள்; தமிழ்மொழி, சுவடியியல், மொழி பெயர்ப்பியல் வகுப்புகள்; கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் (14 பேர்) பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகின்றனர். இலக்கியம் சார்ந்தவை, மொழி சார்ந்தவை, நாட்டுப்புறவியல் சார்ந்தவை, மொழி பெயர்ப்புச் சார்ந்தவை என அவை அமைகின்றன. குறுகிய காலத் திட்டப் பணிகளும், நீண்டகாலத் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் தற்போது நிறுவனத்தில் நான்கு உள்நாட்டு, வெளிநாட்டு வருகைதரு பேராசிரியர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுப் பணி செய்து வருகின்றனர்.

3. 'தமிழியல் ஆவணம்' என்ற திட்டப்பணி மூலம், தமிழியல் தொடர்பாக இதுவரையிலும் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவை யாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டுக் கணினியில் பதிவு செய்யப்பட உள்ளன. பின்னர் அவை இணையம் (Internet) வாயிலாக உலகத்தினர் அனைவரும்

தமிழியல் செய்திகளைப் பெறும் வகையில் அமைக்கப்படும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு தகவல் தொடர்பு மையமாக இயங்கவும் இத்திட்டப்பணி வழிவகுக்கும்.

4. மேலும் சில திட்டப்பணிகள் அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அவையாவன 1. சங்க இலக்கியங்கள் - கணினி பதிவிருப்புக் கையகவட்டு, 2. ஒளி, ஒலி நாடா மூலம் தமிழ்மொழிக் கற்பித்தல், 3. சுவடிகளுக்கு விவர அட்டவணைத் தயாரித்தல், 4. தொலை இணையத்தில் சங்க இலக்கியம், 5. கணிப்பொறி அகராதி.

5. நிறுவனம் இதுவரையில் 279 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர் திட்டப்பணிகள், அறக் கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், பிற தமிழறிஞர்களின் வெளியீடுகள் என அமைகின்றன. முனைவர் தி. மகாலட்சுமி எழுதிய 'சோதிடவியல்', முனைவர் சூ. நிர்மலாதேவி எழுதிய 'தடிவீரசுவாமி கதை & வன்னியராயன் கதை', பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை எழுதிய 'சங்கத் தமிழர் வாழ்வியல்' என்ற மூன்று நூல்களும் 1996 ஆம் ஆண்டின் சிறந்த நூலுக்கான தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன.

6. இலக்கியத் துறையிலுள்ள சுவடியியல் பிரிவு ஓராண்டு சுவடியியல் பட்டய வகுப்பினை நடத்தி வருகிறது. பன்மொழிக் கல்வித் துறை, ஓராண்டு மொழி பெயர்ப்புப் பட்டய வகுப்பினை நடத்தி வருகிறது. மொழியியல் துறை பிறமொழியினர்க்குத் (வெளி நாட்டினர், பிற மாநிலத்தவர்) தமிழ் வகுப்புகளை (தமிழ் அறிமுக நிலை, உயர்நிலை) நடத்திவருகிறது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் கல்விசார் அலுவலர்களின் மேற்பார்வையில் 12 முழுநேர மாணவர்களும் 2 பகுதி நேர மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வு செய்துவருகின்றனர். மேலும் 'தமிழியல்' (Journal of Tamil Studies) என்ற அரையாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. அறிஞர்கள் பலர் உலகின் பல இடங்களில் இருந்து இதற்குக் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தும் வாழ்நாள் உறுப்பினராகவும் இருந்து வருகின்றனர். 'செய்திக்கதிர்' என்ற காலாண்டு இதழும் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நிறுவனம் செய்யும் பணிகள், கல்விசார் அலுவலர்களுடைய பணிகள், அவர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்குகள் இன்னபிற அனைத்துச் செய்திகளும் இடம் பெற்று வருகின்றன.



## (உ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1981 ஆம் ஆண்டில் ஓர் உயராய்வு நிறுவனமாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம், தொடக்கத்திலிருந்தே தமிழ்க் கல்வி-தமிழாய்வின் உயர்தனிச் சிறப்புக்காகப் பாடுபட்டு வந்துள்ளது. தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், தத்துவம், பண்பாடு, தமிழ்நிலம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றில் உயராய்வு செய்வதே முதன்மையான நோக்கமாகும். இத்துடன் இப்பல்கலைக் கழகம் தமிழ் மொழியை இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ற மொழியாக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை அடைய அதாவது ஐந்து புலங்கள், 23 துறைகள் மூலம் பல்வேறு ஆய்வுத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட காலத்தில் தொடங்கப்பட்ட சில திட்டங்கள் இன்னும் தொடர்ந்துவரும் அதே நேரத்தில் தேவை மற்றும் அடிப்படையிலான புதிய திட்டங்களும் தொடங்கப்பெற்றுள்ளன.

2. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்கலைக்கழக மேம்பாட்டுக்காகத் தொடர்ந்துவரும் முக்கியமான திட்டங்களில் இருபது தொகுதிகள் கொண்ட அறிவியல் களஞ்சியங்களில் 15 தொகுதிகள் நிறைவு பெற்றுள்ளன. மிகுதியுள்ள 5 தொகுதிகள் பதிப்புப்பணியில் உள்ளன. இவற்றுள் சில 1998-99 ஆம் ஆண்டில் வெளியிடப்பெறும். தமிழில் வெளியிடப்பெற்ற பொறியியல், மருத்துவப் பாடநூல்கள் அறிவியல் தொழிநுட்ப அறிஞர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. இதுவரை 20 பாடநூல்கள் அச்சிடப் பெற்றுள்ளன. இன்னும் 10 நூல்கள் அச்சிடப்பட உள்ளன. அறிவியல் கலைச்சொல் அகராதிகளில் பல தொகுதிகள் முடிக்கப்பெற்றுள்ளன.

3. தமிழ்ப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி நடத்தி வந்துள்ளது. இத்திட்டம் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் புதிய களங்களாகிய நுண்கலைகள், பண்பாடு முதலியவற்றில் தொடர்ந்து நடத்தப் பெறும். தமிழ்ப் பல்கலைக் கழகம் பிற மாநிலங்களைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தி வந்துள்ளது. மொழிப் பயிற்சிக்காக அரசு இத்தகைய அலுவலர்களைத் தொடர்ந்து அனுப்பி வருகிறது.

4. தமிழ்ப் பல்கலைக்கழகம், பன்னாட்டு நிறுவனங்கள், தேசிய நிறுவனங்களின் உதவியுடன் பன்னாட்டு, தேசிய மாநாடுகளையும்

கருத்தரங்குகளையும் நடத்தி வந்துள்ளது. இத்தகைய கருத்தரங்குகள் தேசிய அளவிலும், உலக அளவிலும் புகழ்பெற்ற அறிஞர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவியாக இருப்பதால் 1998-99 ஆம் ஆண்டிலும் இவை தொடரப்படும்.

5. கலைச் சொல்லகராதிகளை வெளியிடும் பணியை அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. இவற்றுள் பல முன்னரே வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ளவை 1998-99 ஆம் ஆண்டில் வெளியிடப்படும். அதே போன்று பெருஞ்சொல்லகராதியின் 2 தொகுப்புகள் வெளியிடப்படும். சில பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்யப்படாத சிறப்பான துறைகளில் முனைவர் பட்ட ஆய்வுக்கும், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாய்ப்பளித்து வந்துள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 150 முனைவர் பட்ட, ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இவற்றுடன் ஒருசில துறைகளில் பட்டய வகுப்புகளும், சான்றிதழ் வகுப்புகளும் 1998-99 முதல் தொடங்கப்பட உள்ளன. தமிழக அரசு மகாகவி பாரதியார், திரு. ஏ.டி. பன்னீர்செல்வம் ஆகியோர் பெயர்களில் உருவாக்கியுள்ள அறக்கட்டளைகளிலிருந்து, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்களுக்கு ஏப்ரல் 1998 முதல் ஆய்வு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

6. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொடக்க ஆண்டுகளில் காஞ்சிபுரம், மண்டபம், சென்னை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் விரிவாக்க மையங்கள் செயற்பட்டு வந்தன. நிருவாகச் சிக்கல்களின் காரணமாகவும் கூர்ந்த மேற்பார்வைக்காகவும் அவை தஞ்சைக்கு மாற்றம் செய்யப்பட்டன. எனினும், அவை முதன்முதலில் தொடங்கப்பட்ட இடங்களில் இருந்தால்தான் உரிய முறையில் வளரமுடியும் என்று இப்போது கருதப்படுகிறது. முதற்படியாக, தத்துவ மையத்தைச் சமயம், பண்பாடு ஆகிய செயற்பாடுகளின் களமாகிய காஞ்சிபுரத்துக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று நீரகழாய்வு மையத்தை பல்கலைக்கழகத்தின் சொந்த நிலமும் கட்டடங்களும் உள்ள மண்டபத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய விரிவாக்கத் திட்டங்கள். இம்மையங்கள் உயர்தனிச் சிறப்புடைய மையங்களாக எதிர்காலத்தில் வளர்வதற்கு உதவியாய் அமையும்.

7. சமுதாயத்தின் மொழிப் பயன்பாட்டிற்கும், நாட்டின் மொழிக் கொள்கை உருவாக்கத்திற்கும் துணை செய்வதற்கு ஏதுவாக 'மொழித் திட்டமிடுதல் மையம்' ஒன்றினை நிறுவ, பல்கலைக்கழகம்





திட்டமிட்டுள்ளது. இம்மையம் அகராதி ஆய்வு, மொழிப்பெயர்ப்பு ஆய்வு, களஞ்சிய ஆய்வு ஆகியவற்றிலும், கலைச்சொல்லகராதிகள் உருவாக்கம், பாடநூல் வெளியீடு ஆகிய பல்வேறு பணிகளிலும் ஈடுபடும்.

8. ஒரு மொழியின் மேம்பாட்டிற்கு மொழிப்பெயர்ப்பு ஒரு முதன்மை யான களமாகும். தமிழ்ப் பல்கலைக்கழகம் மொழி பெயர்ப்பின் தேவையை உணர்ந்து தமிழ், ஆங்கிலம், கன்னடம் போன்ற மொழிகளின் இலக்கியங்களில் பல்வேறு வெளியீடுகளைக் கடந்த காலத்தில் கொண்டு வந்துள்ளது. மொழிபெயர்ப்பில் செயலரங்குகள் நடத்தப்பட்டு அவற்றில் பல்வேறு அறிஞர்கள் பங்கு பெற்றுள்ளனர். தமிழிலுள்ள பல்வேறு அற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியைச் செய்ய பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது.

9. தென்னிந்தியாவில் உள்ள மொழிப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொன்மையானது. மொழிவளர்ச்சிக்கு ஒரு பொதுவான அணுகுமுறை தேவை என்று கருதப்படுகிறது. எனவே தென்னிந்திய மொழிப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகங்களிடையே அறிஞர்களின் பரிமாற்றம், இலக்கிய ஆய்வுப் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு இவ்வமைப்பு துணைபுரியும். மொழி ஆராய்ச்சி, மேம்பாடு ஆகியவற்றில் அதிகமான இணைப் பல்கலைக்கழகத் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. தொல்காப்பியப் பாவியல் ஆய்வு, தமிழகச் சமுதாய மொழியியல் வருணனை, தமிழில் நோக்கீட்டு இலக்கணம், தமிழகக் கடற்கரைத் தாதுப் பொருளாய்வு முதலியவை நடைபெற்று வருகின்றன. இந்திய அரசின் மாக்கடல் மேம்பாட்டுத் துறை இப்பல்கலைக்கழகத்தின் நில அறிவியல் துறையை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடற்கரைத் தாதுப் பொருளாய்வுக்கு ஒரு மையமாகத் தேர்வு செய்துள்ளது.

11. தமிழ்ப் பல்கலைக்கழகம் இருபத்தோறாம் நூற்றாண்டின் தொடக் கத்தையும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப வளர்ச்சித் தேவையையும் கருத்தில் கொண்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் கணிப்பொறித் தகவல் சேவையும், நூலக இணையச் சேவையும் முன்பே உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் உலகப் பல்கலைக் கழகங்களில் தகவல் தொடர்புக்கேதுவாக 'இன்டர்நெட்' என்னும் 'இணையம்' தொடர்பு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று துறைகளிலும் கணிப்பொறியின் உதவியுடன் ஆய்வுகளை நவீனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

12. பல்கலைக்கழக மானியக்குழு ஒன்பதாவது திட்டத்தில் மூன்று ஆய்வு மையங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. நிகழ்கலைகள் மையம், மொழித் திட்டமிடுதல் மையம், வரலாற்று ஆய்வு மையம் ஆகிய இவை ஒன்பதாவது திட்டக் காலத்திற்கு உரியனவாகும். இவற்றின் செயற்பாடுகள் 1998-99 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்படவுள்ளன.

13. இவ்வாறு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 1998-99 ஆம் ஆண்டுக் கொள்கையானது, இருக்கும் வசதிகளை ஒருங்கிணைத்தல், நிகழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துதல், எதிர்காலத் தேவைக்கேற்ற புதுமையான திட்டங்களைத் தொடங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

## (ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்

தொல்பொருளாய்வு இயக்ககம் 1961 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்தல் மற்றும் அக்கல்வெட்டுகளை நூல்வடிவில் கொண்டுவருதல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல், அகழாய்வு நடைபெறும் இடங்களில் அகழ்வைப்பகங்கள் ஏற்படுத்துதல், நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொல்பொருட்களையும், பழங்கலைப் பொருட்களையும் பதிவு செய்தல், பழமையான மரபுச் சின்னங்களையும், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பாதுகாத்தல், ஓலைச் சுவடிகளைச் சேகரித்தல், பாதுகாத்தல், அவற்றை நூல் வடிவில் கீழ்த் திசை ஓலைச்சுவடி நூலகத்தின் வாயிலாக வெளியிடுதல் ஆகிய நோக்கங்களுடன் இயங்கி வருகிறது.

### மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

2. இதுவரை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் 82 மரபுச் சின்னங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் கீழ்க்காணும் சின்னங்கள் மதச் சார்பற்ற மரபுச் சின்னங்களாகும்.

1. திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை,
2. அரண்மனைக் கட்டடப் பகுதிகள், தஞ்சாவூர்,
3. உப்பரிகை, சரபேந்திரராஜப்பட்டினம், மனோரா
4. இராமலிங்க விலாசம், இராமநாதபுரம்
5. டேனிசுகோட்டை, தரங்கம்பாடி.





3. திருமலை நாயக்கர் அரண்மனையின் பழமையைப் பாதுகாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வரண்மனையில் எந்தப் பகுதியில் உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அப்பகுதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.76.30 இலட்சத்தில் ரூ.52 இலட்சத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசத்தின் பழமையைப் பாதுகாக்கும் பணிக்காகவும் அங்குள்ள ஓவியத்தைப் பேணிப் பாதுகாக்கவும் ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டும் இராமலிங்க விலாசத்திலுள்ள சுவரோவியங்களைப் பாதுகாக்கும் பணி தொடரவுள்ளது. இவ்வாண்டு தரங்கம்பாடியிலுள்ள டேனிசு கோட்டையின் பழமையைப் பாதுகாக்கும் பணி ரூ. 5 இலட்சத்தில் நடைபெற்று வருகிறது. தற்போது ரூ.50,000/- வரை கோட்டையைப் பழுது பார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சை அரண்மனை வளாகத்தினைச் சீரிய முறையில் பாதுகாக்கவும், தூய்மைப்படுத்தவும் 1997-98 ஆம் ஆண்டில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### கல்வெட்டாய்வு

4. 1997 ஆம் ஆண்டில் 188 கல்வெட்டுகளும் 16 செப்பேடுகளும் படியெடுக்கப்பட்டன. 45 ஊர்களில் கல்வெட்டாய்வுகள் நடத்தப்பெற்றன. கல்வெட்டுகளில் காணப்படும் கலைச்சொற்கள் சேகரிக்கப்பட்டு அகர முதலி வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. 'அ' என்னும் உயிரெழுத்தை முதலாகக் கொண்ட 300-க்கும் மேற்பட்ட சொற்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு உரிய பொருளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி ஒரு தொகுதியாக்கி வல்லுநர்கள் கருத்தினைப் பெற்று அச்சுக்குத் தயார் செய்யும் நிலையில் உள்ளது.

### கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்

5. ஆண்டுதோறும் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும் கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சியும் நடத்தப்பெறுகின்றன. 1997-98 ஆம் கல்வியாண்டில் முதுகலைப்பட்டம் பெற்ற ஐந்து மாணவர்கள் கல்வெட்டியல், காசுவியல், சிற்பக்கலை, கட்டடக் கலை மற்றும் தொல்லியல் ஆகியவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1997 ஆம் ஆண்டில் ஈரோட்டில் கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சி நடத்தப்பெற்றது.

## நில அகழாய்வு

6. ஆண்டுதோறும் இத்துறை நில அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. இதுவரை 22 வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு நடைபெற்றுள்ளன. இவ்வகழாய்வுகளில் விலைமதிப்பற்ற அரிய தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளம், பெரியார் மாவட்டம் கொடுமணல், நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் ஆகிய இடங்களில் பெரிய அளவில் அகழாய்வுகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டன. திருக்கோவிலூரில் நடத்தப்பட்ட அகழாய்வுக் குறித்த அறிக்கை நூல் வடிவில் அச்சாக்கப் பெற்றுள்ளது.

## ஆழ்கடல் அகழாய்வு

7. பூம்புகாரில் இத்துறையும், கோவாவில் உள்ள தேசிய ஆழ் கடல் நிறுவனமும் இணைந்து இதுவரை நான்கு கட்டங்களில் கள ஆய்வினை மேற்கொண்டுள்ளன. இப்பணிக்காக அரசால் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.2.2 கோடியில் இதுவரை ரூ.56.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பூம்புகாரில் ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் ஒன்றும் 1997-98 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இவ்வகழ்வைப்பகம் இந்தியாவிலேயே ஒரு மாநில அரசால் முதல் முறையாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். ஆழ்கடல் கள ஆய்வில் கி.மு. 6-5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 5 கட்டடப் பகுதிகளும், கருங்கல் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரையான காலத்தைச் சார்ந்த சில கட்டடப் பகுதிகளும் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கடலில் மூழ்கிய கப்பல் பகுதிகளும் கண்டறியப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூழ்கிய கப்பலில் ஒரு பீரங்கியும், இரண்டு வெடி மருந்துப் பெட்டிகளும்,கொடிக் கம்பமும், செம்பு மற்றும் இரும்புப் பொருட்களும் நூற்றுக்கும் மேற்பட்ட ஈயக் கட்டிகளும் இருப்பது தெரியவந்துள்ளது.

## அகழ்வைப்பகங்கள்

8. அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களையும் அவ்விடங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களையும் கொண்டு பொதுமக்கள் எளிதில் சென்று பார்த்துப் பயன்பெறும் வகையில், அகழாய்வு நடைபெற்ற இடங்களுக்கு



அருகிலேயே அகழ்வைப்பகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவ்வகழ்வைப்பகங்களில் திங்கள்தோறும் தமிழ், தொல்லியல், பண்டைய வரலாறு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை அழைத்துத் திங்கள் பொழிவும், சிறப்புக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன.

## பண்டைக்கலைப் பொருட்கள் பதிவு

9. 1997 ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைக்கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக 1029 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. அவற்றில் 601 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரை பழமையான பழம் பொருட்களைப் பதிவு செய்வதற்கு மொத்தமாக 46,188 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 33,803 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சிலைத் திருட்டுத் தொடர்பான சான்றாதாரங்களை இத்துறையின் பதிவு அலுவலர்கள் நீதிமன்றங்களுக்கு அளித்து வருகின்றனர். மேலும் பதிவு செய்யப்பட்ட சிலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு அவ்வப்போது உரிய கோயில்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கின்றனர். 1998-99 ஆம் ஆண்டு இத்துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 29.85 இலட்சத்திற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

## (ஏ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்

இத்துறையின்கீழ் இயங்கிவரும் அரசுக் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் உலகளவில் சிறப்புடையதாகும். இந்நூலகத்தில் 70,000-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் பல்வேறு தலைப்புகளில் தமிழ், தெலுங்கு, மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில் இலக்கியம், வரலாறு, மருத்துவம், கணிதம், சோதிடவியல், வானவியல், சமயம் மற்றும் தத்துவம் ஆகிய துறைகளில் உள்ளன. இங்குள்ள ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்காக ரூ.13.32 இலட்சத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு நகல் எடுக்கும் கருவியும் தீயணைப்பான்களும் இரும்புப் பேழைகளும் வாங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 14 ஓலைச்சுவடிகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 10 சுவடிகள் நூல் வடிவில் வெளியிடப்பட உள்ளன. இந்நூலகத்திலுள்ள சுவடிகள் அனைத்தையும் நகல் எடுத்துப் பாதுகாக்க நுண்ஒளிப்படக் கருவி வாங்குவதற்காக ரூ.25.66 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[1998 மே 13

## (ஏ) அரசு அருங்காட்சியகங்கள்

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும் பெருமையும் கொண்டது சென்னை அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகத்தின் நூற்றாண்டு விழா 1951 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக்கூடங்களோடு, பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும், இவ்வருங்காட்சியகம் புகழ் பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல்பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும், ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்து வந்த பெருமை இந்த அருங்காட்சியகத்திற்குரியது.

2. சென்னை அருங்காட்சியகத்தின் மொத்த வெளியீடான 175 புத்தகங்களில் சுமார் 100 புத்தகங்கள் கையிருப்பில் இல்லாமல் விற்பனையாகிவிட்டன. இருப்பில் தீர்ந்துவிட்ட புத்தகங்கள், பொதுமக்களால் மிகவும் விரும்பு வேண்டப்படுகின்றன. எனவே, 1997-98 ஆம நிதியாண்டில் மொத்தம் 10 புத்தகங்களை மறுபதிப்புச் செய்ய ரூ. 5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு மறு பதிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதற்கென 15 பல்வேறு திட்டங்களுக்கு ரூ.42.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. அரசு அருங்காட்சியகம் சென்னையின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. சென்னை அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இவ்வருங்காட்சியகத்தின் பின்புறத்திலுள்ள குளத்தைச் சீரமைத்துப் படகு விடுவது மற்றும் சிறுவர் பூங்கா ஒன்று அமைப்பது குறித்துத் திட்டமிடப்பட்டு ரூ.6.50 இலட்சம் ஒதுக்கீடு செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் நிதியாண்டில் அருங்காட்சியக மேம்பாட்டிற்கென மொத்தம் ரூ.64.40 இலட்சம் செலவில் 21 பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.



1998 மே 13]

### மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள்

4. மாவட்டத் தலைநகரங்கள்தோறும் அருங்காட்சியகங்கள் அமைக்க வேண்டும் என்று அரசு மேற்கொண்டுள்ள கொள்கையின்படி 1979 ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, வேலூர், கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, பழனி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு இயங்கிவருகின்றன. திருவாரூரில் விரைவில் அருங்காட்சியகம் தொடங்கப்படவுள்ளது. 1998-99 ஆம் நிதியாண்டில் இரு மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

## (ஐ) கலை—பண்பாட்டு இயக்ககம்

தமிழ்நாடு தொன்மைக் கலைச்சிறப்புக்கும் பண்பாட்டிற்கும் சான்றாகக் திகழ்கின்றது. பண்டைத் தமிழ் மன்னர்கள் கலையையும் பண்பாட்டையும் போற்றி வளர்த்தனர். தொல் கலை வடிவங்களை பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் கலை-பண்பாட்டு இயக்ககம் 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் நான்கு இசைக்கல்லூரிகளும், இரண்டு கலைத் தொழிற் கல்லூரிகளும், ஒரு சிற்பக் கல்லூரியும், பதினான்கு சவகர் சிறுவர் இல்லங்களும், தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண் கலைக் குழு மற்றும் ஐந்து இசைப்பள்ளிகளும் உள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் இயக்ககத்தின் நடவடிக்கைக்கான விரிவாக்கத்திற்கு நான்கு மண்டல அலுவலகங்கள் சேலம், காஞ்சிபுரம், தஞ்சாவூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் தொடங்கப்பட்டு உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு மண்டல அலுவலகங்கள் தொடங்கப்படவுள்ளன.

### 1. அரசு கலை - கைவினைத் தொழிற் கல்லூரிகள்

சென்னையிலும் கும்பகோணத்திலும் அரசு கலைத் தொழிற் கல்லூரிகள் உள்ளன. சென்னை, அரசு கலைத் தொழிற் கல்லூரி 148 ஆண்டுகள் தொன்மையானது. 1850 ஆம் ஆண்டு ஒரு பள்ளியாகத் தொடங்கி, தற்போது தன்னாட்சி பெற்ற கல்லூரியாகத் திகழ்கிறது. இவ்விரண்டு கல்லூரிகளையும் சிறப்பு நிலைக்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டு 1997-98 ஆம் ஆண்டு ரூ.25.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு கல்லூரிகளிலும் ஓவியத்தில் முதுகலைப்

பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன. சென்னைக் கல்லூரிக்கு நுண்கலைப் பட்டப்படிப்புக்கு இயந்திரங்கள் வாங்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்குக் கற்பிக்கத் தளவாடங்களும், இயந்திரங்களும் வாங்க ரூ. 5 இலட்சம் சென்னை அரசினர் கலைத் தொழிற் கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யவும், (வி.சி.டி.) காட்சிவழி வடிவமைப்புப் பிரிவில் முதுகலைப் பட்டப்படிப்பு இவ்வாண்டு ரூ.1.25 இலட்சம் செலவில் தொடங்கவும், குடந்தைக் கல்லூரியில் சிற்பக் கலைப் பிரிவில் முதுகலைப் பட்டப்படிப்பு ரூ. 1.25 இலட்சம் செலவில் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2. அரசு கட்டட சிற்பக் கல்லூரி

மாமல்லபுரம், அதன் சிறப்பு மிக்க சிற்பங்களுக்காக 'உலகத் தொன்மைப் புகழிடத் தொகுப்பில்' இடம் பெற்றுள்ளது. வரலாற்றைத் தற்காலத்தோடு இணைக்கும் நோக்கத்தில் மாமல்லபுரத்தில் ஒரு சிற்பக் கல்லூரி கட்டடக் கலையும், சிற்பக் கலையும் பயிற்றுவிக்க தொடங்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் இக்கலைகளைப் பயிற்றுவிக்கும் ஒரே கல்லூரி இதுவேயாகும். சிற்பக் கலை பயிலும் மாணவர்களை ஊக்குவிக்க மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இக்கல்லூரியின் சுற்று வளாகத்தில் ரூ. 5 இலட்சம் செலவில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கப்படுகிறது.

## 3. அரசு இசைக் கல்லூரிகள்

அரசு இசைக் கல்லூரிகள் தற்போது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ளன. இக்கல்லூரிகளில் கீழ்க் குறிப்பிடும் இசைத்துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1 குரலிசை 2. கடம் 3. கஞ்சிரா 4. மோர்சிங் 5. நாதசுரம் 6. தவில் 7. பரதநாட்டியம் 8. நட்டுவாங்கம் 9. நாட்டுப்புறக் கலைகள் 10. வீணை 11. வயலின் 12. மிருதங்கம் 13. புல்லாங்குழல். இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் கற்பிப்பது மட்டுமின்றி தேர்ந்த இசை விற்பன்னர்களைக் கொண்டு சிறப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மாணவர்களிடம் இசை ஆர்வத்தை வளர்ப்பதற்காகவும் இசைக் கல்லூரியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும் மாணவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், திருநெல்வேலி, மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு உள்ளன. இவ்வாண்டு ரூ.30



இலட்சம் செலவில் மேலும் ஐந்து இசைப் பள்ளிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.1.20 இலட்சம் செலவில் ஆறு மாவட்டங்களில் தமிழிசை விழாக்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழிசை மூவர் விழா

ஆண்டுதோறும் தமிழிசையின் மூவர்களான திரு. முத்துத் தாண்டவர், திரு. மாரிமுத்தா பிள்ளை, திரு. அருணாசலக் கவிராயர் ஆகியோரின் நினைவைப் போற்றும் வகையில் 'தமிழிசை மூவர் விழா' சீர்காழியில் கொண்டாடப்பெற்று வருகிறது.

### பண்பாட்டுப் பலகணி

தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்புகளைப் பிறர் அறியப் 'பண்பாட்டுப் பலகணி' என்னும் தலைப்பில் கலை - பண்பாட்டுத் துறையால் ஆண்டு தோறும் பல மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று வருகின்றன. கடந்த ஆண்டு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, பழனி, திருநெல்வேலி முதலிய இடங்களில் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகள் நடந்தப்பட்டு உள்ளன. இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் பிற மாநிலங்களிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 29-1-98 அன்று சென்னையில் மேற்கு வங்கக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. புதுதில்லியில், தில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அக்டோபர் 1997 இல் இமாசலப் பிரதேசத்தில் நடைபெற்ற பன்னாட்டு நாட்டுப்புற நாட்டிய விழாவிலும் தமிழகக் கலைக் குழு பங்குபெற்றது. தமிழக கலைக் குழுக்கள் துபாய், மொரீசியஸ் மற்றும் சைனா ஆகிய நாடுகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டன.

## 4. இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ' மைய சங்கீத நாடக அகாதெமியின்' நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் மாநில அரசால் தோற்றுவிக்கப்பெற்ற தன்னாட்சி பெற்ற கலை நிறுவனமாகும். இந்நிறுவனத்தால் நிறைவேற்றப்பெறும் அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு நல்கை அளித்து ஊக்குவித்து வருகிறது. இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை நமது மாநிலப் பண்பாட்டு மரபைக் காக்கும் வண்ணம் இம்மன்றம் போற்றி வளர்த்து வருகிறது.

[1998 மே 13

## கலைமாமணி விருது

கலைத் துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்க இம்மாநிலக் கலைஞர்கள் மட்டுமின்றி பிற மாநிலக் கலைஞர்களையும் பாராட்டுகின்ற வகையில் இம்மன்றத்தால் 'கலைமாமணி' விருது வழங்கப்பெறுகிறது. இதுவரை 987 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருதுகள் வழங்கப் பெற்றுள்ளன. புகழோடு வாழ்ந்து மறைந்த 242 கலைப் பேரறிஞர்களின் திருவுருவப் படங்கள் 'கலைமாமணி' விருது வழங்கும் விழாக்களில் திறந்து வைக்கப்பெற்று மன்றத்தால் காக்கப் பெறுகின்றன. 'கலைமாமணி' விருது பெற்ற நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 147 கலைஞர்களுக்கு ரூ.1,000/-மும், 17 கலைஞர்களுக்கு ரூ.5,000/-மும் பொற்கிழியாக இதுவரை வழங்கப்பெற்றது. 1994-95 ஆம் ஆண்டு முதல் இத்தொகை ரூ.5,000-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட்டு 6 கலைஞர்களுக்குப் பொற்கிழியாக வழங்கப்பட்டது. கலைத் தொண்டாற்றி டும் தனியார் கலை நிறுவனங்களையும் செம்மையுறச் செயற்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில் 19 கலை நிறுவனங்களுக்கும் 12 நாடகக் குழுக்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

## மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுப் பரிமாற்றம்

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், இந்தியப் பண்பாட்டு மரபினைப் பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ள உதவும் வகையிலும் இம்மன்றம் மைய சங்கீத நாடக அகாதெமியுடன் இணைந்து மாநிலங்களுக்கிடையேயான பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஒவ்வோராண்டும் கலைக்குழுக்களைத் தமிழகத்திலிருந்து மூன்று மாநிலங்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அனுப்புகிறது. மூன்று மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குக் கலைக் குழுக்களை வரவேற்று மாவட்டாட்சியர்களின் உதவியுடன் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. நாகாலாந்து மாநிலக் கலைக்குழு 1998 மார்ச்சுத் திங்கள் 6 முதல் 13 ஆம் நாள் வரை தமிழகத்திற்கு வருகை தந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தியது. தமிழகக் கலைக் குழுக்களை நாகாலாந்து மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கட்கு 1998 ஏப்ரல் திங்களில் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி

வாழ்நாள் முழுவதும் வளர் கலைக்குத் தொண்டாற்றிய நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள் ஒன்றிற்கு ரூ.500/- வீதம் நிதியுதவி வழங்கப் பெறுகிறது. இதுவரை 4,637 கலைஞர்கள் நிதியுதவி பெற்றுள்ளனர்.



1998 மே 13]

## மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குப் பராமரிப்பு நிதி

மறைந்த புகழ்மிக்க கலைஞர்களின் குடும்ப நலனுக்காக ரூ.3000/- நிதியுதவியாக வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 158 குடும்பங்கள் இந்நிதியுதவியால் பயன்பெற்றுள்ளன. இவ்வாண்டு முதல் இத்தொகை ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றது.

சிறந்த எழுத்தாளராகவும் திரைப்பட வசனகர்த்தாவாகவும் விளங்கிய மறைந்த தணிகாசலம் என்ற இளங்கோவன் அவர்களுடைய குடும்ப நல நிதியாக இரண்டு லட்சம் ரூபாய் அரசால் வழங்கப்படும்.

## புத்திளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

பரத நாட்டியம், இசை ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளம் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு நல்கை (மானியம்) வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்படி, தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறந்த புத்திளங் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது.

## புதிய நாட்டிய-நாடகங்கள், மேடை நாடகங்களைத் தயாரிக்க நிதியுதவி வழங்கும் திட்டம்

மேடை நாடகக் கலையினை மேம்படுத்திடவும், நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், சிறந்த நாடகக் குழுக்களைத் தெரிவு செய்து, அவற்றின் வாயிலாக அறிவியல் கலைநுட்பங்களோடு புதிய நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்யும் திட்டத்தினைச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 85 நாடகக் குழுக்களும், 3 நாட்டிய குழுக்களும் பயன் துய்த்துள்ளன.

## கலை மேதைகளின் நினைவு விழாக்கள்

கலையைப் போற்றிப் புகழால் உயர்ந்த கலைப் பேரறிஞர்களான அரியக்குடி இராமானுஜர், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பாபநாசம் சிவன், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், டி.என். ராசரத்தினம், வழுவூர் இராமையாப் பிள்ளை, இசையரசர் தண்டபாணி தேசிகர், நவாப் இராசமாணிக்கம், பிடில் இராசமாணிக்கம் மற்றும்

ஔவை தி.க. சண்முகம் போன்ற கலை மேதைகளின் நினைவு நாள்களை மன்றம் ஆண்டுதோறும் நினைவுகூர்கிறது. இவ்விழாக்களை மன்றம் சென்னை மற்றும் தமிழகத்தின் பிற நகரங்களில் செம்மையுறச் செயலாற்றி வரும் கலைத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கொண்டாடி வருகின்றது.

## அருங்கலை நூல்கள் வெளியிட நிதியுதவி அளித்தல்

அரிதாகியுள்ள அருங்கலை நூல்களை வெளியிடவும், நூலாசிரியர்களுக்கு மன்றம் நிதியுதவி வழங்கி வருகிறது. இதுகாறும் இத்திட்டத்தின் கீழ், ஏறத்தாழ 100 நூல்கள் நிதியுதவி பெற்று வெளியிடப்பெற்றுள்ளன.

## மன்றம் செயற்படுத்திய திட்டங்கள்

அரசு இசைக் கல்லூரிகள், பல்கலைக்கழகக் கலைத்துறைப் புலன்கள், மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் வறிய நிலையிலுள்ள திறமுடைத்த மாணவர்கட்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கலைக்கூடத்தில் பழம்பெறும் இசைக்கருவிகள், இயல், இசை, நாடகம், கிராமியக் கலைகள், திரைப்படம் ஆகிய துறைகளைச் சார்ந்த அரிய கலைப்பொருள்கள், நூல்கள் ஆகியவற்றைச் சேகரித்து அவை இடம் பெறும் ஆராய்ச்சிக் கூடமாக மன்ற நூல் நிலையம் திகழவும், சுமார் ஆயிரம் இருக்கைகள் கொண்ட கலையரங்கம் இடம் பெறுவதற்கும் ரூ.6.48 இலட்சம் செலவில் தரைத்தளம் அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக மரபு வழிக் கலையை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் மலைவாழ் மக்களின் கலையினைப் பதிவு செய்யும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

நாட்டுப்புறக் கலைக்குழுக் கலைஞர்களின் நைந்துபோன ஆடை, அணிகலன்களுக்குப் பதிலாகப் புதிய ஆடை, அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

## 1997-98 இல் மன்றம் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

மறைந்துவரும் பொம்மலாட்டக் கலைக் குழுக்களை மேம்படுத்தும் பொருட்டு, 19 கலைக் குழுக்களைத் தேர்வு செய்து குழு ஒன்றுக்கு



ரூ.10,000 வீதம் மானியமாக வழங்கி, அவற்றின் வாயிலாகப் புதிய
பொம்மலாட்டக் கலை நிகழ்ச்சிகள் தயாரித்து வழங்க ஏற்பாடு
செய்யப்பட்டது. சிறுவர்களாகவுள்ள கலை விற்பன்னர்களை அடையாளம்
கண்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம் திங்களொன்றுக்கு
ஒவ்வொருவருக்கும் ரூ.200/- வீதம் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு
வருகிறது. இவ்வகையில் 100 இளம் கலைஞர்கள் பயன்பெற்று
வருகின்றனர். தமிழிசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு
மன்றம் தமிழிசைக் கலைஞர்களுக்கு ஊக்க ஊதியமாக மாதம்
ரூ.1,000/- வீதம் பத்து கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
தமிழகத்தில் பாரம்பரிய நாட்டுப்புறக் கலை வடிவங்களைத் தொகுப்பு
நூலாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கலைகளின் மேம்பாட்டிற்கும், கலைஞர்களின் நலனுக்கும் அரசின்
சார்பில் தமிழ்நாடு, இயல் இசை நாடக மன்றம் செயற்படுத்தி வரும்
பல்வேறு கலைத் திட்டங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் பற்றி அனைத்து
மக்களும் அறியும் வண்ணம் காலாண்டு செய்தி மடல் வெளியிடவும்,
இளைய சமுதாயத்தினரும், ஆராய்ச்சியாளர்களும் பயன்பெறும் வண்ணப்
நம் தொன்மைமிகு தெருக்கூத்துக் கலை வடிவங்களை ஆவணமாக்கவும்
தொன்மைச் சிறப்பு மிக்க தமிழ்க் கலை வடிவங்களை அயல்
மாநிலத்தவரும் உணர்ந்துகொள்ளும் பொருட்டு மன்றம் பிற மாநிலத்
தலைநகரங்களில் தமிழகக் கலை விழாக்களை நடத்திடவும், அம்மாநிலக்
கலை விழாக்களைச் சென்னையில் நடத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. சவகர் சிறுவர் இல்லம்

சவகர் சிறுவரில்லம் 1979 ஆம் ஆண்டு அரசால் தொடங்கப்பட்டது.
சவகர் சிறுவரில்லம் பண்டித சவகர்லால் நேரு நினைவாகத் தொடங்கப்பெற்ற
பாரதப் பிரதமர் பண்டித சவகர்லால் நேரு நினைவாகத் தொடங்கப்பெற்ற
இந்நிறுவனம் சென்னை அரசினர் தோட்டம் காந்தி இல்லத்தில்
செயற்பட்டு வருகிறது. ஏட்டுக் கல்வியோடு, ஆக்கத் திறமைகளையும்
மாணவர்கள் தாமே வளர்த்து வெளிப்படுத்தும் வகையிலும், தன் வேலை
வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளும் நெறியிலும் பல்வேறு வகையான
செயல்முறைத் திட்டங்களையும், பயிற்சிகளையும், சிறுவர்களுக்குப்
பயிற்றுவிக்கும் இல்லமாக மிகச் சிறப்பாக. இந்நிறுவனம் செயற்பட்டு
வருகிறது. சென்னை சவகர் சிறுவரில்லத்தைத் தவிர மதுரை,
புதுக்கோட்டை மற்றும் பொன்புதுப்பட்டியில் சவகர் சிறுவரில்லங்கள்
செயற்பட்டு வருகின்றன.

[1998 மே 13

## மாவட்டங்களில் சவகர் சிறுவர் இல்லங்கள்

1996-97, 1997-98 ஆகிய இரு ஆண்டுகளில் புதியதாக 1. உதகமண்டலம், 2. கோயம்புத்தூர், 3. திருச்சிராப்பள்ளி, 4. கடலூர், 5. நாகர்கோவில், 6. தஞ்சாவூர், 7. காஞ்சிபுரம், 8. சிவகங்கை, 9. திருநெல்வேலி, 10. சேலம் ஆகிய 10 மாவட்டங்களில் சவகர் சிறுவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## 6. ஓவிய நுண்கலைக் குழு

தமிழ்நாட்டில் ஓவிய, சிற்பக் கலை வளர்ச்சித் தொடர்பாக, 'மைய இலலித கலா அகாதெமி'யுடன் இணைந்து செயற்படும் நிலையில் தமிழக அரசால் 1975 இல் தோற்றுவிக்கப்பட்ட ஓவிய நுண்கலைக் குழு, நுண்கலை வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், கலைக் காட்சிகள், கலை வல்லுநர்களின் செயல்விளக்கச் சொற்பொழிவுகள், மாணவர்களிடையே ஓவியப் போட்டிகள், பயிலரங்குகள் ஆகியவற்றை நடத்தி அவற்றின் மூலம் மக்களிடையே நுண்கலை பற்றிய விழிப்புணர்ச்சியையும், கலையார்வத்தையும் இக்குழு ஏற்படுத்தி வருகிறது. தகுதிவாய்ந்த திறமைமிக்க இளங்கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தவும், இத்திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும், ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் இளம் கலைஞர்களின் பயிலரங்குகள் நடத்தப்பெறுகின்றன. தமிழ்நாட்டில் உயர்நிலை/மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காக, கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஓவிய ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சியையும் நடத்துகிறது.

நவீன பாணி மற்றும் மரபுவழி ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை மாநில அளவில் கலைக் காட்சிகளாக அமைத்து, காட்சிகளில் சிறந்து விளங்கும் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகள் அளிக்கப்பெறுகின்றன. நவீன பாணி மற்றும் மரபுவழிப் பிரிவுகளில் தலைசிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவர்கள் செய்துள்ள சீரிய பணிகளைப் பாராட்டும் வகையில் 'கலைச் செம்மல்' விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுகின்றனர். பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம் அமையும்



1998 மே 13]

வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர்களிடையே உலா அரங்கையும் நடத்தி வருகிறது. *தகுதி வாய்ந்த ஓவிய, சிற்பப் படைப்பாளர்களின் கலைத்திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் தனி நபர் கண்காட்சியை நடத்தவும் நிதியுதவி வழங்கப்பெறுகிறது. மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சியும் அவ்வப்போது நடத்தப் பெறுகிறது. சென்னையில் அகில இந்திய அளவில் ஓவியக் கலைஞர்கள் முகாமும், கும்பகோணம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் கலைப் பயிலரங்கும், கலைக் காட்சிகளும் நடத்தப்பட்டு மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டின் சிறந்த 35 ஓவியக் கலைஞர்கள் பற்றிய விவரக் குறிப்புகள், அவர்களுடைய ஒளிப்படங்கள், அவர்களது படைப்புகளின் ஒளிப்படங்கள் இவற்றுடன் சிறந்த கலைத் திறனாய்வாளர்களும் அவர்களைப் பற்றிய குறிப்புகளும் கொண்ட நூல் ஒன்றையும் ஓவிய நுண்கலைக்குழு ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடவுள்ளது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் இதுபோன்று தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் பற்றிய விவர நூல்கள் வெளியிடப்படவுள்ளன. இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டினையொட்டி இக்கருப்பொருள் கொண்ட கட்டுரைகள் அடங்கிய சிறப்பு 'நுண்கலை' கலையிதழும் வெளியிடப்படவுள்ளது.

D
V21,3,N98
N98.52.2
2/9/098